# திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும்

முனைவர் சொ. சுப்பிரமணிய கவிராயர்

International Institute Of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# திருக்குற்றாலநாத சுவாமி கோயில்
# வரலாறும் பண்பாடும்

சொ. சுப்பிரமணிய கவிராயர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Tirukkurralanāta cuvami koyil Varalarum Paṇpatum** |
| Author | : | **Dr. C. Subramaniya Kavirayar** Reader, Department of Tamil, Presidency College, Chennai -5. |
| Publisher | : | **International Institute of Tamil Studies**, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113. |
| Publication No | : | 290 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper Used | : | TNPL 16kg Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 points |
| No.of Pages | : | 272 |
| Price | : | Rs. 60/- (Rupees Sixty Only) |
| No.of Copies | : | 1000 |
| Printed by | : | Parkar Computers and Publications 293, Royapettah High Road, Chennai - 600 014. |
| Subject | : | A Study of Tirukkurralanatha Cuvamy Koyil, Thirukurralam. |

---

இந்துசமய அறநிலையத்துறையின் நிதியுதவி பெற்று
இந்நூல் வெளியிடப்படுகிறது.

**ச. சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## அணிந்துரை

'கயிலையெனும் வடமலைக்குத் தெற்கு மலை' என்றும்
'கனகமகா மேருவென் றிற்கு மலை' என்றும்
'கயிலமுனி தென் மலைக்கு வடக்கு மலை' என்றும்
'சகல மலையுந் தனக்கு எடக்குமலை' என்றும்

'காகங்கள் அணுகா மலையில் மேகங்கள் கூடி மழைபொழியும்; குயில்கள் பாடி மயில்கள் ஆடும்; அழகிய சோலைகள் நிறைந்த மலை' என்று திருக்குற்றால மலையின் சிறப்பைக் குறித்துத் திரிகூட ராசப்பக் கவிராயர் பாடியுள்ளார். மேலும்,

இயற்கையின் எழில்மிகு தோற்றமாக, கண்ணையும் கருத்தை யும் ஈர்க்கும் கம்பீர மலையும் மலைச்சாரலும் மரங்களும் கனிகளும் எங்கும் நிறைந்து காணப்படுகின்ற இம்மலையினை,

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்" என்றும்

"செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்"

என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இம்மலையில் வைரமும் மாணிக் கமும் விளைவதாகவும் கவிராயர் கற்பனை செய்துள்ளார்.

ஐந்தருவி, தேனருவி, செண்பக அருவி, குற்றால அருவி, சிற்றருவி, சாமியார் அருவி, புலி அருவி, பழைய குற்றால அருவி ஆகிய எட்டு அருவிகள் கொண்ட இம்மலையின் அடிவாரத்தில் உள்ள திருக்கோயிலில் வீற்றிருப்பவர் சிவபெருமான். பக்தர்கள் அருவியில் புறத்தூய்மை செய்து ஈசனை வழிபட்டு அகத்தூய்மை செய்கின்ற திருக்கோயிலாக இது அமைகிறது.

ஆடல்வல்லான் ஆன சிவபெருமான் ஆடிய இடங்கள் ஐந்து. அவற்றைப் 'பஞ்ச சபை' என்று குறிப்பர். திருக்குற்றாலத்தில் இருப் பது சித்திர சபை என்றும் திருவாலங்காட்டில் இருப்பது ரத்தின சபை என்றும், திருநெல்வேலியில் இருப்பது 'தாமிர சபை' என்றும் மதுரை யில் இருப்பது வெள்ளி அம்பலம் என்றும், சிதம்பரத்தில் இருப்பது பொன்னம்பலம் என்றும் 'பஞ்ச சபை' அமைந்துள்ள இடங்களைப் பற்றி விளக்கம் தருவர்.

மேலும் 64 சக்தி பீடங்களில் இக்கோயிலில் உள்ள சக்தி பீடம் ஒன்றாகும் என்பது இக்கோயிலுக்கு அமைந்த தொன்மைச் சிறப்பு. சிவபெருமான் ஆடல் புரிந்த திருத்தலங்களுள் ஒன்றாகிய இக் குற்றா லத்தில் சிவபெருமான் ஆட உமையாள் கண் குளிரக் கண்டு தாளம் கொட்டினார் என்று திருக்குற்றாலத் தலபுராணம் கூறுகிறது.

திருக்குற்றாலத்தில் தற்போது இருக்கும் சிவன்கோயில் முன்பு திருமால் கோயிலாக இருந்தது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அக்கருத்துக்கு அடிப்படையாக அமைந்த புராணக்கதை வருமாறு:

சிவபெருமானின் ஆணையின்படி அகத்தியர் தெற்குப் பகுதி வந்த போது திருக்குற்றாலத்தில் இருக்கும் பெருமாள் கோயிலுக்குள் நுழைந்தார். வைணவர்கள் அகத்தியர் சிவபக்தர் என்பதால் கோயிலில் சேர்க்க மறுத்தனர். பின்பு அகத்தியர் முருகப்பெருமான் அருளால் திருமால் பக்தராகத் தோற்றம் கொண்டு கோயிலுக்குள் சென்றார். வைணவர்கள் வரவேற்றுக் கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர். கோயிலில் நுழைந்த அகத்தியர் திருமாலைச் சிவனாக மாற்றினார் என்றவாறு அமைகிறது.

இப்புராணக் கதையின் மூலம் முதற்கண் இக்கோயில் திருமால் கோயிலாக இருந்தது என்றும் பின்னர் சிவன் கோயிலாக மாறி விட்டது என்றும் கருத வாய்ப்பு உள்ளது. மேலும் இக்கோயில் சங்கு வடிவில் அமைந்து இருப்பதும் கோயிலின் சிகரத்தில் சக்கரம் இடம் பெற்று இருப்பதும் இக்கருத்தை எண்ணிப் பார்க்கச் செய்கிறது.

தேவாரம் பாடிய பெரியோரால் பாடப்பெற்ற திருத்தலம் குற்றால மாகும். திருஞானசம்பந்தர் திருக்குற்றாலநாதரைப் பற்றி ஒரு பதிக மும் குறும்பலா ஈசரைப் பற்றி வேறு ஒரு பதிகமும் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் குறும்பலா ஈசரைப் பாடியிருப்பது தனிச்சிறப்புக் குரியது. ஏனெனில் இதுபோன்று தலமரத்தைப் பற்றித் தனியாக அவர் பதிகம் பாடவில்லை. மாந்தர் உயிரோடு இருக்கும்போதும்,

இறந்த பின்பும் குற்றாலநாதர் துணையிருப்பார் என்று திருநாவுக் கரசர், மாணிக்கவாசகர் ஆகியோரும் பாடியிருக்கிறார்கள்.

இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் குற்றாலநாதர் சாட்டை இல்லாத பம்பரம் போன்று உலகை ஆட்டுவிக்கும் அண்ணலார். திரிகூடராசப்பக் கவிராயர் சிவபக்தி நிறைந்தவர். எனவே நோக்கிய இடத்தில் எல்லாம் அவருக்குச் சிவபெருமானே நிறைந்து காணப் படுகின்றார்.

“கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பெலாம் சதுர்வேதம்: கிளை கள் ஈன்ற களையெலாம் சிவலிங்கம். கனியெலாம் சிவலிங்கம்; கனிகள் ஈன்ற சுளையெலாம் சிவலிங்கம்; வித்தெலாம் சிவலிங்கம்” என்ற பாடல் இதற்கு எடுத்துக்காட்டு.

அத்துடன் இறைவனைச் சிவக் கொழுந்தாகவும் அவர் காணு கிறார். இத்தகைய சிறப்புப் பெற்ற திருத்தலத்தில் அமர்ந்திருக்கின்ற திருக்குற்றாலநாதரைப் பற்றித் திரிகூடராசப்பக் கவிராயர் பரம்பரை யில் வந்த சொ. சுப்பிரமணிய கவிராயர் ஆய்வு செய்திருப்பது மிகப் பொருத்தமாக அமைகிறது. ‘திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும்’ என்ற அவரது முனைவர் பட்ட ஆய்வு நூலினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதில் பெருமை கொள் கிறது. மேலும் சுப்பிரமணிய கவிராயர் இவ்வாய்வினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சுப்பிரமணிய கவிராயர் தம் ஆய்வுத்திறன் தோன்ற ஆழமும் அகல மும் கொண்டதாக இந் நூலினை அமைத்துள்ளமை சிறப்பாகப் போற்றுதற்குரியது.

திருக்கோயில்கள் பற்றி இதுகாறும் வெளிவந்த தமிழ் ஆங்கில நூல்களைப் பற்றியும் ஆய்வேடுகள் பற்றியும் சுப்பிரமணியக் கவிராயர் ஆய்வு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜே.எம். சோமசுந்தரம் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத் திலும் தமிழகக் கோயில்களைப் பற்றி நூல்கள் எழுதியிருப்பதைச் சிறப்பாகச் சுட்டியுள்ளார். மேலும் மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருப்பரங்குன்றம் முருகன் கோயில், மதுரை அழகர் கோயில், பழனி முருகன் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், தென்காசி காசி விசுவ நாதர் கோயில், சங்கரநயினார் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில், கன்னியாகுமரி அம்மன் கோயில், காஞ்சி வரதராசப் பெரு மாள் கோயில், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், திருவையாறு

தியாகராசர் கோயில் முதலிய கோயில்களைப் பற்றி எழுதப்பட்ட ஆய்வேடுகளையும் குறிப்பிட்டுள்ளார். தமிழகத் திருக்கோயில்கள் பற்றிய ஆய்வில் நாம் இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை என்றும் ஆய்வு செய்ய வேண்டிய திருக்கோயில்கள் நிறைய உள்ளன என்றும் படிப்பவர் உணரும் வகையில் ஆய்வாளர் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'பஞ்ச சபை' பற்றி ஆய்வாளர் எழுதிய விளக்கம் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. 'பஞ்ச சபை என்பதுகூட மனிதனின் வளர்ச்சியை, மனப் பக்குவத்தையே குறிக்கிறது எனலாம். முதலில் ஓவிய வடிவில் வழிபாடு செய்தவன் அடுத்து கல், தாமிரம் (செம்பு), வெள்ளி, பொன் என்ற ஒவ்வொரு உலோகத்தையும் வழிபாட்டிற்குரியதாக மாற்றியுள்ளான்' (பக்.180) என்று நூலாசிரியர் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும்' பற்றி சிறந்த ஆய்வுரை எழுதிய முனைவர் சுப்பிரமணிய கவிராயர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளர் திருமிகு த. இரா. சீனிவாசன், இ. ஆ. ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை வெளியிட நிதியுதவி நல்கிய இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும், திருக்குற்றாலம் திருக்கோயிலைச் சார்ந்த நிர்வாகிகளுக்கும் மிக்க நன்றி.

இந்நூலினைச் சிறப்பான முறையில் நூலுருவாக்கம் செய்த திரு வே. கருணாநிதி அவர்கட்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பகுதிநேர ஆய்வு மாண வனாக அனுமதித்து, "திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறும் பண் பாடும்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்வதற்கு மனமுவந்து ஏற்றுக் கொண்டு, நுட்பமான அறிவுரைகளை இன்முகத்துடன் அவ்வப் பொழுது வழங்கி, நெறிப்படுத்திய ஆசான், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் முதன்மைப் பேராசிரியராகப் பணி யாற்றி ஓய்வுபெற்ற டாக்டர் ச. வே. சுப்ரமணியம் அவர்கள்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பகுதி நேர ஆய்வாள னாகத் தொடர்ந்து பயில அனுமதித்த இயக்குநர் டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்கள்,

பகுதி நேர ஆய்வாளனாகப் பயில அனுமதி வழங்கிய கல்லூரிக் கல்வி இயக்குநர், அனுமதி வழங்கியதுடன் தொடர்ந்து ஊக்கமும் நல்கிய செங்கல்பட்டு இரா.வே. அரசு கலைக் கல்லூரி முதல்வர்கள் டாக்டர் அர. இராசாராமன், டாக்டர் ம. தே. சுந்தரராசன், பேராசிரியர் எஸ். பட்டாபிராமன் ஆகியோர்கள்,

ஆய்வின்போது எழுந்த ஐயங்களை அகற்றி சிறந்த ஆய்வுரை களை வழங்கிய டாக்டர் துளசி. இராமசாமி, டாக்டர் மின்னூர் சீனு வாசன், டாக்டர் சு. மாரியப்பன் ஆகியவர்கள்,

கல்வெட்டுக்கள் மற்றும் கால வரலாற்றுச் செய்திகளை முறைப்படுத்திக் கொடுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தொல் பொருள் ஆய்வுத்துறை, தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினர்,

இந்த ஆய்வுக்குத் தேவையான நூல்களை வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், உ.வே.சா. நூலகம், மறைமலை யடிகள் நூலகம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், அண்ணா மலைப் பல்கலைக் கழகங்களின் நூலகங்கள், செங்கல்பட்டு இரா. வே. அரசு கலைக் கல்லூரியின் நூலகம் ஆகியவற்றின் நூலகர்கள்,

ஆய்வேட்டில் இடம்பெற்றுள்ள திருக்குற்றாலநாதர் கோயிலின் வரைபடம், கல்வெட்டுக்கள் முதலானவற்றை வரைந்து கொடுத்த இனிய நண்பர் திரு. கே. பாலு அவர்கள், திரு. பழனிச்சாமி அவர்கள்,

திருக்குற்றாலநாதர் கோயிலின் உட்பகுதிகள், ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வழங்கியும், ஆய்வுக்குத் தேவையான செய்திகளைக் கொடுத்தும் ஆய்வுக்குத் துணைநின்ற திருக்கோயில் தக்கார், நிர்வாக அதிகாரி மற்றும் அலுவலர்கள், ஆலயப்பட்டர் ஆகியவர்கள்,

ஆய்வேட்டில் இடம்பெற்றுள்ள புகைப்படங்களை எடுத்த தென் காசி சுவாமி ஸ்டுடியோ திரு. சின்னக்கண்ணு அவர்கள்,

ஆய்வின்பொழுது அனைத்துப் பணிகளிலும் எனக்கு உதவி நல்கிய என்னுடைய துணைவி வேலம்மாள்,

இந்த ஆய்வு செம்மையாக அமைய எல்லா வகையிலும் உதவிய நண்பர்கள்,

எனது ஆய்வேட்டைத் தற்போது நூலாக வெளியிடும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ச. சு. இராமர் இளங்கோ அவர்கள்,

ஆய்வேடு நூலாக வெளிவர நிதி உதவி நல்கிய தமிழக அரசு, குறிப்பாக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள், திருக்குற்றால நாத சுவாமி கோயில் நிர்வாகிகள்,

அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த பார்க்கர் கம்பியூட்டர்ஸ் வே. கருணாநிதி அவர்கள்,

அனைவருக்கும் இதயம் நிறைந்த நன்றி!

வணக்கம்.

**சொ. சுப்பிரமணிய கவிராயர்**

## வரைபடங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் - பல்லவர் காலம் | 40 |
| 2 | கல்வெட்டு எண். 480 | 44 |
| 3 | கல்வெட்டு எண். 417 | 45 |
| 4 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் - பிற்காலச் சோழர் காலம் | 47 |
| 5 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் - பிற்காலப் பாண்டியர் காலம் | 52 |
| 6 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் - நாயக்கர் காலம் | 55 |
| 7 | குழல்வாய் மொழியம்மன் கோயில் திருப்பணி சாசனம் | 59 |
| 8 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் இன்று | 62 |
| 9 | திரிகூடராசப்பக் கவிராயரின் வழியில் கட்டுரையாளர் | 77 |
| 10 | திருக்குற்றாலக் குறவஞ்சியில் பாக்களின் சீரடியும் பாவிகற்பமும் | 81 |
| 11 | பரதேசிப்புடை கல்வெட்டு | 175 |
| 12 | திருக்குற்றாலநாத சுவாமி கோயில் - தேர்வீதி - சித்திரசபை | 179 |

**புகைப்படங்கள் – பக்: 269 – 272**


1. திருக்குற்றாலநாத சுவாமி கோயிலும் அருவியும்
2. திருக்குற்றாலநாதர் கோயில் - சங்கு வடிவ அமைப்பு
3. கீழ வாயில் - கோபுரம்
4. ஐந்தருவி
5. செண்பகாதேவி அருவி
6. பழைய குற்றாலம்
7. குற்றாலம்
8. புலி அருவி
9. ஞானசம்பந்தப் பிள்ளையார் கோயில்
10. குறும்பலாவில் சிவலிங்க வடிவில் காய்த்த பலாக்கனி
11. திருத்தேர் - நடராசர்
12. கூத்தர் கோயில்
13. சித்திரசபையும் நீராழி மண்டபமும்
14. தந்தப்பல்லக்கு - திருக்குற்றாலநாதர்
15. செப்போடு வேய்ந்த சின்னணைஞ்சாத் தேவர்
16. செப்போடு

# ஆய்வடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 13 |
| ஒன்று | திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு | 22 |
| இரண்டு | திருக்குற்றாலநாதர் கோயில் இலக்கியங்கள் | 71 |
| மூன்று | தொல்பழங்கோயில் பற்றிய உண்மையும் கூத்தர் கோயிலின் முதன்மையும் | 101 |
| நான்கு | திருக்குற்றாலநாதர் கோயிலின் இன்றைய அமைப்பும் வழிபாட்டு முறைகளும் | 117 |
| ஐந்து | சார்புக் கோயில்கள் | 173 |
| ஆறு | திருக்குற்றாலநாதர் கோயில் பண்பாட்டுச் செய்திகள் | 214 |
| | நிறைவுரை | 222 |
| | துணை நூற்பட்டியல் | 225 |

பின்னிணைப்புகள்

| | | |
|---|---|---|
| 1 | திருக்குற்றாலநாதர் கோயில் - தகவல் தொகுப்பு | 244 |
| 2 | திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு, இலக்கியங்கள் - பட்டியல் | 257 |
| 3 | சித்திரசபை - திருவிருத்தம் - மதுரகவி சுப்பிரமணிய முனிவர் | 263 |
| 4 | புகைப்படங்கள் | 269 |

## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| உ.ஆ. | : | உரையாசிரியர் |
| திருக்குற்றாலநாதர் | : | திருக்குற்றாலநாத சுவாமி |
| ப. | : | பக்கம் |
| பக். | : | பக்கங்கள் |
| பா. | : | பாடல் |
| க.வா. | : | கடவுள் வாழ்த்து |
| பதி. | : | பதிப்பு |
| ப.ஆ. | : | பதிப்பாசிரியர் |
| தொ.ஆ. | : | தொகுப்பாசிரியர் |
| தொ.பொ.ஆ. | : | தொல்பொருள் ஆய்வுத்துறை |
| A.R. | : | Archaeology Survey Report |
| A.R.E. | : | Annual Report of Epigraphy |
| Ed. | : | Editor (s) |
| p. | : | Page |
| pp. | : | Pages |

# திருக்குற்றாலநாத சுவாமி கோயில்
## வரலாறும் பண்பாடும்

### ஆய்வு முன்னுரை

இறைவழிபாட்டுத் தலங்களாகவும், கலைக் கூடங்களாகவும், சமுதாய நற்பணிக் கூடங்களாகவும், மன்னர்கள் நீதி வழங்கும் மன்றங்களாகவும், மக்கள் மனத்தை மகிழ்விக்கின்ற கலையின் அரங்கங்களாகவும் காணப்படும் தமிழகக் கோயில்களைப் பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளார்கள்.

இந்தியாவிலுள்ள கோயில்களின் அமைப்புப் பற்றி, 'இந்தியக் கோயில்களும் அவற்றின் பொருளும்' என்னும் ஆங்கில நூல், மனிதனுடைய உடல் உறுப்புக்கள் அமைந்திருக்கும் முறையிலேயே கோயிலின் அமைப்பு உள்ளதாகக் கூறுகிறது.[1] அதாவது பாதம், ஆண்குறி, வயிறு, இதயம், தலை, இரு இமைகள் சேருமிடம் (நெற்றிப் பொட்டு) என்ற உடலுறுப்பு வரிசையில், கோயிலின் கோபுர வாசல், கொடிமரம், பலிபீடம், சன்னதி, கருவறை ஆகியவை அமைந்துள்ளன என்று விளக்கிக் கூறுகிறது. இயற்கையை வழிபட்ட மக்கள் இறந்தவர்களின் உடலைப் புதைத்த இடங்களில் மரங்களை நட்டு வணங்கியதன் மூலம் ஸ்தல விருட்ச வழிபாட்டிற்கும் வழி வகுத்தனர் என்ற கருத்தும் நிலவுகிறது.[2]

இந்தியாவிலும், வெளிநாட்டிலும் காணப்படும் சிவன் கோயில் களைத் தொகுத்துக் கூறும் ஆங்கில நூல், சிவன் கோயில்கள் பெரும் பாலும் நதிக் கரைகளில்தான் அமைக்கப்பட்டுள்ளன என்ற கருத்தைக் கூறுகிறது.[3]

தென்னாட்டுக் கோயில்கள்.[4] அகில இந்திய ஆலய வழி காட்டி,[5] சிவப்பதிகள் வரலாறு,[6] என்னும் தமிழ் நூல்களும், இந்துக்

கோயில்கள்,[7] தென்னிந்தியக் கோயில்கள்.[8] தென்னிந்தியாவில் காணப்படும் கோயில்கள்,[9] தமிழகக் கோயில்கள்[10] என்னும் ஆங்கில நூல்களும் முக்கியமான கோயில்களைப் பட்டியலிட்டுக்காட்டி, அவற் றின் சிறப்புகளையும் சிறப்பாகக் கூறி, வழிகாட்டி நூல்கள் போல் வெளிவந்துள்ளன. ஆனால், ஆங்கில நூல்களில் திருக்குற்றால நாதர் கோயில் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியக் கோயில்களின் தோற்றம் பற்றிய சென்னைப் பல்கலைக்கழக ஆய்வேடு, தென்னிந்தியக் கோயில்களின் தோற்றமாக முனிவர்களின் சமாதிகளையே சுட்டிக் காட்டுகிறது.[11] சிதம்பரத்தில் திருமூலர், பழனியில் போகர், திருவண்ணாமலையில் இடைக்காடர், காஞ்சியில் கடுவெளிச்சித்தர், இராமேஸ்வரத்தில் பதஞ்சலி முனிவர், மதுரையில் சுந்தரானந்தர், மாயவரத்தில் குதம்பைச்சித்தர், திருவா வடுதுறையில் விஸ்வாமித்திரர், திருப்பதியில் கொங்கணவர் என்று புகழ் பெற்ற கோயில்களனைத்தும் ஞானிகளின் சமாதிகளாகவே காணப்படுவது இக்கருத்தை வலியுறுத்துகிறது. வடநாட்டில் வாழ்ந்த முனிவர்கள் ஜலசமாதி, அக்னி சமாதி அடைந்தமையால், வடநாட்டை விடத் தென்னாட்டில் கோயில்கள் மிகுந்து காணப்படுகின்றன.

கி.பி. 1070 முதல் 1280 வரை தமிழகத்தை ஆண்டு வந்த பிற்காலச் சோழர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டக் கோயில்களின் அமைப்பையும் வரலாற்றையும் விளக்கி ஆங்கிலத்தில் நூல் ஒன்று வெளியாகியுள்ளது.[12] பிற்காலச் சோழர் காலத்தில் எழுந்த கோயில் களின் வரலாற்றையும், சோழர்களின் திருப்பணிகளையும் விளக்கி ஜே. எம். சோம சுந்தரம்பிள்ளை எழுதியுள்ளார்.[13] ஆதீனக் கோயில்கள்,[14] பாண்டிநாட்டுத் தலங்கள்[15] என்னும் இரு ஆலய வழிகாட்டி நூல்கள் வழிபடுவோருக்குப் பயன்படும் வகையில் தருமை ஆதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. நெல்லை மாவட்டத்திலுள்ள குடவரைக் கோயில்களின் தோற்றம், அமைப்பு, வரலாறு, ஆகியவற்றை விளக்கி ஒரு நூல் வெளிவந்துள்ளது.[16]

பழனிக் கோயில் தல வரலாற்றையும்,[17] வழிபாட்டு முறைகளை யும்,[18] தஞ்சைத் திருக்கோயில்களையும்,[19] தஞ்சைப் பெரிய கோயிலை யும்,[20] திருச்செந்தூர் கோயில் அமைப்பையும்[21] விளக்கி ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் இறுதியில் குறிப்பிட்டுள்ள நூல்கள் இரண்டும் ஆங்கிலத்தில் உள்ளன.

தில்லை நடராசர் கோயிலின் அமைப்பையும் வரலாற்றையும், வழிபாட்டு முறைகளையும் குறித்து ஆங்கிலத்திலும்,[22] தமிழிலும்,[23]

தனித்தனியாக நூல்கள் வெளிவந்துள்ளன. சாளுக்கிய முறைப்படி உருவாக்கப்பட்ட நடராசர் கோயிலின் சிற்றம்பலம் பல்லவர்காலப் பாணியிலும், சுற்றுக் கோயில்கள் பிற்காலச் சோழர், பாண்டியர், நாயக்கர் காலப் பாணியிலும் அமைந்துள்ளதாக ஆங்கில நூல் விளக்கி யுள்ளது. தமிழ்நூல் இறைவனின் பெருமைகளையும், தீர்த்தங்கள், திருவிழாக்கள் பற்றிய செய்திகளையும் விளக்கமாகக் கூறுகிறது. மதுரை மீனாட்சிக் கோயிலின் அமைப்பு, ஒவ்வொரு பேரரசு காலத்திலும் கோயில் அடைந்துள்ள மாற்றங்கள், கோபுரங்கள், மண்டபங்கள், சிற்பங்கள் என்று, 'மதுரைக் கோயில் வளாகம்'[24] என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மதுரை நகரத்தில் அமைந்துள்ள திருப்பரங்குன்றம்,[25] அழகர் கோயில்[26] ஆகியவற்றின் வரலாற்றையும், பெருமைகளையும் ஆய்வு நோக்கோடு எடுத்துக்காட்டியுள்ள ஆய்வேடுகள் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் உள்ளன.

காஞ்சி வரதராஜ சுவாமி கோயில் பற்றிய ஆய்வேடு ஆங்கிலத் தில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ளது.[27] இவ்வாய்வேடு கோயிலின் வரலாறு, அமைப்பை விளக்குவதுடன், வடகலை, தென் கலை என்னும் வைணவப் பிரிவுகளையும் விளக்கியுள்ளது.

பிற்காலச் சோழர் காலத்தில் பௌத்தத்தின் தாக்கமும், தஞ்சைப் பெரிய கோயிலின் அமைப்பும் என்ற தலைப்பில் தஞ்சைப் பெரிய கோயிலின் அமைப்பு, கலை நுணுக்கங்களை விளக்குகின்ற ஆய்வேடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகிறது.[28] திருக்கழுக் குன்றம் பற்றி சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ள ஆங்கில ஆய்வேடு, தமிழகக் கோயில்களின் தோற்றத்தையும், வளர்ச்சியில் பல்லவர்களின் பங்கினையும் விளக்கியுள்ளது.[29]

திருவையாறு தியாகராசர் கோயிலைப் பற்றியும்,[30] குடந்தை சாரங்கபாணி கோயிலைப்பற்றியும்[31] ஆய்வு செய்து எழுதப்பட்ட ஆய்வேடுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ளன. சுசீந்திரம் கோயிலின் வரலாற்றை ஆய்வுசெய்துள்ள ஆய்வேடும் ஆங்கிலத்தில் உள்ளது.[32]

நெல்லை மாவட்டத்தில் பாடல்பெற்ற தலங்களில் ஒன்றான நெல்லையப்பர் கோயில்,[33] முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் முருகன் கோயில்,[34] சைவ வைணவத்தை இணைத்துக் கட்டிய சங்கரநயினார் கோயில்[35] கலைச்சிறப்பு மிக்க தென்காசி

காசிவிஸ்வநாதர் கோயில்[36] ஆகிய கோயில்களின் அமைப்பு, வரலாறு, வழிபாட்டு முறைகளை விளக்குகின்ற ஆய்வேடுகள் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் உள்ளன. (ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் கோயில்,[37] கன்னியாகுமரி அம்மன் கோயில்[38] பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.)

இவ்வாறாகத் தமிழகத்திலுள்ள கோயில்களைப் பற்றிய நூல்களும் ஆய்வேடுகளும் வெளிவந்துள்ளன. ஆனால், குற்றாலநாதர் கோயில் பற்றிய செய்திகள் இவ்வாய்வேடுகளிலும், நூல்களிலும் இடம்பெறவில்லை.

திருக்குற்றாலநாதர் கோயில் பற்றிய ஆய்வேடு மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் உள்ளது.[39] முதுகலைப் பட்டத்திற்கான இந்த ஆய்வேடு குற்றாலநாதர் கோயிலின் வரலாற்றை அறிந்துகொள்ளத் துணை செய்யும் கருவி நூலாக உள்ளது. திருக்குற்றாலநாதர் கோயிலின் பெருமையை அடிப்படையாகக் கொண்டு திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய இலக்கியங்களை ஆய்வு செய்து வெளியாகியுள்ள ஆய்வேடுகள் அண்ணாமலை,[40] சென்னைப் பல்கலைக்கழகங்களில்[41] உள்ளன. இவ்வாய்வேடுகள் திரிகூடராசப்பக்கவிராயரின் இலக்கியங்களையே ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளன. திருக்குற்றாலநாதர் கோயிலின் அமைப்பு முறைகளை விளக்கி, கல்வெட்டுத்துறை மாணவன் எழுதிய கட்டுரை தொல்பொருள் துறையில் உள்ளது.[42] 'திருக்குற்றாலம் தல வரலாறு' [43] என்னும் நூல், சுற்றுலாப் பயணிகளுக்காகவும், கோயிலைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்காகவும் வழிகாட்டி நூல்போல் வெளிவந்துள்ளது. சித்ரசபை,[44] ஆடலரசனின் ஒளிக்கூத்து[45] என்னும் கருத்தரங்கக் கட்டுரைகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ளன. இந்நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள் ஆகியன திருக்குற்றாலநாதர் கோயிலின் வரலாற்றையும் பண்பாட்டையும் முழுமையாகக் கூறவில்லை. திருக்குற்றாலநாதர் கோயிலின் வரலாற்றையும், பண்பாட்டையும் கோயிலின் அமைப்பு, கல்வெட்டுச் செய்திகள், இலக்கியச் செய்திகள், சார்புக் கோயில்கள் ஆகிய ஆய்வு மூலங்களின் துணைகொண்டு, கள ஆய்வு, நேர்காணல் ஆய்வு உத்திகளைப் பயன்படுத்தி முழுமையாக ஆய்கின்ற ஆய்வேடாகும் இது.

## ஆய்வு நோக்கம்

திருக்குற்றாலநாதர் கோயிலின் வடிவமைப்பு, தொன்மை, தனிச்சிறப்பு, வழிபாடு, பண்பாட்டுக் கூறுகள், சார்புக் கோயில்கள் ஆகியன பற்றி ஆய்வு முடிபுகளை வெளியிடுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## கருதுகோள்

திருக்குற்றாலநாதர் கோயில் இறைவனை, 'குற்றாலத்துறைக் கூத்தன்' என்றும், 'குறும்பலா ஈசன்' என்றும் திருஞானசம்பந்தர் தனித்தனியாகப் பதிகங்கள் பாடி வணங்கியுள்ளார். எனவே, தேவார காலத்தில் இங்கு இரண்டு சிவன் கோயில்கள் இருந்தன என்பது கருதுகோள்களில் ஒன்று. திருக்குற்றால தலபுராணத்தில், ஆதியில் இங்குப் பெருமாள் கோயிலே காணப்பட்டது, அகத்தியர் அக் கோயிலைச் சிவன் கோயிலாக மாற்றினார் என்ற செய்தி காணப் படுகிறது. ஆதியில் இத்தலத்தில் இரு கோயில்களும் இணைந்து காணப்பட்டன என்பதும், அக்கோயிலில் காணப்பட்ட பெருமாளின் திருமூர்த்தத்தை மட்டும் அகத்தியர் அகற்றியுள்ளார் என்பதும் கருதுகோள்களில் மற்றொன்று.

## ஆய்வின் எல்லை

திருக்குற்றாலநாதர் கோயிலின் வரலாறும் பண்பாடும் என்னும் இவ்வாய்வு, திருக்குற்றாலநாதர் கோயில் பற்றிய செய்திகளையும், கோயிலில் காணப்படும் செய்திகளையும் மட்டும் ஆய்வு எல்லையாக வகுத்துக்கொண்டு நிகழ்த்தப்பட்டது.

## ஆய்வு மூலங்கள்

பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்றுள்ள தேவாரம், திரு வாசகம், திருக்கோவையார், சிவபெருமான் திருவந்தாதி, பெரிய புராணம் ஆகிய இலக்கியங்களிலும், பட்டினத்தடிகள், அருணகிரி நாதர் முதலிய முனிவர்களின் பாடல்களிலும், கந்தபுராணம், திருப் பத்தூர் புராணம் ஆகிய புராணங்களிலும் இக்கோயில் பற்றிய செய்தி கள் இடம்பெற்றுள்ளன. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றால நாதரையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பதினான்கு இலக் கியங்கள் படைத்துள்ளார்.

இக்கோயிலில் எண்பத்தொன்பது கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. அவற்றில் பதினான்கு, பிற்காலச் சோழர் காலத்திலும், எஞ்சியவை பாண்டியர் காலத்திலும் பொறிக்கப்பட்டவை. அவற்றில் பதினெட்டு வட்டெழுத்துக்களிலும் எஞ்சியவை தமிழ் எழுத்துக் களிலும் எழுதப்பட்டுள்ளன. நாயக்க மன்னர்களால் வழங்கப்பட்ட செப்பேட்டுப் பத்திரங்கள் இக்கோயிலில் உள்ளன.

திருக்குற்றாலநாதர் கோயில் தொடர்பான இலக்கியச் செய்தி கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கோயில் அலுவலகத்தில்

காணப்படுகின்ற ஆவணங்கள், கோயில் தொடர்பாகப் பணியாளர்கள், பக்தர்கள் ஆகியோர் அளித்த தகவல்கள், கள ஆய்வில் கண்ட செய்திகள் ஆகியவை ஆய்வு மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

## ஆய்வுப் பகுப்பு

1. திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு
2. திருக்குற்றாலநாதர் கோயில் இலக்கியங்கள்
3. தொல் பழங்கோயில் பற்றிய உண்மையும் கூத்தர் கோயிலின் முதன்மையும்
4. திருக்குற்றாலநாதர் கோயிலின் இன்றைய அமைப்பும் வழிபாட்டு முறைகளும்
5. சார்புக் கோயில்கள்
6. திருக்குற்றாலநாதர் கோயில் பண்பாட்டுச் செய்திகள்

என்னும் ஆறு தலைப்புக்களில் வகுத்து இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டது. ஆய்வு முடிபுகள் நிறைவுரையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு என்னும் தலைப்பின் கீழ் இறைவழிபாட்டின் தோற்றம் - கோயிலின் தோற்றம் - தமிழக வரலாற்றுக் காலங்களில் கோயிலின் வளர்ச்சி - திருக்குற்றால நகரின் அமைப்பு - இயற்கைச் சூழல் - அருவிகள் - திருக்குற்றாலநாதர் கோயிலின் வரலாறு ஆகிய செய்திகள் இலக்கிய வரலாற்றுக் காலங்களின் அடிப்படையில் பகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன; சங்க காலம், பல்லவர் காலம், பிற்காலச் சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர் காலம், வரலாற்றுக் காலங்களில் அடக்க முடியாத புராண காலம் ஆகிய அனைத்துக் காலங்களிலும் திருக்குற்றாலநாதர் கோயிலின் அமைப்பும் வரலாறும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

திருக்குற்றாலநாதர் கோயில் இலக்கியங்கள் என்னும் தலைப்பின்கீழ் திருக்குற்றாலநாத சுவாமியின் பெருமையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த தேவாரம், திரிகூடராசப்பக் கவிராயரின் நூல்கள், குற்றாலக்கோவை ஆகிய நூல்களைப் பற்றிய செய்திகள், இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தரப்பட்டுள்ளன. திருக்குற்றாலநாதர் கோயில் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ள பிற இலக்கியங்களும், அவற்றில் இடம்பெற்றுள்ள செய்திகளும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

தொல் பழங்கோயில் பற்றிய உண்மையும், கூத்தர் கோயிலின் முதன்மையும் என்னும் தலைப்பின்கீழ் திருக்குற்றாலத் தல புராணத்தில் கூறப்பட்டுள்ள பெருமாள் கோயிலைச் சிவன் கோயிலாக அகத்தியர் மாற்றிய செய்தி விவரிக்கப்பட்டுள்ளது. பெரியபுராண உரையில் திருக்குற்றாலத்தில் இரண்டு சிவன் கோயில்கள் காணப் பட்ட செய்தி கூறப்பட்டுள்ளதால், தொல் பழங்கோயில் எது என்று முடிபு செய்யப்பட்டு தொல் பழங்கோயிலாகிய கூத்தர் கோயிலின் முதன்மைச் சிறப்பு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

திருக்குற்றாலநாதர் கோயிலின் இன்றைய அமைப்பும் வழி பாட்டு முறைகளும் என்னும் தலைப்பின் கீழ்க் கோயிலின் இன்றைய அமைப்பு முறை விளக்கப்பட்டுள்ளது. இன்றைய வழிபாட்டு முறை கள், நாள் வழிபாடு, மாத வழிபாடு, ஆண்டு வழிபாடு, கோயில் வாகனங்கள், நகைகள், செப்புத் திருமேனிகள், கட்டளைகள் ஆகி யவை பற்றிய செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

சார்புக் கோயில்கள் என்னும் தலைப்பில் திருக்குற்றாலநாதர் கோயிலின் நிர்வாகத்தின்கீழ் உள்ள, குற்றாலநாதர் கோயிலுடன் வரலாற்று அடிப்படையில் தொடர்புகொண்ட பன்னிரண்டு கோயில் களின் தோற்றம், அமைப்பு, வழிபாட்டு முறைகள் விளக்கப்பட்டுள் ளன. திருவிழாக்களினாலும், திரிகூடராசப்பக் கவிராயரின் இலக்கியங் களினாலும் திருக்குற்றாலநாதர் கோயிலோடு தொடர்பு கொண்ட மேல கரம் செண்பக விநாயகர் திருக்கோயில், திருவிலஞ்சிக் குமரன் கோயில் பற்றிய செய்திகளும் இறுதியாக இடம்பெற்றுள்ளன.

திருக்குற்றாலநாதர் கோயில் பண்பாட்டுச் செய்திகள் என் னும் தலைப்பில் கோயில் வரலாறு, அமைப்பு, வழிபாட்டுமுறை, திருவிழாக்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படு கின்ற பண்பாட்டுச் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

நிறைவுரையில் ஆய்வு முடிபுகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

ஆய்வு விளக்கங்களுக்குத் துணையாகப் புகைப்படங்கள், வரை படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் துணையாக விளங்கிய துணை நூல்களின் பட்டியல், கல்வெட்டுச் செய்திகள், கோயிலைப் பற்றிய முக்கிய செய்திகள், சித்திரசபை திருவிருத்தம் என்னும் நூல் ஆகியவை பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. Ramachandra Rao, The Indian Temples and its meaning, p.97.
2. மேற்படி, ப.15
3. Sambandam, P., Shiva Shrines in India and Beyond Tamilnadu.
4. இராதாகிருஷ்ணபிள்ளை, தென்னாட்டுக்கோயில்கள்.
5. அருணகிரி முதலியார், க.வெ., அகில இந்திய ஆலய வழிகாட்டி.
6. ........, சிவப்பதிகள் வரலாறு.
7. Stella Kramrich, The Hindu Temple, Vol.I & II.
8. Burton Steins, South Indian Temples.
9. ......., Temples of South India.
10. Das, R.K., Temples of India.
11. Venkataramayya, N., Dr., An Essay on the Origin of the South Indian Temples.
12. Balasubramanian, S.R., Later Chola Temples, A.D. 1070 to 1280.
13. சோமசுந்தரம்பிள்ளை, ஜே.எம்., (அ) சோழர் கோயிற்பணிகள், (ஆ) இராஜராஜேஸ்வரமும் பிற்காலச் சோழர் கோயில்களும்.
14. தண்டபாணி தேசிகர், ச., ஆதீனக் கோயில்கள்.
15. முருகவேள், எஸ்.ஆர்., பாண்டிநாட்டுத் தலங்கள்.
16. இராசமாணிக்கம், தி., நெல்லை மாவட்டக் குடைவரைக் கோயில்கள்.
17. சோமசுந்தரம்பிள்ளை, ஜே.எம்., பழனித் தலவரலாறு.
18. மேற்படி, பழனித் தலவரலாறும், திருக்கோயில் வழிபாடும்.
19. மேற்படி, தஞ்சைத் திருக்கோயில்கள்.
20. Somasundaram Pillai, J.M., The Great Temple at Tanjore.
21. Somasundaram Pillai, J.M., A Plan of Tiruchendur.
22. Satyamurthy, T., The Nataraja Temple.
23. மெய்யப்பன், ச., தில்லைத் திருக்கோயில்.
24. Jayachandran, A.V., Dr., Madurai Temple Complex.

25. நாகப்பா நாச்சியப்பன், டாக்டர்., திருப்பரங்குன்றம் கோயில்.
26. பரமசிவன், தொ., டாக்டர்., அழகர் கோயில்.
27. Raman, K.V., Dr. Sri Varadharajaswami Temple, Kanchi.
28. தெய்வநாயகம், கோ., டாக்டர்., பிற்காலச் சோழர் காலத்தில் பௌத்தத்தின் தாக்கமும் தஞ்சைப் பெரிய கோயிலின் ஆக்கமும்.
29. Gopalakrishnan, K.V., Tirukkalukkunram and its Temple.
30. பொன்னுசாமி, எஸ்., தியாகராசர் கோயில், திருவையாறு - ஓர் ஆய்வு.
31. மணி, ச., கும்பகோணம் சாரங்கபாணி கோயில்.
32. Pillai, K.K., A Short History of Suchindram Temple.
33. Uma Maheswari, Dr., Nellaiappar Temple.
34. கல்யாணசுந்தரம், ந., டாக்டர்., திருச்செந்தூர் முருகன்கோயில் நாள் வழிபாடும் திருவிழாக்களும்.
35. இராமையா, எஸ்., டாக்டர், சங்கரநயினார் கோயில் ஓர் ஆய்வு.
36. இலக்குமி நாராயணன், எல்., டாக்டர், தென்காசி காசி விஸ்வநாதர் கோயில் - ஓர் ஆய்வு.
37. அழகர் இராமானுஜம், ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் கோயில் - ஓர் ஆய்வு.
38. விசயாள், கன்னியாகுமரி அம்மன் கோயில் - ஓர் ஆய்வு.
39. ....., திருக்குற்றாலநாதர் கோயில் - ஓர் ஆய்வு.
40. இராமசாமிபிள்ளை, ஆ., திரிகூடராசப்பக் கவிராயர்.
41. பத்மநாபன், டாக்டர், திரிகூடராசப்பக் கவிராயரின் இலக்கியங்கள் - ஓர் ஆய்வு.
42. மதியழகன், கே., அருள்மிகு திருக்குற்றாலநாதர் கோயில்.
43. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலம் தல வரலாறு.
44. சுப்பிரமணியக் கவிராயர், சொ., சித்ரசபை, கருத்தரங்கக் கட்டுரை, நாள் : 7.3.1986.
45. மேற்படி, ஆடலரசனின் ஒளிக்கூத்து, கருத்தரங்கக் கட்டுரை, நாள் : 6.3.1987.

# திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு

## அ. தமிழகக் கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்

### 1. இறைவன் வழிபாடு

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்[1]

என்றதனால் தமிழகத்தில் வாழ்ந்த மக்களிடையே கடவுள் வழிபாடு தொல்காப்பியர் காலத்திலேயே இருந்தது என அறியமுடிகிறது. சிவன்,[2] திருமால்,[3] முருகன்[4] ஆகிய தெய்வங்களின் வழிபாடுகள் சங்க காலத்திலேயே காணப்பட்டன. சிவனுடைய தோற்றங்களாக பிறைசூடி,[5] நெற்றிக்கண்,[6] முக்கண்ணன்,[7] புலித்தோல் ஆடையன்[8] என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. சிவனுடைய ஆயுதங்களாக சூலப்படை,[9] மழுப்படை[10] போன்றவை காணப்படுகின்றன. சிவனுடைய செயல்களாக முப்புரம் அழித்தல்,[11] பாண்டரங்கம் ஆடுதல்,[12] கொடுகட்டி ஆடுதல்,[13] காட்டில் ஆடுதல்,[14] கபாலம் ஆடுதல்[15] என்றும், உமையுடன் சிவன் காணப்படுகின்றான்[16] என்றும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. முருகன், திருமால் பற்றிய செய்திகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுவதால், இறைவனை, பல வடிவங்களில் மக்கள் வழிபட்டனர் என்பது புலனாகிறது. ஆனால் இறைவனுக்குரிய கோயில்களின் வடிவங்கள், அமைப்புக்கள் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. எனவே, மக்களிடையே இறைவனைப் பற்றிய செய்திகளும் வழிபாடுகளும் பரவியிருந்த அளவு, கோயில்கள் அமைக்கும் முறை பரவவில்லை என்பதுதான் உண்மை.

சங்க இலக்கியங்களில் நடுகல் நாட்டுதல்,[18] நடுகல்லிற்கு வழிபாடு செய்தல்[19] போன்ற செய்திகள் காணப்படுகின்றன. பண்டைக்

காலத்தில் ஊர்தோறும், 'பொது இல்' எனப்படும் அம்பலத்தில் தெய்வம் உறையும் தூண் ஒன்று நடப்பட்டிருந்தது. நீராடி, தூய்மை யுடைய மகளிரும் ஆடவரும் அம்பலத்தை மெழுகி, தூய்மை செய்து, விளக்கேற்றி, நறுமலர் தூவி கடவுளை வழிபட்டனர்.[20] நடுகல் வழிபாடு என்பது, போரில் சிறந்த வீரன் அல்லது செயற்கரிய செயல் களைச் செய்தவர்கள் நினைவைப் போற்றியே எழுந்திருக்க வேண்டும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"[21] என்று வள்ளுவரும் இதனையே வலியுறுத்தியுள்ளார். அதன் காரணமாகவே, தமிழகத்தில் மறைந்த முனிவர்கள், சித்தர்களின் சமாதிகளின்மேல் கோயில்களைக் கட்ட ஆரம்பித்திருக்க வேண்டும்.

பல்லவ மன்னன் அபராஜிதன் காலத்தில் மாதங்க முனிவருக்கு எழுப்பிய சமாதி பற்றிய செய்தி செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரி தாலுகாவிலும், சோழன் முதலாம் ஆதித்தன் மெய்ப்பொருள் நாயனாருக் காகத் தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வரம் என்னுமிடத்தில் சமாதி எழுப்பிய செய்தியும்தான் இறந்தவர்கள் மீது சமாதி கட்டி வழிபட்டதற் கான முதலாவது வரலாற்றுத் தகவல்களாகும்.[22] முன்னோர்களை வழிபடுவதுதான் திராவிட மரபு என்றும், இறந்த முன்னோர்களுக்குக் கோயில்கள், சமாதி ஏற்படுத்திப் போற்றப்பட்டு வந்தது என்னும் கருத்தும்[22அ] இங்கு ஒப்புநோக்க வேண்டியதாகும்.

தமிழகத்தில் அமைந்துள்ள முக்கியமான சிவன் கோயில்கள் சித்தர்கள் அல்லது முனிவர்களின் சமாதிகளே என்ற கருத்தும் நிலவுகிறது.[23] இதன் காரணமாக, கிராமத் தேவதைகளின் வழிபாட்டு அடிப்படையில் சிவன் வழிபாடு வந்திருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[24] பூவுலகில் வாழ்ந்து மறைந்த பெரியவர்களையே திராவிடர்கள் தெய்வமாக வழிபட்டு வந்தனர்.[25] இறந்த மனித உடலைப் புதைத்த இடத்தில் மரம் ஒன்று வளர்க்கப்பட்டு அம்மரத் தின் அடியில் நடுகல் நட்டு வழிபாடு செய்தனர். இறந்த மனித னுடைய ஆன்மா, மரமாக வளர்ந்தது எனக் கருதி வழிபட்டனர். அதன் அடிப்படையில், தல விருட்சங்கள் என்ற பெயரில், இந்தியாவில் எல்லாப் பெரிய கோயில்களும் ஏதாவது ஒரு மரத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.[26]

இறந்தவர்களின் உடலைப் புதைக்குமிடங்களில் வானலிங்கங் கள் நடப்படும் வழக்கம் தமிழ்நாட்டில் காணப்பட்டது. பள்ளிப்படைக் கோயில்கள் கட்டப்பட்டன.[27] பெரும்பாலும் மரத்தின் அடியில் ஒரு சமதளக் கல்லின் மீது இன்னொரு குத்துக்கல் இருப்பதே திராவிடக் கோயில்[28] என்பது ஆய்வாளர்களின் முடிவு.

நடுகல்லிலிருந்து தெய்வக் கொள்கையும் கோயில்களும் உருவாகின என்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களும் ஆய்வாளர்களிடையே காணப்படுகிறது.[29] எனவே, தெய்வக் கொள்கை பற்றிய கருத்துக்கள் விரிவான ஆய்வுக்குரிய செய்திகளாகும்.

## 2. கோயில்கள்

தென்னிந்தியாவிற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு, வருகை தருகின்ற அனைவரும் கோயில்களின் இடம் என்ற எண்ணத்துடன் திரும்புகிறார்கள் என்ற செய்தி[30] தமிழர்க்குப் பெருமிதம் அளிப்பதாகும். சமயத்தின் சின்னமாக, தத்துவம், சடங்குகள் ஆகியவற்றின் விளக்கமாக அமைந்துள்ள கோயில்களைக் கட்டுவதற்குப் பல ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். அதன் காரணமாக அக்கால மக்களுக்கு வேலை வாய்ப்பு, கலை வல்லுநர்களுக்குத் தங்களுடைய திறன்களை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

அணங்குடை முருகன் கோட்டம்[31] என்று கோயில் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்பட்டாலும், அவற்றின் வடிவமைப்புக்கள் விரிவாகக் கூறப்படவில்லை. சங்க காலத்தில் கோட்டைகளே மண்ணில்தான் கட்டப்பட்டுள்ளன.[32] எனவே, கோயில்களும் மண்ணால் கட்டப்பட்டிருக்க வேண்டும். செங்கல், மரம், சுண்ணாம்பு ஆகியவற்றால் சங்ககாலக் கோயில் கட்டப்பட்டது என்பதைச் சிதைந்து அழிவுக்குள்ளான ஒரு சங்ககாலக் கோயில் பற்றிய செய்தியிலிருந்து அறியமுடிகிறது.[33] தில்லை நடராசப் பெருமாள் கோயிலின் மூலக் கோயிலாகக் கருதப்படும்[34] பொன்னம்பலம் என்று போற்றப்படுகின்ற திருச்சிற்றம்பலம் மரத்தால்தான் கட்டப்பட்டுள்ளது. கேரளத்தில் மரத்திலான கோயில்கள் பல உள்ளன. குருவாயூரப்பன் கோயில் இதற்குச் சான்றாகும்.

கடைச்சங்க காலத்தைச் சேர்ந்த கோச்செங்கட் சோழர் கட்டிய கோயில்களனைத்தும் செங்கற் கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட்டன.[35] சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினம்,[36] மதுரை[37] ஆகிய நகரங்களில் அமைந்துள்ள கோயில்களின் பட்டியல் காணப்படுகின்றன. கோச்செங்கட் சோழர் கட்டிய எழுபத்தெட்டு கோயில்களுக்கு, பல்லவர் காலத்தைச் சார்ந்த சைவ சமயக் குரவர் நாவுக்கரசர் சென்று வழிபட்டதோடு, கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில் என்ற சிவனுறையும் கோயில்களுக்கும் சென்று வழிபட்டுள்ளார்.[38] நாவுக்கரசர் குறிப்பிட்டுள்ள கோயில்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| பெருங்கோயில் | - | கோச்செங்கட் சோழர் எழுப்பிய செங்கற் கோயில்கள். |
| மாடக்கோயில் | - | செங்குன்றுமேல் அமைக்கப்பட்ட பெருங்கோயில். |
| கொகுடிக்கோயில் | - | கொகுடி என்னும் முல்லை நிலத்தில் அமைந்தது. |
| இளங்கோயில் | - | தொலைவில் உள்ள தெய்வங்களுக்கும், திருப்பணிகளின்பொழுது கருவறையில் அமைந்துள்ள மூலவரை எழுந்தருளச் செய்வதற்கும், அருகில் கட்டப்பட்ட கோயில். இதனை பால ஆலயம் என்றும் கூறலாம். |
| ஆலக்கோயில் | - | இக்கோயில், மண்டபம் போன்ற அமைப்புடன், நான்கு தூண்களையும் அகன்ற கதவுகளையும், சுற்றிலும் தாழ்வாரத்தையும், கல்லாலான மேற்கூரையையும் கொண்ட சமணர் கோயில் அடிப்படையில், உருவாகியிருக்க வேண்டும். தில்லைப் பொன்னம்பலம் கோவிந்தராசர் சன்னதியும் இந்த அமைப்பில்தான் உள்ளன என்ற கருத்து[39] ஆய்வுக்குரிய ஒன்றாகும். |

இக்கோயில்களுக்குச் சென்று, இறைவனை வணங்கி, பதிகம் பாடினர் தேவார ஆசிரியர்கள். தேவாரம் பாடிய நாயன்மார்கள், திருப் பாசுரம் பாடிய ஆழ்வார்கள் காரணமாகத் தமிழகத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது, பக்தி நெறி உருவாகியது. அதன் காரணமாகக் கோயிலில் சென்று வழிபடும் வழக்கம் மக்களிடம் பரவியது. கோயிலில் சென்று வழிபடுவதனால் மக்களுடைய மனம் தூய்மை யடைவதுடன் நல்ல எதிர்கால வாழ்க்கையும் அமையுமென்று மக்கள் நம்பினர்.[40] மக்களின் நம்பிக்கை அறிந்த மன்னர்கள் கோயில்களைக் கட்டுவதில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தினர். தமிழ்நாட்டின் வடபகுதியாகிய தொண்டை மண்டலத்தில் பல்லவர்களும், தென்பகுதி யாகிய பாண்டிய நாட்டில் பாண்டியர்களும், பாறைகளையும் மலை களையும் குடைந்து கோயில்களை உருவாக்கினர்.[41] ஏழாம் நூற்றாண் டின் முற்பகுதியில் மகேந்திர பல்லவன் முதலாவது கற்கோயிலைக்

கட்டியுள்ளான்.[42] கற்கோயில்களை இருவகையாகப் பிரித்துக் காண லாம். மகேந்திரவர்மன் காலத்தில் உருவான மண்டபங்கள் முதல் வகை, முதலாம் நரசிம்மவர்மனும் அவனுக்குப் பின்வந்த மன்னர் களும் உருவாக்கிய நுண்ணிய வேலைப்பாடுகளையுடைய மண்டபங் களும் ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்ட ரதங்களும் இரண்டாவது வகையாகும். பல்லவர்கள் மரபைப் பின்பற்றியே பாண்டிய நாட்டிலும் குடைவரைக் கோயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் உருவாக்கிய குடைவரைக் கோயில்கள் மாமல்லபுரம், வல்லம், திருச் சிராப்பள்ளி, மண்டகப்பட்டு ஆகிய இடங்களிலும் பாண்டியர்களு டைய குடைவரைக் கோயில்கள் திருப்பரங்குன்றம், கழுகுமலை ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன.

குடைவரைக் கோயில்கள் இயற்கையாக அமைந்த மலைச்சரிவு களில் அமைக்கப்பட்டன. ராஜசிம்மன் காலம் வரையில் உருவாக்கப் பட்ட குடைவரைக் கோயில் கருவறையில் தெய்வ வடிவம் இல்லை. ராஜசிம்மன் காலத்தில் சிவலிங்கங்கள் தனியாகச் செய்யப்பட்டு, கருவறைகளில் வைக்கப்பட்டுள்ளன.[43] தனிக் குன்றுகளாக விளங்கும் பாறைகள் ரதமாகச் செதுக்கப்பட்டன. மாமல்லபுரத்தில் காணப்படும் ஐந்து ரதங்கள் (பஞ்சபாண்டவர் ரதம்) சிறந்த எடுத்துக்காட்டாகும்.

குடைவரைக் கோயில்களையடுத்து, ராஜசிம்மன் கட்டுமானக் கோயில்களைக் கட்டினான். மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில்; தென்னாற்காடு மாவட்டம் பனைமலைக்கோயில், காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகிய ஆறு கோயில்களும் ராஜ சிம்மனால் கட்டப்பட்டன. இவற்றுள் மாமல்லபுரம் கடற்கரையில்தான் முதலில் கட்டப்பட்டதென்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.[44] கி.பி.690-இல் காஞ்சிபுரத்தில், ராஜசிம்மனால் கட்டப்பட்ட கட்டு மானக் கோயில்தான் தமிழகத்தில் கட்டப்பட்ட முதலாவது கட்டுமானக் கோயில் என்ற கருத்தும் நிலவுகிறது.[45] கடற்கரைக் கோயிலைக்கட்டி முடிக்கப்பட்ட சிறிது காலத்திற்குப்பின், காஞ்சி நகரில் கைலாசநாதர் கோயில் கட்டும் பணி தொடங்கியதாகவும், கோயிலின் பெரும்பகுதி ராஜசிம்மனாலும், இறுதிப் பகுதிகள் அவனுடைய மகன் மகேந்திரவர் மனாலும் கட்டப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.[46] பிரமிட் வடிவத்துடன் கூடிய விமானத்தின் கீழ் கருவறை அமைந்துள்ளது. கருவறைக்கு முன் ஒரு மண்டபமும், கருவறையையும் மண்டபத்தையும் இணைக் கும் அர்த்தமண்டபமும், சுற்றிலும் நீண்ட சதுரவடிவில் கட்டப்பட்டுள்ள மதில்சுவரும் காணப்படுகின்றன. அர்த்தமண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கருவறையைத் தவிர, துணைக் கோயில்

ஏழும் கயிலாயநாதர் கோயிலில் காணப்படுகின்றன. பல்லவர்கள் காலத்தில் ஈசன் உமையுடன் இனிது எழுந்தருள இக்கோயில் கட்டப் பட்டுள்ளது,[47] இறைவனின் திருவுருவங்களை வடித்தமையை, "பசுபதி மலைமகளுடனும் குகனுடனும் இனிதுறைந்திருப்பானாக" என்று கல்வெட்டுக் கூறுகிறது.[48] கற்சிலைகள் மட்டுமன்றி, உலோகத் திருமேனிகளும் வழிபாட்டிற்குரியனவாகக் காணப்பட்டன.[49] ராஜ சிம்மனைத் தொடர்ந்து, நந்திவர்மனும் பிற பல்லவ மன்னர்களும் பல கோயில்களைக் கட்டினர்.

பல்லவர்களுடைய கலை மரபுகளைப் பின்பற்றி சோழர்களும் பல கற்கோயில்களைக் கட்டினர். புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தா மலையிலிருக்கும் விஜயாலய சோழேஸ்வரம் கோயில், பிற்கால சோழர் கலைப் பணிக்குத் தொடக்கமாகக் காணப்படுகிறது. கருவறை யின் மீது அமைக்கப்பட்ட விமானத்தில் சற்று மாறுதலாக, சிறுத்துக் கொண்டு செல்லும் முதல் மூன்று நிலைகள் சதுரமாகவும், நான்காம் நிலை வட்டவடிவமாகவும், அதற்குமேல் வட்ட வடிவில் சிகரமும் கலசமும் காணப்படுகின்றன. பத்தாம் நூற்றாண்டின் இறுதிவரையில் சோழர்கள் கட்டிய கோயில்கள் அவ்வளவு பெரியவை அல்ல. மாமன்னன் ராஜராஜன், அவனுடைய மகன் ராஜேந்திரன் ஆகிய இரு வரும் தங்களுடைய பெருமை என்றும் நிலைத்திருக்கும் வகையில் தஞ்சையிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் பெரிய கோயில் களைக் கட்டினர். தென்னிந்தியக் கட்டடக்கலையின் உச்சக்கட்டமாக, தலைசிறந்த படைப்பாக, தஞ்சைக் கோயில் விளங்குகிறது. விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நந்தி மண்டபம் ஆகியன, 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உள்ளதும் உயரமான கல் மதிற்சுவரால் சூழப்பட்டதுமான இடத்தில் காணப்படுகின்றன. நாற்றிசை மூலை களிலும் நான்கு துணைக் கோயில்களும், நான்கு சுவர்களின் ஓரங் களில் இடைவெளி விடப்பட்டுக் கட்டப்பட்டுள்ள பல துணைக் கோயில்களும் உள்ளன. இக்கோயில்களை இணைக்கின்ற முறையில் திருச்சுற்று மாளிகையும் காணப்படுகிறது. மதில் சுவருக்கு வெளியே இன்னொரு மதில் காணப்படுகிறது. இரண்டு மதில் சுவர்களிலும் கிழக்குப்பக்கம் மட்டும், அழகிய கோபுரங்களுடன் கூடிய வாயில் காணப்படுகிறது. இரண்டாவது மதிலையடுத்து அகழி காணப்படு கிறது. 200 அடி உயரமான கருவறையில் அமைந்துள்ள கோபுரமே இக்கோயிலின் தனிச் சிறப்பாகும்.

இவ்விரு சோழ மாமன்னர்களின் வழியில், இரண்டாம் இராச ராசன் தாராசுரத்திலும், மூன்றாம் குலோத்துங்கன் திருபுவனத்திலும் பெரிய கோயில்களைக் கட்டினர். இந்நான்கு கோயில்களில் மட்டும்

சோழர்களின் தனிப் பெருமை விளங்குகின்ற முறையில் கருவறையின் மேல் பெரிய விமானம் கட்டப்பட்டுள்ளன. சோழர்கள் பல புதிய கோயில்களைக் கட்டியதுடன், பழைய கோயில்களிலும் திருப்பணி செய்துள்ளனர். இடிந்த நிலையில் காணப்பட்ட கோயில்களைப் புதுப் பித்துக் கட்டியுள்ளனர்.[50] கோயில்களைக் கட்டியதுடன், அவற்றின் வழிபாடு, அன்றாடப் பராமரிப்பு, இன்ன பிற செலவினங்களுக்காக மான்யங்களும் ஏற்படுத்தினர்.

பிற்காலப் பாண்டியர்கள், முழுதும் புதிய கோயில்களைக் கட்டு வதற்குப் பதிலாக, முன்னதாகக் கட்டப்பட்டக் கோயில்களில் புதிய மண்டபங்கள், துணைக்கோயில்கள் கட்டுவதில் ஈடுபட்டனர். கோயில் களின் நுழைவாயில்களில் எண்ணற்ற சிற்ப வேலைப்பாடுகளுடனும், கலை நுணுக்கங்களுடனும் அழகிய கோபுரங்களைக் கட்டினர். கோபு ரங்களில் முதல் இரு நிலைகளும் கற்களாலான அடித்தளத்துடன் அமைந்துள்ளன. அவற்றின் மேல் செங்கல்லும் சுண்ணாம்பும் சேர்ந்த கட்டுமானம் காணப்படுகிறது. மண்டபங்களில் கலை வேலைப்பாட் டுடன் தூண்களை அமைத்தனர்.

விஜயநகரப் பேரரசு காலத்தில், பழைய கோயில்களில் புதிய மண்டபங்கள், காட்சி மாடங்கள், துணைக் கோயில்கள் ஆகியவை கட்டப்பட்டமையால் கோயில்களின் பரப்பு பெரிதாகியது. அம்மனுக் கென்ற தனிக்கோயில்கள் இக்காலத்தில் கட்டப்பட்டன. ஆண்ட வனுக்கு நடைபெறும் திருக் கல்யாண விழாவிற்காக கல்யாண மண்டபங்கள் கட்டப்பட்டன. ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் என்று பல புதிய மண்டபங்கள், கலை வேலைப்பாட்டுடன் கூடிய சிற்பங்களுடன், வடிக்கப்பட்டன. கோயில்களுக்குப் பெரிய மதில் சுவர்களைக்கட்டி, நான்கு வாயில்களிலும் மிகப்பெரிய ராஜ கோபுரங்களைக் கட்டினர். விஜயநகரப் பேரரசு காலத்தில், புதிதாகக் கட்டப்பட்ட அம்மன் கோயிலில் காணப்படும் இறைவிக்கும், மூலக் கோயிலில் காணப்படும் இறைவனுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் முறையில் பல கதைகளும், திருவிழாக்களும் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டன. நாயக்க மன்னர்கள் காலத்தில் மதுரைக் கோயிலின் இறைவனாகிய சொக்கநாதனுக்கும், மீனாட்சிக்கும் திருமணம் தொடர் பான கதைகளும், அக்காலத்தில் மதுரையில் மிகுந்து காணப்பட்ட யாதவர் குலத்து இறைவனாகிய அழகரையும் திருமணத்தில் தொடர்பு படுத்திய செய்திகளும் உருவாகின என்று கருதப்படுகிறது.[51]

16ஆம் நூற்றாண்டிற்குப்பின் தமிழகத்தில் ஆங்காங்கே பல குறுநில மன்னர்களின் ஆட்சி நடைபெற்றது. அம்மன்னர்களும் தங்கள்

ஆட்சிக்குட்பட்ட கோயில்களில் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். சுசீந்திரம் கோயிலின் அழகிய தோரணவாயில் இக்காலத்தில்தான் உருவாக்கப்பட்டது. தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னன், தென்காசியில் காசி விஸ்வநாதர் ஆலயம் என்னும் மிகப்பெரிய ஆலயத்தை கலை நுணுக்கத்துடன் கட்டியுள்ளான்.

சங்க காலத்தில் சுடுமண்ணினால் கட்டப்பட்டக் கோயில்கள், பல்லவர்கள் காலத்தில் கற்கோயில்களாகவும், கட்டுமானக் கோயில் களாகவும் உருப்பெற்றன. பல்லவர் காலப் பாணியைப் பின்பற்றிப் பல கோயில் திருப்பணிகள் செய்த பிற்காலச் சோழ மன்னர்கள், தங் களுடைய பெருமைக்கு உரைகல்லாக, கருவறையின்மீது விமானம் என்ற நிலையில் கோபுரம் எழுப்பிக் கோயில் அமைத்துள்ளனர். பிற்காலப் பாண்டியர்களோ, நுழைவாயிலில் புதிய கோபுரங்கள், மதில்கள், மண்டபங்கள் என்ற திருப்பணி செய்தனர். விஜயநகர மன்னர் கள் கோயில் வளாகத்தினுள் புதிதாக இறைவிக்கு எனத் தனிக் கோயி லும், திருக்கல்யாண மண்டபங்களும் கட்டினர். ஆயிரங்கால் மண்ட பம், நூற்றுக்கால் மண்டபம், நுழைவாயில்களில் கோபுரங்கள் என்று திருப்பணிகளைச் செய்தனர். குறுநில மன்னர்களும் கோயில் திருப் பணிகள் செய்தனர். அதேநிலையில், குற்றாலநாதர் கோயில் வளர்ச்சி, கால வரிசையின் அடிப்படையில் காட்டப்படுகிறது.

## ஆ. திருக்குற்றாலம்

### 1. அருவி

வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண் டியாழ் செய்
குற்றாலம் [52]

என்ற இயற்கைச் சூழலில் அமைந்த குற்றாலம் தமிழ்நாட்டின் தென் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில், செங்கோட்டை தென்காசி ஆகிய இரு நகரங்களுக்கிடையே அமைந்துள்ளது. இவ்வூர் கடல் மட்டத்திலிருந்து 550 அடி உயரத்திலுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் பகுதியாகிய குற்றாலமலை, இவ்வூரின் தொடக்கத்தில் 5000 அடி வரை வளர்ந்து, பொதியமலை நோக்கிச் செல்கிறது. 5135 அடி உயரமுள்ள பஞ்சந்தாங்கி என்னும் சிகரமே அதிக உயரமானது. எத்தகைய வறட்சிக் காலத்திலும் இந்த இடத்தில் மட்டும் பசுமை காணப்படுவதால், பஞ்சந்தாங்கிக் காரணப் பெயராய் வந்தது. குற்றால மலையின் உச்சியில் மூன்று சிகரங்கள்

காணப்படுவதால் இம்மலைக்குத் திரிகூடமலை என்னும் பெயரும் உண்டு. இம்மலையில் செண்பகக் காடுகள் நிறைந்து காணப்படு கின்றன. இம்மலையின் பெருமையை,

பொன் மலைக்குமோர் முதுமலை புதுமையாற் புதுமலை கயிலாய
நன்மலைக்கொரு தூய மலை யுவரிசூல் ஞாலமேல் வளர்ந்தோங்கும்
பன்மலைக்குமோர் தலைமலை திசைதோறும் பசுந்தமிழ் மணநாறும்
தென்மலைக்கொரு வடமலை சிவபிரான் திருமலைத் திரிகூடம்

என்று திரிகூடராசப்பக் கவிராயர் புகழ்ந்து பாடுகிறார்.[53] "திங்கள் முடிசூடு மலை தென்றல் விளையாடு மலை" என மீனாட்சி அம்மைக் குறம் போற்றுகிறது.[54]

திரிகூட மலையிலிருந்து உற்பத்தியாகின்ற சிற்றாரோடு, மயி லோடை என்று அழைக்கப்படும் சில்லோடை, பங்களா ஓடை முதலிய ஓடைகள் (ஓடை-இயற்கையாக அமைந்துள்ள சிறிய நீரோட்டம்) கலக்கின்றன. குற்றால மலையின்மேல் ஐந்து கல் தூரத்தில் தெற்கு மலைத் தோட்டத்தில் பல்லிடங்களில் பிறப்பெடுக்கும் இந்த ஓடை கள், ஒன்றுபட்டு சிற்றாறு (சித்ரா நதி) என்று பெயர் பெறுகிறது. இது தாமிரபரணி ஆற்றின் கிளை நதிகளுள் ஒன்றாகும். சித்ரம் போல் அழகான ஆறாக சித்ரா நதி விளங்குவதால், சித்ரநதி என்பதே சித்ரா நதி என மாறியது.[55]

திரிகூடமலையில் உருவாகிய சித்ரா நதி, முதலில் 100 அடி உயரத்திலிருந்து அருவியாக வீழ்கிறது. இவ்வருவிக்குத் தேனருவி என்று பெயர். தேன் கூடுகள் இங்கு நிறைந்து காணப்படுவதால், தேனருவி எனப் பெயர் பெற்றது. தேன் போன்ற மெல்லிய ஒழுக் குடையதாக இவ்வருவி காணப்படுவதால் தேனருவி எனப் பெயர் பெற்றது என்று கருதவும் இடமுண்டு. இவ்வருவியின் பெருமை "தேனருவி திசையெழும்பி வானின் வழி ஒழுகும்" [56] என்ற குற்றாலக் குறவஞ்சி, வரியால் வெளிப்படுகிறது. இவ்வருவி நேரிடையாகத் தலையில் விழாமல் ஒரு தடாகத்தினுள் விழுகிறது. தொடர்ந்து ஓடி, செண்பகக் காடுகள் நிறைந்த கானகத்தில் முப்பது அடி உயரத்தில் செண்பக அருவி என்னும் பெயருடன் வீழ்கிறது. தேன் அலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும் வண்ணம் செண்பக அடவி என்னும் கானகத்தில் இவ்வருவி வீழ்வதால், செண்பக அருவி என்னும் பெயர் பெற்றது. இவ்வருவியின் கரையில் செண்பக தேவி அம்மன் கோயில் அமைந்துள்ளது. செண்பக அருவியாக வீழ்ந்த சிற்றாற்றிலிருந்து, குடி தண்ணீருக்காக சிறிதளவு தண்ணீர் திருப்பி விடப்படுகிறது.

இந்நதி தொடர்ந்து ஓடி 288 அடி உயரத்திலிருந்து வற்றாத வட அருவியாக குற்றாலம் என்னும் பெயருடன் வீழ்கிறது. 288 அடி தூரமும் ஒரே வீழ்ச்சியாக விழாமல் மத்தியில் பொங்குமாங்கடல் என்னும் ஒரு துறையில் வீழ்ந்து, பொங்கி, பரந்து வீழ்கிறது. இப் பொங்குமாங்கடலின் ஆழம் 38 அடி. "புதுவாரி சயில மீதில் பொங்கி யெழு மாதலினாற் பொங்குமா கடற்றுறை"[57] எனப் பொங்குமாங்கடல் பெயர் பெற்றமையை, தலபுராணம் எடுத்துரைக்கிறது. 288 அடி உயரத்திலிருந்து நேரடியாக வீழ்ந்தால், அருவியின் அழகும் பயனும் வீணாகிவிடுமென்று, இவ்வருவியின் வேகத்தைக் குறைக்க, இயற்கை யாகவே பொங்குமாங்கடல் அமைந்துள்ளது சிறப்பாகும். பொங்கு மாங்கடல் வரை குவிந்தும், அதற்குக் கீழ் பரந்தும் விழுவதால், பக்தி நெஞ்சங்களுக்கு இவ்வருவி சிவலிங்க வடிவமாகவே காட்சியளிக் கிறது. குற்றால அருவி முதலில் இக் கடலினுள் வீழ்வதால் இத் துறைக்கு மாவடித்துறை என்னும் பெயரும் வழங்கிவருகிறது. இவ் வடவருவி விழுமிடங்களில் பாறையெங்கும் சிவலிங்க வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வருவியில் மூழ்குபவர்களுக்குத் தீவினை நீங்கி, ...வினை சேருமென்பர்.

குற்றாலத்திலிருந்து மேற்கே அரை கி.மீ. தொலைவில் சிற்றருவி என்ற பெயரில் ஒரு சிறிய அருவி உள்ளது. மலையில் ஓரிடத்தில் இவ்வருவிக்கென்று சிறிது சிறிது நீர் தடுத்து விடப்பட்டுள்ளது. இது வனத்துறையினர் பாதுகாப்பில் உள்ளது. அளவிலும், நீர்வரத்திலும் சிறிதாக இருப்பதால் சிற்றருவி எனப் பெயர் பெற்றது. சிற்றாற்றின் ஒரு பிரிவு மேற்கே தொடர்ந்து ஐந்து கி.மீ. தொலைவில் ஐந்தருவி யாக வீழ்கிறது. இங்கு அருவி ஐந்து பிரிவுகளாகப் பிரிந்து விழுவதால் இப்பெயர் வழங்குகிறது. ஐந்து தலை அருவி என்ற பெயரும் வழங்கு கிறது. இந்த ஐந்து அருவிகளில் ஒன்று மலைக்குமேலே தடுக்கப் பட்டு நீர்ப்பாசனத்திற்குத் திருப்பிவிடப்பட்டுள்ளது. இதனால் இன்று நான்கு அருவிகள்தான் உள்ளன. இங்குப் பழப் பண்ணை ஒன்று தமிழ் நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து அருவிக்கு மேலே, பழத்தோட்டத்தின் நடுவில் சாமியார் அருவி உள்ளது. ஆறு அடி உயரத்திலிருந்து இந்த அருவி வீழ்கிறது. இங்கு ஒரு சாமியார் தங்கியிருந்து குளித்து வந்தமையால் சாமியார் அருவி எனப் பெயர் பெற்றது.

குற்றாலத்தின் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் பாசுபத சாஸ்தா அருவி என்ற பெயரில் ஓர் அருவி உள்ளது. இதனைப் புலி அருவி என்றும் அழைப்பர். சித்ரா நதியின் ஒரு கால்வாய்தான் இவ்வருவி

யாகும். இந்த அருவி செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது. புலியின் தலையைப் போன்ற மூல அருவியும், முன்நீண்டு காணப்படும் அதன் இரு கால்களைப் போன்று இரு கிளை அருவிகள் இரு புறமும் அமைந்திருப்பதால், இதனைப் புலியருவி என்று அழைக்கின்றனர். இன்னும் பத்து கி.மீ. கிழக்கே சென்றால் பழைய குற்றாலம் என்னும் அருவியைக் காணலாம். அழகனாறு என்னும் சிறிய ஆறு இங்கு அருவியாக வீழ்ந்து, சிறிது தூரத்தில் சிற்றாறுடன் கலக்கிறது. 1951 -ஆம் ஆண்டு இவ்வருவி விழும் மலையின் குறுக்கே படி போன்ற பல அமைப்புகளை வெட்டி, அருவியின் வேகத்தைக் குறைத்து மக்கள் விரும்பிச் செல்லும் இடமாக தமிழ்நாடு அரசு மாற்றியுள்ளது. பெருந்தலைவர் காமராசர் முதல்வராக இருந்தபோது இப்பணி செய்யப்பட்டதாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு அருவிகள் சூழ இயற்கையெழில் கொஞ்சுமிடமாக குற்றாலம் விளக்குவதால்,

போதும் பொன்னும் உந்தி அருவி புடை சூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்[58]

பொங்கருவி தூங்குமலை பொதிய மலை[59]

என்று இலக்கியங்கள் போற்றுகின்றன.

குற்றால அருவியின் அழகைக் கண்டு தமிழர்கள் மட்டுமல்லாமல், வெளிநாட்டவரும் போற்றுகின்றனர். குற்றாலம் தான் உலகிலேயே குளிப்பதற்கான சிறந்த அருவியையுடைய இடமென்று கால்டுவெல் போற்றுகின்றார்.[60] ஐரோப்பியர்களும் இந்தியர்களும் பல்வேறு காரணங்களுக்காக விரும்பிக் குளிக்குமிடமாகக் குற்றாலம் அமைந்துள்ளதையும்[61] கால்டுவெல் சுட்டிக்காட்டியுள்ளார். பாவங்களைப் போக்குவதற்காக இந்துக்களும், மனமகிழ்ச்சிக்காக ஐரோப்பியர்களும் நீராடுவதாக,[62] ஸ்டூவர்ட் குறிப்பிட்டுள்ளார்.

செங்கதிரோனின் கோடையிலிருந்து மக்களைக் காக்க வாடையும், சாரலும் தரும் இக்குற்றாலம், அங்கு சென்று வாழும் மக்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் வழங்குகிறது. திரிகூட மலையின் உச்சியிலிருந்து புறப்பட்டுப் பல மூலிகைகளையும் தாதுப்பொருட்களையும் தன்னகத்தே பெற்று, பேரருவியாக விழும் குற்றால அருவியும் உடல் நோய் தீர்க்கும் மருந்தாகவே விளங்குகிறது.

இந்நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையில், ஆரியங்காவுக் கணவாய் உள்ளது. மேற்குத் தொடர்ச்சி

மலைக்கு மேற்பக்கம் எழுகின்ற தென்மேற்குப் பருவக்காற்று, இக் கணவாய் வழியாக வந்து கீழ்ப்பக்கத்திலிருக்கும் குற்றாலத்தில் சாரல் என்று போற்றப்படும் இளங்காற்றாகவும் சிறு தூரல்களாகவும் வீசுகிறது. வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி (ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர்) ஆகிய நான்கு மாதங்களிலும் நாட்டின் பிற பகுதி களை விட அங்கு வெப்ப அளவு குறைகிறது. புயல் காற்றாகவும், மணற் காற்றாகவும் இல்லாமல், இனிமை பொருந்திய தென்றல் காற்றாக வீசி மக்கள் மனத்திற்கும், உடலுக்கும் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டுகிறது. நுண்துளியாகிய சாரல்மழை தனித்தும், சிலநேரம் வெயிலுடனும், சிலநேரங்களில் இளங்காற்றுடனும், இன்னும் சில நேரங் களில் இவ்விரண்டும் கலந்தும் பெய்கின்ற அழகைக் கண்ட சம்பந்தர் "கூதல் மாரி நுண்துளி தூங்குங் குற்றாலம்" [63] என்று போற்றியுள்ளார்.

சாரல் பருவத்தில் மிக இனிமையாகக் காணப்படும் இவ்வருவி கள், அடைமழைப் பருவமாகிய ஐப்பசி, கார்த்திகை (அக்டோபர், நவம்பர்) மாதங்களில் அச்சத்தையூட்டும் வண்ணம் மிகப்பெரிய அருவியாகக் காணப்படும். வற்றாத வடவருவி என்று பெருமையுடன் அழைக்கப்படும் இவ்வருவியில் இன்று கோடை காலத்தில் மட்டும் நீர்வரத்து இல்லாது போய்விட்டது. இந் நீர்வரத்து இல்லாமைக்குக் காரணமாக மலையின் இயற்கையெழிலைச் சிதைக்கும் வண்ணம் மரங்களை வெட்டியதைக் குறிப்பிடலாம். மேலும், இவ்வருவியின் நீரே அருகிலுள்ள தென்காசி போன்ற நகரங்களில் குடிநீராகப் பயன் படுவதால், கோடை காலத்தில் அருவியில் வரும் சிறிது அளவு நீரும் குடிநீருக்காக, தடுத்து திருப்பிவிடப்படுகிறது.

1811ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியார் நியமித்த மருத்துவக்குழு இந்த அருவியின் பெருமைகளையும் மருத்துவச் சிறப்புகளையும் குறித்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளதாக திருக் குற்றாலத் தல வரலாறு தெரிவிக்கிறது.[64] இவ்வறிக்கையில், "இந்த விசித்திரமான இடத்தில் நோயாளிகள் குணமடைந்து நலம் பெறு வதற்கு முக்கியக் காரணம் இங்கேயுள்ள அருவிதான். இந்த அருவி யில் ஐரோப்பியர்கள் அன்றாடம் குளித்து வருகின்றனர். பாறையின் இயற்கை அமைப்பால் பிரிந்து பரந்து, தலைக்குமேல் 13, 14 அடி உயரத்திலிருந்துதான் விழுகிறது. முழு அருவியும் மலை உச்சியில் இருந்து கீழே நேராக விழுவதில்லை. அருவிக்குள் நுழைந்ததும் முதன்முதலில் திடும்மென ஒரு நடுக்கம் உண்டாகிறது. இதன்பின் சொல்லமுடியாத ஒருவித இன்பம் பிறக்கிறது. அருவியின் வேகம் தேகத்தில் தாக்குவதால் இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி உடம்பு

முழுவதும் ஒரு பூரிப்பைக் கொடுக்கிறது. மேலும், சோம்பலைப் போக்கி, உற்சாகத்தைக் கொடுத்து, பசியைக் கிளப்பி, சீரணத்தைச் சரி செய்து பலவித நன்மைகளைச் செய்கிறது. நாங்கள் அறிந்த வரையில் வேறு எந்த நீராடலும் இவ்வளவு அதிக நன்மை அளிப்ப தில்லை. இந்த நல்ல அருவியும், தட்பவெப்ப நிலையும் சேர்ந்து இங்கு வருகின்றவர்கள் எமன்வாய்ப் போகுந்தருவாயிலிருப்பவர்க ளாயினும் அவர்களுக்குப் புத்துயிர் கொடுத்து மீட்கின்றன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புயற்காற்றுமின்றி, மணற்காற்றும் இன்றி ஓஸான் என்னும் இளங்காற்று அருவியிலிருந்து வீசுவதால் அது ஆரோக்கியத்தைத் தருகிறது. நடு இரவில் இம்மலையில் 'நறு வளி' என்னும் மலர், மலர்வதால் உடலுக்கு உற்சாகம் கிடைக்கின்ற காற்றாக சாரல் காற்று காணப்படுகிறது.[65]

## 2. திருக்கோயில்

மலைவளமும் நீர்வளமும் பெற்ற இவ்வூர் பாண்டிய நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற 14 இடங்களில் ஒன்றாகும். இங்கு, மூலவராக வீற்றிருந்து அருள் வழங்கும் முழுமுதற் கடவுள், சிவபிரான், திருக் குற்றாலநாதர் ஆகும். அம்மையின் பெயர் குழல்வாய்மொழி. இத்தலத் தின் தீர்த்தமாக சிவமதுங்கை என்னும் பெயருடன் குற்றால அருவி காணப்படுகிறது.[66]

சிவமதுகங்கையென்னும் வடவருவியாக வீழும் சித்ராநதி முழு மையுமே கோயிலின் தீர்த்தமாக விளங்குகிறது. தல விருட்சமாக குறும்பலா காணப்படுகிறது. நான்கு வேதங்களும் மரமாக, வேதங் களின் மூலப் பொருளாகிய பிரணவம் வேராக, கரும ஞான காண்டங் கள் எல்லாம் பருத்த கிளைகளாக, சாகைகள் பசிய இலைகளாக, உபநிடதம் தளிராகக் குறும்பலா உருவாகியுள்ளது.[67]

இறைவனை வழிபடும் ஆகம முறைகளில் தலையானது மகுடா கமம். அம்முறையில் இங்கு வழிபாடு நடக்கிறது. இக்கோயில் சங்கு வடிவில் அமைந்துள்ளது.

## 3. பெயர்க்காரணமும் வேறு பெயர்களும்

'கு' என்றால் பூமி அல்லது பிறவிப் பிணி எனவும், 'தாலம்' என்றால் தீர்ப்பது எனவும் பொருள் கொண்டு பிறவிப் பிணியைத் தீர்க்கும் தலமாகையால் கு தாலம் குத்தாலம் - குற்றாலம் எனப் பெயர் வந்துள்ளது. குத்தாலம் என்றால், "ஆத்தி மரங்கள் அடர்ந்த வனம்" என்ற பொருள் வடமொழியில் வழங்குவதாகக் கூறுவர்.[68] ஆனால், இங்கு ஆத்தி மரங்கள் அதிகமில்லாமையாலும், தல விருட்சமாகக்

குறும்பலா காணப்படுவதாலும் இக் கருத்து ஆய்வுக்குரிய ஒன்றே; "குற்று" என்ற சொல், "கூற்று" என்ற சொல்லின் திரிபாகப் பொருள் கொண்டு, குற்று - பாவம், ஆலம் = அழிப்பது என்று கூறுவது சிறப் பாகும். பாவநாசம் என்னும் பொருளைத் தருகின்ற குற்றாலம் என்னும் பெயரே சிறப்புடையதாகும். 'கு' என்றால் வினைத் தொடர்ச்சி, 'தாலம்' என்றால் அவ்வினையை நீறாக்கும் அக்கினியின் நாக்கு என்று தல புராணம் கூறுகிறது.[69] அரி, அயன், அரன் ஆகிய மூவரையும் ஆதிசக்தி பெற்ற இடம் குற்றாலம் என்பதால், திரிகூடம் என்ற பெயர் பெற்று, அப்பெயரே திரிகூடமலைக்கும் வந்ததென்பர்.[70] அதனை இன்றும் விளக்குவதுபோல் தாணுமாலயன் பூந்தொட்டில் பராசக்தி சன்னதியில் உள்ளது. குற்றாலம் என்னும் ஒருவகை ஆலமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டதால் இப்பெயர் பெற்றது என்ற கருத்து,[71] தல விருட்சமாக பலா இருப்பதால் ஏற்புடைத்தன்று எனினும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள குத்தாலம் என்ற ஊரினைத் தேவாரத்தில் 'திருத்துருத்தி' என்று சுந்தரர் குறிப்பிடுகிறார்[72] குத்தாலம் என்னும் ஒருவகைக் குத்துச்செடி நிறைய இருந்தமையால் குத்தாலம் என்ற பெயர் வழங்குகிறது. குத்தாலச் செடியே அங்குள்ள கோயில் தலவிருட்சமாகவும் உள்ளது.[73] அதே முறையில் திருக்குற்றாலப் பகுதியில் இன்றும் ஆலமரங்கள் நிறைந்து காணப்படுவதால் இதை ஆலமரங்களின் வனமாகக் கருதி, குற்றாலம் என்று பெயர் வந்திருக்க வாய்ப்புண்டு.

இவ்வூருக்கு வழங்கப்படும் வேறு பெயர்களாகத் தலபுராணத் தில் 21 பெயர்கள் காணப்படுகின்றன.[74] அவை வருமாறு:

பிதுர் கண்டம் தீர்த்த புரம்
சிவத்துரோகம் தீர்த்த புரம்
மதுவுண்டான் உயிர் மீட்ட புரம்
பவர்க்க மீட்ட புரம்
வசந்தப் பேரூர்
முதுகங்கை வந்த புரம்
செண்பகாரணிய புரம்
முக்தி வேலி
நதிமுன்றில் மாநகரம்
திருநகரம்
நன்னகரம்
ஞானப்பாக்கம்

வேடன் வலஞ்செய்த புரம்
யானை பூசித்த புரம்
வேத சக்தி பீட புரம்
சிவ முகுந்த பிரம புரம்
முனிக்கு உருகும் பேரூர்
தேவகூட புரம்
திரிகூடபுரம்
புடார்ச்சுனபுரம்
குறும்பலா விசேட புரம்

## இ. திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு

இயற்கை வளம் செறிந்த குற்றாலத்தில் அமைந்துள்ள திருக்குற்றாலநாதர் கோயில் அகத்தியர் வழிபட்ட பெருமையுடையது; நாயன்மார்களால் பாடப்பெற்றது. பிற்காலச் சோழ பாண்டியர்களால் பராமரிக்கப்பட்டது. நாயக்கர்களால் போற்றப்பட்டது. ஆடல் வல்லானின் ஐந்து மன்றங்களில் ஒன்றாகிய சித்திரசபை இங்குதான் உள்ளது. ஆதிசக்தியின் ஞானபீடமாகிய தரணி பீடமும் இங்கு உள்ளது. இத்தகு சிறப்புமிக்கக் கோயிலின் வரலாறு, இலக்கிய வரலாற்றுக் காலங்களின் அடிப்படையிலும் புராணச் செய்திகளின் அடிப்படையிலும் காட்டப்பட்டுள்ளது.

### 1. சங்க காலத்தில் திருக்குற்றாலநாதர் கோயில்

சங்க இலக்கியங்களிலும் சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் திருக்குற்றாலநாதர் கோயில் பற்றிய செய்திகள் இல்லை. குற்றாலம் என்ற பெயரும் காணப்படவில்லை.

எனினும், பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று வாழ்க[75] என்னும் புறநானூற்று வரிகள் மூலமாக வடக்கு எல்லையில் உயர்ந்திருந்த இமயமும் தெற்கு எல்லையில் உயர்ந்திருந்த பொதியமும் சுட்டப்படுகிறது. இந்தப் பொதியம்தான் திருக்குற்றாலத்தில் தொடங்கி, பாவநாசம் வரை காணப்படுகிற பொதிய மலையாகும். எனவேதான் இவ்விரு மலைகளையும் இணைத்தே பொதியிலாயினும் இமயமாயினும்[76] என்று இளங்கோவடிகளும் எழுதியுள்ளார். இப் பொதிய மலையில்தான் அகத்தியர் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது.[77] அகத்தியருடன் புலவர் கூட்டம் நிறைந்து காணப்பட்ட உண்மையைப் "புலவர் செந்நாப் பொருந்தி நிவப்பின் பொதியில் தென்றல் "[78] என இளங்கோவடிகள் கூற்றின் மூலம் உணரமுடிகிறது.

ஆக, சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் குற்றாலம் என்ற பெயர் சுட்டப்பெறாவிட்டாலும், குற்றாலம் இருக்கும் மலை யாகிய பொதியமலை குறிப்பிடப்படுகிறது.

தமிழகத்தின் தென்கோடியிலுள்ள இப்பொதியமலைக்குப் பக்கத்தில் ஆட்சிபுரிந்து வந்த வேளிர் தலைவன் ஆய் அண்டிரன் ஆகும். "வடதிசையதுவே வான் தோய் இமயம் தென் திசை ஆய்க்குடி யின் ஆயில்"[79] என்னும் புறநானூற்று வரிகளில் இமயத்திற்கு இணை யாக தென்திசையில் ஆயில் என்னும் நகர் காட்டப்பட்டுள்ளது. இமயத் திற்கு இணையாகத் தென்திசையில் பொதியமும், ஆயிலும் காட்டப் பட்டிருப்பதால் இரண்டும் அருகருகே அமைந்தவை எனக் கருத முடியும். இன்றும்கூட குற்றாலம் பொதிய மலைக்கருகே ஆய்க்குடி என்னும் ஊர் உள்ளது. இதுவே, சங்ககால ஆய் அண்டிரன் ஆட்சி செய்த இடம் என்று கருத வாய்ப்பு உண்டு. ஆய் அண்டிரன் வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்த வேளிர் தலைவன் என்றும், அவன் இனத்து மக்கள் குற்றாலம், விக்கிரமசிங்கபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதி களில் நிறைந்து காணப்பட்டார்கள் என்றும் பின்னர் பல்லவர், சோழர் ஆட்சிக்காலத்தில் தங்களுடைய தனித் தன்மையை இழந்து விட்டார் கள் என்றும் வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.[80] இதனால் ஆய் அண்டிரன் ஆட்சியில் குற்றாலம் இருந்தது எனலாம். வரலாற்று அறிஞர் ஒருவர் குற்றாலத்தைச் சங்ககால நகரங்களில் ஒன்றாகக் கணக்கிட்டுள்ளார்.[81]

ஆய் அண்டிரனை "மா மலைக் கிழவன் ஆய் ஆண்டிரன்" என்றும் அவன் நாட்டை, "நின் மலைப்பாடி வருநர்க்கு", "குன்றம் பாடின கொல்லோ" என்று குறிப்பிடுவதாலும் ஆயினுடைய நாடு மலைப் பகுதி என்று கூற முடியும். அம்மலைப் பகுதியே பொதியமாகும். இயற்கை எழில் மிகுந்து காணப்படும் இப்பொதிய மலையில்தான் திருக்குற்றாலநாதர் கோயில் அமைந்து உள்ளது. எனவே, சங்க இலக் கியங்களில் போற்றப்பட்ட நகரங்களில் குற்றாலமும் ஒன்றெனவும், அவ்விலக்கியங்களில் பொதிகை என்னும் பெயரில் குற்றாலப் பகுதியே குறிப்பிடப் பட்டுள்ளதையும் அரிய முடிகிறது.

கோச்செங்கணான் என்னும் கடைச்சங்க காலத்துச் சோழ மன் னன் தில்லைக் கோயிலைச் செப்பனிட்டுள்ளான். அந்த மன்னன் ஆட்சிக் காலத்தில் கோயில் அமைத்ததோடு ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு மரத்தைத் தல விருட்சமாக அமைத்தான். தில்லைக்குத் தில்லை, மதுரைக்குக் கடம்பம், காஞ்சிக்கு மா, குற்றாலத்திற்குக் குறும் பலா என்று இம்மன்னன் காலத்தில்தான் தலவிருட்சம் உருவாக்கப்

பட்டன.[82] இவ்வாறு கோச்செங்கணான் காலத்தில் உருவாக்கப்பட்ட சிறு கோயில்கள்தாம் பல்லவர் காலத்தில் பதிகம் பெற்று, சோழர் காலத்தில் பெருங் கோயில்களாக உருவாக்கப்பட்டன. எனவே, கோச் செங்கணான் காலத்தில், தலவிருட்சம் உருவான கோயில்களில் திருக்குற்றாலநாதர் கோயிலும் ஒன்று என முடிவு செய்ய முடியும்.

சங்க இலக்கியங்களில் பொதியமலை பற்றிய செய்திகள் காணப்படுவதாலும், குற்றால நகர் சங்க கால நகரங்களில் ஒன்றாகக் கணக்கிடப்பட்டு ஆய் அண்டிரன் ஆட்சிக்குட்பட்டிருந்ததாலும், கோச் செங்கண்ணனால் தலவிருட்சம் உருவாக்கப்பட்டிருப்பதாலும் திருக் குற்றாலநாதர் கோயில் வழிபாடு சங்க காலத்தில் இருந்தது எனக் கருத முடிகிறது.

## 2. பல்லவர் காலம்

சமய வரலாற்றில் பல்லவர் காலம் முக்கிய இடத்தைப் பெற்றுள் ளது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் இக்காலத்தில் தமிழகமெங்கும் சென்று ஆலய வழிபாடு செய்துள்ளனர். இவர்கள் பாடிய பாசுரங் களும், தேவாரங்களும்தான் பல்லவர்கால வரலாற்றை அறியத் துணை நிற்பவை. இத்தேவாரங்களில்தான் குற்றாலம் என்ற சொல் முதன் முதலாகக் காணப்படுகிறது. கோச்செங்கணான் காலத்தில் உருவாக் கப்பட்ட சிறு கோயில்கள் அனைத்தும் சுடுமன் என்னும் செங்கற் கோயில்களாகும். பல்லவர் காலத்தில் கற்கோயில்களும் குடைவரைக் கோயில்களும் உருவாக்கப்பட்டன.

சைவ சமயக்குரவர்கள் ஊர்தோறும் சென்று இறைவனை வணங் கித் திருப்பதிகங்கள் பாடியருளிய பொழுது இருந்த கோயில்கள் எல்லாம் செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்கள் ஆகும். அவ்வாறு நாயன்மார்கள் வழிபட்ட தலங்களில் குற்றாலமும் ஒன்று. திருஞான சம்பந்தர் இங்கு வந்து திருக்குற்றாலத்துக் கூத்தனையும், குறும்பலா ஈசனையும் வணங்கிப் பதிகம் பாடியுள்ளார். சுந்தரரும் சேரமான் பெரு மான் நாயனாருடன் இங்கு வந்து இறைவனை வணங்கி, தேவாரப் பனுவல் இயற்றியுள்ளார்.[83] ஆனால் அப்பதிகங்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. நாவுக்கரசரும், "உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத்துக் கூத்தனல்லால் நமக்கு உற்றார் யாருளரோ" [84] என்று பாடியுள்ளார். மாணிக்கவாசகரும், "குற்றாலத்தமர்ந் துறையும் கூத்தா உன் குறைகழற்கே" [85] எனப் பாடியுள்ளார். சமயக்குரவர் மட்டு மல்லாது சமயம் வளர்த்த மாமன்னன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் தன்னுடைய துணைவியார் மங்கையர்க்கரசி அம்மையாருடன் திருக் குற்றாலத்தில் வழிபாடு செய்துள்ள செய்தியும் பெரியபுராணத்தில்

காணப்படுகிறது.[36] எனவே, பல்லவர் காலத்தைச் சார்ந்த சமயக் குரவர்களால் பாடப்பட்டு வழிபாடு செய்யப்பட்ட, மாமன்னர்கள் வழிபட்ட இடம் குற்றாலம் என உணர முடிகிறது.

திருஞானசம்பந்தர் இக்கோயிலில் அருள்புரியும் கூத்தனையும், குறும் பலா ஈசனையும் தனித்தனியாகப் பதிகம் பாடி வணங்கியுள்ளார். எனவே, பல்லவர் காலத்தில் குற்றாலத்தில் கூத்தர் கோயிலும், குறும் பலா ஈசர் கோயிலும் தனித்தனியாகவே காணப்பட்டிருக்க வேண்டும். நாவுக்கரசரும் மணிவாசகரும், 'குற்றாலத்துறைக் கூத்தனையே' பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் குற்றால நகரின் எல்லையிலேயே சிவலிங்கம் கண்டார், எனவே, ஊரின் எல்லையிலேயே வணங்கி நின்ற பாட ஆரம்பித்தார் என்ற கருத்தும் வழங்குகிறது.[37] அவர் நின்று பாடத் தொடங்கிய இடத்தில் சம்பந்தர் கோயில் இன்றும் உள்ளது. வழியெல்லாம் சிவலிங்கம் இருக்கக் கண்ட சம்பந்தர், இயற்கையொடு இணைந்து காணப்பட்டவனின் அழகைக் கண்டு, வியந்து பாடினார். ஆகையினால்தான் இப்பதிகத்தில் இயற்கை வருணனை மிக அதிகமாகக் காணப்படுகிறது. குற்றாலத்தின் சாரலை, 'நீடுயர் சாரல்', 'மலை யார் சாரல்', 'பெருந்தன் சாரல்' என்றெல்லாம் போற்றுகிறார். அருவியின் அழகை "போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழ்" என்று வருணித்துள்ளார். முல்லை, செண்பகம் என்ற மணம் வீசும் மலர்கள் நிறைந்த குற்றாலத்தில் பலா, வாழைக் கனிகளும் நிறைந்து காணப்பட்டன. இயற்கையின் எழிலுக்கு மெருகு கூட்டுகின்ற மாதிரி சுனை நிறைந்த சோலைகளும், முருகமர் சோலைகளும் காணப் படுகின்றன. இவ்வாறு இயற்கைக் சூழ்நிலையில் அருவிக்கரையில் நீராடலை விரும்பிய இறைவன் வீற்றிருக்கிறான். திரிபுரம் எரித்த செய்தியும் யானைக்கு அருள்புரிந்த செய்தியும் இப்பதிகத்தில் காணப்படுகின்றன. சிவபெருமானுடைய பெருமைகளாகக் காலனை உதைத்த செய்தியும், பிரம்மன் மால் அறியாதவன் என்ற செய்தியும் காட்டப்பட்டுள்ளது. 'கொடிகளோடு நாள் விழா மல்கு குற்றாலம்' என்று அந்நகரில் இறைவனுக்கு விழா நடந்துகொண்டிருந்த செய்தியும் சுட்டப்பட்டுள்ளது. இதில் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தி என்னவெனில், இக்குற்றாலப் பதிகத்தில் குறும்பலா பற்றிய குறிப்பு ஒரு இடத்தில்கூடக் காணப்படவில்லை. எனவே, அவர் காலத்தில் குறும்பலா ஈசனுடைய கோயில், குற்றாலக் கூத்தனுடைய கோயிலிலிருந்து வேறுபட்டது என முடிவு செய்ய முடியும்.

குறும்பலா ஈசனுக்காகப் பாடிய பதிகத்திலும் இயற்கை வருணனையும் சாரலின் பெருமையும் மிகுந்து காணப்படுகின்றன. ஏலம்

கமழ் சோலை, குளிர்சூழ் வெற்பு, கொம்பார் பூஞ்சோலை என்றெல்லாம் சோலையின் சிறப்பைக் காட்டுகிறார். குன்றிடம் சூழ்தண் சாரல், தண்சாரல், பூஞ்சாரல், சாரல் என்றெல்லாம் சாரலை வியந்து போற்றுகிறார். "மன்றது மண் முழுவ மோங்கி மணி கொழித்து வயிர முந்திக் குன்றத்தருவி" என்று அருவியின் அழகையும் ஞானசம்பந்தர் பாடியுள்ளார். குறும்பலாவையன்றி மலர் வீசும் குருந்த மரங்களும், குலை வாழை மரங்களும், மாமரங்களும், குரா மரங்களும், மரவ மரங்களும் நிறைந்து காணப்படுகின்றன. திருக்குற்றாலப் பதிகத்தில் குறும்பலா பற்றிக் குறிப்பிடாத ஞானசம்பந்தர் இப்பதிகத்தில் செண் பக மரங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

குறும்பலாப் பதிகத்தில் இறைவன் மதி சூடிய செய்தியும், கங்கையைத் தலையில் ஏற்றுக்கொண்ட செய்தியும் ஒன்பது முறை இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக இந்த வடிவத்திலிருந்து குறும்பலா ஈசன் அருள்புரிந்திருக்கலாம்.

**திருக்குற்றால நாதசுவாமி கோயில் – பல்லவர் காலம்**



இறைவனை வழிபட்டு யானை ஒன்று நற்கதி அடைந்த செய்தியும் காணப்படுகிறது. இதன் காரணமாக இப்பதிக்கு வேழம் பூசித்த தலம் என்ற பெயரும் வழக்கில் உள்ளது.

தேவி பாகம் பெற்ற செய்தி இரு இடங்களிலும், தேவி முலை பாகங் காதலித்த செய்தி ஒரு இடத்திலும் ஞானசம்பந்தரின் பதிகங் களில் இடம்பெற்றுள்ளது. ஆனால், இங்கு இன்று அமைந்துள்ள குழல்வாய்மொழி அம்மன் பற்றிய செய்தியும், ஆதிசக்தியாகிய தரணி பீடம் பற்றிய செய்திகளும் இடம்பெறவில்லை. ஆனால் திருக் கோவையாரில் "குழல்வாய்மொழி மங்கை பங்கன் குற்றாலம்"[88] என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. எனவே, மணிவாசகர் காலத்தில் குழல் வாய்மொழி அம்மன் வழிபாடு இருந்தது எனலாம்.

ஞானசம்பந்தருடைய இருபதிகங்களிலும் காணப்படும் செய்தி களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பல்லவர் காலத்தில் குற்றாலக் கூத்தன் கோயில் தனியாகவும் குறும்பலா ஈசன் கோயில் தனியாகவும் இருந்தது என்று முடிவு செய்யமுடியும். குற்றாலத்துறைக் கூத் தனையே திருநாவுக்கரசரும் மாணிக்கவாசகரும் பாடியுள்ள செய்தி யும், சுந்தரரும் வழிபட்ட செய்தியும் இக்கருத்தை வலியுறுத்து கிறது. மேலும், குற்றாலக் கூத்தன் கோயில் செண்பக வனத்தில் அமைந்துள்ளது. எனவே, அப்பதிகத்தில் குறும்பலா பற்றிய செய்தி இடம் பெறவில்லை. அதேபோல் குறும்பலா பதிகத்தில் செண்பக வனம் பற்றிய செய்தியும், குற்றாலத்துறையும் கூத்தன் பற்றிய செய்தி யும் இல்லை. எனவே, பல்லவர் காலத்தில் இவை இருவேறு கோயில் களாக இருந்தன என்பது தெளிவு.

பல்லவர்கள் காலத்தில் கபிலரால் எழுதப்பட்ட சிவபெருமான் திருவந்தாதி என்னும் நூலில், "கோகரணங் குற்றாலம்"[89] "கூற்றின் பொருள் முயன்ற குற்றாலம்"[90] "கொழுந்தேன் கமழ் சோலைக் குற்றா லம்"[91] என்று குற்றால நகரின் பெருமையும் குற்றாலநாதரின் சிறப்பும் வெளிப்படுவதால் அக்காலத்தில் குற்றாலமும் குற்றாலநாதர் கோயி லும் பெருமையுடன் விளங்கியிருத்தல் வேண்டும்.

தேவாரப் பதிகங்களில் இயற்கை வருணனைகளும் சாரலின் இனிமையும் அருவியின் வளமும் மிகுந்து காணப்படுகின்றன. ஆனால் கோயிலைப் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. அகத்தியர் காண ஆண்டவன் மகிழ்ந்தாடிய சித்ரபூ மன்றமாகிய சித்ரசபை பற்றிய செய்தி யும் காணப்படவில்லை. எனவே, பல்லவர் காலத்தில் சித்ரசபை இல்லையென முடிவு செய்யலாம்.

### 3. சோழர் காலத்தில் திருக்குற்றாலநாதர் கோயில்

பல்லவர் காலத்தில் செங்கற்களால் அமைந்திருந்த கோயில் களெல்லாம், சோழர் காலத்தில் கற்கோயில்களாக மாறின. பாடல்பெற்ற பழமையான கோயில்களெல்லாம் புதுப்பிக்கப்பட்டதுடன், பல புதிய கோயில்களும் கட்டப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், தாராசுரம், திருபுவனம் போன்ற இடங்களில் அமைந்துள்ள கோயில்கள் பிற்காலச் சோழர்களின் கட்டிடக் கலையாற்றலை உலகுக்கு விளக்குகின்றன.

பல்லவர்கள் காலத்தில் சைவ, வைணவப் போராட்டம் தமிழகத் தில் அதிகமில்லை. எனவே, பழைய சிவன் கோயில்களி லெல்லாம் சிவன் சன்னதிக்குப் பக்கத்தில் பெருமாள் சன்னதியும் அமைந்திருந் தது. இன்றும்கூட நெல்லையப்பர் கோயில், அம்பா சமுத்திரம் சிவன் கோயில் போன்றவைகளில் சிவனுடைய சன்னதியின் இடப் பக்கத்தில் பெருமாள் பள்ளிகொண்டுள்ள காட்சியைக் காணலாம். தேவாரங் களிலும், திருப்பாசுரங்களிலும் காழ்ப்புணர்ச்சி காணப் படவில்லை. சிதம்பரம் நடராசர் சன்னதிக்கு முன் வலப்பக்கம் பெருமாள் மூர்த்தம் இன்றும் அமைந்துள்ளது. சிதம்பரம் கோயிலைப் புதுப்பிக்கும் பொழுது, நடராசர் சன்னதிக்குப் பொன்கூரை வேயும் பொழுது அங் கிருந்த பெருமாள் மூர்த்தம் கடலுக்குள் எறியப்பட்டது[32] என்று பிற்காலச் சோழர்களின் வரலாறு தெரிவிக்கிறது. சிதம்பரம் கோயி லைப் புதுப்பிக்கும் பொழுது பெருமாள் மூர்த்தத்தை அப்புறப் படுத் தியதுபோல, சோழர் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட சிவன் கோயில் களில் காணப்பட்ட திருமால் மூர்த்தங்கள் பல அப்புறப்படுத்தப் பட்டிருக்க வாய்ப்புண்டு.

நாயன்மார்கள் வழிபாடு செய்த கூத்தர் கோயில் குறும்பலா ஈசர் கோயில் ஆகிய இரண்டிலும் பிற்காலச் சோழ மன்னர்கள் திருப்பணி கள் பல செய்துள்ளனர். மாமன்னர் இராசராசனால் புதுக்கோயில் கட்டப் பட்டது. பழையன கழிதலும் புதுவன புகுதலும் என்ற முறைக்கேற்பப் பழைய கோயிலுக்குப் பதிலாகப் புதிய கோயில் கட்டப்பட்டது. பழைய கோயிலை இடித்த பொழுது அதில் காணப்பட்ட வட்டெழுத்தில் அமைந்த கல்வெட்டுக்கள் தமிழ்ப்படுத்தப்பட்டுப் புதிய கோயிலில் பொறிக்கப்பட்டன[33] என்று கோயில் கல்வெட்டு கூறுகிறது. இன்று நாம் காணும் கோயில் இராசராசன் காலத்தில் வடிவமைக்கப்பட்டது என முடிவு செய்ய முடியும். கோயில் பழுது பார்க்க வேண்டிய நிலை யில் இருந்தது என்ற செய்தியும் மேல் குறிப்பிட்டுள்ள கல்வெட்டில் காணப்படுவதால் சோழர் காலத்திற்கு முன்னரே இக்கோயில் சிறப்

புற்றிருந்தது என அறிய முடிகிறது. திருக்குற்றாலநாதர் கோயில் ஆதியில் சிவன் கோயிலாக இல்லாமல், பெருமாள் கோயிலாக இருந்த தாகவும், அகத்தியர் இதனைச் சிவன் கோயிலாக மாற்றி வழிபட்டார் என்றும் தலபுராணம்[94] கூறுகிறது. சோழர்கள் கோயிலைப் புதுப்பிக் கும்பொழுது குற்றாலத்துறைக் கூத்தன் கோயிலையும், குறும் பலா ஈசன் கோயிலையும் ஒன்றாக இணைத்துப் பெரிய கோயிலாகக் கட்டியிருக்க வேண்டும். அவ்வாறு புதிய கோயிலைக் கட்டும்பொழுது குற்றறாலநாதர் சன்னதிக்கு இடப்பக்கத்தில் பெருமாளுக்குத் தனி சன்னதி கட்டியிருக்க வேண்டும். அத் தனிச் சன்னதிதான் இன்று வெஞ்சன அறையாக (பொருள் பாதுகாக்கும் அறை) பயன் படுத்தப் படுகிறது. இச்செய்திகள் "தொல்பழங் கோயில் பற்றிய உண்மையும் கூத்தர் கோயிலின் முதன்மையும்" என்ற பகுப்பின்கீழ் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருக்குற்றாலநாதர் கோயிலில் மொத்தம் 89 கல்வெட்டுக்கள் வடிக்கப்பட்டுள்ளன. சோழ மன்னன் பரகேசரிவர்மன் என்ற முதலாம் பராந்தகன் காலத்தில் (கி.பி. 927-943) எழுதப்பட்ட 10 கல்வெட்டு க்கள் காணப்படுகின்றன. முதலாம் பராந்தகச் சோழனின் கல்வெட்டு பாண்டிய நாட்டில் திருக்குற்றாலநாதர் கோயிலில் மட்டும்தான் காணப் படுகிறது. இவையனைத்தும் வட்டெழுத்துக்களில் அமைந்துள்ளன. இம்மன்னன் காலத்தில் தமிழ் எழுத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. இக்கல் வெட்டுக்களில் கோயிலுக்கு அளி க்கப்பட்டப் பலவகை நன்கொடைகள் பற்றிய செய்திகளே காணப் படுகின்றன. மதுரை கொண்ட பரகேசரிவர்மன்,[95] என்ற செய்தி கல் வெட்டுக்களில் காணப்படுவதால் இம்மன்னன் மதுரையை வென்றவன் என்ற வரலாற்றுச் செய்தி கிடைக்கிறது.

"திருக்குற்றாலப் பெருமாள்" என்று குற்றாலத்துறை ஆண்ட வனை முதல் கல்வெட்டு மட்டும் கூறுகிறது. பின் எழுந்த கல் வெட்டுக்கள் 'குற்றாலத் தேவன்', 'மாதேவன்' என்று குறிக்கின்றன. மேலும், இம்மன்னன் காலத்துக் கல் வெட்டுக்களில் சூரிய கிரகண நாள் குறிக்கப்பட்டிருப்பதால், அதன் அடிப்படையில் அம்மன்னனின் ஆட்சிக்காலத்தை வரலாற்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். கோயில் விளக்கெரிப்பதற்குத் தானமாகப் பசு கொடுத்தது போல, பொன், பணம், ஆடு, எருமை போன்றவற்றை வழங்கிய செய்திகளும் இக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இம்மன்னன் காலத்துக் கல் வெட்டில் மட்டுமே பெருமாள் என்ற பெயர் காணப்படுவதால், அக் காலத்தில் பெருமாள் சன்னதியும் சிவன் சன்னதியும் இருந்தன என்று கருத வாய்ப்புண்டு.

முதலாம் இராசராசன் என்னும் மாமன்னன் காலத்துக் கல்வெட்டுக்கள் மூன்று கிடைத்துள்ளன. இம்மன்னன்தான், பழுதடைந்த கோயிலைப் புதுப்பித்தான், மண்டபங்களைக் கட்டினான் என்ற செய்தி முன்பு கூறப்பட்டது. அவ்வாறு கட்டும்பொழுது வட்டெழுத்துக்களைத் தமிழில் படியெடுத்துப் புதிதாகப் படைத்த செய்தியும் முன்பே சுட்டப்பட்டுள்ளது. சேர மன்னனுடைய கடற்படையைக் காந்தளூர்ச் சாலையில் சோழர்கள் அழித்த செய்தி [96] வரலாற்றுக் குறிப்புக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இம்மன்னன் காலத்தில் எழுந்த கல்வெட்டுக்களில் "திருக் குற்றாலத்துப் பட்டாக்காரர்" என்று இறைவன் அழைக்கப்பட்டுள்ளார். அக்கல்வெட்டு நிலக் கொடை பற்றிக் கூறியிருப்பதால் பட்டாக்காரர் என்று குறிப்பிட்டிருக்க வாய்ப்பு உண்டு. இம்மன்னன், கோயிலைப் புதுப்பித்தமைக்கும் வட்ட எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களாக மாற்றியமைத்தமைக்கும், புகழாரமாக, "திருமகள் போல" என்ற தொடக்கத்துடன் ஒரு கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது. இக்கல்வெட்டு முழுமையாகக் கிடைத்திருந்தால் கோயிலின் தொன்மையும், வரலாற்று உண்மையும் தெளிவாக வெளிக்காட்டப்பட்டு இருக்கும்.

இதுவரையில் பார்த்த முதலாம் பராந்தகச் சோழ மன்னன் காலத்து கல்வெட்டுக்கள் அனைத்தும், ராசராசன் காலத்து முதல் கல்வெட்டும், முதல் சுற்று வீதி மேற்குச் சுவரில் கோயிலைப் புதுப்பித்த செய்தியும், சிதைந்த கல்வெட்டும் காணப்படுகிறது. முதல் சுற்று வீதி முற்றத்தில் கிழக்கு முற்றத்தில் மூன்றாவது தூணில் மாமன்னன் ராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது. இதன் காரணமாக ராசராசன், கோயிலைப் புதுப்பித்துக் கட்டும்பொழுது முதல் சுற்று வீதி வரை கட்டியுள்ளான் என்பது தெரிகிறது.

## பாண்டியன் மாறன் சடையன்
## இரண்டாம் வரகுணபாண்டியன்
## (கி.பி. 866–867)

கல்வெட்டு எண் : 480 வரிகள் :16

| | |
|---|---|
| 1. ஸ்வஸ்திஸ்ரீ (11) கொமா | 9. (அ) ரையனுயின |
| 2. றஞ் சடையர்க்கு யாண்டு | 10. மாறனுச்சன் |
| 3. நாலு நாள் முன்னூற்று | 11. இரவும் பக |

4. அறுபது இஞ்ஞாறுல்
5. தென் வார நாட்டு
6. த் திருக்குற்றா-
7. லத்து லுடா (ர) க்-
8. குப் பொழியூர்
12. லு முட்டாமெ வ-
13. கூ ரா உகலி வற் எரி
14. வதாக ஸ்வத்த
15. திரு நொந்தா வி
16. ணக்கு ஒன்று ஒ'

திருக்குற்றாலநாதர் கோயிலின் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இன்று படியெடுக்கும் நிலையில் இல்லை. அவற்றின் படியெடுக்கப்பட்ட நகல்களே உள்ளன.

(தொ.பொ.ஆ.)

## பாண்டியன் சடையன்மாறன் இரண்டாம் இராசசிம்மன் (கி.பி. 921– 922)

**கல்வெட்டு எண்: 417** **வரிகள்:16**

1. ஸ்வஸ்திஸ்ரீ (11) கொச்
2. சடைய மாறர்க்கு
3. யாண்டு இரண்டு இ
4. (த)னெதி றொன்ப-
5. து இவ்வாண்டு தெ-
6. (ன்வ்) வார(நா) ட்டுதி
7. (ருக்கு) ற்றலத்து மா
8. தெவர்க்கு ம
9. ண்ணி நாட்டு இ
10. டவை வியாபர
11. ரி அய்யங்(கூ)
12. த்தன் வைச்ச தி
13. ருநொந்தா விளக்கு
14. அரையா வட்டி (ன்) சா
15. வா முவாப்பெ-
16. ரெ ருமை மூன்று (ய)

திருக்குற்றாலநாதர் கேயிலின் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இன்று படியெடுக்கும் நிலையில் இல்லை. அவற்றின் படியெடுக்கப்பட்ட நகல்களே உள்ளன.

(தொ.பொ. ஆ.)

சோழர் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் ஆட்சியிலிருந்த பாண்டிய மன்னர்களுடைய கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. திருக் குற்றாலநாதர் சன்னதியின் வடக்குப் பக்கத்தில் காணப்படும் தூண் ஒன்றில் கி.பி. 866-877 இல் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மாறன் சடையன் என்னும் இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்துக் கல்வெட்டு காணப்படுகிறது.[97] மிகப் பழமையான இக்கல்வெட்டில், தென்னல் பல்லவராயன் ஆச்சன் என்னும் குறுநில மன்னன் விளக்கு எரிப்பதற்கு ஏற்படுத்திய நிவந்தச் செய்தி காணப்படு கிறது. வட்டெழுத்தில் அமைந்துள்ள இக்கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை.

921-22இல் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த சடையன் மாறன் என்னும் இரண்டாம் இராசசிம்மன் காலத்துக் கல்வெட்டுக்கள் நான்கு[98] காணப்படுகின்றன. அவற்றில் மூன்று குற்றாலநாதர் கோயில் முதல் சுற்று வீதி கிழக்குத் திண்ணைப் பகுதியில் அமைந் துள்ள தூண்களிலும், நான்காவது முதல் சுற்று வீதி கிழக்குச் சுவ ரிலும் காணப்படுகின்றன. முதல் கல்வெட்டு வட்டெழுத்தில காணப் படுகிறது. "தென்வாரநாட்டுத் திருக்குற்றாலம்" என்பதைத் தவிர பிற வரிகள் சுவருக்குள் மறைந்துவிட்டன. வட்டெழுத்தில் அமைந்துள்ள இரண்டாவது கல்வெட்டு, மன்னை நாட்டைச் சார்ந்த இடவை நகரில் வாழ்ந்த ஆயன் குட்டன் என்னும் வணிகன் இக்கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்கு மூன்று எருமைகள் வழங்கிய செய்தி காணப்படுகிறது. இம் மன்னை நாடு என்பது காவிரிக் கரையிலுள்ள கும்பகோணம் பக்கத்தில் உள்ள பகுதியாகும். ஏனெனில், 'மண்ணி நாட்டு இடவை' பிறிதொரு சோழர் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[99] திருவிடை மருதூர், ஆடுதுறை பகுதிகளுக்கும் மன்னை நாடு என்று வழக்கு இருக்கிறது.

வட்டெழுத்தில் 18 வரிகளைக் கொண்ட மூன்றாவது கல்வெட்டு தேவார நாட்டைச் சார்ந்த வண்தலைக்கோணன் என்பவன் கோயிலுக்கு ஆறு எருமைகளை வழங்கிய செய்தியைக் குறிக்கிறது. நான்காவது கல்வெட்டு பாசுபத பெருமக்கள் பற்றிய செய்தியைக் குறிக்கிறது. ஆனால் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நான்கு கல்வெட்டு க்களினால், பாண்டிய மன்னன் சடையன் மாறன் (கி.பி.921-22) காலத்தில் இக்கோயிலின் பெருமை தமிழ்நாடு முழுமையும் (குறிப் பாகச் சோழநாடு) பரவி இருந்தது என்றும், பாசுபதப் பெரு மக்கள் என்னும் ஆலோசனைச் சபை இக்கோயிலுக்கு உண்டு என்றும், குற்றாலம் தேவார நாட்டின் பகுதி என்றும் அறிய முடிகிறது. இக் கல்வெட்டுக்கள் "திருக்குற்றாலத் தேவர்" என்றுதான் இறைவனைக் குறிக்கின்றன. எனவே சோழருடைய திருப்பணிக்கு முன்னரும்

பாண்டியர் ஆட்சிக் காலத்தில் திருக்குற்றாலநாதர் கோயில் சிறப்புடையதாக இருந்தது எனலாம்.

சோழர் ஆட்சி, பாண்டிய நாட்டில் வருவதற்குமுன் காணப்படுகின்ற கல்வெட்டுக்களிலிருந்து, பாண்டியர் ஆட்சியில் இக் கோயில் சிறந்த விளங்கியதை உணரமுடிகிறது. மற்றொரு சிறப்பு பாண்டியர் ஆட்சியில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் அனைத்தும் எருமைக் கொடையையே குறிப்பிட்டுள்ளன. பிற்காலச் சோழர் கல்வெட்டுக்கள், பசும்பொன், நிலம் என்று பல கொடைகளுக்கான செய்திகளைத் தருகிறது. சோழர் ஆட்சிக்கு முன்னரே, இக்கோயில் முதல் சுற்று வீதியும் சுவரும் கொண்டது எனலாம். பழைய பாண்டிய மன்னர்கள், கல்வெட்டுக்கள், இன்றும் சுவரினுள் மறைந்தே காணப்படு கின்றன. எனவே, மாமன்னன் இராசராசன் திருப்பணி செய்தபொழுது பாண்டியர் கல்வெட்டுக்கள் பல சுவரின் உட்பகுதிக்குள் சென்றிருக்கலாம். அல்லது சிறைவுற்றிருக்கலாம்.

**திருக்குற்றால நாதசுவாமி கோவில் – பிற்காலச் சோழர் காலம்**



சோழர் காலத்துச் சைவ வரலாற்று இலக்கியம் எனப் போற்றப் படும் பெரியபுராணம் திருஞானசம்பந்தர் இங்கு வந்து வழிபட்டுப் பதிகம் பாடிய செய்தியையும், சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரர், நின்ற சீர் நெடுமாறன், மங்கையர்க்கரசி போன்றவர்களும் வழிபட் டுள்ளனர் என்பதையும் கூறுகிறது என்று முன்பே கூறபட்டது.

பல்லவர் காலத்தில் சிறிய கோயிலாக இருந்த திருக்குற்றால நாதர் கோயில், சிதைந்திருந்த, பகுதிகளுடன் காணப்பட்ட இக் கோயில், சோழர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் காணப்பட்டது. கோயிலின் முதல் சுற்று வீதியும் முன் முற்றப்பகுதியும், பல்லவர் காலத்திற்குப் பின் உருவாக்கப்பட்டன. இக்கோயிலின் பெருமை சோழ நாட்டின் சிறிய பகுதிகள் வரை பரவியிருந்தது. இக் கோயிலை நிர்வகிக்க, ஆலோசனைகள் வழங்க, பாசுபத பெருமக்கள் சபையிருந்தது.

### 4. பாண்டியர் காலம்

திருக்குற்றாலநாதர் கோயிலில் பாண்டியர் கல்வெட்டுக்கள் 75 இன்றுவரைப் படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு கல்வெட்டுக்கள் சோழர் ஆட்சி பாண்டிய நாட்டில் ஏற்படுவதற்கு முந்தைய கல்வெட்டுக் கள், அதில் காலத்தால் முற்பட்டது எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த மாறஞ்சடையன் பரகேசரி வர்மனின் (கி.பி. 765-815) வட்டெழுத் துக் கல்வெட்டாகும். சோழர் ஆட்சித் திறன் குறைந்தபொழுது பாண்டிய நாட்டில் அரசுக் கட்டிலில் ஏறிய மன்னர்களின் கல்வெட்டுக் களையும், சோழர்களை வென்று, மீண்டும் பாண்டியர்களின் பெரு மையை உலகுக்கு உணர்த்திய மன்னர்களின் கல்வெட்டுக்களையும் காண லாம். இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் தமிழ் எழுத்துக்களில் அமைந்துள்ளன.

சுவாமி சன்னதியில் வடக்குச்சுவரில் காணப்படும் பாண்டியன் மாறவர்மன் என்னும் குலசேகரன் காலத்து (12-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டுக்கள்[100] மூலமாகத் திருக்குற்றலாநாதர் கோயில் நிர்வாகத் திற்கு என்று தனியான அமைப்பு இருந்ததாக அறியமுடிகிறது. பாண்டியன் சடையன் மாறன் காலத்துக் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள பாசுபதப் பெருமக்கள் என்ற ஆலோசகர் சபையே அது என்று கருத முடியும். பாண்டியன் மாறவர்மன் காலத்துக் கல்வெட்டுக்களில் குற்றாலநாதர் கோயில் வழிபாட்டிற்காக, பாசுபதப் பெருமக்களும் வடவாரிய நாடு, தென்னாரிய நாட்டு மக்களும், செய்துகொண்ட ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. ஆரிய நாடு என்ற பெயர் குற வஞ்சியிலும் காணப்படுகின்றது.[101] இதே சுவாமி சன்னதியில்

வடக்குச் சுவரில் காணப்படும் ஜடிலவர்மன் ஸ்ரீவல்லப தேவ பாண்டியன் கல்வெட்டு[102] (கி.பி. 14 -ஆம் நூற்றாண்டு) மேலகரம் முத்தி அதி வீரராயர் மழவராயருக்குக் கணக்கு வேலை பார்ப்பதற்கு மான்யமாகப் பாண்டிய அரசன் நிலம் வழங்கிய செய்தியைக் குறிக்கிறது.

பிள்ளையன் கட்டளை மண்டபம் கிழக்கு தெற்குச் சுவரில் காணப் படும் கல்வெட்டு[103] பாண்டியன் ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் திருக்குற்றால நாதர் கேயிலைச் செப்பனிட்ட வாமதேவன் என்பவனுக் குப் பரிசு கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

சோழர்களை வென்று, பாண்டியர் ஆட்சியை மீண்டும் தமிழகத் தில் நிறுவிய திரிபுவனச் சக்கரவர்த்தி என்று போற்றப்பட்ட மாறவர்மன் இரண்டாம் சுந்தரபாண்டியன் காலத்தில், ஐந்நூற்றுப் பன்னிருவர் கொண்ட சபை இருந்தது என்பதையும்,[104] நீட்டலளவைக்காக 'சுந்தர பாண்டியன் கோல்' என்னும் கருவி பயன்படுத்தப்பட்டதையும்[105] வெளிப்படுத்துகிறது. ஆயன் மாலவராயன் என்னும் தலைவன் முயற்சி யால், குலசேகரநல்லூர் என்னுமிடத்திலுள்ள நிலமொன்றைக் கோயி லுக்குத் தானமாகக் கொடுத்தமைக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுக் குலசேகர சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் சூட்டப்பட்ட செய்தியும்[106] இம்மன்னன் காலத்துக் கல்வெட்டால் விளங்குகிறது. மேலும், அவ் வாறு தானமாகக் கொடுத்த நிலத்திலும் விளைச்சல் நிலத்திற்கு மட்டுமே தீர்வை வசூலிக்கப்பட்ட செய்தியும் இம்மன்னன் காலத்துக் கல்வெட்டால்[107] விளங்குகிறது. இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் முதல் சுற்று வீதி மேற்குச் சுவரில் காணப்படுகின்றன.

இனி, முதல் சுற்று வீதி வடக்குச் சுவரில் அமைந்த கல்வெட்டுக் களில் செய்தி: ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் குறுமறை நாட்டைச் சார்ந்த சுந்தரபாண்டியபுரத்தில் திருக்குற்றாலநாதர் கோயில் நிலம் ஆண்டாபிள்ளை என்பரிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அந்நிலத்தைப் பயிர் செய்து, அதிலிருந்து வரும், வருமானத்தில் 1 மா நிலத்திற்கு முதலாண்டு 1 கலம் நெல் கொடுக்க வேண்டும். புதிதாகப் பயிர் செய்யும் நிலங்களுக்கு, ஒரு மா நிலத்திற்கு முதலாண்டு 1 கலம், இரண்டாமண்டு இரண்டு கலம் என்று நிலத்தின் தரத்துக்குத் தக்கவாறு குத்தகை கோயிலுக்குச் செலுத்தவேண்டும்.[108] இவ்வாறு தரிசு நிலைங்களைத் தகுந்தவாறு ஊக்கமளித்துப் பயிர்செய்த செய்தியும், அவ்வாறு கோயிலுக்கு வரும் வருமானம், இதர கோயில் சொத்துக்கள், கணக்குகள் போன்றவற்றைப் பராமரித்து வந்த அலுவலர்களுக்குப் பரிசாக நிலம் அளித்த செய்தியும்,[109] கல்வெட்டில் காணப்படுகிறது. இவ்வாறு ஒழுங்காகப் பணிகளைச் செய்துவரும் ஊழியர்களுக்கு ஊக்கமளித்த ஜடாவர்மன் விக்ரமபாண்டியன்,

தன்னுடைய பணிகளை ஒழுங்காகச் செய்யாத ஒருவரின் நிலத்தைத் திரும்பப் பெற்று, மூலைமேல் மருது செண்பகவனப் பெருமாள் என்ற ஐநூற்றுப்பட்டனுக்கு வழங்கியுள்ளான்.[110] இதன்மூலம், கோயில் நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதற்குத் தானே முன்னின்று, அனைத்துச் செயல்களையும் கண்காணித்து வந்துள்ளான் எனத் தெரிகிறது. கோயில் நிர்வாகத்தை மட்டுமல்லாமல், வழிபாட்டிலும், வீரபாண்டியன் கவனம் செலுத்தியுள்ளான். ஒவ்வொரு மாதமும் முதல் 10 நாட்கள் கோயிலில் இசை பாடுவதற்காகக் கூத்தன் பெற்ற பெருமாள் ருத்திர தேவன் என்பவனுக்குப் பணமும் நிலமும் அளித்துள்ளான்.[111]

கி.பி. 1253 இல் பட்டத்துக்கு வந்த ஜடாவர்மன் வீரபாண்டிய ன், ஈழம், கொங்கு, சோழ மண்டலங்களையும், பல்லவர்களையும் வெற்றி கொண்டு பெரும்பற்றப்புலியூரில் (சிதம்பரம்) வெற்றி விழாக் கொண்டாடினான். அவ் வெற்றி விழாவின் பொழுது இத்திருக்கோயில் சமுதாயத்தினரை திருமுக்கால் வட்டம் என்னும் ஆலோசனைக் கூடத்தில் சந்தித்துக் கோயில் நிர்வாகம் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளான். மிகப்பெரிய போருக்குப் பின் நடக்கும் வெற்றி விழாவின் பொழுதுகூட, திருக்குற்றாலநாதர் கோயில் பற்றிய எண்ணம் மன்னவன் சிந்தனையில் இருக்குமென்றால், அப்பாண்டியர் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் மிகவும் பிரபலமடைந்து விளங்கியிருக்கலாமெனக் கருத முடிகிறது.

ஜடாவர்மன் விக்ரமபாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்கள் இரண்டும் இந்த வடக்குச் சுவரில் காணப்படுகின்றன. அவை, கோயில் விளக்கெரிப்பதற்கு இலக்குமணநல்லூர் என்னும் கிராமத்தில் நிலம் வழங்கிய செய்தியையும்,[112] அதற்கான ஒப்பந்தத்தையும்[113] குறிக்கின்றன.

முதற் சுற்று வீதி தெற்குச் சுவரில் அமைந்துள்ள கல்வெட்டுக்களைக் காணலாம். மாறவர்மன் மூன்றாம் விக்ரமபாண்டியன் காலத்தில் ஊர் மக்களால், குறுமறை நாட்டைச் சார்ந்த சுந்தரபாண்டியபுரத்தில் தேவ நாயகன், ஆண்டாபிள்ளை என்னும் இருவரிடம் நிலங்கள் ஒப்படைக்கப்பட்டு, தீர்வையைக் குற்றாலநாதர் கோயிலுக்குச் செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.[114] மற்றொரு கல்வெட்டு திருமலர் நாட்டிலுள்ள நிலமொன்றைக் கோயிலுக்கு விற்பனை செய்த செய்த செய்தியினைத் தெரிவிக்கிறது.

மாறவர்மன் முதலாம் குலசேகர தேவபாண்டியன் காலத்தில் வணிகன் ஒருவன் கோயிலுக்கு நன்கொடையாக வெள்ளிப்பாத்திரம்

வழங்கிய செய்தியும், அதற்கு எழுத்து மூலமான ஒப்பந்தமும் காணப் படுகிறது.[115] அதேபோல மேலகரம் கைலாசநாத பட்டர் என்பவருக்குக் காலை நேரத்தில் வேதம் ஓத நிலம் மான்யமாகக் கொடுத்த செய்தியும் காணப்படுகிறது.

முதல் சுற்று வீதி கிழக்குச் சுவரில் காணப்படும் கல்வெட்டு, ஜடிலவர்மபாண்டிய மன்னர், கோயில் கணக்குகளைப் பார்வையிடு வதற்காக அழகிய சொக்கன் என்பவனுக்கு பணமுடிப்பும் நிலமான்ய மும் வழங்கியுள்ளதைக் கூறுகிறது.[116]

ஜடிலவர்மன் என்னும் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேர்மை கொண்டான் குலசேகர தேவன் என்ற பராக்கிரம பாண்டிய அபிராம பராக்கிரம பாண்டியன் மகன் அழகன் பெருமாள், திருக்குற்றாலமுடை யார் சன்னதியில் புராணம் வாசிப்பதற்காக நிலமளித்த செய்தி குறும் பலாக் கோயில் தெற்குச் சுவரில் காணப்படுகிறது.[117]

குழல்வாய்மொழி அம்மன் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர், கிழக்குச் சுவர்களில் காணப்படும் கல்வெட்டு, மெய்கண்ட தேவன் சிந்தாமணி என்பவனுக்கு, திருஞானசம்பந்தர் பாடல் பாடு வதற்காகப் பாண்டிய மன்னன் ஜடிலவர்மன் வழங்கிய நிலமான்யம் பற்றிய செய்தியைக் கூறுகிறது.[118]

குற்றாலநாதர் கோயில் இரண்டாவது சுற்று வீதியில் அமைந்த கல்வெட்டு மாறவர்மன் மூன்றாவது விக்ரம பாண்டியன் தன்னுடைய மைத்துனர் விக்ரம சோழனின் பிறந்த நாளன்று செய்த சிறப்பு வழி பாட்டுச் செய்தியைக் கூறுகிறது.[119] இரண்டாவது சுற்று வீதியில் சோமலிங்கர் சன்னதி சுவரில் மாறவர்மன் முதலாம் குலசேகரன் காலத்துக் கல்வெட்டு காணப்படுகிறது.[120]

ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் கி.பி. 1387-இல் சுவாமி கோயில் கர்ப்பகிரஹம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சிகரங்கள் முதலானவற்றைக் கட்டி, கோயில் பூசாரிகளுக்கு நிலங்கள் இனா மாகக் கொடுத்து வழிபாட்டிற்கும் வழி செய்துள்ளான்.[121] கி.பி. 1410 இல் வீரமார்த்தாண்ட பராக்கிரம பாண்டியனும் பல திருப்பணிகள் செய்துள்ளான். கி.பி. 1408 இல் வேதபாராயணம் செய்யவும், மூல வருக்கு வெள்ளிக்கிழமை தோறும் பூணூல் சாத்தி வழிபாடு செய்யவும் பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் நிலமளித்துள்ளான்.[122]

1395-96 இல் ஆட்சிபுரிந்த ஜடாவர்மன் குலசேகர பாண்டி யன் என்னும் மன்னன் திருக்குற்றாலத்திற்கு அருகே அமைந்துள்ள இலஞ்சி எனும் கிராமத்தில் திருவிலஞ்சிக்குமரர் கோயில் என்னும்

முருகன் கோயிலைப் புதுப்பித்துக் கட்டியுள்ளான்.[123] இக்கோயிலில் தான் அகத்தியர் ஆண்டவனை வழிபட்டு, அவனருளால் திருக்குற்றாலத்தில் பெருமாள் கோயிலைச் சிவன் கோயிலாக மாற்றினார் என்று தலபுராணம் கூறுகிறது. இன்றும்கூட திருக்குற்றால நாதர் கோயிலில் நடைபெறும் சித்திரை, ஐப்பசி விசுத் திருவிழாக்களிலும், தை மாதம் நடைபெறும் தெப்பத் திருவிழாவிலும் திருவிலஞ்சிக்குமரர் தன்னுடைய இரு துணைவியருடன் கலந்துகொள்வதைக் காணலாம். இம்மன்னன் குற்றாலநாதர் கோயில் வழிபாட்டிற்கும், வேதபாராயணம் செய்வதற்கும் சாஸ்திரிகளுக்கு நிலமான்யமும் கொடுத்துள்ளான்.[124]

பாண்டியன் மாறவர்மன் காலத்தில், குற்றாலநாதர் கோயில் திருக்காமக் கோட்டத்துப் பெரிய நாச்சியாருக்கு புலியூர் பற்றில் நன்செய் நிலமொன்றை வைகுண்ட நாட்டைச் சார்ந்த பெரும்பழஞ்சியிலுள்ள அன்பன் ஒருவன் அளித்துள்ள செய்தி, கொல்லம் புறம்புப் பகுதியிலுள்ள தட்டப்பாறை என்னும் இடத்தில் காணப்படும் கல்வெட்டில் காணப்படுகிறது.[125]

**திருக்குற்றால நாதசுவாமி கோவில் – பிற்கால பாண்டியர் காலம்**



பிற்காலச் சோழர் காலத்தில் முதல் சுற்று வீதியுடன் அமைந் திருந்த இக்கோயிலில் பாண்டியர் காலத்தில் மூலவர் வீற்றிருக்கும் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், பிள்ளையன் கட்டளை மண்டபம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. இவர்கள் காலத்தில் கோயிலில் திருஅமுது சமைப்பதற்குத் தனியாக ஓர் மண்டபத்தைக் கட்டியுள்ளனர். சோமலிங்கர் சன்னதி, குறும்பலா சன்னதி போன்ற பல புதிய சன்னதிகள் கட்டப்பட்டுள்ளன.

பாண்டிய மன்னர்கள் கோயிலில் திருப்பணிகள் செய்ததோடு நில்லாமல் கோயில் நிர்வாகத்திலும் கவனம் செலுத்தியுள்ளனர். கோயில் நிர்வாகத்தை நடத்த திருக்கோயில் சமுதாயத்தினர், பாசுபத பெருமக்கள் போன்ற நிர்வாக அமைப்பை வைத்திருந்தனர். கோயில் சொத்துக்களையும், கணக்குகளையும் பராமரிப்பதற்குத் தனி அலு வலர்களை நியமித்ததுடன், அவர்கள் பணி சிறந்த பொழுது ஊக்கு வித்தும், தவறு செய்யும்பொழுது தண்டித்தும் உள்ளனர்.

கோயில் தொடர்பான நிலங்களை அளந்தும், அவற்றின் தரத் திற்கேற்ப தீர்வைகளை நிர்ணயம் செய்தும் வந்துள்ளனர். மான்யமாக வந்த நிலங்களையும் அவற்றின் வருவாய்களையும், கணக்குகளையும் முறைப்படுத்தியுள்ளனர்.

பாண்டிய மன்னர்கள் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துள் ளனர். வெள்ளிக்கிழமைகளில் பூணூல் சாத்தி வழிபடுதல், வேத பாரா யணம் செய்தல், தேவாரம் ஓதுதல் இறையடியவர்களாகிய பூசாரி களுக்கு மான்யம் வழங்குதல், பிறந்த நாள் போன்ற நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பு வழிபாடு செய்தல் என்று பல புதிய வழிபாடுகளுக்கு வகை செய்துள்ளனர்.

ஜடாவர்மன் வீரபாண்டியன் பெரும்பற்றப்புலியூரில் கொண்டாடிய வெள்ளி விழாவின்போது கூட திருமுக்கால்வட்டம் என்னும் ஆலோ சனைக் கூடத்தில் குற்றால சமுதாயத்தாரைச் சந்தித்து நிர்வாகத் தொடர்பாகப் பேசியுள்ளமையே, இக்கோயிலின்பால் பாண்டியர்கள் கொண்ட பேரன்பினை விளக்குகிறது.

## 5. நாயக்கர் காலம்

மதுரை, திருச்சி, தஞ்சை போன்ற இடங்களைத் தலைநகர் களாகக் கொண்டு நாயக்கர்கள் தங்களுடைய ஆட்சியை தமிழகத்தில் நிறுவினர். இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இந்துமதம் தழைத் தோங்கப் பல அரிய திருப்பணிகள் செய்தனர். மதுரை, திருவண்ணா மலை, சிதம்பரம் போன்ற பல இடங்களில் இன்று வானளாவி

உயர்ந்து காணப்படுகின்ற கோபுரங்கள் இவர்கள் காலத்தில் கட்டப் பட்டன. கோயில்களில் அம்மனுக்குத் தனிச் சன்னதி கட்டினர். அம்மனுக்கும் கோயிலில் காணப்படும் இறைவனுக்கும் திருக் கல்யாணம் செய்வதற்காகத் தனியாகத் திருக்கல்யாண மண்டபங்கள் அமைத்தனர். ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் என்ற பெயரில் பல புதிய மண்டபங்களைக் கட்டினர். மக்கள் மத்தியில் இந்து மத உணர்வினை வளர்ப்பதற்கு அம்மண்டபங்களில் பெருவிழாக்கள் நடத்தினர். பிற்காலச் சோழ மன்னர்கள் மூலவரின் சன்னதியாகிய கர்ப்ப கிரகத்தின் மேலேயே பெரிய கோபுரங்களைக் கட்டினர். ஆனால் நாயக்க மன்னர்களோ, கோயிலின் வாயில்களில் ராஜ கோபுரம் கட்டினர். இதற்கு முக்கியக் காரணம், பிற்காலச் சோழர்கள் தாங்களே பல புதிய கோயில்களைக் கட்டினர். அவ்வாறு கட்டும்பொழுது பெரிய கோபுரத் தின் கனபரிமானங்களைத் தாங்குவதற்கேற்பக் கர்ப்பக் கிரகத்தை அமைத்தார்கள். ஆனால் நாயக்க மன்னர்கள் புதிய கோயில்களை உருவாக்குவதற்குப் பதில், பழைய கோயில்களில் திருப்பணி செய்வ திலும், ராஜ கோபுரம் கட்டுவதிலும் கவனம் செலுத்தினர்.

திருக்குற்றாலநாதர் கோயிலுக்கும் ராஜகோபுரம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டுள்ளது. வடக்கு வாயி லில் கோபுரம் அமைப்பதற்கென்று அமைத்துள்ள அடித்தளத்தை இன்றும் காணலாம். இக்கோயிலின் வாயில்களில் இந்த வடக்கு வாயிலே சிறப்புடையது. ஏனெனில் இத்தலத்தின் முக்கியக் கடவுளா கிய கூத்தபிரான் இந்த வழியாகத்தான் திருவிழாக்காலங்களில் திருவீதி உலாச் செல்வது வழக்கம். மேலும், இச்சங்கு வடிவக் கோயி லுக்கு வடக்கு வாயிலே முகமாக அமைந்துள்ளது. கோயிலின் சங்கு வடிவத் தோற்றத்தைத் திரிகூட மலையின் உச்சியிலிருந்து இன்றும் காணலாம்.

மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த நாயக்க மன்னர்களில், முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற மன்னர், இக்கோயிலின் தலபுராணம், உலா, அந்தாதி, குறவஞ்சி என்று இலக்கியம் படைத்த திரிகூடராசப்பக் கவிராயரின் புலமையைப் பாராட்டி திருக்குற்றாலநாதர் கோயில் வித்வானாக நியமித்துள்ளார். அவர் பாடிய குறவஞ்சிக்காகக் குறவஞ்சி மேடு, என்னும் விளை நிலத்தை இறையிலியாக வழங்கியுள்ளார். அதற்கான செப்பேடு இன்றும் உள்ளது.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தென் தமிழ்நாட்டில் பாண்டியன் ஆட்சியும் நடந்துள்ளது. மதுரையை நாயக்கர்கள் தங்கள் தலை

நகராக ஏற்றுக்கொண்டமையால், பாண்டியர்கள் திருநெல்வேலி தென் காசி போன்ற நகரங்களைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். தென்காசிப் பாண்டியர்களின் பெருமைக்கு உரைகல்லாக அவர்கள் கட்டிய தென்காசி கோயில் விளங்குகிறது.[126] பிற்காலப் பாண்டியர் களின் பெருமையை விளக்குகின்ற செப்புப் பட்டயங்கள் இரண்டு, திருக்குற்றாலநாதர் கோயிலில் வழிபாட்டிற்காக அவர்கள் செய்துள்ள நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

**திருக்குற்றால நாதசுவாமி கோவில் – நாயக்கர் காலம்**



இறையன்பர்களில் ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும், இக் கோயிலின் திருப்பணிக்கு உதவியுள்ளார்கள். குழல்வாய் மொழி யம்மன் கோயில் திருமஞ்சனத்திற்கு ஏற்பாடுகள் செய்துள்ளார்கள் என்ற செய்தி சுவாமி கோயில் வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டால் கிடைக்கிறது.

திருநெல்வேலிப் பெருமாள் வீரவெண்பாமாலை அரசன் குமரன், குற்றாலமுடையார் அபிஷேகத்திற்காகச் சில நிலங்களின் தீர்வையை யும், இலஞ்சியில் சில நிலங்களையும் அளித்துள்ளான்.[127] இச்செய்தி கோயிலுக்குத் தென்புறமுள்ள கல்தூண் ஒன்றில் காணப்படும் கல் வெட்டில் காணப்படுகிறது. இக்கோயிலில் அமைந்துள்ள சகஸ்கர லிங்கம் வேலியூர் அன்பர்களால் உருவாக்கப்பட்டது. அவ்விலிங்கத் திற்கு அபிஷேகம், பூசைக்காகக் குணராம நல்லூர் என்னுமிடத்தில் நிலம் வழங்கிய செய்தி, தரணிபீடம் வடக்குச் சுவரில் காணப்படு கிறது.[128] அதே குணராம நல்லூரில் அழகன் பெருமாள், வரதுங்க பாண்டியன் ஆகியோரின் ஆணையால், குற்றாலநாதர் கோயிலில் பச்சையப்ப நாயக்கரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, சியாமநாதர் - நாகேஸ்வரி அம்மன் திருவுருவங்களுக்கு அபிஷேகம், வழிபாடு ஆகியவற்றிற்கு நிலம் வழங்கப் பட்டுள்ளது.[129] மேலகரம் விநாயகர் கோயிலில் காணப்படும் கல்வெட்டு கி.பி. 1677- இல் குற்றாலநாதர் கோயிலுக்கு இறை வரியின்றி நிலம் வழங்கப்பட்ட செய்தியைக் கொண்டுள்ளது.

வடகரை ஆதிக்கம் சொக்கம்பட்டிக் குறுநில மன்னர் இக் கோயி லுக்குச் செய்த திருப்பணிகளைக் குறவஞ்சி மூலம் உணரலாம்.[130] 14-ஆம் நூற்றாண்டில் சொக்கம்பட்டி மன்னராக விளங்கிய முதற் பட்டம் செம்புலி சின்னணைஞ்சாத் தேவர் கோயிலைச் சுற்றி மதில் சுவர், குழல்வாய்மொழியம்மன் கோயில் முகப்பு மண்டபம், அன்னச் சத்திரம் ஆகியவற்றை 28000 பொன் செலவில் கட்டியுள்ளார். அம் மன்னனை, "மாலயன் போற்றிய குற்றாலநாதர் வழித்தொண்டு செய் திடக் கச்சைக் கட்டிக் கொண்டவன்"[131] என்று குறவஞ்சி புகழ்ந்து உரைக்கிறது. இம்மன்னனின் அமைச்சர் வைத்தியப்ப விலாசம் என் னும் மண்டபத்தைக் கட்டியுள்ளார். இம்மண்டபம் கட்டுவதற்கு 4300 பொன் செலவு, மண்டபம் கட்டிய அமைச்சர் வைத்தியப்ப பிள்ளை யின் பெயராலேயே அம்மண்டபம் வழங்கி வருகிறது.

இரண்டாம் பட்டம் வீரபாண்டியன் குற்றாலநாதர் கோயிலில் அமைந்துள்ள குழல்வாய்மொழி அம்மன் கோயிலின் உள்சுற்று வீதியை 30251 பொன் செலவில் கட்டியுள்ளான். மூன்றாம் பட்டம் காளத்தியப்ப தேவன், சுவாமி தேர், அம்மன் தேர், விநாயகர், சுப்பிர

மணியர் தேர் ஆகியவற்றைச் செய்து இறைவனுக்குத் தொண்டு செய்துள்ளான்.

ஆறாவது பட்டம் குலசேகர ராஜா திருக்குற்றாலநாதர் கோயில் தட்டொட்டி, பசுப்பிறை முதலானவற்றைக் கட்டினான். ஏழாவது பட்டம் சின்னணைஞ்சாத் தேவன் தீர்த்த மண்டபம், சுற்றுப்பிரகாரம், நடை கற்பாவல் முதலிய திருப்பணிகளைச் செய்துள்ளான். அம்மன்னனின் மனைவி, தன்னுடைய நகைகள் முழுமையும் கொடுத்து வெளிப் பிரகாரம் பூராவும் கல்வரிசை பாவி திருப்பணி செய்திருக்கிறாள். எட்டாவது பட்டம் சிவனடியாத் தேவர் துவஜஸ்தம்பம் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்துள்ளனர்.

கி.பி. 1660 முதல் 1721 வரை வடகரை ஆதிக்கம் சொக்கம் பட்டி குறுநில மன்னராக விளங்கிய பெரியபட்டம் பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவர், சின்னப்பட்டம் (அவருடைய இளவல்) இராஜகோபாலத் தேவர் ஆகிய இருவரும் தொடர்ந்து சித்ரசபையில் பல அரிய திருப்பணிகளைச் செய்துள்ளார்கள். இவர் காலத்தில்தான் சித்ரசபைக்குச் செப்போடு வேயப்பட்டது. மேலச்சபை, கீழ்ச்சபை என்று அழைக்கப்படும் இரு சபைகளிலும் கல்தள வரிசை அமைக்கப் பட்டன. சித்திரங்கள் வரைந்து வர்ணம் தீட்டப்பட்டு, அழகு செய்யப் பட்டன. சபையைச் சுற்றி அழகிய சுற்று வீதி, மதில்சுவர், முன் மண்டபம், நடு மண்டபம், கோபுரம், தெப்பக்குளம் ஆகியவை அமைக்கப் பட்டன. வழிபாடு செய்வதற்காக ஸ்படிக லிங்கம் ஒன்றையும் அமைத் துள்ளனர். இதற்கான செலவு 2000 பொன். இவ்வாறு சித்ர சபையை உருவாக்கிய சின்னணைஞ்சாத் தேவரின் பெருமையைக் குறவஞ்சி ஆசிரியர், நன்னகர் குற்றாலந்தன்னில் எங்கும்,

> நாட்டுமென் னூற்றெண்பத் தேழாண்டு தன்னில்
> பன்னக மாமுனி போற்றத்தமிழ்ப்
> பாண்டிய னார்முதற் சிற்றொடு மேய்ந்த
> தென்னாருஞ் சித்ரசபையை எங்கள்
> சின்னணைஞ்சாத் தேவன் செப்போடு மேய்ந்த [132]

புகழ்ந்துரைத்துள்ளார்.

இவ்விரு மன்னர்களும் ஆடல்வல்லானாகிய நடராசப் பெருமான் திருநடனம் ஆடிய சித்ரசபைக்கே முதலிடம் தந்து திருப்பணி செய்துள் ளனர். அங்கு தனியாக வழிபாடு செய்ய ஸ்படிகலிங்கமும் வழங்கி யுள்ளனர். சுவாமி, அம்மன், விநாயகர், முருகன் ஆகிய தெய்வங் களுக்குத் திருத்தேர் ஆகியவற்றை மூன்றாவது பட்டம் காளத்தியப்ப

தேவர் வழங்கிய செய்தி முன்னால் கூறப்பட்டது. நடராசப் பெருமானுக்கு மட்டும் தேர் இல்லாத குறையைப் போக்கத் தனித்தேர் செய்யப்பட்டுள்ளது. அத்தேரும், ஏக சிம்மாசனம் என்ற பெயரில் நடராசருக்கென்று அமைந்துள்ள தனி வெள்ளிச்சப்பரமும் இவர்கள் காலத்தில்தான் உருவாக்கியிருக்க வேண்டும். நடராசரின் திருத்தேரும் வெள்ளிச்சப்பரமும் கோயிலில் காணப்படும் பிற தேர், சப்பரம் ஆகியவற்றைவிடப் பெரியதாகவும், வேலைப்பாடு மிகுந்ததாகவும் காணப்படுகின்றன.

இவ்விரு மன்னர்களும் திருக்கோயிலினுள் கொலுமண்டபம், திரிகூட மண்டபம் ஆகிய மண்டபங்களைக் கட்டியுள்ளனர். கோயிலுக்கு வெளியே தேர் மண்டபம், பரமானந்தத் தோப்பு, குறிஞ்சிப்படித்துறை ஆகிய அனைத்தும் இம்மன்னர்கள் காலத்தில் தான் உருவாக்கப்பட்டன. இவர்களிருவரின் திருப்பணியைப் பாராட்டி, இவர்கள் இருவருடைய உருவச்சிலைகளை வழிபடும் கோலத்தில், கொடி மரத்தின் பக்கத்திலுள்ள தூண்களில் அமைத்துள்ளனர்.

இலஞ்சியைச் சார்ந்த வள்ளல் பிச்சைப் பிள்ளை என்பவர் இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பினை 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்றுள்ளார். அவர் காலத்தில்தான் கோயிலில் பல புதிய நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பூசைக்கான வெள்ளிச் சாமான்கள் செய்யப்பட்டன. புகழ்பெற்ற வேலைப்பாடமைந்த தந்தப் பல்லக்கு இவருடைய காலத்தில்தான் செய்யப்பட்டது. சுவாமி, அம்மன் திருவீதி உலா வருவதற்கு ஏக சிம்மாசனம் என்ற பெயரில் வெள்ளிச் சப்பரங்கள், வெள்ளி ரிஷப வாகனங்கள் அனைத்தும் செய்யப்பட்டன.

கி.பி. 1891-இல் பெருமழை காரணமாக அருவியில் தண்ணீர் வரத்து அதிகமான காரணத்தினால் அருகிலிருந்த காசிலிங்க சுவாமி கோயில், செண்பக விநாயகர் கோயில் ஆகிய இரண்டும் அதிக அளவில் சேதமடைந்துவிட்டன. வைத்தியப்ப விலாச மண்டம், அருவிக்கரைப் பாலம், கோயிலின் தெற்குப் பகுதியிலிருந்த பல மண்டபங்கள் சேதமடைந்தன. அன்றைய நிர்வாகத்தினர் பெரும் பொருட்செலவு செய்து பழுதுபட்ட மண்டபங்களைப் புதுப்பித்துள்ளனர். செண்பக விநாயகர் கோயிலைப் புதிதாகக் கட்டி நல்ல உயரத்தில் மேடை அமைத்து, விநாயகரை பிரதிஷ்டை செய்து கட்டியுள்ளனர். காசிலிங்க சுவாமி கோயிலுக்கு என்றும் வெள்ள அபாயம் ஏற்பட வழி உண்டு என்பதினால் அங்கு மட்டும் திருப்பணி செய்யப்படவில்லை. அங்கிருந்த சிவலிங்கம், அம்மையாருடன் சுவாமி கோயிலுள் முதற்சுற்று வீதி வாயு மூலையில், சுப்பிரமணியார் கோயில் முன், பிரதிஷ்டை செய்து வழிபடுகிறார்கள்.[133]

நகரத்தார் இனத்தைச் சார்ந்த தேவக்கோட்டை வி.கரு.சித. சோமசுந்தரம் செட்டியார் அவருடைய குமாரர் காசி விஸ்வநாதன் செட்டியார் ஆகிய இருவரும் 1925-ஆம் ஆண்டில் பல அரிய திருப்பணிகளைச் செய்ய முன்வந்தனர். திருப்பணிக்காகும் செலவின் ஒரு பகுதியாக ஆண்டுக்கு 7,000,- வீதம் 7 ஆண்டுகள் கோயில் நிர்வாகத்தினர் கொடுத்துள்ளனர். எஞ்சிய செலவினைத் தங்கள் சொந்தப் பணத்தில் ஈடுகட்டியுள்ளார்கள். இவர்களுடைய திருப்பணி முழுமையும் இன்றுள்ள குழல்வாய்மொழி அம்மன் கோயிலைக் கட்டுவதாகவே இருந்தது. குழல்வாய்மொழி அம்மன் கோயில் பளிங்குபோல் இழைக்கப்பட்டக் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. தூணின் மேல்பகுதி தாமரை இதழ்களாகக் கட்டப்பட்டுள்ளன. அத்தாமரை இதழ்களின் கூர் நுனிகூட நுட்ப வேலைப் பாடுகளுடன் அமைந்துள்ளது. அம்பாளின் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் மிக உயரத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் ஆகிய இரண்டையும் சுற்றிப் பித்தளைக் கம்பிகளால் வேலி அமைத்துள்ளனர். குழல்வாய்மொழியம்மன் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றைச் சுற்றி அழகிய தள வரிசையுடன் கூடிய தனிச் சுற்று வீதியும அமைத்தனர். அச்சுற்று வீதியில் கன்னி மூலையில் சிவலிங்கமும், வாயு மூலையில் துர்க்கையின் சன்னதியையும் முன் மண்டபத்தில் இறைவன் இறைவி பள்ளிகொள்ளும் மாடமும் (பள்ளியறை) அதற்கு எதிரில் பெரிய நிலைக்கண்ணாடியும் அமைத்தனர். பள்ளியறைக் கதவின் ஒவ்வொரு தட்டிலும் சிங்கமும், மணியும் அமைந்துள்ளன. இவையனைத்தும் கர்ப்பக் கிரகத்திற்கு இணையாக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தனிச் சுற்று வீதி ஒரே நேரத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் நின்று வழிபடுவதற்கு ஏற்ற முறையில் பெரிதாகவும், நவீன முறைப்படி உயரமாகவும் பெரிய சாளரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. உட்கதவுகள், பள்ளியறைக் கதவுகள், சப்பர மஞ்சம் முதலியன அருமையான வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளித் தகடுகளால் பொதியப்பட்டுள்ளன.

**குழல்வாய்மொழியம்மன் கோவில்**

**திருப்பணிக்கான சாசனம்** உ

சிவமயம்

ஸ்ரீ குழல்வாய் மொழி

அம்பாள் கோவில் திருப்பணி

1100 ரூ ரத்தாக்ஷி இ௨ மீ 142

தேவக்கோட்டை

வி. கரு. சித
சோம சுந்தரஞ் செட்டியார்
அவர்களால்
திருப்பணி பூர்த்தி செய்து
1108 ளு ஸ்ரீமுக ௵ ஆனி மீ 192
ஆதிற வாரம் சித்ரை நக்ஷத்திரம்
உதையாதி நாழிகை எ இருப மேல்
ஸிம்ம லக்னத்தில்
மகா கும்பாபிஷேகம்
செய்திருக்கிறது
ஷை கோவில் திருப்பணிக்கும்
அம்மன் சன்னிதிக் கதவுகளும்
வெள்ளியினால்
செய்து வைத்திருப்பதற்கும்
ஷை வி. கரு. சித. அவர்களால்
நாலு பங்கு பணமும்
ஷை யூரி அரு. பிச. அரு. அரு
அருணாசலம் செட்டியார்
அவர்களால் ஒரு பங்கு பணமும்
கொடுத்திருக்கிறது.

குழல்வாய் மொழியம்மன் கோயில் திருப்பணி நடைபெறும் பொழுது கோயில் முழுமையும் கல்தள வரிசை அமைக்கப்பட்டது. திரிகூட மண்டபத்திலும் புதிய கல்தள வரிசை அமைக்கப்பட்டது. திருப்பணி செய்ய முன்வந்த செட்டியாரின் இல்லத்தரசியார் திருமதி இலக்குமி ஆச்சியார் திருக்குற்றாலநாதருக்கும் குழல்வாய் மொழியம்மனுக்கும் வெள்ளியால் நிலையங்கி, திருக்குவளை, பீடம், பிரபை போன்றவைகளைச் செய்து திருப்பணி செய்தார்கள்.

கோயில் நிர்வாகத்தினர் கோயில் முழுமையும் மின்விளக்கு அமைத்தனர். அதனைத் தொடர்ந்து 1932-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்தனர்.

திருப்பூர் கே. பெருமாள் செட்டியார் ரூ. 1,500,- கொடுக்க, கோயில் நிர்வாகத்தினர் பசுப்பிரை கட்டியுள்ளனர். கோயிலின் வெளியே ஈசானத் திக்கில் செண்பகப் பூங்கா என்ற பெயரில் சிறிய பூங்கா

அமைத்தனர். கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள கோபுரத்திலுள்ள கலசங்களும் முன் கோபுரத்திலுள்ள கலசங்களும் புதுப்பிக்கப்பட்டன. இவ்விரு கோபுரங்களும் திருத்தியமைக்கப்பட்டுப் புதிய வர்ணம் பூசப்பட்டன.

திருக்குற்றாலப் பதிகம், குறும்பலாப் பதிகம் , திருவங்கமாலை ஆகிய மூன்றையும் சலவைக்கல்லில் எழுதி அம்மன் கோயில் தெற்குச் சுவரில் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீகாசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமியவர்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அம்மூன்றையும் செப்பேடுகளிலும் பதித்துக் கொடுத்துள்ளார்கள்.

சிவபுராணம், திருவெம்பாவை ஆகியவை எழுதிய செப்பேடுகளையும் கோயிலுக்கு வழங்கினர். இச்செப்பேடுகள் இன்றும் கோயிலில் உள்ளன.

பராசக்திக் கோயில் என்னும் தரணிபீடத்திலும் பல திருப்பணிகள் நடந்து உள்ளன. சன்னதி முழுமையும் சலவைக் கற்களால் தளம் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் முழுமையும் அழகிய வண்ணம் பூசப்பட்டு, பராசத்தியின புதிய திருவுருவப்படமும் அமைக்கப்பட்டுள்ளது. சன்னதி முன்னர் ஓம்சக்தி என்னும் மின்விளக்கு தர்மபுர ஆதீன கர்த்தரால் அமைக்கப்பட்டுள்ளது.

கூத்தர் கோயில், ஆவரணப் பிள்ளையார் கோயில், பதினெட்டாம் படி கருப்பன் கோயில், சம்பந்த விநாயகர் கோயில் செண்பகா தேவி அம்மன் கோயில் ஆகியவை புதுப்பிக்கப்பட்டன. தேரடியில் ஒரு சிறிய விநாயகர் கோயில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

நாயக்கர் ஆட்சிக் காலத்திலும், தொடர்ந்து சிறிய பாண்டிய அரசர்கள், சிற்றரசர்கள் ஆகியோர்கள் கோயில் சன்னதி திருப்பணி செய்துமட்டுமன்றி, பல புதிய சிறிய சன்னதிகளையும் அமைத்துள்ளனர். பின்னர், கோயிலின் ஒரு குறிப்பிட்ட பகுதி, அல்லது சன்னதி என்று திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

சித்ரசபை, குழல் வாய்மொழி அம்மன் கோயில் போன்றவை கட்டப்பட்டுள்ளன. தேர்களும் வாகனங்களும், பூசைக்குரிய சாதனங்களும் செய்யப்பட்டுள்ளன. வழிபாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## திருக்குற்றால நாதசுவாமி கோவில் – இன்று



## திருக்குற்றால நாதசுவாமி கோவில் – இன்று

1. குற்றாலநாத
2. நடராசர்
3. உற்சவர்
4. அதிகார நந்தி
5. சூரியன்
6. தெட்சிணாமூர்த்தி
7. கும்பமுனி
8. பிரம்மா
9. மஹாலக்ஷ்மி
10. மஹேஸ்வரி
11. கௌமாரி
12. வைஷ்ணவி
13. வராஹி
14. இந்திராணி
15. சாமுண்டி
16. மஹாலக்க்ஷ்மி
17. ஐயனார்.
18. ப்ரஹாமி
19. நாராயணர்
20. மஹாவிஷ்ணு
21. நரசிம்மமூர்த்தி
22. கன்னிவிநாயகர்
23. பஞ்சமூர்த்திகள்
24. சந்திரன்
25. வான்மீகநாதர்
26. சம்புகேஸ்வரர்
27. அண்ணாமலை நாதா.
28. காளத்தியப்பர்
29. ஸ்ரீமூலநாதர்
30. ராமலிங்கம்
31. சுப்பிரமணியர்
32. சனீஸ்வரர்
33. சண்டேஸ்வரர்
34. துவாரபாலகர்
35. துவாரபாலகர்
36. நந்தி
37. கொடிமரம்
38. பலிபீடம்
39. நமஸ்காரமண்டபம்
40. மடப்பள்ளி
41. குழல்வாய்மொழியம்மன்
42. கைலாசநாதர்
43. துர்க்கை
44. பள்ளியறை
45. குறும்பலாநாதர்
46. ஆதிகுறும்பலா
47. அறுபத்து மூவர்
48. சைலப்பர்
49. நன்னகரபெருமாள்
50. வல்லப கணபதி
51. பாவநாசர்
52. நெல்லையப்பர்
53. மணக்கோலநாதர்
54. நாறும்பூநாதர்
55. சங்கரலிங்கம்
56. பால்வண்ணநாதர்
57. சொக்கலிங்கம்
58. மீனாக்ஷி
59. ஐயனார்
60. மதுநாகேஸ்வரர்
61. அறம்வளர்த்த நாயகி
62. அகஸ்தியர்
63. வாசுகி
64. சோமலிங்கம்
65. சகஸ்கரலிங்கம்
66. மஹாலிங்கம்
67. வெஞ்சன அறை
68. பராசக்தி
69. காசிவிஸ்வநாதர்
70. சாஸ்தா
71. சிவாலய முனிவர்
72. பைரவர்
73. யாகசாலை
74. சபாபதி மண்டபம்
75. நவக்கிரகம்
76. அபிஷேக மண்டபம்
77. ஆறுமுக நயினார்
78. அம்பல விநாயகர்
79. திருவாதிரை மண்டபம்
80. வசந்த மண்டபம்
81. செண்பக விநாயகர்

## 6. புராண காலச் செய்திகளில் திருக்குற்றாலநாதர் கோயில்

வரலாற்றாசிரியர்கள் திட்டவட்டமாக வரையறை செய்யாத காலத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் செய்திகள் பிற்காலத்தில் எழுந்த புராணங்களில் காணப்படுகின்றன. எனவே, இக்காலத்தைப் பற்றிய வரலாற்று மூலங்கள் கிடையா.

சிவபெருமான் பார்வதி தேவியைத் திருமணம் செய்தபொழுது, உலகைச் சமநிலைக்குக் கொண்டுவர அகத்திய முனிவரைத் திருக் கைலாயத்திலிருந்து தென்திசை நோக்கி அனுப்பியதாகப் புராணச் செய்திகள் கூறுகின்றன. அந்த அகத்தியர் திருக்குற்றாலத்தில் தங்கி இறைவனை வழிபட்டுள்ளார்.[134] தக்கன் செய்த வேள்விகளின் பொழுது சிவபெருமானைப் பழித்து சிவத்துரோகம் செய்த தேவர்கள் மீண்டும் நற்கதி அடைந்தது இங்கு வழிபட்டமையால்தான் என்றும் தலபுராணம் கூறுகின்றது.[135]

பாரதக் கதையில் வில்லுக்கோர் விசையன் என்று போற்றப் படுகின்ற அர்ச்சுனன் இத்தலத்து இறைவனை வணங்கி, இறையருளால் ஐந்து தரிசனமும், இழந்த சம்புடமும் பெற்றதாகத் தல புராணத் தாலும்,[136] கோயிலில் காணப்படும் 'ஐந்து தரிசனக் காட்சி சன்னதி' வழியாகவும் அறிய முடிகிறது.

கஜேந்திர மோட்சம் என்று பெருமையுடன் புராணங்கள் பகர்ந் துள்ள செய்தியும் இங்குதான் நடந்ததாகக் கூறப்படுகிறது. திருக் கயிலாயத்திலிருந்து தென்திசை நோக்கி வரும் வழியில் அகத்திய முனிவரை இந்திரத் தூய்மன் என்னும் சந்திர குலத்தரசன் எதிர்சென்று வணங்கவில்லை. அதனால் கோபமடைந்த அகத்தியர், அவ்வரசனை யானையாக மாறுமாறு சாபமிடுகிறார். அந்த யானை திரிகூடமலை யைச் சுற்றி வந்து தென் கீழ்த்திசையில் ஒரு சுனையில் நீர் அருந்தும் பொழுது ஒரு முதலையால் பற்றி இழுக்கப்படுகிறது. 'ஆதி மூலமே' என்று ஓலமிட்ட அந்த யானைக்கு திருமால் அருள்புரிந்தது, சக்கிரா யுதத்தால் முதலையை அழித்தது இங்குதான்.[137]

கங்காதேவி சிவபிரானை மதியாது பூமிக்கு வந்தபொழுது அவள் ஆணவத்தை அடக்க இறைவன் தன் சடையில் அவளைத் தாங்கினான்; அடங்கிய கங்கையும் இறைவனை வணங்க, சிவனது ஆணையால் திரிகூட மலையின் உச்சியிலுள்ள சிவலிங்கத்தைத் தேனால் பூசித் தாள். இறைவன் அருளால் நற்கதியும் பெற்றாள். கங்கை தேனினால் பூசித்தமையால் இத்தலத்தின் தீர்த்தம் சிவமது கங்கையாயிற்று.[138] இவ்வருவியே இன்று தேனருவி என்று அழைக்கப்படுகிறது.

இறைவனின் திருநடனக் காட்சியைக் காண வாசுகி என்னும் பாம்புகளின் அரசன், இந்திரன் முதலிய தேவர்களும், அகத்தியர், பதஞ்சலி போன்ற முனிவர்களும் குற்றாலத்தில் குழுமியிருந்தனர்.[139]

சிவகணங்களுள் ஒன்றாகிய குசேலன், அப்பதவியைப் பெற்ற தற்கு இத்தலத்துறையும் இறைவனே காரணமாவான் என்றும் புராணம் புகல்கிறது.[140]

அகத்தியருடன் வாசுகி, கவுற்சனர், புஷ்பகந்தர் முதலான முனிவர்களும் திருக்குற்றாலநாதரைப் பூசித்ததாக சிவ ஷேத்திர மான்மிய சங்கிரகம் கூறுகிறது.[141]

வேதங்கள் அனைத்தும் என்றுமழியாமல் நின்று இறைவனை வழிபட விரும்பிக் குற்றாலத்திலுள்ள செண்பகவனத்தில் பலா மரங் களாகி தவமியற்றுகின்றன. அவைகளின் தவத்தினைப் போற்றி இறைவனும் அவை விரும்பிய வரமருளினார். நான்கு வேதங்களும் ஒன்றாகக் கூடி ஒரு பலா மரமாகியது. அதன் மூலமாகிய பிரணவம் ஓங்கார வேராகவும் கருமஞானக் காண்டங்கள் என்னும் பகுப்பு பெருங் கிளைகளாகவும், சுருதிகள் எல்லாம் பருத்த கிளைகளாகவும், சாகை கள் பசிய இலைகளாகவும், உபநிடதம் தளிராகவும் மாறியது. அம் மரமே குறும்பலா என்னும் தலவிருட்சமாகியது.[142] அவ்வாறு வளர்ந்து வரும் பலா மரத்தின் காய், கனி, சுளை அனைத்தும் சிவ லிங்கங் களாகவே காணப்பட்டன.[143]

இன்றும் கூட அம்மரத்தின் காய்கள் சிவலிங்கங்களாகக் காணப் படுகின்றன. இவ்வாறு வேதங்களின் மறுவடிவமாகக் குறும்பலா காணப்படுவதால் சம்பந்தரும், வேறு எந்தத் தலத்திலும் பாடாத தல விருட்சப் பதிகத்தினைப் (குறும்பலாப் பதிகம்) பாடியுள்ளார்.

வரலாற்று அறிஞரால் வரையறை செய்யப்படாத புராண காலங் களில் திருக்குற்றாலநாதரின் பெருமையை மக்கள் உணர்ந்து வழி பட்டனர் என, புராணச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

## நிறைவுரை

இயற்கையெழிலும், அழகிய அருவிகளும் சூழ்ந்திருக்கும் குற்றால நகரில் அமைந்துள்ள திருக்குற்றாலநாதர் கோயில் ஒவ் வொரு காலக்கட்டத்திலும் பல மாறுதல்களுக்குட்பட்டுள்ளது. சங்க காலத்தில் இலக்கியங்களால் புகழ்பெற்ற குற்றால நகரில், பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் பாடப்பட்ட கோயில்கள் இருந்தன.

சோழர்கள் காலத்தில் முதல் சுற்று வீதியுடன் கோயில் இருந்தது. தொடர்ந்து, பாண்டியர்களால் மூலவர், கர்ப்பக்கிரகம், சிகரம், அர்த்த மண்டபம், இரண்டாவத சுற்று வீதி அமைக்கப்பட்டது. நாயக்க மன்னர்கள் காலத்தில் வாழ்ந்த சிற்றரசர்களால் சித்ரசபை முதலியன அமைக்கப்பட்டன. தேர்களும் வாகனங்களும் செய்யப்பட்டன. பிற் காலத்தில் இறையன்பர் களால் குழல்வாய்மொழியம்மன் கோயில் தனியாகக் கட்டப்பட்டுள்ளது. கோயில் முழுமையும் திருப்பணி செய்து குடமுழுக்கும் செய்யப் பட்டுள்ளது.

கோயில் திருப்பணியைப் போலவே இறை வழிபாட்டிலும், திரு மறை ஓதுவதிலும் ஆர்வம் செலுத்தியுள்ளனர். திருமுறைகளைச் செப் பேடுகளிலும் பளிங்குக் கற்களிலும் பதித்து வைத்து வழிபாட்டிற்குத் துணை செய்தனர்.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் - 5.
2. அகநானூறு, பா.181:16-19, கலித்தொகை, பா.38:1-5.
3. பரிபாடல், பா.3:12-14.
4. மதுரைக்காஞ்சி - 181.
5. பதிற்றுப்பத்து, க.வா.9, கலித்தொகை பா.103:5.
6. அகநானூறு, க.வா.1:8-10.
7. திருமுருகாற்றுப்படை, வ.153.
8. அகநானூறு, க.வா.1:14-15.
9. பதிற்றுப்பத்து, க.வா.11,12.
10. மதுரைக்காஞ்சி, வ.453-55.
11. திருமுருகாற்றுப்படை, வ.154, புறநானூறு, பா.5:1-5.
12. கலித்தொகை, க.வா. 1:8-10.
13. மேற்படி, 5-7.
14. பதிற்றுப்பத்து, க.வா. 3-4.
15. கலித்தொகை, க.வா. 1:11-13.
16. திருமுருகாற்றுப்படை, வ.153.
17. Nagaswami, R., Arts and Culture of Tamilnadu, p.7.
18. அகநானூறு, பா.67:8-10, 113:8-11, புறநானூறு, பா.221:11-3.
19. புறநானூறு, பா.212:3-6, 260:25-28, 264:1-4, 265:1-5, 306:3-4.
20. வெள்ளைவாரணர், க., கோயில், 'பெரும்பற்றப்புலியூர் திருமூலட்டானம்', ப.388.

21. திருக்குறள், பா.50.
22. Jagadisa Ayyar, P.V., South Indian Shrines, p.12.
22அ. இராமசாமி, துளசி., நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.
23. Venkataramanayya, N. Dr., An Essay on the Origin of the South Indian Temple, p.3.
24. Ibid., p.5.
25. 1) Ibid., p.51.
    2) இராமசாமி, துளசி., நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.
26. Ramachandra Rao, S.K., The Indian Temple-25 Meaning, p.15.
27. பத்மாவதி, ஆ., 'பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈச்சுவரமுடையார் கோயில்', ப.372.
28. இராமசாமி, துளசி., நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.216.
29. இராசமாணிக்கம் பிள்ளை, எம்., 'நடுகல்லிலிருந்தா தெய்வமும் கோயிலும்', டாக்டர் சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர், 1961, ப.272.
30. Temples of South Inida, p.3.
31. புறநானூறு, பா.6:18.
32. பெரும்பாணாற்றுப்படை, வ.405.
33. அகநானூறு, பா.167.
34. பி.ஸ்ரீ., தில்லைத் திருநடனம், ப.25.
35. சதாசிவ பண்டாரத்தார், கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள், ப.99.
36. சிலப்பதிகாரம், இந்திரவிழவு ஊர் எடுத்த காதை, வ.169-172.
37. மேற்படி, ஊர்காண் காதை, வ.6-10.
38. இராசமாணிக்கனார், மா., பல்லவர் வரலாறு, பக்.309.
39. மேற்படி, பக்.309, 310.
40. Jagadisa Ayyar, A.V., South Indian Shrines, p.11.
41. Ramasamy, N.S., Home of God, p.4.
42. சதாசிவ பண்டாரத்தார், தி.வை., கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள், ப.101.
43. இராசமாணிக்கம், தி., தமிழகக் குடைவரைக் கோயில்கள், ப.7.
44. Nilakanta Sastri, K.A., A History of South India, p.461.
45. சதாசிவ பண்டாரத்தார், தி.வை., கலிவெட்டுக்கள் கூறும் உண்மைகள், ப.101.

46. Nilakanta Sastri, K.A., A History of South India, p.462.
47. S.I.I., Vol.I, No.21.
48. S.I.I., Vol.I, No.27.
49. ARR 198 of 1941-42.
50. ARR No.454 of 1917.
51. South Indian Temples, p.3.
52. திருஞானசம்பந்தர், தேவாரம், திருமுறை-1, பதிகம்-99, பா.1, வ.1-2.
53. திரிகூட ராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், திரிகூடமலைச் சருக்கம், பா.33.
54. மீனாட்சியம்மைக் குறம், கன்னி-13, வ.1.
55. முக்கூடற்பள்ளு, பா.51, வரி.13-16.
56. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, கன்னி -54, பா.1, வ.4.
57. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், வடவருவிச் சருக்கம், பா.6-வ.3,4.
58. திருஞானசம்பந்தர், தேவாரம், பதிகம்-99, பா.8-வ.1,2.
59. மீனாட்சி அம்மைக் குறம், கன்னி-15, வ.4.
60. Caldwell, R., Bishop, A History of Tinnevely, p.8.
61. Ibid. p.11.
62. Stuward, Short History of Tamilnadu, p.76.
63. திருஞானசம்பந்தர், தேவாரம், பதிகம்-99, பா.8-வ.2.
64. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலத் தல வரலாறு, பக்.12-13.
65. இராதாகிருஷ்ணன், ம., தென்னாட்டுக் கோயில்கள், ப.222.
66. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், வடவருவி சருக்கம், பா.18.
67. மேற்படி, குறும்பலா சருக்கம், பா.19.
68. சேதுப்பிள்ளை, ரா,பி., தமிழக ஊரும் பேரும், ப.293.
69. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், தலமகிமைச் சருக்கம், பா.51.
70. பாஸ்கரத் தொண்டைமான், தொ.மு., வேங்கடமுதல் குமரிவரை, ப.19.
71. முருகவேள் (தொ.ஆ.), பாண்டி நாட்டுத் திருத்தலங்கள், ப.73.
72. சுந்தரர் தேவாரம், தேவாரம், திருத்துருத்தி, பதிகம் எண்.74.
73. ARE No.486 of 1917.
74. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், தலமகிமைச் சருக்கம், பா.30,32.

75. புறநானூறு, பா.2.
76. சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப் பாடல், வ.14.
77. மதுரைக்காஞ்சி, வ.40-42.
78. சிலப்பதிகாரம், புறஞ்சேரி இறுத்த காதை, வ.129-130.
79. புறநானூறு, பா.132.
80. Kamala Ganesh, Vellala-A Socio Historical Perspective, pp.55-58.
81. குருமூர்த்தி, சா., தொல்பொருள் ஆய்வும், தமிழர் பண்பாடும், ப.90.
82. பரமசிவானந்தம், அ.மு., தமிழக வரலாறு, ப.187.
83. சேக்கிழார், பெரியபுராணம், பா.2784.
84. திருநாவுக்கரசர், தேவாரம், திருஅங்கமாலை, பா 10.
85. மாணிக்கவாசகர், திருவாசகம், திருப்புலம்பல், சிவானந்த முதிர்ச்சி.
86. சேக்கிழார், பெரியபுராணம், பா.2784.
87. கணபதிராமன், ச., பொருநை நாடு, ப.109.
88. மாணிக்கவாசகர், திருக்கோவையார், பா.17.
89. கபிலர், சிவபெருமான் திருவந்தாதி, பா.80.
90. மேற்படி, பா.84.
91. மேற்படி, பா.87.
92. பரமசிவானந்தம், அ.மு., தமிழக வரலாறு, ப.259.
93. ARE No.454 of 1917.
94. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.144.
95. ARE No.446, 448 of 1917.
96. ARE No.449 of 1917.
97. ARE No. 480 of 1917.
98. ARE No.416, 417,418,440 of 1917.
99. ARE No.486 of 1917.
100. ARE No.412,413,414, of 1917.
101. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, கன்னி -56.
102. ARE No.409 of 1917.
103. ARE No.42 of 1917.
104. ARE No.424 of 1917.
105. ARE No.429 of 1917.
106. ARE No.431 of 1917.
107. ARE No.428 of 1917.
108. ARE No.432 of 1917.
109. ARE No.433 of 1917.

110. ARE No.437 of 1917.
111. ARE No.452 of 1917.
112. ARE No.434 of 1917.
113. ARE No.435 of 1917.
114. ARE No.426 of 1917.
115. ARE No.425 of 1917.
116. ARE No.463 of 1917.
117. ARE No.450 of 1917.
118. ARE No.481 of 1917.
119. ARE No.475 of 1917.
120. ARE No.469 of 1917.
121. ARE No.483 of 1917.
122. ARE No.408 of 1917.
123. Nilakanta Sastri, K.A., The Pandiyan Kingdom, p.216.
124. Ibid., p.216.
125. ARE No.609 of 1917.
126. Nilankanta Sastri, K.A., The Pandiyan Kingdom, p.222.
127. ARE No.404 of 1917.
128. ARE No.485 of 1917.
129. ARE No.482 of 1917.
130. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பா.62.
131. மேற்படி, பா.93.
132. மேற்படி, பா.54-2.
133. சிதம்பரம், டி., நிர்வாக அதிகாரி, நேர்காணல், நாள்: 16.5. 86.
134. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், குறுமுனி வழிபடு சருக்கம், பா.2.
135. மேற்படி, தேவர்கள் சிவத்துரோகந் தீர்த்த சருக்கம், பா.56.
136. மேற்படி, திரிகூட மலைச் சருக்கம், ப.51.
137. மேற்படி, தவமகிமைச் சருக்கம், பா.67.
138. மேற்படி, சிவமதுகங்கைச் சருக்கம், பா.18.
139. மேற்படி, திருநடனச் சருக்கம், பா.23.
140. மேற்படி, புட்பகந்தச் சருக்கம், பா.52.
141. சின்னத்தம்பி (தொ.ஆ.), சிவ க்ஷேத்திர மான்மிய சங்கிரகம், ப.89.
142. மேற்படி, குறும்பலாச் சருக்கம், பா.19.
143. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, க.வா.3.

# திருக்குற்றாலநாதர் கோயில் இலக்கியங்கள்

திருக்குற்றாலநாதர் கோயிலின் பெருமை, வரலாறு, அழகு, வழிபாடு ஆகியவற்றின் அடிப்படையில் பல இலக்கியங்கள் தமிழ் மொழியில் உருவாகியுள்ள. ஆசிரியர்களின் கற்பனையில் உருவான அந்த இலக்கியங்களில், வரலாற்று உண்மைகளும் காணப்படு கின்றன. திருக்குற்றாலநகரின் இயற்கை எழில் பல இலக்கியக் கர்த்தாக்களின் எண்ணத்தில் நீங்கா இடம் பெற்ற காரணத்தினால், தங்களுடைய படைப்புக்களில் குற்றாலநகரின் வளமையையும், கோயிலின் பெருமையையும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

சங்க இலக்கியங்களிலும், சங்கம் மருவிய கால இலக்கியங் களிலும் குற்றாலநாதர் கோயில் அல்லது குற்றாலநாதர் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை. பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கிய மாகிய தேவாரப் பாடல்களில் மட்டுமே குற்றாலநகரம், இறைவன் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. திருஞான சம்பந்தர் திருக் குற்றாலநாதர் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்து, பாமாலை பாடி யுள்ளார். தேவாரப் பாடல்களில்தான் 'குற்றாலம்' என்ற சொல்லாட்சி முதலில் காணப்படுகிறது. சைவத் திருமுறைகளாகிய தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், சிவபெருமான் திருவந்தாதி, பெரிய புராணம் ஆகியவற்றிலும் குற்றாலத்துறைக் கூத்தன் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் பெரியபுராணம் சோழர் காலத்தில் எழுந்த இலக்கியமாகும். நாயக்கர் காலத்தில் பட்டினத் தடிகள், அருணகிரிநாதர் போன்ற முனிவர்களும், குற்றாலத்து இறை வனைப் பற்றிப் பாடியுள்ளனர். திரிகூடராசப்பக் கவிராயர் குற்றால நாதர் குழல்வாய்மொழி அம்மையின் பெருமைகளின் அடிப்படையில் பதினான்கு சிற்றிலக்கியங்கள் இயற்றியுள்ளார். குற்றாலக்கோவை, அந்தாதி போன்ற இலக்கியங்களும் பக்தர்களால் படைக்கப்பட்டன.

19-ஆம் நூற்றாண்டில் கோயில் வரலாற்றை அனைவரும் அறிந்து கொள்வதற்காக வழிகாட்டி நூல்கள் பலவற்றைக் கோயில் நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ளனர். முதலில், குற்றாலநாதரையே தலைவனாகக் கொண்டு, அவருடைய பெருமைகளை உலகறியச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு எழுந்த இலக்கியங்களைக் காணலாம்.

## 1. திருக்குற்றாலநாதர் கோயிலின் இலக்கியங்கள்

1.1. திருக்குற்றாலநாதர் கோயிலுக்கு வந்து, வழிபாடு செய்து, தேவாரம் பாடிச் சென்றவர் திருஞானசம்பந்தர். தமிழ் இலக்கியங்களில் குற்றாலநாதர் கோயில் பற்றி கிடைக்கின்ற முதல் செய்தியும் அதுதான். குற்றாலநகரில் அமைந்துள்ள கூத்தரைப்பற்றியும், குறும்பலா ஈசரைப் பற்றியும், தனித்தனிப் பதிகங்கள் பாடியுள்ளார்.

ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த திருஞானசம்பந்தர், தமிழ் நாட்டிலுள்ள சிவன் கோயில்கள் பலவற்றிற்கும் சென்று பதிகங்கள் பாடி வழிபாடு செய்துள்ளார். இவருடைய தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளில், முதல் மூன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர், கோயில்களைச் சூழ்ந்திருக்கும் இயற்கையழகுகளைப் பாடுவதில் வல்லவர். இவருடைய பதிகங்களில் எட்டாம் பாடலில் இராவணன் கயிலை மலையைத் தூக்கி எடுக்க முயன்று துன்பப்பட்ட செய்தியும், அவனோர் சிறந்த சிவபக்தன் என்ற செய்தியும் இடம்பெற்றிருக்கும். ஒன்பதாவது பாடலில் பிரமனும் திருமாலும் தேடிக் காண முடியாத பெருமையுடையவன் சிவபெருமான் என்ற செய்தி காணப்படும். பத்தாம் பாடலில் சைன பௌத்தத் துறவிகளின் போலி வாழ்க்கையைப் பற்றிய செய்திகள் காணப்படும். பதினொன்றாம் பாடலில் தன்னுடைய பெயரைக் குறிப்பிட்டு அப்பதிகம் அவரால் பாடப்பெற்றது என்ற உண்மை பெருமிதத்துடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

### 1.1.அ. திருக்குற்றாலப் பதிகம்

குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ள, இப்பதிகம் 99-வது பதிகமாக முதலாவது திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இப்பதிகம் முழுமையும் குற்றாலத்தின் இயற்கை வளத்தையும், சாரலின் பெருமையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. புதுமையான மலை, முல்லை, சண்பகம், வேங்கை மரங்கள் நிறைந்த வளமான மலை, மா, பலா, வாழையென்னும் முக்கனிகள் நிறைந்த சோலை. பூக்களையும் பொன்னையும் உந்தி அருவி புடைசூழ நுண்துளி வீசும் குற்றாலம் என்று இயற்கைச் சூழலை மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். குரங்குகளும், மயில்களும் நிறைந்த சோலை, குரவம்பாவை பாம்பின்

பல்லைப் போல் அரும்பீன்று மணங்கமழும் சோலை என்று வர்ணிக்கின்றார்.

இத்தகைய இயற்கையெழில் சூழ்ந்த சோலையில் இறைவன் பால், நெய் ஆகியவற்றோடு ஆடலை விரும்பி அமர்ந்துள்ளான், பக்தர்கள் விழா எடுக்கின்றனர்.

இப்பதிகத்தின் எட்டாவது பாடலில், "மூதூரிலங்கை முட்டிய கோனை மிறை செய்த நாதன்" என்று இலங்கை வேந்தனின் செருக்கை இறைவன் அடக்கிய செய்தி காணப்படுகிறது. ஒன்பதாவது பாடலில் "பிரமனோடு மாலறியாத பெருமை" என்று மும்மூர்த்திகளின் முதல்வன் என்ற செய்தி காணப்படுகிறது. பத்தாவது பாடலில்," நின்றுண் சமணுமெடுத்தார்ப்ப" என்று சமணர்களின் போலி வாழ்க்கை சாடப்பட்டு உள்ளது. பதினொன்றாவது பாடலில், குற்றாலத்தில் அமர்ந்துள்ள இறைவனை ஞானசம்பந்தன் பாடிய பாடல் என்ற செய்தியும் காணப்படுகிறது. இப்பதிகத்தில் இயற்கை வருணனை மிக அதிகமாகக் காணப்படுகிறது.

### 1.1. ஆ . குறும்பலாப் பதிகம்

இரண்டாம் திருமுறையில் 71-வது பதிகமாக குறும்பலாப் பதிகம் இடம்பெற்றுள்ளது. காந்தார ராகத்தில் இசைக்கப்பட்டுள்ளது. குற்றாலநாதர் கோயிலின் தலவிருட்சமாகிய குறும்பலாவை முன்னிருத்திப் பாடியுள்ளார். தலவிருட்சத்தை முன்னிருத்திப் பாடிய பதிகம் இது ஒன்றேயாகும்.

பதிகத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் இறைவனை விளிப்பது போன்றே, 'குறும்பலாவே' என்று விளிக்கப்பட்டுள்ளது. "குன்றிடஞ்சூழ் தண்சாரல், குறும்பலாவே" என்று 1,3,9, ஆகிய பாடல்களில் குறும்பலா அமைந்துள்ள இடத்தைச் சுட்டியவர், அக் குறும்பலா இடம்பெற்ற சோலையின் அழகினை "கொம்பார் பூஞ்சோலைக் குறும்பலா" என்று 11-வது பாடலில் காட்டியுள்ளார். "புனல் ததும்பும் குறும்பலாவே" என்று 7-வது பாடலில் நீர் வளத்தையும், அம்மரத்தில் விளைந்த கனியை, "தேன் பலிற்றும் குறும்பலாவே" என்று 5-ஆம் பாடலிலும், அக்கனியை நாடிவந்த குரங்கினத்தின் விளையாட்டுக்கள் 2-ஆம் பாடலிலும் விளக்கப்பட்டு உள்ளன. தன்சாரல் (பாடல் 2,3,), நெடுந்தண் சாரல் (4), மல்கு சாரல் (5), பூஞ்சாரல் (6) என்று குற்றால நகரின் சாரலையும், அச்சாரலின் பயனை முழுமையக அனுபவிக்க உதவும் குன்றத்து அருவி (7) யின் பெருமையையும் பாடியுள்ளார்.

இறைவன் மதிசூடி, தேவிபாகமேற்று, கங்கையைத் தலையில் ஏற்று, புலித்தோல் அணிந்து, அரவம் மாலையாக அணிந்து, நெற்றிக் கண்ணுடன், கொன்றை மாலை அணிந்து காணப்படுவதாக இப் பதிகம் கூறுகிறது. காலனுடல் கிழித்த செய்தியும், கங்கையின் புனல் வேகத்தைத் தடுத்துத் தலையில் ஏற்றுக்கொண்ட செய்தியும் இப் பதிகத்தில் இடம்பெற்றுள்ளது. ஞானசம்பந்தரின் வழக்கப்படி எட்டாவது பாடலில் "ஏந்து திணி திண்தோள் இராவணனை மால்வரைக் கீழ் அடரஊன்றி" என்று இராவணனை அடக்கிய செய்தி இடம் பெற்றுள் ளது. ஒன்பதாவது பாடலில், "அரவினையானும் நான் முகனும் காண் பறிய வண்ணல்" என்று இறைவனின் மாலயனும் காணாதப் புண்டரி கத்தின் பெருமை இடம்பெற்றுள்ளது. பதினோராவது பாடலில், "கொம் பார் பூஞ்சோலை குறும்பலா மேனிய கொல்லேற்றண்ணல் நம்பான் அடிபரவும் நான்மறையான் ஞான சம்பந்தன் சொன்ன" என்று இப் பாடல்களை பாடியவர் ஞான சம்பந்தரே என்றும், அவர் குறும்பலா ஈசனின் பக்தன் என்றும் கூறப்பட்டுள்ளது.

## 2. திரிகூடராசப்பக் கவிராயர்

திருக்குற்றாலம் என்றவுடன், "குற்றாலக் குறவஞ்சி" என்ற பெயரே இலக்கியவாதிகள் எண்ணத்தில் தோன்றும். அத்தகைய பெருமையுடைய இலக்கியத்தைப் படைத்தவர் திரிகூடராசப்பக் கவிராயர் எனும் திருக்குற்றாலநாதர் கோயில் சன்னதி பிரபந்த வித்து வான் ஆவார். குறவஞ்சி மட்டுமல்லாது, குற்றாலநாதரின் பெருமையை உலகுக்கு உணர்த்துமுகத்தான் பல இலக்கியங்கள் படைத்துள்ளார்.

### 2.1. திரிகூடராசப்பக் கவிராயர் வரலாறு

திரிகூடராசப்பக் கவிராயர் திருநெல்வேலி மாவட்டம் திருச் சீவரமங்கை (நாங்குனேரி) வட்டம் விசயநாராயணம் என்னும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். 'ராசப்பன்' என்பது விசய நாராயணத்தில் அமைந்துள்ள ஐயனார் (சாஸ்தா) பெயர். குடும்பச் சூழல்கள் காரணமாக 60 மைல்கள் கடந்து மேலகரம் என்னும் சிறிய கிராமத்திற்குத் தன் தாயாருடன் வந்து விட்டார். மேலகரத்தில் சிறிய குடிசையில் தங்கிக்கொண்டு, திருக்குற்றாலநாதர் கோயிலில் இறைத்தொண்டு செய்து வந்தார். திருக்குற்றாலநாதர் ஒருநாள், இறைவனுக்குப் பூமாலை கொண்டுவந்த கவிஞர்முன், முனிவர் வடிவில் வந்து, நாவில் பிரணவ மந்திரத்தை எழுதிப் பாமாலை பாடு மாறு அருளினார் என்ற செய்தி அவருடைய வழி வந்தவர்களிடையே இன்றும் நிலவுகிறது.[1] பூமாலை கொண்டுவந்த சிறுவனாகிய ராசப்பனை, தவறுதலாக கோயிலினுள் வைத்துப் பூட்டிச் சென்று

விட்டதாகவும், இரவு முழுவதும் தனித்திருந்து பயந்து அழுது கொண்டிருந்த சிறுவன்முன் இறைவன் தோன்றி அருள் புரிந்தார் என்றும் கூறுகிறார்கள்.[2] இரண்டு கதைகளிலும் இறைவன் அருளால், கவிராயர் கவி பாடும் ஆற்றலைப் பெற்றார் என்ற செய்தி காணப்படுகிறது.

இறைவன் அருளால் கவி பாடத்தொடங்கிய கவிஞரை 'பைத்தியம்' என்று மக்களும் மன்னரும் கருதினர். அதன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டார் என்று கூறி அதற்குச் சான்றாக "சிறையோ படு வதனிக் கலையே" என்ற திருக்குற்றால மாலை 64,65 வரிகளைக் காட்டுகிறார்.[3] சிறை வாழ்க்கை மட்டுமின்றி மேலும் அற்புதங்களை நடத்திக் காட்டியுள்ளார் கவிஞர். ஒருமுறை, பட்டமரம் ஒன்றை, தன் பாடல் மூலம் உயிர்ப்பித்தார். கை கால்களைப் பிணித்திருந்த இரும்பு விலங்கை, இறைவன் அருளால் பாடி உடைத்து நீக்கினார். கவிஞரின் பாடலுக்கேற்ப நல்ல பாம்பொன்று இசையில் மயங்கிப் படம் விரித்து ஆட, அப்பாம்பின் படத்தில் குத்தியிருந்த முள்ளினை தம் கையால் எடுத்து அப்பாம்பின் துன்பத்தைப் போக்கினார். துன்பம் நீங்கிய பாம்பு, கவிஞருக்கும், கவிஞர் குடும்பத்திற்கும் பாம்பினால் என்றும் தீங்கு வராது என்று அருள்புரிந்தது.[4]

இனி, கவிராயரின் பாடல்களிலிருந்து அவருடைய வாழ்க்கை பற்றிய உண்மையைக் காண்போம். கவிஞரைப் பாராட்டி, மதுரையை ஆண்ட மன்னர் முத்து விசயரங்க சொக்கநாதன் வழங்கிய குறவஞ்சி மேட்டு செப்புப் பட்டயத்தில் 'ராசப்பக் கவிராயர்' என்ற பெயர்தான் காணப்படுகிறது. ராசப்பன் என்பது கவிராயரின் சொந்த ஊரில் அமைந்துள்ள ஐயனாரின் பெயர் என்பதால் கவிஞரின் இயற்பெயர் ராசப்பர் என்று முடிவு செய்யலாம். திருக்குற்றாலத்து வளமையைப் பாடியமையால் 'திரிகூட' என்ற அடைமொழி வந்தது. கவிராயர் என்ற பட்டம் மதுரையை ஆண்ட நாயக்க மன்னரால் வழங்கப்பட்டது எனச் செப்பேடு பகர்வதால், திரிகூடராசப்பக் கவிராயர் என்ற பெயர் வழங்கப்பட்டது.

> முற்று மினிக் கொத்தடியேன் உனக்கு [5]
>
> கொத்தடியேன் பாமாலையும் புனைபாதர் [6]
>
> குற்றாலக் கொத்தடியேன் [7]

ஆகிய கவிஞரின் வார்த்தைகளில் இறைவனுக்குக் கொத்தடிமை போல பணி செய்து வந்தார் என்றும், அப் பணிக்குத் "தினம் கைக் கூலி வாங்கும் கவி"[8] என்ற வரிகளால் கூலியும் பெற்றார் என்றும் உணர

முடிகிறது. கவிஞர் குற்றாலத்திற்கு அருகிலுள்ள மேலகரம் என்னும் கிராமத்தில்தான் வாழ்ந்தார் என்பது, எல்லா இலக்கியங்களையும் முதலில் மேலகரம் செண்பக விநாயகரை வணங்கியே தொடங்கி யிருப்பதால் அறியமுடிகிறது. மேலும், கவிஞரின் பாடலைக் கண்டு மயங்கி, சொக்கம்பட்டி ஜமீன் சின்னணைஞ்சா தேவர் மேலகரத்தில் மூன்று வீடுகள் கவிஞருக்குக் கட்டிக் கொடுத்துள்ளார். இறைவன் அருளால்தான் கவிஞர் பாட ஆரம்பித்தார் என்ற செய்தியும் அவருடைய பாடல்களில் காணப்படுகிறது. [9]

கவிராயரைப் பாராட்டி மதுரையை ஆண்ட முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற மாமன்னர் குறவஞ்சி மேடு என்னும் நிலத்தையும், "திருக்குற்றாலநாதர் கோயில் வித்வான்" என்ற சிறப்பும் செய்து, செப்புப் பட்டயம் வழங்கியுள்ளார். அப்பட்டயத்தில் சாலி வாகன சகாப்தம் 1640 (கி.பி. 1716) என்று குறிப்பிட்டிருப்பதால், இக்கவிஞரின் காலமாக 16-ஆம் நூற்றாண்டின் இறுதியைக் கூறலாம்.

இக்கவிஞரின் வழித்தோன்றல்களில் திருவாவடுதுறை ஆதீனம் பதினாறாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களும், திரு நெல்வேலி இந்துக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும், இங்கி லாந்து மன்னர் எட்வர்டு VIII வேல்ஸ் இளவரசராய் இந்தியா வந்த பொழுது. 1929-ஆம் ஆண்டு, சிறந்த தமிழறிஞருக்கான கிலத்துப் பரிசாகப் பொற்கடகமும், சால்வையும் பெற்றவருமான மே.சொ. சுப்பிரமணிய கவிராயர் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். முற்கூறிய மே.சொ.சுப்பிரமணிய கவிராயர் திருக்குற்றால யமக அந்தாதி முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். ஆய்வாளரும் நூலாசிரியர் வழியில் வந்தவரே. (காண்க : பக்கம் -77)

## 2.2. திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள்

க. திருக்குற்றாலத் தலபுராணம்

உ. திருக்குற்றாலக் குறவஞ்சி

ங. திருக்குற்றால மாலை

ச. திருக்குற்றால சிலேடை வெண்பா

ரு. திருக்குற்றால யமக அந்தாதி

சா. திருக்குற்றாலநாதர் உலா

எ. திருக்குற்றால ஊடல்

அ. திருக்குற்றாலக் கோவை

## திரிகூடராசப்பக் கவிராயர் வழியில் ஆய்வாளர்



க0. (திருக்குற்றாலக் கோமள மாலை) குழல்வாய்மொழி கோமள மாலை

கக. (திருக்குற்றாலக் குழல்வாய்மொழி மாலை) குழல்வாய்மொழி கலிப்பாமாலை

கஉ. (திருக்குற்றால வெண்பா அந்தாதி ) குழல்வாய்மொழி வெண்பா அந்தாதி

கங. (திருக்குற்றாலப் பிள்ளைத் தமிழ்) குழல்வாய்மொழி பிள்ளைத் தமிழ்

கச. (திருக்குற்றால நன்னகர் வெண்பா) நன்னகர் வெண்பா

பட்டியலில் இறுதியில் காணப்படும் ஐந்து நூல்களும் கிடைக்க வில்லை. குழல்வாய்மொழி அன்னையின்மீது பாடப் பெற்றதாக குறிப் பிடப்பட்டுள்ள அந்நூல்களின் பெயர்கள் கழகப் பதிப்பில் மட்டும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. குற்றாலக் கோவை என்னும் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.

### க. திருக்குற்றால தலபுராணம்

இந்நூலின் முதல்பதிப்பு கொல்லம் ஆண்டு 1044 (கி.பி.1869) பங்குனி மாதம் வெளியாகியுள்ளது. மூன்றாவது பதிப்பு கி.பி.1938-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்க நூற்பரிசோதகர் மு.ரா. அருணா சலக்கவிராயர் எழுதிய அரும்பத உரையுடன் திருக்கோயில் தர்ம கர்த்தா உயர்திரு. வி.எஸ். சண்முக முதலியார் அவர்களால் வெளி யிடப்பட்டுள்ளது. 1951-இல் நான்காவது பதிப்பு நூலாசிரியர் வர லாற்றுடன் வெளியிடப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் இந் நூலின் 5-வது பதிப்பை 1973-இல் ஆதீன வித்துவான் க. வச்சிரவேன் முதலியார் அவர்களுடைய விளக்க உரையுடன் வெளியிட்டுள்ளது.

4. சீரடி முதல் 8 சீரடி வரையில் அமைந்துள்ள 2072 பாடல் களால் ஆனது இந்நூல். தான வைபவ காண்டம், சிவரகசிய காண்டம் என்னும் இரண்டு பெரும் பகுதிகளாகவும் 32 சருக்கங் களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இவையன்றி, கடவுள் வாழ்த்து, நூல்வழி, அவை யடக்கம் பாடியுள்ளார். கவிராயர் இத்தல புராணத்தையே தேவியாக உருவகித்துக் காட்டுகிறார். சிவநெறியைத் திருவுருவமாகவும், இரண்டு கண்களை இரண்டு காண்டங்களாகவும், அவளின் அழகிய உறுப்புக்களை முப்பத்திரண்டு சருக்கங்களாகவும், துதிகளை அவளின் அணிகலன்களாகவும் கவிராயர் சுட்டியுள்ளார்.[10] இந்நூலின் பாயிர மாக, காப்புச் செய்யுளாக, மேலகரம் செண்பக விநாயகரை வணங்கி, தலபுராணத்தைத் தொடங்கியுள்ளார்.

## திருக்குற்றாலத் தலபுராணம் – சீரடியும் பாவிகற்பமும்

| சீரடிகள் | 4 | 5 | 6 | 7 | 8 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பாக்கள் | 476 | 282 | 1295 | 19 | 50 | 2072 |
| கொச்சகம் (அ) 4 காய் (அ) 4 விளம் | 260 | - | - | - | - | 260 |
| மா 3 காய் (அ) மா, விள, விள, விள | 148 | - | - | - | - | 148 |
| விள, விள, மா, விள | 31 | - | - | - | - | 31 |
| 3 காய், தேமா | 32 | - | - | - | - | 32 |
| 2 (விள, காய்) | 5 | - | - | - | - | 5 |
| மா, விள, விள, விள, மா | - | 219 | - | - | - | 219 |
| கனி, விள, விள, மா, தேமா | - | 13 | - | - | - | 13 |
| 4 காய், மா, தேமா | - | - | 362 | - | - | 362 |
| 2 (விள, மா, தேமா) | - | - | 810 | - | - | 810 |
| மா, விளம், மாங்காய் | - | - | 104 | - | - | 104 |
| 2 (மா, மா, காய்) | - | - | 19 | - | - | 19 |
| விள, மா, விள, மா, விள, விள, மா | - | - | - | 15 | - | 15 |
| மா, விள, மா, விள, மா,விள, விள | - | - | - | 3 | - | 3 |
| 5 காய், தேமா, புளிமா | - | - | - | 1 | - | 1 |
| 2 (காய், மா, தேமா) | - | - | - | - | 45 | 45 |
| 2 (3 விள, மா) (அ) 3 காய், மா | - | - | - | - | 5 | 5 |
| மொத்தம் | 476 | 282 | 1295 | 19 | 50 | 2072 |

### அறியக்கூடிய செய்திகள்

முதற் பகுதியாகிய தானவைபவ காண்டத்தில் சித்ரா நதியின் செழுமை, தென்னாரிய நாட்டின் வளமை, குற்றாலநகரின் பெருமை ஆகியவை தனித்தனிச் சருக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன. திரிகூட மலை, தலம், சிவமதுகங்கை, வற்றாத அருவி, குறும்பலா என-தலம், தீர்த்தம், விருட்சம் ஆகியவை பெருமைப்படுத்தப்பட்டுள்ளன. மூலவ ராக விளங்கும் திருக்குற்றாலநாதரையும், உலகமகா அன்னை பரா சக்தியையும் தனித்தனியாகப் புகழ்ந்துரைத்த கவிஞர், சாரலின் பெருமையை இயற்கை எழில் விளங்கப் பாடியுள்ளார். தக்கன் வேள்வி, அது அழிக்கப்பட்ட செய்தி, அதனால் தேவர்களுக்கு உண்டான சிவத் துரோகம், அது நீங்கின செயல் என்று புராணச் செய்திகளைக் கூறிய கவிராயர், திரிகூடமலையை வலம்வந்து வணங்கினால் தேவர்கள் மட்டுமன்றி மானுடர்களும் (வேடன் வலம் வந்தமை) விலங்குகளும் (யானை பூசித்தமை) பயன்பெறுவர் என்று விளக்கிக் காட்டியுள்ளார்.

இரண்டாம் பகுதியாகிய சிவரகசிய காண்டத்தில் உமையன்னை யின் அவதாரம், திருமணம் முதலில் விளக்கப்பட்டுள்ளது. திருமணத் தின் காரணமாக நிலப்பரப்பில் உண்டான சமமற்ற தன்மையைப் போக்க இறைவனால் அகத்தியர் தெற்கே, பொதிய மலைக்கு, அனுப்பப்படுகிறார். தெற்கே வந்த அகத்தியர், குற்றால நகரில் அமைந்திருந்த பெருமாள் கோயிலை, இறைவன் அருளால், சிவன் கோயிலாக மாற்றி, அங்கு வாழும் மக்களுக்கு சிவபூசை செய்யும் விதிமுறைகளை விளக்குகிறார். வேடன் முதலான சாதாரண மக்களும், குறுமுனி, வாசுகி போன்ற முனிவர்களும், வானவர்களும் குற்றால நாதரை வழிபட்டு நற்கதியடைகின்றனர். கவுற்சனன். தரும சாமி போன்ற அந்தணர்களும். கண்டகசேதனன் என்னும் வணிகனும் இத் தலத்து இறைவனை வணங்கியமையால் பெற்ற பலன்களை இப் புராணம் விரித்துரைக்கிறது. இறுதியாக. நூற்பயனுரைத்த சருக்கத் தில், கோயிலின் இன்றைய அமைப்பு, சன்னதிகள், தலம், தீர்த்தம், விருட்சம் என்ற அனைத்தும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

### 2. திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றாலநாதர் கோயில் நிருவாகத்தினர் கி.பி.1869- இல் இந்நூலின் முதல் பதிப்பை வெளியிட்டுள்ளனர். 1963-ஆம் ஆண்டில் ஏழாவது பதிப்பு வெளிவந்துள்ளது. சைவ, சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் இந்நூலை 1955-இல் உரையுடன் வெளியிட்டனர். கழகத்தினரும் இந்நூலுக்கு ஏழு பதிப்புக்கள் வெளியிட்டுள்ளனர். ராஜம் கம்பெனியார் இந்நூலை பதம் பிரித்து வெளியிட்டுள்ளனர்

இந்நூலுக்கு அதிகமாக பதிப்புகள் வெளிவந்தமையே இந்நூலின் பெருமைக்குச் சான்றாக விளங்குகிறது. குறத்தி பாடிய பாட்டே குறவஞ்சி எனப்படும். நாடகத் தமிழில் பாடப்பட்டிருக்கும், தலைவன் பவனி முதல் குறவன் குறத்தி விளையாட்டு முடிய பவவகைப் பிரிவுகள் குறவஞ்சியில் காணப்படும். அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், இடையிடையே சிந்து என்று பல் வேறு பாக்களில் அமைந்த நூற்றுப் பத்தொன்பது கன்னிகள் இக் குற்றாலக் குறவஞ்சியில் காணப்படுகின்றன.

இலக்கிய நயங்களுடன் திருக்குற்றாலநாதர் வழிபாடுகள், விழாக்கள், திருப்பணிகள், கட்டளைகள், சரித்திரக் குறிப்புகள் முதலியன காணப்படுவதால் இந்நூல் வரலாற்றுச் சான்றுகளைத் தரும் நூலாகவும் விளங்குகிறது.

## திருக்குற்றாலக் குறவஞ்சியில் பாக்களின் சீரடியும் பாவிகற்பமும் – பட விளக்கம்



வசந்தவல்லிக்குக் குறத்தி குறி சொல்வதும், சிங்கன்-சிங்கி உரையாடலும் நாடகப் பாங்கில் அமைந்துள்ளன. சிங்கன்- சிங்கி உரையாடல் நகைச்சுவை உணர்வுடன் அமைக்கப்பட்டுள்ளது. வசந்த வல்லியின் பாதாதிகேச வர்ணனை, வசந்தவல்லி பந்து விளையாடும் காட்சி, குற்றாலநாதர் உலாவரும் காட்சி, தலைவனைக் கண்டு தலைவி காதல் கொள்ளுதல், தலைவனை எண்ணி ஏங்குதல், குறிஞ்சி நில வர்ணனை போன்றவை ஆசிரியரின் கற்பனை ஆற்றலை உணர்த்து கின்றன. இனிய சந்த அமைப்புக்களோடு, எதுகை மோனையுடன், நுண்ணிய பொருட்செறிவைத் தருகின்ற, எளிய சொற்களில் குறவஞ்சி யின் கன்னிகள் அமைந்துள்ளன.

## இந்நூலின் பெருமையை உணர்த்தும் சில செய்திகள்

இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் முதலில் விநாயகர் வணக்கம் 'சொற்பின் வருநிலையணி' யில் அமைத்துள்ளார். முருகப் பெருமானை வணங்கும் பொழுது 'பன்னிருகை' எனத் தொடங்கி 'ஒருவன்' என்று முடிகின்ற முறையில் பன்னிரண்டு முதல் ஒன்று முடிய கீழ்வரிசை எண்ணாக வருணித்துள்ளார். நூலாசிரியர் தன்னை ஆதரித்த வள்ளல், வடகரை ஆதிக்கம் சொக்கம்பட்டி ஜமீன் சின்னனைஞ்சத் தேவரின் பெயரை இக்காவியத்தில் இடம்பெறச் செய்துள்ளார்.[11] இந் நூலில் வட்டார வழக்குச் சொற்கள், பழக்க வழக்கங்கள் மிகுந்து காணப்படுகின்றன. அக்கால மக்கள் அணிந்திருந்த அணிகலன்களாக,

| | | |
|---|---|---|
| அத்த கடகம் | - | தோள்வளை |
| காலாழி, மெட்டி | - | நெறி |
| குப்பி, தலையணி | - | பதக்கம் |
| குழைத்தோடு | - | பாடகம் |
| குன்றிவடம் | - | முதாரி |
| சரிவளை | - | மூக்குத்தி |
| சவடி | - | மோதிரம் |
| சிலம்பு | - | மோகன மாலை |
| சுட்டி | - | வடம் |
| குடகம் | - | வண்டு, வளையல் |
| தண்டை | - | வயிரம் |
| தண்டொட்டி | - | வங்கார பூஷணம் (பொன்னாபரணம்) |
| தூக்காணம் | - | வாடாமாலை |

ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இந்நூல் இசைவடிவில் பாடப்பெற்றும், நடன வடிவில் ஆடப் பெற்றும் பொதுமக்களிடையே அதிக அளவில் பரவியுள்ளது. இந் நூலின் அடிப்படையில், குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் இன்று நடத்தப்படுகின்றன.

## ங. திருக்குற்றால மாலை

கட்டளைக் கலித்துறையில் அமைந்த நூறு பாடல்களால் ஆனது இந்நூல். திருக்குற்றாலக் குறவஞ்சியின் 6-வது, 7-வது பதிப்புக்களில், முடிவில் குறறாலநாதர் கோயில் நிருவாகத்தினரால் இணைத்து வெளியிடப்பட்டுள்ளது. காப்புச் செய்யுள் மட்டும் வெண்பா யாப்பிலும், இறுதி அடிகள் இரண்டும் சந்தமாகவும் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் "குற்றாலத்துறைபவனே" என்று முடிந்துள்ளது. பத்துப் பாடல்களில், எதுகை மோனை காணப்படுகிறது.[12] அர்த்த நாரீஸ்வரர் பற்றிய செய்தி 5 பாடல்களிலும்,[13] மூவரை வென்ற செய்தி இரண்டு பாடல்களிலும்,[14] விடமுண்ட செய்தி இரு பாடல்களிலும்,[15] பிரம்மனுக்குத் தண்டனை வழங்கிய செய்தியும்,[16] பிச்சையெடுத்த செய்தியும்,[17] மார்க்கண்டேயனுக்கு அருள் புரிந்த செய்தியும்,[18] ஒவ் வொரு பாடலிலும் இடம்பெற்றுள்ளன. இறைவன் புலித்தோலை ஆடையாக அணிந்து,[19] நிலாவைத் தலையில் சூடி,[20] கங்கையைத் தலையில் தாங்கிக் காணப்படுகின்றான் என்று திருக்குற்றால மாலை தெரிவிக்கிறது.

## ச. திருக்குற்றால சிலேடை வெண்பா

நேரிசை வெண்பாவில் அமைந்த நூறு பாடல்களைக் கொண்டது இந்நூல். 1939-ஆம் ஆண்டில், இந்நூலின் 49 பாடல்களை மட்டும் தொகுத்து கோயிலார் வெளியிட்டுள்ளனர். 1954-ஆம் ஆண்டில் இந் நூல் முழுமையாக அறங்காவலர் ஏ.சி. சண்முக நயினார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டு, கோயிலார் வெளியிட்டுள்ளனர். சிலேடை என்பது ஒருவகைப் பா அலங்காரம். முன்னர் வைத்த பொருளையும் பின்னர் வைத்த பொருளையும் ஒரு சொற்றொடரால் சிலேடித்துக் கூறுவ தாகும். இங்கு ஒவ்வொரு பாடலிலும் முதல் இரண்டு வரிகளில் ஒரு செய்தியும், இறுதி இரண்டு வரிகளில் அச் செய்தியோடு சிலேடைப் பொருளில் வரும் மற்றொரு செய்தியும் காணப்படுகிறது. எல்லாப் பாடல்களிலும் இரண்டாவது வரி மூன்றாவது சொல், 'குற்றாலம்' என வந்துள்ளது. பாடலின் இறுதிச் சொல்லாக சார்பு, குன்று, வாழ்வு, காப்பு, நாடு, அகம், சோர்வு, வீடு, பற்று, ஊர், பதி, தோய்வு, சிலம்பு என்னும் வாழுமிடங்களைக் குறிக்கும் சொற்களே காணப் படுகின்றன.

சிலேடை வெண்பாவில் அமைந்துள்ள பாடல்களில் மூன்றாவது, நான்காவது அடிகளில் முதல் இரு சீர்களில், முதல் எழுத்தைத் தவிர பிற எழுத்துக்கள் ஒன்றாகக் காணப்படுகிறது. 9,25,31,33,66,82, 97 ஆகிய ஏழு பாடல்களில் முதலெழுத்தும் ஒன்றாகவே காணப்படு கிறது. அது யமகம் அல்லது மடக்கு எனப்படும். எடுத்துக் காட்டாக,

சங்கச்சி நகரத்தார் (சங்கரி கொங்கை குறிசேர்)
நங்கச் சிநகரத்தார் நாடு[21]
(ஆடைக்கு) மாதங்க மன்றுரித்தார் மாதங்கமன்று ரித்தார்[22]

இங்கு மூன்றாவது வரியில் மாதங்கம் என்பது யானையைக் குறிக்க, நான்காவது வரியில் மாதங்க மன்றமெனும் பொன்னம் பலத்தைக் குறிக்கிறது. பொருள் தொடர்புக்காக முந்தைய வரிச் சொற்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

சிலேடை வெண்பாவில் பாண்டியன் சூலை தீர்த்தமை,[23] பிட்டுக்கு மண் சுமந்தது,[24] மாணிக்கவாசகர் சிறைப்பட்டது,[25] நரியைப் பரி யாக்கியது,[26] போன்ற திருவிளையாடல் புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தர்,[27] சுந்தரர்,[28] கண்ணப்பர்,[29] காரைக்கால் அம்மையார்,[30] சண்டேஸ்வரர்,[31] மூர்த்தி நாயனார்,[32] சாக்கிய நாயனார்,[33] சிறுத்தொண்டர்,[34] அமர்நீதி நாயனார்,[35] ஆநாயனார்,[36] ஆகிய நாயன் மார்களைப்பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. சேரமான் நாய னாரைப் பாணபத்திரருக்குப் பணம் கொடுக்குமாறு இறைவன் எழுதிய மடல்,[37] தருமிக்கு எழுதிக்கொடுத்த பாடல்,[38] பற்றிய செய்திகள் இச் சிலேடை வெண்பாவில் காணப்படுகின்றன.

## ரு. திருக்குற்றால யமக அந்தாதி

கட்டளைக் கலித்துறையில் அமைந்த 100 பாடல்களைக் கொண்டது திருக்குற்றால யமக அந்தாதி. கடவுள் வாழ்த்தாக நான்கு பாடல்கள் உள்ளன. இந்நூலை 1939-ஆம் ஆண்டில் முதற் பதிப்பாக வும், 1954-இல் இரண்டாவது பதிப்பாகவும் கோயிலார் வெளியிட் டுள்ளனர். முதலாவது செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று இரண்டாவது செய்யுளின் முதலாக வந்தால் அந்தாதி எனப்படும். யமகம் என்றால் பாடல்களில் ஒரு சொற்றொடர் திரும்பத் திரும்ப வருதல். யமக இயல்பும், அந் தாதி இயல்பும் பாடல்களில் ஒன்று சேர்ந்து வந்தால் அது யமக அந்தாதியாகும்.

சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியது,[39] சுந்தரர் இறைவனைத் தூதனுப்பியது,[40] ஆகிய பெரியபுராணச் செய்திகளும், பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிப்பட்டது,[41] நரியைப் பரியாக்கியது,[42] மீன் பிடித்தது,[43] ஆகிய திருவிளையாடல்புராணச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. தட்சிணாமூர்த்தி,[44] அம்மையப்பன்,[45] கங்காதரன்,[46] பிட்சாடனர்,[47] முருகன் விநாயகனுடன் சிவன்,[48] நீலகண்டன்,[49] முக்கண்ணன்,[50] ஆகிய இறைவனின் திருவுருவங்களையும், யானைத் தோல்,[51] பாம்பு[52] ஆகியவற்றை இறைவன் அணிந்த செய்தியும், விடமுண்டது,[53] காமனைத் தகனம் செய்தது,[56] தீயேந்தியது,[57] உடுக்கடித்தது,[58] ஆகிய இறைவனின் செயல்களையும், இராவணன் கயிலையைத் தூக்க முயற்சித்தமையும்,[59] இறைவனின் முடியைக் காணப் பிரமன் முயன்றமையும்,[60] யமக அந்தாதியில் இடம்பெற்றுள்ளன. இராமன் சேது கட்டியது,[61] கம்சனை வென்றது,[62] போன்ற பெருமாள் தொடர்புடைய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

திருக்குற்றால யமக அந்தாதிக்கு நூலாசிரியரின் வழியில் வந்த பெருந்தமிழ்ப் புலவர் மே.சொ. சுப்பிரமணிய கவிராயர் உரை எழுதியுள்ளார். அந்த உரை கோயில் பதிப்பில் இடம்பெற்றுள்ளது.

### ச. திருக்குற்றாலநாதர் உலா

வெண்பா யாப்பில் 1155 வரிகளால் ஆனது. இவ்வுலாவின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தாக மூன்று வெண்பாக்களும் முடிவில் ஓர் வெண்பாவும் காணப்படுகின்றன. இந்நூலின் முதற்பதிப்பு 1939-ஆம் ஆண்டு கோயிலாரால் வெளியிடப்பட்டுள்ளது. 1954-இல் இரண்டாவது பதிப்பு வெளிவந்துள்ளது.

இளமைப் பருவத்தையுடைய, குடிச்சிறப்பும் அழகும் பொருந்திய தலைவன் வீதி உலா வரும்பொழுது, அவன் அழகைக் கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் முதலிய ஏழு பருவப் பெண்களும் மயங்குவதாக எழுந்த நூலே உலாவாகும். தரணி பீடமாக அமர்ந்துள்ள பராசக்தியின் பெருமை,[63] தீர்த்தம்,[64] அருவியின் அழகு,[65] சங்குக் கோயில் அமைப்பு,[66] குறும்பலா,[67] சித்ரசபை,[68] எனக் கோயிலின் அமைப்பு விளக்கப்பட்டுள்ளது. அகத்தியரின் வருகை,[69] பெருமாள் திரு வுருவத்தை சிவனாக்கியமை,[70] நடராசப் பெருமான் விரும்பி நடம் புரிந்த பஞ்ச சபைகள்,[71] ராகங்கள்,[72] ஆகிய செய்திகளும், சித்திரை விசுத் திருவிழா,[73] நான்காம் திருநாள் - ரிஷப வாகனக் காட்சி,[74] குழல்வாய்மொழி அன்னையின் திருக்கல்யாணம்,[75] போன்ற திருவிழாக்களும் விளக்கப்பட்டுள்ளன.

வீதி உலா வரும் இறைவனும், அவனைக் கண்டு மயங்கிய பெண்களும் அணிந்திருந்த ஆபரணங்களின் பெயர்களும் நூல் முழுவதும் காணப்படுகின்றன.[76] இறைவன் மீது பாடப்பட்ட இலக்கியங்கள், அவற்றின் பெருமை, அந்த இலக்கிய ஆசிரியர்களின் பெருமை ஆகியவை பட்டியலிட்டதுபோல் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன.[77]

திருஞானசம்பந்தர் கனல்வாதம் புனல்வாதம் செய்தது,[78] படிக்காசுப் பெற்றது,[79] சமணரை வென்று நாட்டில் சைவத்தைப் பரப்பியது,[80] குற்றாலத்துறையும் சிவனைப் பாடியது,[81] ஆகிய செய்திகள் இவ்வுலாவில் இடம்பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் கல்லைக் கடலில் தெப்பமாகக் கொண்டது,[83] படிக்காசுப் பெற்றது,[84] குற்றாலத்துறைக் கூத்தனைப் பாடியது,[85] சுந்தரர் செங்கல்லைப் பொன்னாக்கியது,[86] இறைவன் அவரைத் தடுத்தாட்கொண்டது,[87] இறைவனைப் பரவை யிடம் தூதுவிட்டது,[88] ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

ஆதியுலா, பொன்வண்ணத் தந்தாதி ஆகிய சேரமான் பெருமாள் பாடிய நூல்கள்,[89] காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி,[90] சண்டேசுர நாயனார் தந்தையின் காலை வெட்டியது,[91] குழலிசை கேட்டருளிய ஆநாயனார்,[92] கல்லாலெறிந்த சாக்கிய நாயனார்,[93] போன்ற பெரியபுராணச் செய்திகள் காணப்படுகின்றன. மனுநீதி கண்டு, கன்றுக்காக மகன் மீது தேரேற்றிய சோழனின் பெருமை கூறப்பட்டுள்ளது.[94] மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைத்த செயலும்,[95] திருப்பெருந் துறையில் இறைவனையே குருவாகக் கொண்ட செய்தியும்,[96] இடம்பெற்றுள்ளது.

பாணபத்திரனுக்குச் சீட்டு எழுதித்தந்தது,[97] மதுரையில் மாமிக்காக ஏழு கடலை அழைத்தது,[98] விறகு விற்றது,[99] வளையல் விற்றது,[100] பிரம்படிப்பட்டது,[101] எல்லாம் வல்ல சித்தரானது,[102] ஆகிய திருவிளையாடற் புராணச் செய்திகளும், முருகனின் வேல் மலையைத் துளைத்து சூரனைக் கொன்ற கந்தபுராணச் செய்தியும் இடம் பெற்றுள்ளன.[103] உமையம்மையைத் தழுவிக் குறிதந்தது.[104] மண்டோதரிக்காக இலங்கை சென்றது,[105] திருமால், இறைவனைக் கண்ணால் அர்ச்சித்தது,[106] வரகுண பாண்டியன் தன்னுடைய தேவியை இறைவனுக்குத் தந்தது,[107] இறைவன், உமையம்மையை இடப்பாகத்தில் ஏற்றுக் கொண்டது,[108] திரிபுரமழித்தது,[109] ஆகிய சிவபெருமானின் பெருமைகளும் உலாவில்கூறப்பட்டுள்ளன. மேருவை ஏடாக மாற்றி எழுதியது,[110] விசயன் வில்லடிபட்டது,[111] ஆகிய மகாபாரதச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

## எ. திருக்குற்றால ஊடல்

அறுசீர் விருததத்தில் அமைந்த இருபது பாடல்களையும் நான்கு சீர் விருத்தத்தில் அமைந்த ஒரு காப்புச் செய்யுளையும் கொண்டது இந்நூல். திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆறு, ஏழாவது பதிப்புக் களில் இந்நூலையும் இணைத்துக் கோயிலார் வெளியிட்டுள்ளனர். இறைவனும் இறைவியும் ஊடல் கொண்டு, தங்களிடையே பேசிக் கொள்வதாக ஆசிரியர் கற்பனை செய்துள்ளார். ஊடல் கொண்ட அன்னை, பல ஐயங்களை வினாவாக எழுப்ப, அதற்கு இறைவன் பதில் கூறுவதுபோல இவ்விலக்கியம் அமைக்கப்பட்டுள்ளது. எளிய, இனிய நடையில் இசையுடன் சேர்ந்து பாடுமாறு உள்ளது. "புலவி தீர்ந்த வோலக்கம் இனிது பாட"[112] என்று ஊடலின் பெரு மையை ஆசிரியரே குறிப்பிட்டுள்ளனர். விநாயகர் தலையில் பிறை அணிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.[113]

சங்குவடிவுடை பொற்கோயில்,[114] சக்திபீடம்,[115] சங்கவீதி,[116] என்று குற்றாலநாதர் கோயில் செய்திகளும், விடைமீது இறைவன் காட்சி தருவது,[117] ஏழாம் திருநாளன்று இறைவன் வெள்ளை சாத்தி பவனி வருவது,[118] என்று கோயில் திருவிழாக்காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இறைவன் மழுப்படையுடையவன்,[119] பறை அணிந் தவன்,[120] ஆலமரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தியாக அமர்ந்தவன்,[121] கோவணமும் புலித்தோலும் அணிந்தவன்,[122] பிட்சாடனர்,[123] நஞ்சுண் டவன்,[124] பூதநாயகர்,[125] பித்தன்[126] என்று இந்நூல் கூறுகிறது. கண்ணப்பநாயனார் இறைவனை எச்சில் நீரால் அபிடேகித்த செய்தி யும்,[127] அருச்சுனன் கையால் இறைவன் பிரம்படிப்பட்ட செய்தியும்,[128] தருக வனத்து ரிஷிகளின் ஆணவத்தை அழித்த செய்தியும்,[130] மன்மதனை எரித்த செய்தியும்,[131] மலையரசன் மகளை மணந்த செய்தியும்,[132] இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

மேகவண்ணன்,[133] இராமாவதாரம்,[134] கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்தது,[135] இரணியன் ஒளித்துவைத்த பூமியைக் கடலைக் கிழித்து வெளிக்கொண்டு வந்தமை,[136] கண்ணைப் பறித்து சிவனை அர்ச்சித்தமை,[137] நரசிம்மவதாரம்,[138] யசோதை வீட்டில் பால் வெண்ணை திருடியது,[139] இடைக்குலத்தில் பிறந்து ஆநிரை மேய்த் தது,[140] ஆகிய பெருமாளின் பெருமைகளையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

## ஐ. திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை

கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த முப்பத்தொரு பாடல் களும், காப்புச் செய்யுள் ஒன்றும் கொண்டது இந்நூல். 1954 -ஆம்

ஆண்டு இந்நூலினைக் கோயிலார் வெளியிட்டுள்ளனர். எல்லாப் பாடல்களும், “குற்றாலப் பரம்பொருளே” என்றுதான் முடிந்துள்ளது. அர்ச்சுனன் சம்புடம் பெற்றமை,[141] அடிமுடி தேடியமை,[142] முருகனை ஈன்றமை,[143] மதி சூடியமை,[144] என்று இறைவன் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. சுந்தரருக்குக் கண் கொடுத்தது,[145] இறைவன் தூது சென்றது,[146] கண்ணப்ப நாயனாருக்கு அருள் வழங்கியது,[147] சிறுத்தொண்டரை ஆண்டி வடிவில் சென்று அருட் கொண்டது,[148] ஆகிய பெரியபுராணச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

திருக்குற்றாலநகரில் சங்காலயம்,[149] சன்னதி, திரிகூடச்சிகரம், அருவி,[150] செண்பகாதேவி, பொங்குமாங்கடல், சங்கவீதி, பீடக் கோயில்,[151] பஞ்சதரிசனம்[152] ஆகிய முக்கிய இடங்களிருப்பதைக் காட்டுகிறது.

மாலை என்பது இறைவனிடம் குறைகளைக் கூறி அவன் அருளை வேண்டும் நூலாதலால், இங்கும் ஆசிரியரின் குறைகளும்,[153] அக்குறை தீர்த்தருளுமாறு இறைவனை வேண்டிய செய்திகளும்,[154] காணப்படுகின்றன. கொத்தடிமை,[155] பாமாலைப் புனைபவன்,[156] சகட்டுள வாழ்க்கையுடையவன்,[157] இறைவனை உள்ளத்தில் வைத்துத் தொழுபவன்,[158] என்று கவிஞர் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

## கூ. திருக்குற்றாலக் கோவை

திருக்குற்றாலக் கோவை என்னும் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள 58 பாக்களை மட்டும் 1954-ஆம் ஆண்டு கோயிலார் வெளியிட்டுள்ளனர். கைக்கிளையில் நான்கும், இயற்கைப் புணர்ச்சியில் பதினைந்தும், வன்புறையில் ஆறும், தெளிவில் ஒன்றும், பிரிவுழி மகிழ்ச்சியில் இரண்டும, பிரிவுத்துயரில் •ஐந்தும், இடந்தலைப்பாட்டில் ஐந்தும், பாங்கற்கூட்டத்தில் இருபது பாடல்களும் இன்று பதிப்பிக்கப்பட்டுள்ளன. கோவை என்பது கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் ஆக்கப்படும் அகப்பொருள் நூல் மணிகளை ஓரினமாக ஒழுங்காகக் கோப்பதுபோல் அகப்பொருட் கிளவிகளைக் கோப்பது கோவையாகும். இங்கும் அகத்துறைப் பாடல்கள் ஓரினமாகக் கோக்கப்பட்டுள்ளன. அறிமுகமில்லாத தலைவனும் தலைவியும் சந்தித்து முதலில் ஒரு தலையாகக் காதல் கொண்டு, பின்னர் உண்மைக் காதலை உணர்வதாக நூல் அமைந்திருக்கும்.

சுந்தரருக்காக இறைவன் தூது சென்றது,[159] மாதொரு பாகனானது,[160] காமனை எரித்தது,[161] முப்புரம் எரித்தது,[162] மலையை

வில்லாக வளைத்தது,[163] மானை இடத்தும் மழுவை வலத்தும் ஏந்தியது,[164] பாம்பணிந்தது,[165] போன்ற இறைவன் பற்றிய செய்திகள் உள்ளன. வள்ளியை மணம்புரிய விரும்பி முருகன் வேங்கை மரமாக நின்ற[166] கந்தபுராணச் செய்தியும், இந்திரஜித் நாகாஸ்திரத்தைப் பயன்படுத்திப் பகைவர்களைக் கட்டிய [167] இராமாயணச் செய்தியும் இக்கோவையில் இடம்பெற்றுள்ளன. சித்திரசபை,[168] குறும்பலா[169] பற்றிய செய்திகளும் இந்நூலில் காணப்படுகின்றன.

## 3. பிச்சைப்பிள்ளை – குற்றால அந்தாதி

சொக்கம்பட்டிக் குறுநில மன்னராகிய சின்னணைஞ்சத் தேவரின் அமைச்சர் பிச்சைப்பிளை குற்றால அந்தாதி என்னும் நூல் எழுதியுள்ளார். இந்நூல் இன்றுவரை பதிப்பிக்கப்படவில்லை. நூலாசிரியரின் வழிவந்தவர்களிடமும் இந்நலின் மூலப்படியைப் பற்றிய தகவல்கள் இல்லை. இந்நூல் இருந்தது என்ற குறிப்பு மட்டும் தல வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது.[170]

## 4. தாதம்பட்டி அருணாசலம் பிள்ளை – குற்றாலக் கோவை

தாதம்பட்டி ருணாசலம் பிள்ளை - குறறாலக் கோவையென்னும் இந்நூல் ஆசிரியர், “திரிகூடபதி ஆதிக்கியத்தைச் சேர்ந்த தாதம்பட்டி ஒடுக்கத்து அருணாசல சுவாமிகளாற் செய்யப்பட்டது”[171] என்ற குறிப்பு நூலில் காணப்படுகிறது. கொல்லம் ஆண்டு 943-இல் (கி.பி.1768) இந்நூல் எழுதப்பட்டது. இந்நூல், 1949-ஆம் ஆண்டு, ஏ. எஸ். முத்தையா முதலியார் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று, திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது. மணிகளை ஓரினமாக ஒழுங்குபடக் கோப்பது போன்று, அகப்பொருட் கிளவிகளை ஒழுங்குபடக் கோத்தல் கோவையாகும். இந்நூல் களவியல் (291 செய்யுள்), வரைவியல் (88 செய்யுள்), கற்பியல் (72 செய்யுள்) ஆக 451 செய்யுட்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செய்யுளின் அடியிலும் அச்செய்யுள் நிகழிடம், குறிப்பான பொருள் (திணை, துறைபோல) ஆசிரியர் குறித்துள்ளார்.

இறைவனின் அடிமுடி தேடியது,[172] மார்க்கண்டேயருக்காக எமனை உதைத்தது,[173] திரிபுரம் எரித்தது,[174] நஞ்சுண்டது,[175] மன் மதனை அழித்தது,[176] யானைத்தோல் அணிந்தது,[177] புலித்தோல் அணிந்தது,[178] மண்டை ஓட்டில் பலி ஏற்றது,[179] கங்கையைத் தலையில் ஏற்றது,[180] எலும்பை அணிந்து நெருப்பில் ஆடியது,[181] பிறை சூடியது,[182] பாம்பை அணிந்தது,[183] மானையும் மழுவையும் ஏந்தியது,[184] ஆகிய சிவபெருமான் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பிரம்படிபட்டது,[185] விறகு விற்றது,[186] ஆகிய திரு விளையாடற் புராணச் செய்திகளும், விநாயகர் சிவனை வலம் வந்து கனி பெற்றது,[187] முருகன் வள்ளிக்காக வேங்கை மரமானது,[188] சூரபத்மன் மரமானது,[189] சூரபத்மனை அழித்தது,[190] முருகன் வள்ளியை மணந்தது,[191] ஆகிய கந்தபுராணச் செய்திகளும், சுந்தரருக்காகத் தூது நடந்தது,[192] கண்ணப்ப நாயனாரின் எச்சியையுண்டது[193] ஆகிய பெரிய புராணச் செய்தி களும் காணப்படுகின்றன.

இலக்குவன், இந்திரஜித்தின் நாகாஸ்த்திரத்தில் மயங்கி, மீண்டது,[194] இராவணன் கயிலை மலையைத் தூக்கியது,[195] இராமன் தனித்து நின்று மூலப்படையை அழித்தது[196] போன்ற இராமாயணச் செய்திகளும், அருச்சுனனுக்கு வரமளித்த[197] பாரதச் செய்தியும் காணப் படுகிறது.

திருப்பாற்கடலில் தேவர்கள் அமிர்தம் கடைந்தது,[198] குரு பத்தினியாகிய தாரையைச் சந்திரன் தொட்டது,[199] ஆகிய கதைகளும், திருமால் கஜேந்திரனுக்காக முதலையை சக்ராயுதத்தால் அழித்தது,[200] மூன்று உலகங்களை அளந்தது,[201] பாற்கடலில் பள்ளி கொண்டது,[202] கண் விழியால் இறைவனை அர்ச்சித்தது,[203] கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்தது[204] போன்ற திருமாலின் கதைகளும் கூறப் பட்டுள்ளன.

திருக்குற்றாலநாதர் கோயில், மூர்த்தி, தீர்த்தம், விருட்சம், சங்க வீதி, சித்ரசபை, அருவி பொங்குமாங்கடல் ஆகிய குற்றாலத்தைப் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

## 5. சுப்பிரமணிய முனிவர் – சித்திரசபை திருவிருத்தம்

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், தொட்டிக்கலை மதுரகவி சுப்பிரமணிய முனிவர் இயற்றியது இந்நூல். பத்து விருத்தப் பாக் களால் ஆன இந்நூலை, கோயிலார் திருக்குற்றால தல புராணத்தின் நான்காவது பதிப்பில் 1951-ஆம் ஆண்டில், இணைத்து வெளி யிட்டுள்ளனர். அந் நான்காம் பதிப்பு இன்று கிடைக்காத காரணத் தினால், இந்நூல் முழுமையும் பின்னிணைப்பில் தரப் பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் காலையில் காவிரிநதியில் நீராடி மீண் டும் வரும்பொழுது, திருவாவடுதுறை ஆதீன மடாதிபதிகள் இந் நூலை ஓதி வந்திருக்கின்றனர்.[205] இந்த விருத்தப்பாக்கள் பத்தின் இறுதியிலும், "சிவகாமி மகிழச் சித்திரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத் திருநடம் புரிவரதனே" என்ற வரி காணப்படுகிறது. இறை வனுடைய நடனக் காட்சி பத்தாவது பாடலில் அழகாக வருணிக்கப்

பட்டுள்ளது. இறைவன், அடிமுடி காண முடி யாதவன்,[206] இறைவன் நடனமாடும் மன்றம் பொன்னம்பலம்,[207] முருகன்[208] பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. குற்றாலம்[209] என்று இந்நகரின் பெயர் சுட்டப் பட்டிருப்பதுடன் திரிகூடமலை,[210] சித்ராநதி,[211] பொங்கு மாங் கடல்,[212] அருவி,[213] செண்பகக்காடு,[214] தல விருட்சம் குறும்பலா[215] ஆகிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

### 6. சண்முக நயினார், ஏ.சி.,

தென்காசி நகரில் வழக்குரைஞராகவும் கோயிலின் அறங் காவல ராகவும், அறங்காவலர் குழுவின் தலைவராகவும் விளங்கியவர் திரு. சண்முக நயினார். திருக்குற்றாலநாதர் கோயிலின் வரலாறு முழு மையும் வழிகாட்டி நூல்போல் எழுதியுள்ளார். இந்நூல் 1943-ஆம் ஆண்டு கோயில் நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. 1977-ஆம் ஆண்டு 8-ஆம் பதிப்பு வெளியாகியுள்ளது. இவர் திருக்குற்றாலத்தைப் பற்றிய எழுதிய நூல்கள் வருமாறு:

1. திருக்குற்றாலம் - தல வரலாறு
2. திருக்குற்றாலப் பதிக உரை
3. திருக்குறும்பலாப் பதிக உரை
4. திருவெம்பாவை உரை
5. திருக்குற்றாலம் - சிறு விளக்கம்
6. COURTALLAM - A PAMPHLET
7. சார்வரி வருட நாட்குறிப்பு

அனைத்து நூல்களையும் கோயிலார் வெளியிட்டுள்ளனர். கோயிலைப் பற்றிய வரலாறு, விழாக்கள், இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், குற்றாலநகரைப் பற்றிய பலவகைக் குறிப்புக்கள் ஆகியன, வழிகாட்டி நூலைப்போன்று, சுருக்கமாக, திருக்குற்றாலம் தல வரலாற்றில் காணப்படுகிறது. திருக்குற்றால அருவி, கோயிலை அறிமுகப்படுத் தும் சிறு நூலாக. 'திருக்குற்றாலம் - சிறு விளக்கமும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும்' எனும் நூல் விளங்குகிறது. இவையிரண்டும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதற்காகக் கோயிலாரால் வெளி யிடப்பட்டுள்ளன. திருக்குற்றாலப் பதிகங்கள் இரண்டையும், திரு வெம்பாவையும், வழிபடுவோர் பாராயணம் செய்வதற்காக சிறு பதிப் பாகக் கோயிலார் வெளியிட்டுள்ளனர்.

## 7. பி. ஸ்ரீ. திருக்குற்றாலம்

திருக்குற்றாலநகரின் இயற்கை வளம், அருவியின் அழகு, சாரலின் பெருமை, அங்குக் குடிகொண்டிருக்கும் இறைவன் ஆகிய வற்றை விளக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அமுத நிலையத்தினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

## திருக்குற்றாலநாதர் கோயில் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ள இலக்கியங்கள்

சங்ககாலம், சங்க மருவிய கால இலக்கியங்களில் குற்றால நகர், இறைவன் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை என்று முன்னர் கூறப்பட்டது, பல்லவர் கால இலக்கியங்களில் தேவார, திருவாச கங்களில் இக்கோயிலின் இறைவன் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## திருநாவுக்கரசர் தேவாரம்

திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இருவரும் இப்பதிக்கு வந்து பதிகம் பாடியதாக முனனர் கூறப்பட்டது. அப்பதிகங்கள் இன்று கிடைக்கவில்லை. நாவுக்கரசரின் திருஅங்கமாலை பத்தாவது பாடலில், குற்றாலத்துறை கூத்தனே நமக்கு உயிர் போகும்பொழுது உற்ற துணைவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[216] "கோலநீற்றன் குற்றாலம்"[217] என்று சுந்தரர் குற்றாலத்தின் செழுமையைப் பாடியுள்ளார்.

### மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் திருப்புலம்பல் என்னும் பகுதியில் சிவஞான முதிர்வாக, குற்றாலத்துறை கூத்தனே அனை வருக்கும உற்றதுணை, அவனல்லால் வேறு உறவு துணை யில்லை என்று கூறப்பட்டுள்ளது.[218]

திருக்கோவையாரில் குழல்வாய்மொழி அன்னையின் எழில் உரைக்கப்பட்டு, அந்த அன்னையின் நாயகனாகக் குற்றாலத்துறை இறைவன் குறிக்கப்பட்டுள்ளான்.[219]

### கபிலர்

சைவத் திருமுறைகளில் ஒன்றான, கபிலர் பாடிய, சிவபெருமான் திருவந்தாதியிலும் குற்றாலநகரம், கூத்தன் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.[220]

## சேக்கிழார்

சோழர் காலத்தில், சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணத்தில் குற்றாலத்துறையும் கூத்தனைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.[221] திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன், பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி, முதலமைச்சர் குலச் சிறையார் ஆகியோர் ஒன்றாக வந்து வழிபட்டுள்ளனர். சுந்தரமூர்த்தியும் சேரமான் பெருமாள் நாயனாரும் வழிபட்டுள்ளனர்.[222]

## பட்டினத்தார்

மரணம் வருமுன்னர் குற்றாலத்துறைக் கூத்தனின் திருவடிகளை வணங்க வேண்டும் என்றார் பட்டினத்தடிகள்.[223]

## கந்தபுராணம்

கந்தபுராணம் கடவுள் வாழ்த்தில் நடராசப் பெருமாள் சித்திர சபையில் நடனமாடிய செய்தி இடம்பெற்றுள்ளது. அசுர காண்டம் குற்றாலப் படலத்தில், அகத்தியரால், மாயோன் பரமனாக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது.

## அருணகிரிநாதர்

குற்றாலநாதர் கோயிலில் அமைந்துள்ள முருகப்பெருமானின் பெருமையை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார்.[224]

திருப்பத்தூர் புராணத்தில், நடராசப்பெருமாள் சித்திரசபையில் திரிபுர தாண்டவம் ஆடிய செய்தி காணப்படுகிறது.[225]

## நிறைவுரை

குற்றாலம் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்று என்பதனால் அந்நகர் பற்றிய செய்திகள் இன்றைய இலக்கியங்களில், செய்தித் தாட்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன. கோயில் பற்றிய செய்திகளை மட்டுமே ஆய்வுக்காக எடுத்துக்கொண்டதால் அவற்றை இங்கு எடுத்துக் காட்டவில்லை. எனவே, திருக்குற்றாலம் இலக்கிய வாதிகளின் நெஞ்சத்தில் இனிய இடம் பெற்றுள்ளது எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. திரிகூடராசம்மாள், நேர்காணல், நாள்: 13.5.1987.
2. மேற்படி.
3. இராமசாமிப்பிள்ளை, திரிகூடராசப்பக் கவிராயர், ப.7.
4. மேற்படி, ப.8.
5. திரிகூடராசப்பக் கவிராயர், குற்றாலமாலை, 100-3.
6. மேற்படி, குற்றால பரம்பொருள் மாலை, 11-3,4.
7. மேற்படி, குற்றால சிலேடை வெண்பா, 5-3.
8. மேற்படி, குற்றாலமாலை, 30.
9. மேற்படி, குற்றாலமாலை, 27-2, 3; 93-3,4; 100 -1,2.
10. மேற்படி, திருக்குற்றால தலபுராணம், நூல்வழி -11.
11. மேற்படி, திருக்குற்றாலக் குறவஞ்சி, க.162, பா.3.
12. மேற்படி, திருக்குற்றாலமாலை, பா.1,3,46,55,63,71,72,73, 94,98.
13. மேற்படி, பாடல் 12,18,37,86,100.
14. மேற்படி, பாடல் 5,16.
15. மேற்படி, பாடல் 55,72.
16. மேற்படி, பாடல் 69.
17. மேற்படி, பாடல் 55.
18. மேற்படி, பாடல் 97.
19. மேற்படி, திருக்குற்றாலமாலை, பா.42,47.
20. மேற்படி, பா.69.
21. மேற்படி, திருக்குற்றால சிலேடை வெண்பா, பா.14.
22. மேற்படி, பா.25.
23. மேற்படி, பா.5.
24. மேற்படி, பா.34,60.
25. மேற்படி, பா.53.
26. மேற்படி, பா.12.
27. மேற்படி, பா.50,100.
28. மேற்படி, பா.67.
29. மேற்படி, பா.11,99.
30. மேற்படி, பா.91,100.
31. மேற்படி, பா.24.

32. மேற்படி, பா.67.
33. மேற்படி, பா.48.
34. மேற்படி, பா.20.
35. மேற்படி, பா.33.
36. மேற்படி, பா.63.
37. மேற்படி, பா.15, 61.
38. மேற்படி, பா.15,59.
39. மேற்படி, திருக்குற்றால யமகவந்தாதி, பா.46.
40. மேற்படி, பா.45, 98.
41. மேற்படி, பா.16.
42. மேற்படி, பா.46.
43. மேற்படி, பா.82.
44. மேற்படி, பா.33,93.
45. மேற்படி, பா.39,58,76,86,89.
46. மேற்படி, பா.80,82,95.
47. மேற்படி, பா.26.
48. மேற்படி, பா.21,73,85.
49. மேற்படி, பா.81.
50. மேற்படி, பா.31,71.
51. மேற்படி, பா.26,77,82.
52. மேற்படி, பா.48,72,83.
53. மேற்படி, பா.6,60,93.
54. மேற்படி, பா.3,8,19,45,57,76,92.
55. மேற்படி, பா.71.
56. மேற்படி, பா.8,67.
57. மேற்படி, பா.60.
58. மேற்படி, பா.81.
59. மேற்படி, பா.36.
60. மேற்படி, பா.55.
61. மேற்படி, பா.62.
62. மேற்படி, பா.96.
63. மேற்படி, திருக்குற்றாலநாதர் உலா, வரி.9-10.
64. மேற்படி, வரி.20.
65. மேற்படி, வரி.23,24,88,89,888-890.

66. மேற்படி, வரி.27-28.
67. மேற்படி, வரி.29-30.
68. மேற்படி, வரி.33-34.
69. மேற்படி, வரி.56-66.
70. மேற்படி, வரி.99-110.
71. மேற்படி, வரி.539-541.
72. மேற்படி, வரி.780-787.
73. மேற்படி, வரி.138-140.
74. மேற்படி, வரி.146.
75. மேற்படி, வரி.150-151.
76. மேற்படி, வரி.145-147.
77. மேற்படி, வரி.216-238.
78. மேற்படி, காப்பு-3.
79. மேற்படி, வரி.61,429.
80. மேற்படி, வரி.114.
81. மேற்படி, வரி.275.
82. மேற்படி, வரி.428.
83. மேற்படி, வரி.115, காப்பு-3.
84. மேற்படி, வரி.61.
85. மேற்படி, வரி.275.
86. மேற்படி, காப்பு-3.
87. மேற்படி, வரி.108,285.
88. மேற்படி, வரி.116,140.
89. மேற்படி, வரி.128.
91. மேற்படி, வரி.110.
92. மேற்படி, வரி.389.
93. மேற்படி, வரி.547.
94. மேற்படி, வரி.118.
95. மேற்படி, காப்பு-3.
96. மேற்படி, வரி.117.
97. மேற்படி, வரி.260.
98. மேற்படி, வரி.265.
99. மேற்படி, வரி.274.
100. மேற்படி, வரி.479.

101. மேற்படி, வரி.547.
102. மேற்படி, வரி.399.
103. மேற்படி, வரி.112.
104. மேற்படி, வரி.88,342,540,550.
105. மேற்படி, வரி.199,476.
106. மேற்படி, வரி.287,523.
107. மேற்படி, வரி.119.
108. மேற்படி, வரி.186,285,561.
109. மேற்படி, வரி.93,101,152,280,284,449,470.
110. மேற்படி, வரி.111.
111. மேற்படி, வரி.547.
112. மேற்படி, காப்பு - வரி.2.
113. மேற்படி, காப்பி - வரி.4.
114. மேற்படி, பா.1, வரி.1.
115. மேற்படி, பா.11, வரி.4.
116. மேற்படி, பா.7, வரி.4.
117. மேற்படி, பா.5, வரி.4.
118. மேற்படி, பா.5, வரி.4.
119. மேற்படி, பா.1, வரி.4.
120. மேற்படி, பா.3 - வரி.1; பா.5 - வரி.3; பா.9 - வரி.2.
121. மேற்படி, பா.6, வரி.2.
122. மேற்படி, பா.7, வரி.1.
123. மேற்படி, பா.9, வரி.1.
124. மேற்படி, பா.9 - வரி.3; பா.19 - வரி.2.
125. மேற்படி, பா.9, வரி.3.
126. மேற்படி, பா.9 - வரி.4; பா.18 - வரி.2.
127. மேற்படி, பா.13, வரி.3.
128. மேற்படி, பா.13, வரி.4.
129. மேற்படி, பா.9, வரி.1.
130. மேற்படி, பா.11, வரி.2.
131. மேற்படி, பா.6, வரி.3.
132. மேற்படி, பா.7, வரி.2.
133. மேற்படி, பா.1-வரி.3.
134. மேற்படி, பா.8-வரி.2,3.

135. மேற்படி, பா.10-வரி.2.
136. மேற்படி, பா.10-வரி.3,4.
137. மேற்படி, பா.12-வரி.1.
138. மேற்படி, பா.12-வரி.2.
139. மேற்படி, பா.12-வரி.4.
140. மேற்படி, பா.14-வரி.1,4.
141. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை, பா.2-வரி.4; 11-1,2; 23-2; 29-214.
142. மேற்படி, பா.4-வரி.3.
143. மேற்படி, பா.10-வரி.1.
144. மேற்படி, பா.19-வரி.4.
145. மேற்படி, பா.3-வ.1.
146. மேற்படி, பா.10-வ.4.
147. மேற்படி, பா.16-வ.1,2.
148. மேற்படி, பா.25-வ.1; பா.28-வ.1.
149. மேற்படி, பா.11-வ.1.
150. மேற்படி, பா.1-வ.1,2; பா.30-வ.2.
151. மேற்படி, பா.15-வ.1,4.
152. மேற்படி, பா.30-வ.4.
153. மேற்படி, பா.2-1,3; 6-1,2; 13-1,2; 23-1,2; 7-1; 12-1,2; 20-1; 28-3.
154. மேற்படி, பா.1-3; 2-3; 3-3,4; 4-1,2; 6-3; 9-3; 7-2; 10-3; 12-4; 14-3; 17-3; 18-1; 19-3; 23-2; 3; 24-1,3; 25-1,3; 26-1,3; 27-1,3; 28-3; 29-2,3.
155. மேற்படி, பா.11-வ.3.
156. மேற்படி, பா.11-வ.4.
157. மேற்படி, பா.20-வ.1.
158. மேற்படி, பா.26-வ.2,3; 27-2.
159. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் கோவை, பா.6-வ.2.
160. மேற்படி, பா.8-வ.1.
161. மேற்படி, பா.14-வ.1.
162. மேற்படி, பா.25-வ.1.
163. மேற்படி, பா.2-வ.2.
164. மேற்படி, பா.24-வ.4.
165. மேற்படி, பா.15-வ.2,3.

166. மேற்படி, பா.43-வ.4.

167. மேற்படி, பா.44-வ.1.

168. மேற்படி, பா.22-வ.3.

169. மேற்படி, பா.56-வ.3.

170. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலத் தல வரலாறு, ப.87.

171. முத்தையா முதலியார், ஏ.எஸ்., (ப.ஆ.), குற்றாலக் கோவை, ஆசிரியர் வரலாறு, ப.7.

172. அருணாசலம்பிள்ளை, குற்றாலக் கோவை, பா.3,119,177, 192,211,213,247,311,357,382.

173. மேற்படி, பா.4, 134,400.

174. மேற்படி, பா.7,25,37,79,124,134,218, 264,283,393,402

175. மேற்படி, பா.50,82,105,120,133,148,157,235, 241, 290,314,350,381,408.

176. மேற்படி, பா.110,113,147,240,318.

177. மேற்படி, பா.17,49,71,91,193,204,206,297,333.

178. மேற்படி, பா.14,36,118,173,193,198,398.

179. மேற்படி, பா.130,194,200,268,276,296,300,433.

180. மேற்படி, பா.55,13,168,195,213,292,306.

181. மேற்படி, பா.223,248,281,413.

182. மேற்படி, பா.42,74,149,370.

183. மேற்படி, பா.10,15,16,77,96,142,202,204, 313,328,415.

184. மேற்படி, பா.16,24,102,197,212,261.

185. மேற்படி, பா.226,343.

186. மேற்படி, பா.369.

187. மேற்படி, பா.106,335.

188. மேற்படி, பா.43.

189. மேற்படி, பா.445.

190. மேற்படி, பா.121.

191. மேற்படி, பா.312.

192. மேற்படி, பா.6,89,190.

193. மேற்படி, பா.203.

194. மேற்படி, பா.44.

195. மேற்படி, பா.326.

196. மேற்படி, பா.377.

197. மேற்படி, பா.307.
198. மேற்படி, பா.10,41,217.
199. மேற்படி, பா.217.
200. மேற்படி, பா.187,346,363.
201. மேற்படி, பா.136,176.
202. மேற்படி, பா.38,44.
203. மேற்படி, பா.266,279,324.
204. மேற்படி, பா.145.
205. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலத் தல வரலாறு, ப.86.
206. சுப்பிரமணிய முனிவர், சித்திரசபை திருவிருத்தம், பா.5-வ.1.
207. மேற்படி, பா.5-வ.6.
208. மேற்படி, பா.6-வ.5.
209. மேற்படி, பா.9-வ.6.
210. மேற்படி, பா.1-வ.1.
211. மேற்படி, பா.1-வ.3.
212. மேற்படி, பா.5-வ.6.
213. மேற்படி, பா.2-வ.5; பா.3-வ.3.
214. மேற்படி, பா.2-வ.3.
215. மேற்படி, பா.1-வ.5.
216. திருநாவுக்கரசர், தேவாரம், திருஅங்கமாலை, பா.10.
217. சுந்தரர், தேவாரம், பதிகம்-12, பா.3.
218. மாணிக்கவாசகர், திருவாசகம், திருப்புலம்பல், சிவானந்த முதிர்ச்சி.
219. மாணிக்கவாசகர், திருக்கோவையார், பா.17.
220. கபிலர், சிவபெருமான் திருவந்தாதி, பா.80, 84.
221. சேக்கிழார், பெரியபுராணம், பா.2784.
222. சேக்கிழார், பெரியபுராணம், சேரமான் பெருமாள் நாயனார் புராணம், பா.106,107.
223. பட்டினத்தார், திருஏகம்பமுடையார் அந்தாதி, பா.57,60.
224. அருணகிரிநாதர், திருப்புகழ், பா.492.
225. அருணகிரிநாதர், திருப்பத்தூர் புராணம், கௌரி தாண்டவச் சருக்கம், பா.13.

# தொல்பழங்கோயில் பற்றிய உண்மையும் கூத்தர் கோயிலின் முதன்மையும்

ஒருகத்தி லயனாகி யோருகத்தி லரியாகி யுடைய தேவன்
பேருகத்தி லரனாக வீற்றிருக்குந் தலமிது[1]

என்னும் தலபுராண வரிகள், இப்பதியில் இன்று அரனாக வீற்றிருக்கும் இறைவன் முன்பு அயனாகவும், அரியாகவும் விளங்கியுள்ளான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. அச்செய்தி பற்றிய உண்மையையும் தொல்பழங் கோயில் எது என்பதையும் இங்குக் காணலாம்.

## 1. அ. தலபுராணம் தருகின்ற தகவல்கள்

விரிகூட விரித்ததமிழ் முனிக்கு நாதன்
மிக்கபுடார்ச் சுனபுரத்து மாலா மெம்மைப்
புரிகூட முடித்தசடைப் பரம னாக்கிப்
பூசை செய்து வருடை நடங் காண்பாய்[2]

என்று இறைவனே, அகத்திய முனிவருக்கு, புடார்ச்சுனபுரமாகிய குற்றாலநகரில் அமைந்துள்ள பெருமாளை, சிவனாக்கி வழிபாடு செய்யுமாறு ஆணையிட்டுள்ளான். அவ்வாணையின்படி அகத்தியர் குற்றாலம் நோக்கி வருகிறார். வழியில் பல இடங்களில் லிங்கம் அமைத்து இறை வழிபாடு செய்கிறார். சித்திர கங்கையை, சித்ரா நதியாக, பொதிய மலையில், திரிகூட மலைவெற்பில் நின்று நிலை பெறுமாறு ஆணையிடுகிறார். குற்றால மலையின் அழகையும், செண்பக வனக் காடுகளின் செழிப்பையும் கண்டு மகிழ்கிறார். அங்கு வாழும் அசுரர், சித்தர், முனிவர், காந்தருவர், இயக்கர் அனைவரும் தொடர, திரிகூட மலையையும், அருவியையும் வலம் வந்து

இறைவன் கோயிலை அடைய விரும்பி சங்க வீதி வழியாகத் திருமால் உறைகின்ற திருக்கோயிலின் வாயிலை அடைகின்றார். அங்கு நிற்கும் காவலர்களும், மறையவர்களும், சிவபக்தன், பெருமாள் கோயிலுக்குள் செல்லக்கூடாது என்று தடுக்கின்றனர். அவர்களை மறுத்து, அரியும், சிவனும் ஒன்று என்ற உண்மையை எடுத்துரைக்கிறார். திருமாலின் பத்து அவதாரங்களில் 5-இல் சிவ அனுக்கிரகமும் 5-இல் சிவனுடைய தண்டனையையும் பெற்றதை விளக்குகிறார். கஜேந்திரனைக் காக்க சக்கரத்தை, சிவபெருமானிடமே பெருமாள் பெற்ற செய்தியையும் ஆலகால விடத்தையுண்ட சிவன் தான், திருமால் உட்பட உலகத்தைக் காத்த பெருமையையும் எடுத் துரைக்கிறார். சலந்திரன் மனைவி இறந்தபின், அவள்மீது கொண்ட மோகத்தின் காரணமாக, அவள் சாம்பலில் புரண்ட மாலின் மோகத்தைப் போக்கியதும் உமையம்மை வழங்கிய துளசியே என எடுத் துரைக்கிறார். சிவனும் பெருமாளும் உயிரும் உடலும் போன்றவர்கள் என்று பல நீதிகளை அகத்தியர் எடுத்துரைத்தும் அகத்தியரைக் கோயிலுக்குள் வைணவர்கள் அனுமதிக்கவில்லை. எனவே, கோபங் கொண்ட அகத்தியர் அங்கிருந்து திரும்பி அருகிலுள்ள திருவிலஞ்சி என்னும் தலத்திற்கு - குமரன் வாழும் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குகிறார்.

திருவிலஞ்சிக் குமரனிடம், இறைவனின் ஆணையையும், குற்றாலத்தில் நடந்தவைகளையும் எடுத்துரைக்கிறார். தமிழ் முனிவனின் வேண்டுகோள் கேட்ட தமிழ்க் கடவுளும் நன்னகராகிய குற்றாலத்தில் உள்ள பெருமாளை, சிவனாக்க உபாயம் கூறுகிறான்.

கூறுமவர் கோலமொடு கோயிலிடை யேகி
வீறுதமி ழாலரியை வேதமனு வாலே
யாறுபுனை வேணியர னாதல்புரி பூசை
ஏறுமகு டாகம மென[3]

என்று முருகன் வழிகாட்டியுள்ளான். வைணவர்போல வேடம் புனைந்து கோயிலின் உள்ளே புகுந்து, அரியை அயனாக்கி, மகுடாகம முறையில் பூசை செய்யுமாறு அருளுரை வழங்கினான். அன்று இரவும், மறுநாள் இரவும் மணலினால் இரண்டு லிங்கங்களைச் செய்து ஒவ்வொரு நாளும் பூசைகள் தனித்தனியே செய்து இறைவனின் பூரண அருளைப் பெறுகிறார். இரண்டு மணல் லிங்கங்களையும் ஒன்றாக இணைத்து, இருவாலுக நாயகர் என்ற பெயரில், அதாவது இருமுறை மணலால் செய்யப் பட்டவர் என்னும் பொருளில், திருவிலஞ்சிக் குமரன் கோயிலில் அமைத்துவிட்டு மீண்டும் குற்றாலம் சென்றார். இத்திரு விலஞ்சிக்

குமரன் கோயிலை, 1395-96இல் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னன் ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் புதுப்பித்துக் கட்டியுள்ளான்.[4]

திருவிலஞ்சிக்குமரனின் அருளுரைப்படி அகத்திய முனிவரும், வைணவ வேடம் தாங்கிக் குற்றால நன்னகர் அடைகிறார். அவருடைய வைணவக் கோலக் காட்சியை,

மட்டவிழ் துளப மாலை பவித்திர மாலை பூண்டு
பொட்டணி நுதன்மே லூர்த்த புண்டரந் துலங்கச் சாத்திப்
பட்டவர்த் தனர்கள் சூழப் பரமபா கவதனாகி
எட்டெழுத் தோதியுள்ளேயுண்மையெட் டெழுத்தை யுன்னி
காதிடைத் துளவ வேடங் கனககுண் டலங்கள் சாத்தி
ஆதிய சுதன்கோவிந்த னாலமர் ளென்ன
ஒதிய பொது நாமங்கள் உரைத்த[5]

என்று தலபுராணம் காட்டுகிறது. திரிகூடநகரில் சிவனே அயனாகவும், திருமாலாகவும் இருந்த காரணத்தினால் சிறந்த சிவனடியாராகிய அகத்தியர் வைணவ அடியார் வேடங்கொண்டது அச்சிவனுக்கு ஏற்புடையதாகும். பெருமாளின் அடியவர் வேடங்கொண்டு, சங்க வீதி அடைகின்றார். எதிர்கொண்டழைத்த வைணவப் பெரியோர்களிடம்,

திருமலை முளரிக் கண்ணன் திருப்பதி யிருந்தோ முன்செய்
பரிவுறு தவத்தா லீண்டுத் திருமுற்றம் பரவ வந்தோம்[6]

எனக் கூறுகிறார். இதனால் திருக்குற்றால நகருக்கு, திருமுற்றம் என்ற பெயர் வைணவத் தலமாக இருந்தபொழுது வழங்கியது என்ற செய்தியை அறிய முடிகிறது. திருப்பதியிலிருந்து, நேராகத் திருமுற்றம் வந்ததாகக் கூறும் அகத்தியரை வணங்கி, கோயிலை வலமாக வந்து, கோயிலினுள் அழைத்துச் செல்கின்றனர். கோயிலினுள் செல்லும் வழியில், துவாரபாலகர் இருவரும் இவரைக் கண்டு அதிசயித்து, ஒருவர், "நேற்று வந்தவர்தானே" என்று வினவு முறையில் கையால் வினா எழுப்ப, மற்றவர் 'யானறியேன்' என்று கைவிரித்து பதில் கூறுகிறார். இவ்வறிய துவாரபாலகர் இருவரையும் அந்தக் கோலத்தில் இன்றும் மாடக் கோயிலின் வாயிலில் காண முடிகிறது.

கோயிலினுள் சென்ற அகத்தியர், சங்கு சக்கரம் ஏந்திய, நின்ற கோலத்திலிருந்த பெருமாளின் அழகையெல்லாம் கண்டு மனமுருகி, 'முத்தனே' 'முளரிக் கண்ணா' என்றெல்லாம் போற்றி மகிழ்கிறார். வைணவ அடியார்கள் கொண்டுவந்த பூசைப் பொருட்களை மட்டும் ஏற்றுக்கொண்டு அவர்களை வெளியே இருக்கப் பணித்து, திருக்

கதவைச் சாத்தித் தாளிட்டார். பெருமானை வணங்கி, இறைவன் அருளால் அப்பெருமானின் மேனியை, சிவனாக மாற்றினார். அக் காட்சியை,

முறுகுவலம் புரிக்கரத்து மான் குறுகப் பெரியதுழாய் முடியின்மீது
சிறிய மதிக் கலைகுறுகத் திலகநுதல் விழிகுறுகச் செழும்பூண் மார்பில்
இறையரவப் பணிகுறுக நிகலவுல முநிறைந்து நீண்டமேனி
குறுகுறு கெனப் பரவித் திருவடிக் கீழ் குறுகுங்காலை[7]

சிவம் பெருகக் குறுகியருள் பெருகினான்
குற்றாலத் தேவ தேவன்[8]
எனத் தலபுராணம் விவரிக்கிறது.

சிவலிங்கமாக மாற்றப்பட்ட பெருமாளுக்கு உரிய பூசனைகள் அனைத்தும் முறையாகச் செய்து, மகிழ்ந்து இறைவனை வணங்கி, அவன் அருள் பெற்றபின், கதவைத் திறக்கிறார். சிவலிங்கக் காட்சியைக் கண்ட வைணவர்கள் கோபம் கொள்கின்றனர். "மந்திர வடிவாய் நின்ற மாயனை யிலிங்கமாக இந்திரசாலஞ் செய்தான் யார் கொலர்" என்று தங்களுக்குள்ளாகவே வினா எழுப்பி, இறுதியில் கபடவேடம் கொண்டு தங்களை ஏமாற்றிய அகத்தியரை சூழ்ந்துகொள்கின்றனர். இறைவன் அருளால், ஒரு தர்ப்பைப் புல்லை மந்திரித்து அவர்கள்மீது அகத்தியர் ஏவுகிறார். அப்புல்லினை எதிர்க்க இயலாத அவ்வைணவர்கள் அகத்தியரைப் பணிகிறார்கள். அகத்தியரும் அவர்களுக்கு அருளுரை கூறி, திரிகூடநாதரின் சங்க வீதியில் தென்மேற்குப் பக்கத்தில் பெருமாளை வைத்துப் பூசை செய்யுங்கள் என்று கூறுகிறார். அவ்வாறு உருவாக்கப்பட்ட நன்னகரப் பெருமாள் சன்னதி, சங்க வீதி தென்மேற்குப் பகுதியில் இன்றும் உள்ளது.

குற்றாலநாதர் கோயிலுக்கு வெளியில் அமைந்துள்ள கூத்தர் கோயிலில் பூசைகள் செய்துவந்த மறையவர்களை அழைத்து, திருக் குற்றால நாதருக்குப் பூசை செய்ய வேண்டிய முறைகளையெல்லாம் எடுத்துக் காட்டிவிட்டு, இறைவனின் திருமணக் காட்சியையும், திருநடனக் காட்சியையும் கண்டு மகிழ்ந்தார். இன்றும் இக்கோயிலில் இறைவனைப் பகலில் தேவர்களும், இரவில் அகத்தியரும் பூசை செய்வதாக அனைவரும் நம்புகிறார்கள்.

தலபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அகத்தியர், காலத்தால் பிற்பட்டவராக இருத்தல் வேண்டும். அகத்தியம் என்னும் தமிழ் இலக்கணம் கண்ட புலவர் அகத்தியர் முதல், சிவனடியாராகக் காட்சி

தரும் அகத்தியர் வரை பல அகத்தியர் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. புராண ஆசிரியர் அச்செய்திகளைத் தன்னுடைய இலக் கியத்தில் இடம்பெற்றுள்ள அகத்தியர்மேல் ஏற்றிக் கூறியுள்ளார். உருவ வழிபாடு,சடங்கு முறைகள், போன்றவற்றை இப்புராணத்தில் இடம்பெற்றுள்ள அகத்தியர் செய்வதால், இவர் மிகப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவர் என முடிவு செய்யலாம்.

### 1. ஆ. கோயிலார் காட்டும் தகவல்கள்

அயன், அரனாக மாறியமைக்குத் தலபுராணம் தவிர வேறு இலக்கியச் சான்றுகள் கிடைக்கவில்லை. "நன்னகர் மேனிய மாயனை விமலனாக்கு" [9] என்று இறைவன் அகத்தியருக்கு அருளிச் செய்த வாக்கின் அடிப்படையில்தான் இக்கதையே வழங்குகிறது. ஆனால், இக்கதையின் அடிப்படையில் இன்றைய கோயிலைப் பார்க்கும் பொழுது பல செய்திகள் வெளிப்படுகின்றன. தலபுராணத்தில் குறிப் பிடப்பட்டுள்ள துவாரபாலகர்களின் காட்சியும், நன்னகரப் பெருமாள் சன்னதியும், கூத்தர் கோயிலும் இன்றுமுள்ளன.

குறுமுனி, திருமாலைச் சிவனாக்க, அவரைத் தன் கைகளால் தொட்டதால் மூலவராக விளங்கும் திருக்குற்றால நாதரின் தலைப் பாகத்தில் ஐந்து விரல்களும் பதிந்துள்ள அடையாளம் இன்று காணப் படுகிறது. திருமுகச் சாயலும் நுட்பமாகத் தெரிகிறது என்று கூறு கிறார்கள்.[10]

அகத்தியர் இறைவனின் தலையைத் தொட்டு, குறுகுக, குறுகுக' என்று கூறி அழுத்திய காரணத்தினால், இறைவனுக்கு நீங்காத் தலைவலி உண்டாயிற்று என்றும், அதனைப் போக்க இன் றும் இறைவனுக்கு, நாள்தோறும் தைல முழுக்கு செய்கிறார்கள். இர வில் இறைவனுக்கு சுக்குக் கசாயம் (சுக்குநீர்) நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது. இந்த சுக்குக் கசாயம் உடல் வலிகளைப் போக் கும் அறிய மருந்தாகும். அதேபோல அநேக மூலிகைகள், வேர்கள், மருந்துச் சரக்குகள் சேர்த்து மருத்துவ முறைப்படி காய்ச்சப்படு கிற சந்தனாதித் தைலத்தைத்தான் இறைவனின் திருமுழுக்கும் பயன் படுத்துகின்றனர். இந்தத் தைலம் தலைவலி, வயிற்றுவலி, காசநோய், இளைப்பு போன்ற நோய்களுக்கு மருந்தாகவும் பயன் படுகிறது.

திருக்குற்றாலநாதருக்கு நாள்தோறும் தைல முழுக்குச் செய்து சுக்குநீர் நைவேத்தியம் செய்வதை விளக்குகின்ற முறையில் "வற்றாக் குடி நீரும் மாறாதத் தலையிடியும்", என்னும் சொல் வழக்கு இப்பகுதி

மக்களிடையே காணப்படுகிறது. எனவே, அகத்தியரால் பெருமாள் கோயில், சிவன் கோயிலாக மாற்றப்பட்ட செய்தியை மக்களும் அறிந்துள்ளார்கள்.

## 1. இ. கோயில் அமைப்பின் அடிப்படையில் எழக்கூடிய கருத்துக்கள்

(1) கோயில் சங்கு வடிவத்தில் அமைந்துள்ளது. சங்கு பெருமாளுக்குரிய ஒன்று, சிகரத்தில் சக்கரம் காணப்படுகிறது. சக்கரமும் பெருமாளுக்குரியது,

பொருவில்சின கரங்கடவுள் வடிவாக வாயிலைந்தும் பொறிகளாகத்
திருநெடுமால் வலம்புரியே மறுகாகத் திகரிமணிச் சிகரமாக"

இவ்வாறு கோயிலின் வீதியாகவும், சிகரமாகவும் பெருமாளின் சங்கும், சக்கரமும் விளங்குவதைக் தலபுராணம் காட்டுகிறது. சுவாமி, அம்மன் பராசக்தி ஆகிய மூன்று கோயிலுக்குமாகச் சேர்ந்து அமைந்திருக்கின்ற சுற்று வீதி சங்க வீதி என்று பெயர் பெற்றது. இவ்வாறு கோயில் சங்கு வடிவத்திலிருப்பதாலும், கோயிலின் சிகரத்தில் சக்கரம் இடம்பெற்றிருப்பதாலும், இக்கோயில் முதலில் பெருமாள் கோயிலாக இருந்திருக்கலாம்.

(2) சிவன் கோயில்களில் எல்லாம் அன்னையின் சன்னதி ஒன்று தான் அமைந்திருக்கும். ஆனால் பெருமாள் கோயில்களில் பூதேவி, சீதேவி ஆகிய இருவருக்கும் தனித்தனியே சன்னதி அமைந்திருக்கும். திருக்குற்றாலநாதர் கோயிலிலும் இரண்டு அம்மன் சன்னதி உள்ளன. மூலவருக்கு வலப்புறம் குழல்வாய்மொழி அம்மன் சன்னதியும், இடப்புறம் சக்திபீடம் என்னும் பராசக்திக் கோயிலும் அமைந்துள்ளன. இவற்றைப் பார்க்கும்பொழுது, பெருமாள் கோயிலாக இருந்த பொழுது, அப்பெருமாளுக்கு இருபுறமும் இரண்டு தேவியர் சன்னதி அமைந்திருக்கலாம். பெருமாள் கோயிலை, சிவன் கோயிலாக மாற்றிய பொழுது; சீதேவிக் கோயிலைக் குழல்வாய் மொழி அம்மன் கோயிலாகவும், பூதேவி சன்னதியை பராசக்திக் கோயிலாகவும் மாற்றியிருக்கலாம் எனக் கருதலாம். குழல்வாய் மொழி அம்மனுக்கு நாச்சியார் குழல்வாய்மொழி என்றும், குழல்வாய் மொழி நாச்சியார் என்றும் வேறு பெயர்கள் வழங்குகின்றன. பொதுவாக நாச்சியார் என்ற சொல் பெருமாளின் தேவியைக் குறிப்பதாகும். மேலும், அம்மன் கோயிலில் சன்டேஸ்வரி சன்னதியும் இல்லை. அம்மன் சன்னதி முன் மண்டபத் தூணில் ஆஞ்சநேயர் விக்ரகம் உள்ளது. சன்னதியில் கொடி மரம், பலிபீடம் கிடையாது. எனவே, குழல்வாய்

மொழியம்மன் கோயில் முன்னர் சீதேவி சன்னதியாக இருந்திருக்கலாம் என்று கருத வாய்ப்புண்டு.

3) திருக்குற்றாலநாதர் கோயிலில், நுழைவாயிலில் நமஸ்கார மண்டபம், பலிபீடம், கொடிமரம், அதிகார நந்தி என்ற வரிசையில் இவைகள் அமைந்துள்ளன. பெரும்பாலும் பெருமாள் கோயிலில் இந்த வரிசையில் இவை அமைந்திருக்கும். பொதுவாக கொடிமரத்திற்கும் அதிகார நந்திக்குமிடையே பலிபீடம் சிவன் கோயில்களில் காணப்படுகிறது. இதில் விதிவிலக்கும் உண்டு. உதாரணமாக வைத்தீஸ்வரன் கோயில்கூட பலிபீடத்தையடுத்தே கொடி மரம் அமைந்துள்ளது. ஆனால் நமஸ்கார மண்டபம் என்று தனியாக பலி பீடம், கொடிமரத் திற்கு முன் அமைக்கும் வழக்கம் சிவன் கோயில் களில் காணப்பட வில்லை. ஆனால் பெருமாள் கோயில்களில் கொடி மரத்திற்கு முன் ஆஞ்சநேயர் அல்லது கருடனுக்காக ஒரு சிறு மண்டபம் காணப் படுகிறது. இக் கோயிலில் கொடிமரத்திற்கு முன் நமஸ்கார மண்டபம் காணப்படுகிறது.

(4) திருக்குற்றாலத்துப் பெருமாள்,[12] குற்றாலத்துப் பெருமானடிகள்,[13] திருக்குற்றாலநாதர் கோயிலிலுள்ள காமக்கோட்டத்துப் பெரிய நாச்சியார்[14] என்னும் பெருமாள் தொடர்புடைய பெயர்கள் இக் கோயில் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. மூலவரைப் பெருமாள் என்றும், அன்னையை நாச்சியார் என்றும் பெயர் சுட்டியிருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், குழல்வாய்மொழி அம்மனின் வேறு பெயர்களாகத் திருக்குற்றாலத் தாணு வேணு மொழிக் கவுரி, வேணுவாக் வாதினி என்ற பெயர்களும் வழக்கில் உள்ளன. எனவே, இத்தலம் "துளபக்கொன்றை முடிக் குன்றமாக்குந் தொன்னகரம்" எனக் கருதலாம்.

(5) கஜேந்திர மோட்சம் என்னும் பெருமாளின் திருஅருள் நிகழ்ச்சி நடந்த இடம் குற்றாலம் என்று குறிக்கின்றனர். அகத்தியரின் சாபத்தினால் கஜேந்திரன் என்னும் யானையாக மாறிய மன்னவன், யானை உருவில் இறைவனுக்குப் பூசை செய்வதற்காக மலர் கொய்யும்பொழுது முதலையால் கவ்வப்படுகிறான். ஆதிமூலமே என்று ஆண்டவனை அழைத்தபொழுது, இறைவன் சக்கராயுதத்துடன் தோன்றி முதலையை அழிக்கிறான். அவ்விறைவன் உறையும் பதியே திருக்குற்றாலம்.[15] அச்சக்கராயுதமே இறைவனின் கோயில் சிகரமானது. இக்கதையில், சிவ பெருமான், பெருமாள் ஆகிய இரு தெய்வங்களும் திருக்குற்றாலத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(6) வசந்த வீதி தெற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள செண்பக விநாயகர் கோயிலில் விநாயகரின் பீடத்தை நன்கு கவனித்தால், பீடத்தின் பின்பக்கம் கஜலட்சுமியின் தோற்றம் தெரிகிறது. பீடத்தின் பெரும்பகுதி உயரமான மேடைக்குள் இருக்கிறது. அந்த இடத்தி லிருந்து கஜலட்சுமிக் கோயிலை மாற்றி, அதன்மேல் விநாயகரை பிரதிஷ்டை செய்திருக்கவும் வாய்ப்புண்டு. ஆனால் இந்த விநாயகர் கோயிலின் மேடை, மற்றும் இக்கோயிலின் இன்றைய அமைப்பு 1891 ஆம் ஆண்டிற்குப் பிறகு கட்டப்பட்டதாகும். அந்த இடத்தில் இருந்த கோயில் மழை வெள்ளத்தால் அழிக்கப்பட்டது.

(7) பல்லவர் காலம் வரையில் சிவனும், மாலும் ஒன்று என்ற எண்ணம் தமிழகத்தில் காணப்பட்டது. அதன் காரணமாகவே தேவாரங்களில் பெருமாள் நிந்தனையும், திருமங்கையாழ்வார் காலத் திற்கு முன் தோன்றிய திருப்பாசுரங்களில் சிவ நிந்தனையும் காணப் படவில்லை. மாறாக இக்காலத்தில் காணப்பட்ட கோயில்களில் சிவனும், பெருமாளும் ஒரே கோயிலில் அடுத்தடுத்து இருந்த காட்சியைக் காணமுடிகிறது. நெல்லை மாவட்டத்தில் பாடல்பெற்ற திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலிலும் மற்றும் அம்பா சமுத்திரம், திருக்குறுங்குடி, விஜயநாராயணம் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களிலும் அரியும் அயனும் பக்கத்து சன்னதியில் அமைத்து உள்ளனர். அதுபோல குற்றாலநாதர் கோயிலிலும் அமைந் திருக்கலாம். ஏனெனில், திருக்குற்றாலநாதர் கோயினுக்கும், பாரசக்தி சன்னதிக்கும் இடையே ஒரு விசாலமான மண்டபம் காலியாகக் காணப்டுகிறது. இம்மண்டபத்தின் தோரண வாயில், முகப்பு ஆகிய வற்றைக் காணும்பொழுது குற்றாலநாதருக்கு இணையான ஒரு சன்னதியாக இம்மண்டபம் விளங்கியிருக்க வேண்டும். குற்றால நாதரின் தேவியாக இடப்பக்கம் குழல்வாய்மொழி சன்னதி காணப் படுவதுபோல், இந்த மண்டபத்தின் வலப்பக்கம் பராசக்தி சன்னதி காணப்படுவதால் பெருமாளுடைய தேவி சன்னதியாக இது இருந் திருக்க வேண்டும். இம்மண்டபம், இன்று வெஞ்சன அறையாகப் பயன் படுத்தப்படுகிறது. முன்னர் இந்த மண்டபத்தில் கூட பெருமாள் சன்னதி அமைந்திருக்கலாம். இன்றும், நெல்லையப்பர் சன்னதியில் இடப்பக்கம் காணப்படும் தனியறையில்தான் பெருமாள் பள்ளி கொண் டுள்ளார். அதே முறையில் இந்த அகன்ற மண்டபத்தில் பெருமாள் சன்னதி இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

பல்லவர் காலத்திற்குப்பின் சைவ, வைணவ மதங்களிடையே ஏற்பட்ட வேறுபாடுகள் காழ்ப்புணர்ச்சி அதன் காரணமாக வைணவக் கோயில்கள் சிவன் கோயில்களாகவும், சிவன் அல்லது முருகன்

கோயில்கள் பெருமாள் கோயில்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. இன்றையப் பெருமாள் கோயில்களில் புகழ் பெற்றதாகிய திருப்பதி கோயில்கூட, முருகன் கோயில் என்ற ஒரு கருத்து வழங்கி வருகிறது. சிதம்பரத்தில் வைகுந்தப் பெருமாள் கோயில் மூர்த்தத்தையே பெயர்த் தெடுத்துக் கடலில் சேர்த்துள்ளனர். இத்தகைய மத வேறுபாடுகள் காரணமாக மாமன்னன் இராஜராஜன் இக்கோயிலை இவ்வாறு மாற்றிப் புதுப்பித்திருக்க வாய்ப்புண்டு. இம் மாமன்னன் அமைத்த கோயிலில் இறைவனுக்கு கர்ப்பக்கிரகம், அதன் சிகரங்களைக் கட்டிய பெருமை பாண்டிய மன்னன் ஜடாவர்மன் பராக்ரம பாண்டியனுக் குரியதாகும் என்ற செய்தி முன்பு கூறப்பட்டது. எனவே, இம்மன்னர்கள் புதிதாகக் கோயிலை மாற்றிக் கட்டியபொழுது பெருமாள் சன்னதியை மாற்றியிருக்கவும் வாய்ப்புண்டு. அதற்குப் பதிலாக நன்னகரப் பெருமாள் என்று சங்க வீதி தெற்கு மூலையில் (இன்று இருப்பது) அமைந்திருக்கலாம். ஆனால் சங்கவீதியில் காணப்படும் நன்னகரப் பெருமாள் சிற்பம் பிற்காலத்ததாகும்.

### 1. ஈ. சிவன், பெருமாள் இரண்டு சன்னதி

திருக்குற்றாலத் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ள, பெருமாள் கோயிலைச் சிவன் கோயிலாக அகத்தியர் மாற்றிய செய்திக்கு, வேறு இலக்கிய, கல்வெட்டு ஆதாரங்கள் இல்லை. அது புராணச் செய்தி என்பதால் கற்பனையானது என முடிவு செய்யலாம். புராணத்தில் குறிப்பிட்டுள்ள துவாரபாலகர்களின் வடிவம், கைகளின் பாவம் சூசிஹஸ்தம், ஆகாய வரத ஹஸ்தம் என்ற சிவன் கோயிலுக்குரிய முறையிலேயே அமைந்துள்ளது. அந்த முத்திரைகள் கவிராயரின் கற்பனைக்கு விருந்தாக மாறிக் கவியாக மாறியது. மூலவராகிய குற்றாலநாதரின் தலைப்பாகத்தில் காணப்படுவதாகச் சொல்லப்படும் ஐந்து விரல் அடையாளமும், நுட்பமாகத் தெரிவதாகக் கூறும் திருமுகச் சாயலும ஏற்புடையதல்ல. சிவலிங்கத்தின் மேற்பகுதி சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்களில் பல்வேறு வடிவங் களில் அமைந்துள்ளன. பீடத்தை மட்டும் செதுக்கி மேல்பகுதியில் தனியாக எந்தவிதமான ஒரு மாற்றமும் இல்லாமல் பொறுத்தப் பட்டுள்ளது. அவற்றையே பிற்காலத்தவர் சுயம்புலிங்கம் என்று அழைத்தனர். சங்க வீதியில் உள்ள நன்னகரப் பெருமாள் கோயில் சிற்பம் 16 ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தையது. வசந்த வீதியில் காணப்படும் செண்பக விநாயகர் கோயிலும் மிகப் பிற்காலத் திருப் பணியே. குழல்வாய்மொழி அம்மன் கோயிலில் ஆஞ்சநேயர் சிலை காணப்படும் தூண் 19 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. 'குற்றாலநாதருக்குத் தீராத தலைவலி' அதற்குத் தைலம், சுக்கு

நீர் என்பதெல்லாம் இந்தப் பகுதியில் கிடைக்கும் இயற்கையான மூலிகையின் பெருமையை உலகுக்கு உணர்த்த உருவாக்கப்பட்டக் கதைகள் எனலாம்.

சங்கு, சக்கரம், ஆமை, தாமரை, வட்டம் என்ற ஐந்து வடிவங்களில் கோயில்கள் முன்பு அமைக்கப்பட்டன. அம்முறையில் இக்கோயில் சங்கு வடிவமெனலாம். மேலும், மலையின் அடிவாரத்தில் கிடக்கின்ற சமவெளிப் பிரதேசத்தில் கோயிலை அமைத்தமையால், முறையான வடிவத்துடன் கோயிலை அமைக்க முடியவில்லை. மேலும், கோயிலின் இன்றைய வடிவம், திரிகூட மண்டபம் போன்றவைகள் பிற்காலத்து வளர்ச்சிகளே. எனவே, இவற்றின் அடிப்படையில் பெருமாள் கோயிலையே சிவன் கோயிலாக மாற்றினார்கள் என்று கூறுவது சிறப்பாகாது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பிற பாடல்பெற்ற தலங்களில் காணப்படுவதுபோல், குற்றாலத்திலும் இறைவனுக்கு இடப்பக்கம் பெருமாள் சன்னதி இருந்திருக்க வேண்டும். அப்பெருமாள் சன்னதியே இன்று வெஞ்சன அறையாகப் பயன்படுத்தப்படுகிறது. பிற்காலத்தில் அகத்தியர் என்ற பெயருடைய சிவநேசச் செல்வர் ஒருவர் அங்கு அமைந்திருந்த பெருமாள் மூர்த்தத்தை அகற்றியிருக்க வேண்டும் என்ற கருத்தே ஏற்புடையதாகக் காணப்படுகிறது.

## 2. தொல்பழங் கோயில்

அகத்தியர், பதஞ்சலி முதலிய முனிவர்களால் வணங்கப்பட்ட தொல்பழங் கோயில் எது என்ற வினா எழுகிறது. பாரதக் கதையில், அர்ச்சுனன் இழந்த சம்புடத்தை இப்பகுதியில் மீட்டதாகக் குறிப்புள்ளது. சிவபெருமான் திருவந்தாதி பாடிய கபிலரால் பாடப்பெற்ற குற்றாலநாதன் எங்கிருந்தான் என்ற வினா எழுவது உண்மையே. ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் மாணிக்கவாசகரும் பாடிய குற்றாலத் துறைக் கூத்தன் சன்னதி, கோயில் எங்குள்ளது. எங்கிருந்தது என்று காண வேண்டும்.

பெரியபுராணத்திற்கு உரை எழுதவந்த சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தம்முடைய வினாக்களுக்கு ஒரு விடையளித்துள்ளார்.[16] குற்றாலத்தல விசேடம் பற்றிக் குறிப்பிடும் பொழுது அங்கு இரண்டு கோயில்கள் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவை:

1) கூத்தர் கோயில் : சுவாமி - கூத்தர்,
அம்மை - சிவகாமியம்மை

சபை - சித்திரசபை,
தீர்த்தம் - சித்திராநதி.

2) குறும்பலா ஈசன் கோயில் : சுவாமி - குறும்பல நாதர்,
அம்மை - குழல்வாய் மொழியம்மை,
மரம் - குறும்பலா.

இவ்விரு கோயில்களும் இன்றும் குற்றாலநகரில் உள்ளன. கூத்தர் கோயில் என்பது இன்றைய திருக்குற்றாலநாதர் கோயிலின் சார்புக் கோயிலாய், சித்திரசபைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இங்கு, திருக்கூத்தர் கிழக்கு நோக்கியும், அம்மையார் தெற்கு நோக்கியும் இருந்து அருள்பாலிக்கின்றனர். இப்பழங்கோயில் 1957 இல் புதுப்பிக்கப்பட்டது. இக்கோயிலுக்குப் பூசை செய்கின்ற வேதியர்களை அழைத்தே அகத்திய முனிவர், தன்னால் மாற்றி உரு வாக்கப்பட்ட குற்றாலநாதருக்குப் பூசனைகள் செய்யுமாறு பணித்தார் என்று,

ஈசா னத்தி லிருந்தருள் கூத்த னெம்மான்
செந்நெறிப் பூசை செய்யுஞ் சிவமறை யவரைக் கூவி [17]

தலபுராணம் கூறுகிறது. கூத்தர் கோயிலில் பூசை செய்த வேதியர்களே இன்று திருக்குற்றாலநாதர் கோயிலும் பூசை செய்திறார்கள் என்பதற்குக் காரணமாக, இன்றும் கூட முதல் பூசை கூத்தர் கோயிலில் தான் தொடங்குவதைக் கூறமுடியும். கூத்தர் கோயில் பூசை முடிந்த பின்னர், விநாயகர் பூசை, அடுத்து நடராசர் பூசை, பின்னர்தான் குற்றாலநாதருக்குப் பூசை இன்று செய்யப்படுகிறது. இக் கூத்தன் நடனமாடிய இடமாகிய சித்திரசபையைக் குற்றாலநாதரும் குழல் வாய்மொழியம்மையும் விழாக்காலங்களில் வலம் வருகின்றனர். எனவே, இன்றைய குற்றாலநாதர் கோயிலின் தொல்பழங் கோயில் கூத்தர் கோயிலே என்று கருதலாம்.

ஞானசம்பந்தர் பாடிய[18] குறும்பலா ஈசர் கோயில், சங்க வீதியில் காணப்படுகிறது. இன்றைய குழல்வாய் மொழியம்மன் சன்னதியை அடுத்து, அச் சன்னதியின் முகப்பு மண்டபத்திலிருந்து சங்க வீதிக்குச் செல்லும் பாதையில் இருக்கிறது. ஆதி குறும்பலா என்று போற்றப் படும் குறும்பலா இன்று இல்லை. அம்மரத்தின் காய்ந்த பாகங் களைப் பாதுகாப்பாக வைத்து உள்ளனர். அம்மரம் 1000 ஆண்டு களுக்கு முந்தியது என்று தாவர நூலார் கருதுவதாக அம்மரத்தின் மீது காணப்படும் விளக்கப் பலகை கூறுகிறது. இன்று புதிய

குறும்பலா காணப்படுகிறது. இங்குக் குறும்பலாநாதர் காணப் படுகிறார். இவருடன் இணைந்திருந்த அம்மை குழல்வாய்மொழி, இன்று தனிக்கோயிலில் இவருக்கு இடப்பக்கத்தில் காணப்படு கிறாள். இக்குறும்பலா முதல் நூலாகிய வேதமாகவே கருதப்படு கிறது. "மறை ஒரு நான்கும் ஒருவடிவமாய்" வந்து குறும்பலா வாயிற்று. எனவேதான், குறும்பலா ஈசனைப் பாடவந்த சம்பந்தர், "குறுந்தமண நாறுங் குன்றிடஞ் சூழ்தண் சாரற் குறும்பலாவே" என்று அழைக்கிறார். 'குன்றிடன் சூழ்தண் சாரற் குறும்பலாவே' என்ற அடி களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். எனவே, இக்குறும்பலாக் கோயில் பொதிகையாகிய திரிகூடமலைக் குன்றின் அடியில், குளுமை யான சாரல் காற்று வீசுகின்ற அருவிக் கரையில் அமைந்திருந்தது எனலாம். இக்குறும்பலா அழகிய சோலை நடுவே இருந்தது, என்பதனைக் குரங்குகளும் மந்திகளும் விளையாடும் சோலை யென்றும், மயில்கள் ஆடும் சோலையென்றும், குயில் அகவும் சோலையென்றும், வருணித்துள்ளமையால் அறியலாம். இவ்வாறு மிக அழகிய சோலையில் அமர்ந்துள்ள இறைவனை, இயற்கையின் எழிலாகவே கண்டு ஞானசம்பந்தர் பாடியுள்ளார். வேறு எந்தப் பதியும் பெறாத பெருமையாக, தலவிருட்சத்தை முன்னிருத்திப் பாடப் பெற்றப் பதியாகத் திருக்குற்றாலம் விளங்குகிறது. குறும்பலாவின் பெருமை களையும், அமைந்துள்ள இயற்கைச் சூழ்நிலைகளையும் கண்டு மெய்மறந்து பாடிய ஞானசம்பந்தர், இறுதிப்பாடலில், "குறும்பலா மேவிய கொல்லேற்றண்ணல்" என்று குறும்பலா ஈசரைக் குறிப்பிடு கிறார். எனவேதான் இக்குறும்பலாவினை,

**கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ்**
**சதுர் வேதம் கிளைகள் ஈன்ற**
**களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்**
**சிவ லிங்கம் கனிகள் ஈன்ற**
**சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்**
**சிவ லிங்கசொரூபம் ஆக**
**விளையுமொரு குறும்பலாவின் முளைத்தெழுந்த**
**சிவக்கொழுந்தை** [19]

குறவஞ்சியும் போற்றுகிறது. குறும்பலாவின் பெருமையைக் கூறி, அக்குறும்பலாவில் முளைத்தெழுந்த சிவக்கொழுந்தாக, ஞானசம்பந்தர் காட்டிய வழியிலேயே இறைவனை, குறும்பலா ஈசனை, கவிராயரும் காண்கிறார்.

குறவஞ்சி காட்டிய "நீரிலே பெருகு குறும்பலாவிலே கொலு விருக்கும் நிமல மூர்த்தி" [20] யை இன்றும்கூடக் குறும்பலாக் கனி களில் காணமுடிகிறது. இன்று குறும்பலாக் கனியில் உருவான சிவலிங்கம் கோயிலில் காணப்படுகிறது.

ஞானசம்பந்தர் பாடிய குற்றாலப் பதிகத்தில்[21] இயற்கை வருணனையும் குளிர் தண்சாரலின் பெருமையும், தொண்டர்கள் பரவும் விழாக்காட்சியும் சித்தரிக்கப்படுகிறது. 'ஆடல் அமர்ந்தான்' என்ற அடிகள் மூலம் இறைவன் திருநடனம் செய்த செய்தியைக் காட்டு கிறார். காலனைக் காலால் உதைத்த கூத்தனை, சூலம் ஏந்திய சூலா பாணியை, இலங்கை வேந்தனுக்கு அருளிய கயிலாய வேந்தனை, வேழத்திற்கு அருள்புரிந்த வேந்தனை சம்பந்தர் இப்பதிகத்தில் போற்றியிருக்கிறார். இப்பதிகத்தில் குறும்பலா பற்றிய குறிப்பே இல்லை என்பதும், குறும்பலாப் பதிகத்தில் கூத்தன்பற்றிய குறிப்பே இல்லை என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும். ஆனால் இரு பதிகங்களும் குன்று சூழ்ந்து, சாரல் பொழிய கூதன்மாரி நுண் துளி தூங்கும் குற்றால நகரையே குறிக்கிறது. எனவே, ஞானசம்பந்தர் இங்கு வந்து காலையில் அருவிக் கரையில் குறும்பலா அடியில், அழகிய சோலையில் குறும்பலா ஈசனுடைய கோயில் காணப்பட்டிருக்க வேண்டும். குறும்பலா ஈசர் கோயிலை உள்ளடக்கிய குற்றாலநாதர் கோயில் மதில் சுவரும், பிற மண்டபங்களும் பிற் காலத்தில் எழுந்தவையே. அதேபோல சற்றுத் தொலைவில், செண்பக மரங்கள் நிறைந்த சோலையில் கூத்தர் கோயில் காணப்பட்டிருக்க வேண்டும். குற்றாலநகர் எல்லையை அடைந்ததும், குற்றாலச் சார லின் குளுமையை உணர்ந்து. "வம்பார் குன்றம் நீடுயர் சாரல்" என்று பாடத் தொடங்கியிருக்க வேண்டும். வழியெல்லாம் சிவலிங்கம் காணப்பட சிவிகையிலிருந்து இறங்கி நடந்து வந்து ஞானசம்பந்தரின் கண்ணில் முதலில் கூத்தர் கோயில் பட்டிருக்கலாம். எனவே, அங்கு வணங்கி, பதிகம் பாடி, அருவிக்குச் செல்லும் வழியில் குறும்பலா மரத்தினையும், ஈசனையும் கண்டு வணங்கிப் பதிகம் பாடினார். எனவே, ஞானசம்பந்தர் வந்தபொழுது கூத்தர் கோயில், குறும்பலா ஈசர் கோயில் இரண்டும் தனித்தனியாகக் காணப்பட்டன என முடிவு செய் யலாம். இக்கூத்தனையே, "குற்றாலத்துறைக் கூத்தன்" என்று நாவுக்கரசரும், "குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தன்" என்று மாணிக்க வாசகரும் போற்றியுள்ளது, முன்பே உரைக்கப்பட்டது.

குற்றாலநகரில் காணப்பட்ட இரு சிவன் கோயில்களையும் ஒன்றாக இணைத்துப் பெரிய கோயிலாக ஒரே கோயிலாக, திருக் குற்றாலநாதர் கோயிலாக, பிற்காலத்தில் வந்த மாமன்னர்கள்

உருவாக்கியிருக்க வேண்டும். மாமன்னன் இராசராசன் இரு கோயில் களையும் இணைத்து ஒரே கோயிலாக அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் காலத்துக் கல்வெட்டுக்களில் "குற்றால முடைய தேவன்', 'குற்றால முடைய நாயனார்' என்ற சொற்கள் காணப்படுவது சொல்லப்பட்டது. மூலவராகக் குற்றாலநாதரும் அருகில் பெருமாளுக் குத் தனி சன்னதியும் அமைந்திருக்க வேண்டும். எனவேதான், அவன் காலத்திற்குப்பின் எழுந்த சில கல்வெட்டுக்களில், "குற்றாலத்துப் பெருமாள் அடிகள், திருக்குற்றாலத்து ஆழ்வார் , என்னும் சொற்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் அகத்தியர் என்ற ஒருவர் பெருமாள் மூர்த்தத்தையே அங்கிருந்து அகற்றியிருக்க வேண்டும். பெருமாள் சன்னதியாக இருந்த பெரிய மண்டபமே, இன்று வெஞ்சன அறை யாகப் பயன்படுகின்ற, மூலவருக்கு இடப்பக்கத்தில் மூலவர் கோயி லுக்கும், பராசக்திக் கோயிலுக்கும் இடையில் காணப்படும் மண்டப மாகும் எனக் கருதலாம்.

### 3. கூத்தர் கோயிலின் முதன்மை

இன்றும் திருக்குற்றாலநாதர் கோயிலில் கூத்தனுக்கே முதல் மரியாதை. கூத்தர் கோயில் பூசை முடிந்த பிறகே குற்றாலநாதர் கோயில் பூசை தொடங்குகிறது. விழாக்காலங்களில் இறைவனும் இறைவியும் கூத்தன் நடனமாடிய சபையையே வலம் வருகின்றனர். இக்கோயிலில் நடைபெறும் மூன்று பெரும் விழாக்களில், கூத்தனின் திருவிழாவாகிய ஆதிரைத் திருநாள் தான் சிறப்புடையதாகும். ஆதி ரைத் திருநாள் முழுமையிலும் குற்றாலநாதர், குழல்வாய்மொழி யம்மையுடன் சித்ர சபையை வலம் வருகின்றார்.

கோயில் தேர்களில் நடராசப் பெருமானுக்குரிய தேர, மற்றவை களைவிடப் பெரியது. ஏகசிம்மாசனம் என்னும் தனி வெள்ளிச் சப்பரமும் பெரியதாகும். கூத்தனுக்கென்று சிறப்பு வழிபாடாக, நாள்தோறும் தீபாராதனை நடைபெறுகிறது. திருவிழாக் காலங்களில் நடராசப் பெருமான் திருவீதிகளில் திருவுலாச் செல்வதற்கென்றே தனி வழி யொன்று கோயிலில் உள்ளது. இந்த வாயிலே, சங்கர் கோயிலின் வடக்கு வாயில் ஆகும். குற்றாலநாதர் கோயிலின் நான்கு வாயில் களாக நான்கு வேதங்களும் உள்ளன. அந்த நான்கு வேதங்களுக்கும் மேலான ஒன்று ஐந்தாவது வாயிலாயிற்று. எனவேதான இவ்வாயிலே முக்கிய வாயிலாக நடராசப் பெருமானுக்கு மட்டுமே உரிய தனி வாயிலாக அமைந்துள்ளது. இந்த வடக்கு வாயிலில்தான் ராஜகோபுரம் அமைப் பதற்கான பீடம் அமைக்கப்பட்டுள்ளது.

திருக்குற்றாலநாதர் கோயிலில் முதல் மரியாதை தனி விழா, தனி வாகனம், தனித்தேர், தனி வழிபாடு, தனி வாயில் என்றெல்லாம் தனித் தன்மை பெற்று விளங்குகின்ற கூத்தனே குற்றாலக் கோயில் முதல்வ னாக முடியும். எனவே, அக்கூத்தனுடைய தனிக்கோயிலாக விளங்கும் கூத்தர் கோயில்தான் தொல்பழங் கோயில் என்ற உண்மையும் தெளிவாகிறது.

## நிறைவுரை

குறும்பலா ஈசன் கோயில், கூத்தர் கோயில் என்னும் இரண்டு கோயிலுக்கிடையே குற்றாலத்துப் பெருமாள் கோயில் அமைந்திருக்க வேண்டும். கோயில் திருப்பணியை மேற்கொண்ட பிற்காலச் சோழர் களும் பாண்டியர்களும் இரு சிவன் கோயில்களையும் ஒன்றாக்கித் திருக்குற்றாலநாதர் கோயிலை உருவாக்கியிருக்கலாம். அவ்வாறு உருவாக்கப்பட்டக் கோயிலில் பெருமாள் சன்னதி, இன்று வெஞ்சன அறையாகப் பயன்படும் மண்டபத்தில் இருந்திருக்க வேண்டும். அகத்தியர் என்னும் சிவமுனிவர், பெருமாள் சன்னதியை அங்கிருந்து அகற்றியிருக்கலாம். குற்றாலநாதர் கோயிலின் முதல்வனாக, தலைவ னாகப் பல தனித் தன்மைகளைப் பெற்ற கூத்தப் பெருமானாகிய நடராசனே விளங்குகிறார். அப்பெருமானின் கோயில் என்று கருதப் படும் கூத்தர் கோயிலே தொல்பழங் கோயில் ஆகும்.

## அடிக்குறிப்புகள்

1. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றால தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.61.
2. மேற்படி, பா.4.
3. மேற்படி, பா.115.
4. Nilakanta Sastri, K.A., The Pandya Kingdom.
5. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றால தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.127,128.
6. மேற்படி, பா.130.
7. மேற்படி, பா.142.
8. மேற்படி, பா.143.
9. மேற்படி, பா.4.
10. சிதம்பரம், டி., நிர்வாக அதிகாரி, நேர்காணல், நாள்:16.5.1986.

11. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றால தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.132.

12. A.R.E. No.444 of 1917.

13. A.R.E. No.439 of 1917.

14. A.R.E. No.609 of 1917.

15. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலத் தல வரலாறு, ப.47.

16. சுப்பிரமணிய முதலியார், சி.கே., பெரியபுராணம் - விளக்க உரை, ப.1116.

17. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றால தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.170.

18. திருஞானசம்பந்தர், தேவாரம், பதிகம் எண்.71.

19. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பா.3.

20. மேற்படி, பா.39.

21. திருஞானசம்பந்தர், தேவாரம், பதிகம் எண். 99.

# திருக்குற்றாலநாதசுவாமி கோயிலின் இன்றைய அமைப்பும் வழிபாட்டு முறைகளும்

## திருக்குற்றாலநாதர் கோயில் இன்று

நாயன்மார்களால் பாடப்பெற்று சோழ, பாண்டியர்களால் திருப் பணி செய்யப்பெற்று, புதிய மண்டபங்களும் கட்டப்பெற்று, நாயக்க மன்னர்களாலும், மக்களாலும் மிகவும் போற்றப்பட்டு வந்த திருக்குற் றாலநாதர் கோயிலின் அமைப்பு வழிபாடு, விழாக்கள் இன்று எவ்வாறு இருக்கிறது என்பது இப்பகுதியில் விளக்கப்பெற்றுள்ளது.

### 1. அமைப்பு

சங்கு, சதுரம், ஆமை, தாமரை, வட்டம் என்ற ஐந்து வடிவங் களில் தமிழகத்திலுள்ள கோயில்கள் அமைக்கப்பட்டன. அவ்வைந்து வடிவங்களில் சிறந்த வடிவமாகிய சங்கு வடிவத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக் கோயிலுக்கு வசந்த வீதி என்னும் பெயரில் வெளிச்சுற்று வீதி ஒன்றும், சங்க வீதி என்ற பெயரில் உள்சுற்று வீதி ஒன்றும் காணப்படுகிறது. அவை தவிர மூலவர், அம்பாள் கோயில் கீழ்மேலாக 376 அடியும் தென்வடக்காக 407 அடியும் (376 ' x 407') கொண்ட பரப்பளவில் அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே மூலவராகிய திருக்குற்றாலநாதர், அம்பாளாகிய குழல்வாய் மொழி அம்மை, உலக சக்தியாக விளங்கும் பராசக்தி ஆகிய மூவருக் கும் தனித்தனிக் கோயில்கள் அமைந்துள்ளன.

### அ. வசந்த வீதி

வற்றாத வட அருவியாகிய சிவமதுகங்கையில் நீராட்டிவிட்டு, வெளியே வந்து காணும்பொழுது மலையெல்லாம் சிவலிங்கமாக

அமைந்துள்ள காட்சியைக் காணமுடிகிறது. அருவியை அடுத்துப் பல படித்துறைகளும், காசிலிங்க சுவாமி கோயில் என்னும் பெயரில் ஒரு மண்டபமும் காணப்படுகிறது. அம்மண்டபத்தில் இன்று சிவலிங்கம் எதுவும் காணப்படவில்லை. வெள்ள அபாயத்திற்காக அங்கிருந்த காசிலிங்கம், அம்மையுடன் மூலவர் கோயிலின் உள்சுற்று வீதி வாயு மூலையில் முருகன் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, வழிபாடு செய்யப்பட்டு வருகிறது

சிவமதுகங்கையில் புனித நீரினை உரிய மரியாதையோடு இன்றும் வழிபாட்டுக்குக் கொண்டு செல்கிறார்கள். வடஅருவியின் படித்துறையினையும் தெற்கு வீதியையும் இணைக்க ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாலத்தின் வழியாக வந்து வசந்த வீதியின் தெற்கு வீதிக்குச் செல்ல வேண்டும். அந்த இடத்தில், ஒரு பலா மரத்தினடியில் ஓர் அய்யனார்,சற்று மேற்கே ஒரு கணபதி, சக்தியுடன் காணப்படுகிறார்கள். இங்கு கோயிலின் உள்ளே செல்வதற்கான தெற்கு வாயில் அமைந்துள்ளது. தெற்கு வாயில் முகப்பிலும், வாயில் திண்ணைகளிலும் அன்றாடக் கடைகள் தற்காலிகமாக அமைந்திருப்பதால் இவ்வாயில் கதவு பெரும்பாலும் அடைக்கப்பட்டே காணப்படுகிறது. வட அருவியில் புனித நீர், இறைவன் வழிபாட்டிற்கு இவ் வாயில் வழியாகத்தான் எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும்.

தெற்கு வீதியின் தொடக்கத்தின் இரண்டு குறிஞ்சி மண்டபங்களுடன் கூடிய படித்துறை கோயிலின் முன் வாயிலில் காணப்படுகிறது. அவ்விரண்டு குறிஞ்சி மண்டபங்களுக்கு மேல் சிறிய கோபுரங்கள் காணப்படுகின்றன. அருவிக்கரைக்குச் செல்லாமல், நேரடியாகக் கோயிலினுள் செல்பவர்களின் வசதிக்காகக் கோயிலின் முன்னே இப் படித்துறை அமைப்பட்டிருக்க வேண்டும். இந்த வீதியில் செண்பக விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. 1891-இல் வந்த பெருவெள்ளத்தின் பொழுது இக்கோயில் மிகவும் பாதிக்கப்பட்டது. விநாயகர் கோயிலை மீண்டும் வெள்ளத்தால் பாதிக்கப்படாத அளவு மிக உயரமான மேடையுடன் அமைத்துள்ளனர்.

விநாயகரைச் சுற்றி அழகிய இரும்புக் கதவுடன் அமைந்த கோயில் காணப்படுகிறது, சிறிய கோபுரமும் காணப்படுகிறது. கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் அனைவரும் முதலில் செண்பக விநாயகருக்குச் சிதறு தேங்காய் உடைப்பதற்கென்றே தனியாக ஒரு இடம் அமைத்துள்ளனர். தெற்கு வீதியில் செண்பக விநாயகர் கோயிலை அடுத்து வைத்தியப்ப விலாச மண்டபமும் படித்துறையும்

காணப்படுகின்றன. இம்மண்டபத்தில் கோயில் புத்தக நிலையமும், படிப்பகமும் கொண்ட சிறிய நூல் நிலையமும் கோயில் நிர்வாகத்தால் நடத்தப்பட்டது. இன்று, நூலகம் சன்னதித் தெருவில் உள்ள மண்டபத்துக்கு மாற்றப்பட்டு விட்டது. வசந்த வீதியில், மேற்கு வீதி மலை அடிவாரமாகக் காணப்படுகிறது. இந்த வீதியில் பிள்ளையன் கட்டளை மண்டபம் அமைந்துள்ளது.

இம்மண்டபம் தீர்த்தவாரி மண்டபம் என அழைக்கப்படுகிறது. குற்றாலநாதரும், ஆடல்வல்லானும் தீர்த்தவாரிக்கு இம்மண்டபத்திற்கே வருகிறார்கள். ஒரு சிறிய விநாயகர் கோயிலும் காணப்படுகிறது. கோயிலின் பின்புறம் மலையடிவாரத்தில் அமைந்துள்ளமையால் இங்கு அதிக அளவில் மக்கள் நடமாட்டமில்லை. இங்கிருந்து மலையைக் காண்பது கண்களுக்கு இயற்கை விருந்தாகக் காணப்படுகிறது. இங்கு ஒரு காணுமிடம் (View Point) அமைந்தால், சுற்றலா வரும் பயணிகள் குற்றால மலையின் அழகைக் கண்டு மகிழ்வதற்காக வசதியாக இருக்கும். இந்த வீதியில் கோயிலின் மேற்கு வாயில் அமைந்துள்ளது. கோயில் திருப்பணிக்காகச் செய்யப்பட்ட, பல இலட்சக்கணக்கான மதிப்புடைய, அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் மண்ணில் வீணே புதைக்கப்பட்டுள்ளன. வசந்த வீதியின் வடக்கு வீதியில் பதினெட்டாம்படி கறுப்பன் என்னும் குற்றாலக் கோயிலின் காவல் தெய்வக் கோயில் அமைந்துள்ளது. பதினெட்டு ஸ்ம்ருதிகளும் பதினெட்டுப் படிகளாய் அமைய, அதற்கு மேல் தெற்கு முகமாக இக்காவல் தெய்வம் அமைந்துள்ளது. இத்தெய்வத்தின் கண்களும், கண்களில் காணப்படும் துடிப்பும் கோயிலில் களவு செய்ய நினைப்பவர்களுக்கு அச்சத்தைக் கொடுப்பது போல விளங்குகிறது. வடக்கு வாயில் மண்டபத்தில் சிறிய காவல் தேவதைகளும் காணப்படுகின்றன. ஈசான மூலையில் காவல் தெய்வமாகிய சின்னத்தம்பி கோயில் காணப்படுகிறது. சின்னத்தம்பி, பதினெட்டாம் படிக் கறுப்பன் ஆகிய இரண்டுமே குற்றாலநாதரின் காவல் தெய்வங்களாகும்.

இவ்வடக்கு வீதியில்தான் இறைவனின் திருநடனக் காட்சியைக் காண பிலவேந்தன் வந்ததாகக் கருதப்படும் ஐந்தாம் வாயில் இருக்கிறது. இவ் வாயிலின் மரக்கதவு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. மேலிருந்து கீழ் நான்கு கட்டங்களாக மொத்தம் 8 பிரிவுகளில் 32 கட்டங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் அழகிய மரச் சிற்பமொன்று காணப்படுகிறது. அக்கதவில் காணப்படும் சிற்பங்கள் வருமாறு:

**பிரிவு 1**

கட்டம்

அ. அய்யனார் மலையில் அமர்ந்துள்ளார் -வலதுகை அபயமுத்திரை, இடதுகை இடதுகாலின் மேல் உள்ளது.

ஆ. உற்சவமூர்த்தி - பீடத்தை 5 பூதங்கள் தாங்கிய நிலையில் சங்கு ஊதும் காட்சி.

இ. ரிஷப வாகனத்தில் அம்மை - அம்மையின் மடியில் குழந்தை (முருகன்) அடியவர்கள் வணங்குதல்.

ஈ. ரிஷப வாகனத்தில் சுவாமியும் அம்மையும்.

**பிரிவு–2**

கட்டம்

அ. முருகன் வள்ளி, தெய்வயானை
- அடியவர் வணங்குதல்.

ஆ. முயலகன் தலையில் ஏகபாத நாயகர்.

இ. மூன்று கரத்துடன் விநாயகர் - மடியில் தேவி.

ஈ. திருமால், அம்மையை சிவனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தல்.

**பிரிவு–3**

கட்டம்

அ. யானைகளைத் திருமால் அடக்குதல்
- இருவர் வணங்குதல்.

ஆ. 10 கரங்களுடன், இடதுகாலை ஊன்றி, வலது காலைத் தூக்கி ஆடும் நடராசர்.

இ. குற்றாலநாதரை ஒரு மன்னர் வணங்குதல்.

ஈ. அடியவர்களுக்கு லிங்க வடிவமாகக் காட்சியளித்தல்.

**பிரிவு–4**

கட்டம்

அ. ரிஷபத்தினிகள் ஆடை விலகிய நிலை.
ஆ. கங்காளமூர்த்தி.
இ. திருமால் அருகில் அம்மையப்பன்.
ஈ. கண்ணன் குழல் ஊதல்.

**பிரிவு–5**

கட்டம்

அ. திருமால் பார்வதியை தாரைவார்த்தல்.
ஆ. இராமரை இலக்குவன் வணங்குதல்.
இ. நடராசர் வலது காலை ஊன்றி ஆடும் நடனம்.
ஈ. தெய்வமொன்று சூலத்தால் ஒரு பெண்ணை சம்ஹாரம் செய்தல்.

**பிரிவு–6**

கட்டம்

அ. திருமால் அரவணையில் பள்ளிகொண்ட காட்சி.
ஆ. உற்சவ மூர்த்தி பல்லக்கில்.
இ. நடனக் காட்சி.
ஈ. வில்லேந்திய வீரன்.

**பிரிவு–7**

கட்டம்

அ. திருமாலை இரு அடியார்கள் வணங்குதல்.
ஆ. கங்காளநாதர்.
இ. சிதைந்துள்ளது.
ஈ. இரணிய சம்ஹாரம்.

**பிரிவு –8**

கட்டம்

அ. நான்முகன்.
ஆ. குறும்பலா ஈசனை மன்னர் வணங்குதல்.
இ. சிதைந்துள்ளது.
ஈ. சிதைந்துள்ளது.

கதவுச் சட்டங்களின் இணைப்புகளில், இணைப்பு தெரியாத வாறு அழகிய பூவேலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த வழியாகத் தான் இத்தலத்தின் பெருமைக்குரிய கடவுளாகிய கூத்தபிரான் விழாக் காலங்களில் திருவீதி உலா சென்று வருகிறார். எனவேதான் சங்கு வடிவக் கோயிலின் வடக்கு வாயிலே சங்கின் முகமாகக் கருதப்படு கிறது. இந்த வாயிலில்தான் இக்கோயிலுக்கு ராஜகோபுரம் அமைப் பதற்கான பீடம் அமைத்துள்ளார்கள். கோபுரம் அமைக்கப்படாமைக் கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை. காற்று, மழை, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றம் இப்பகுதியில் அதிகம் என்பதால், பெரிய கோபுரம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டிருக்கலாம். நீர்க் கசிவுடைய பாறைகள் அடித்தளமாக அமைந்த இடத்தில் , பெரும் பாரத்தைத் தருகின்ற கோபுரங்களை அமைத்தலை பொறியியல் வல்லுநர்களும் கூடாது என்றே கருதுகின்றனர்.

வசந்த வீதியின் கீழவீதியில்தான் இன்று கோயிலின் முக்கிய வாயிலாகக் கருதப்படும் கீழவாயில் அமைந்துள்ளது. கீழவாயில் அழகிய சிறுமுகப்புக் கோபுரத்துடன் காணப்படுகிறது. இக்கோபுரம் 17-ஆம் நூற்றாண்டிற்குப்பின் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக் கோபுரத்தின் சிற்பங்கள் அனைத்தும் வண்ணம் தீட்டப்பட்டுள்ளன. முதல் தட்டின் நான்கு மூலையிலும் மீசை, தொந்தி, அகன்ற விழிகளை யுடைய பூதகணங்கள் உள்ளன. அதன் பக்கத்தின் கிழக்குப் பக்கத்தில் காளைகள், துவாரபாலகர், வணங்கிய நிலையில் காவி உடைதரித்த முனிவர்கள், ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. முக்கோண விளிம் பின் உச்சியில் யாளி வாய் திறந்து விழி அகன்ற நிலையில் இருக்க, அதன் வாயிலிருந்து இருபக்கமும் வாய் பிளந்த மகரங்கள் உள்ளன. இரண்டாவது தட்டில் இரண்டு பக்கமும் பாய்ந்த நிலையிலிருக்கும் குதிரையின்மேல் போர் வீரர்கள் காணப்படுகின்றனர். சாமரம் வீசும் பணியாள், வணங்குகின்ற நிலையில் முனிவர், இருபக்க மூலையிலும் இருவீரர்கள் தொடையில் கை வைத்து அமர்ந்த நிலை யில் சிற்பங்கள் காணப்படுகின்றன. அதற்கு அடுத்த தட்டில் விளிம்புக் கோட்டில் இரண்டு அன்னங்கள், 10 ஆண், பெண் உருவங்கள், அதற்குமேல் நடுவில் சாலை, இருபுறமும் முனிவர்கள். முனிவர் களின் இரு புறமும் கோபுரத்தைத் தோளில் தாங்கிய நிலையில் இருவர் சிற்பங் கள்; முதல் நிலை வாயிலின் இருபுறமும் சிறுசிறு சிற்பங்கள் அதற்கு மேல் சாலையமைப்பில் சிகரம், சிகரத்தில் மூன்று கலசங்கள் உள்ளன.

கோபுரத்தின் வடக்குப் பகுதியில் முத்தமிடும் காதல் பறவைகள், நான்முகன், யாழி முதலான சிற்பங்கள் காணப்படுகின்றன. தெற்குப்

பக்கத்தில் நடராசப்பெருமாள் முயலகனின் கையிலுள்ள பாம்பின்மீது காலை வைத்து நடனமாடும் காட்சி, அதைக் காணும் நிலையில் முதுமையான பெண்ணொருத்தியும் பருவப்பெண்களும் சிற்பங்களாகத் தோன்றும் காட்சி. மேற்பகுதியில் காலடி தூக்கிய நிலையில் ஒருவன்; அவன் தொடையில் காலை வைத்து நிற்கும் ஒருத்தி; திறந்த மார்போடு ஒரு பெண்; வணங்கிய நிலையில் ஒரு பெண் முனிவன் ஒருவன் அப்பெண்ணின் காலில் விழுந்து கிடக்கும் தோற்றம். மற்றொரு முனிவன் அவளைக் காமவேட்கையோடு பார்க்கிறான். அதற்கு மேல் தட்சிணாமூர்த்தி; அதற்கு மேலாக கையில் வீணையுடன் கலைமகள் - இவையெல்லாம் அழகொழுகும் சிற்பங்களாகக் காணப் படுகின்றன. கோயிலின் உள்ளே செல்வதற்கான படிக்கட்டின் இரு புறமும் அழகிய யானை வடிவங்களை அமைத்து வண்ணம் தீட்டி யுள்ளனர். இக்கீழவீதியின் வடக்கு மூலையில்தான் கோயில் அலு வலகம் அழகிய கட்டடத்தில் அமைந்துள்ளது. அலுவலகத்தின் முன் நீருற்றுடன் கூடிய அழகிய சிறு பூங்கா, செண்பகவனம், அமைக்கப் பட்டுள்ளது. இக்கீழவீதியில் சாரல் காலங்களில் கடைகள் அமைக்கப் படுகின்றன.

## திரிகூட மண்டபம்

திருக்குற்றாலநாதர் கோயிலின் கிழக்கு வாயில் வழியாக உள்ளே செல்லும்பொழுது முதலில் இருப்பது திரிகூட மண்டபமாகும். சின்னணைஞ்சாத்தேவனால் கட்டப்பட்ட இம்மண்டபம் அழகிய கல் வரிசைகளுடன் கூடிய தளத்துடன் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் சற்று உயரமான மேடைபோல் சபாபதி மண்டபமும் வசந்த மண்டபமும் அமைந்துள்ளன. சபாபதி மண்டபத்தில்தான் நடராசர் மார்கழி திருவாதிரை நாளில் கொலுவீற்றிருப்பார். சிறப்புமிக்க அபிஷேக, ஆராதனைகள் இங்குதான் நடைபெறும்.

வசந்த மண்டபத்தில்தான் குற்றாலநாதரும் குழல்வாய்மொழி அம்மனும் விழாக்காலங்களில் வீற்றிருப்பர். இங்கு வைத்துதான் அலங்காரங்கள் நடைபெறும். வசந்த உற்சவத்தின்பொழுது இம் மண்டபத்தை அழகுபடுத்துகின்றனர். திரிகூட மண்டபத்தின் மேற்கு மூலையில் இறைவனுக்கு அபிடேகத் தைலம் தயாரிக்கும் அறை காண்ப்படுகிறது. தைலத்தின் பெயர் மகாசந்தனாதித் தைலம். அநேக மூலிகைகள், வேர்கள், மருந்துச் சரக்குகள் சேர்த்துப் பக்குவமாகக் காய்ச்சப்படுகிறது இத்தைலம். இத்தைலம் தலைவலி, வயிற்று வலி, காசம், இளைப்பு போன்ற நோய்களைத் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

தெற்கு வீதியில் செண்பக விநாயகரை வழிபட்டுவிட்டு வருபவர்கள், வட அருவியிலிருந்து வருபவர்கள் வசதிக்காக இத்திரிகூட மண்டபத்திற்குத் தெற்கு வீதியிலும் ஒரு வழி உள்ளது. மண்டபத்தின் தெற்கு வாயில் பக்கத்தில் கோயில் பிரசாதங்கள் விற்பனை செய்யும் இடமுள்ளது. பூ , கற்பூரம், போன்ற பூசைக்குரிய பொருட்கள் விற்கும் கடைகள் இருக்கின்றன. பக்தர்கள் தங்களுடைய காணிக்கையைச் செலுத்துவதற்கும் வசதியாக மிகப் பெரிய உண்டியல் ஒன்றும், சிறிய உண்டியல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தைக் கடந்து கோயிலின் உள்ளே செல்லும் வழியில் துவார விநாயகராகிய அம்பல விநாயகர் சன்னதியும், துவார சுப்பிரமணியராகிய பால சண்முகர் சன்னதியும் காணப்படுகின்றன. தெற்கே கீழவாயில் அய்யனார் சன்னதி உள்ளது. திரிகூட மண்டபத்தின் இருபக்கமுமாக 26 தூண்கள் காணப்படுகின்றன. இறுதியில் காணப்படும் 6 தூண்களில் வணங்கும் நிலையில் சிற்பங்கள் முற்றுப்பெறாமல் காணப்படுகின்றன. மண்டபத்தின் விதானத்தில் 12 ராசிகளும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

## ஆ. சங்க வீதி

திருக்குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மன், பராசக்தி என்னும் தரணிபீடம் ஆகிய மூன்று கோயில்களை உள்ளடக்கிய உட்சுற்று வீதி சங்க வீதியாகும். ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனியாக ஒரு உட்சுற்று வீதி இருப்பதால் இதை வெளிச்சுற்று வீதி அல்லது வெளிப்பிரகாரம் என்றும் கூறுவர். மூன்று சன்னதிகளுக்கும் பொதுவாக கோயிலினுள்ளே அமைந்திருப்பதால் இதனை உட்சுற்று வீதி என்றும், வசந்த வீதியை வெளிச்சுற்று வீதி என்றும் அழைப்பது பொருத்தமாகும்.

திரிகூட மண்டபத்திலிருந்து கிழக்கு வாயில் வழியாக சங்க வீதியின் உள்ளே நுழைய வேண்டும். நுழையும் வாயிலில் மரவேலைப்பாடுகள் மிகுந்த, தோரண வாயில் போன்று, மர மண்டபம் உள்ளது. கல்லால் செய்யப்பட்ட (தூணைச்சுற்றி மரத்தூண்கள் அமைக்கப்பட்டு, மரத்தால் செய்யப்பட்ட) சிறிய மர மண்டபம் காணப்படுகிறது. முன்பகுதியில் இருபக்கங்களிலும் 9 x 2=18 தூண்களும், பிற்பகுதியில் 2 x 5=10 தூண்களும் பூ வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. யானை வீரர்களும் குதிரை வீரர்களுமான சிற்பங்கள் காணப்படுகின்றன. பழத்தை வாயில் வைத்துக்கொண்டு மரத்திலிருந்து இறங்கும் குரங்கும், கையில் எடுத்துக்கொண்டு இறங்கும் குரங்கும் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளன. இருபாமம் உள்ள கொடுங்கைகள்

பலாப்பழம்போல் அமைக்கப்பட்டு அவற்றை கிளி கொத்துவது போல வும், புறாக்கள் பறித்து வருவது போன்றும் செதுக்கப்பட்டுள்ளன.

கொடிப்பூ வேலைப்பாடுகளுடன் தெய்வ வடிவங்களும் காணப் படுகின்றன. பெருமாள், இறைவனுக்கு பார்வதியை தாரை வார்த்துக் கொடுக்கும் காட்சி மூன்று வகையாக வடிக்கப்பட்டுள்ளது. ரிஷப வாகனத்தில் சுவாமி - அம்பாள், அம்பாள் தனியாக, ஊர்த்தவத் தாண டவம், மகிசாசுரன் வதம், காளி சிற்பம் ஆகிய இறைவனின் சிற்பங் களும், கூன்விழுந்த நொண்டி, கோலூன்றி இருகரங்களையும் கோலில் வைத்து மோவாயை அதில் படிய வைத்துள்ள ஆடவன் போன்ற மனிதனின் சிற்பங்களும் காணப்படுகின்றன.

இதனை அடுத்து, நமஸ்கார மண்டபம் காணப்படுகிறது. ஆமை யின் மீது அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் பக்கங்களில் ஆமை யின் காலும், முன்னர் ஆமையின் தலையும் காணப்படுகிறது. தூண் களில் பூவேலைகள் செய்யப்பட்டுள்ளன. அதனை அடுத்து பலிபீடம், கொடிமரம், நந்தி அமைந்துள்ளது. கொடிமரத்திற்கு பொற்கவசமிடப் பட்டுள்ளது. இவற்றிற்கு இடதுபுறமாகக் காணப்படும் (தென் பக்கம்) இரண்டு தூண்களில் வடக்கு நோக்கிய நிலையில் இரு சிலைகள் காணப்படுகின்றன. முதலில் இருப்பது வடகரை ஆதிக்கம் சொக்கம்பட்டி குறுநிலமன்னர் பெரியபட்டம், பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவருடையது. இரண்டாவது, சின்னப்பட்டம் இராசகோபாலத் தேவருடையது. இருவருமாகச் சேர்ந்து 1660 முதல் 1721 ஆண்டு வரை கோயிலுக்குச் செய்த திருப்பணியை நினைவு படுத்துகின்ற முறையில் அச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத் தூண்களின் அடிப்பாகத்தில் அழகிய வேலைப்பாடுடன் கூடிய பாவை யர் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

அச்சிலைகளை அடுத்து இடப்பக்கத்தில் கோயில் மடப் பள்ளி காணப்படுகிறது. அதனை அடுத்து குழல்வாய்மொழி சன்னதிக் கான முக்கிய வாயில் படிக்கட்டுகளுடன் காணப்படுகிறது. அதனைத் தாண்டி சங்க வீதியின் தெற்குப் பகுதிக்குள் (சங்கவீதி - தெற்கு) செல்லவேண்டும்.

குழல்வாய்மொழி அம்மன் சன்னதியின் முக்கிய படிக்கட்டு வழியாக ஏறி உள்ளே சென்றால் அழகிய, பெரிய, கல்தளம் அமைக்கப் பட்ட, பெரிய பெரிய ஜன்னல்கள் காரணமாக வெளிச்சமும் காற்றும் நிறைந்த மண்டபம் அமைந்துள்ளது. மண்டபத்தினுள் உயரமான மேடையில் அம்பாளின் கருவறை அமைந்துள்ளது. அம்பாள் கருவறை

முழுவதும் பளிங்குபோல் இழைக்கப்பட்ட கருங்கல்லால் ஆனது. இதனைச் சுற்றிப் பாதுகாப்பிற்காகப் பித்தளைக் கம்பியினால் வேலி அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சன்னதியின் உட்கதவுகள் வெள்ளித் தகட்டினால் பொதியப்பட்டுள்ளன. கருவறையின் மேலே பல வண்ணங் களில் சிறிய கோபுரம் காணப்படுகிறது. கருவறையைச் சுற்றியுள்ள உட்பிரகாரத்தில் கன்னி மூலையில் ஒரு சிவலிங்கமும், வாயு மூலை யில் துர்க்கை சன்னதியும் காணப்படுகிறது. மண்டபத்தின் மத்தியில் வடக்குப் பக்கத்தில் பள்ளியறை காணப்படுகிறது. அழகிய, வேலைப் பாடு செய்யப்பட்ட, வெள்ளித் தகட்டால் பொதியப்பட்ட மஞ்சமும், கதவுகளும் காணப்படுகின்றன. பள்ளியறைக்கு எதிரில் பெரிய கண் ணாடி வைக்கப்பட்டுள்ளது. அம்மன் கோயில் தெற்குவாசல் பக்கமுள்ள தூண் ஒன்றில் அனுமார் சிலை காணப்படுகிறது. அச்சிலையின் மீது சாத்தப்பட்டுள்ள வெண்ணையைக் குரங்குகள் வழித்துச் சாப்பிடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. மண்டபத்தின் தெற்குச் சுவரில் திருக்குற்றாலப்பதிகம், குறும்பலாப்பதிகம், திருஅங்கமாலை ஆகிய தேவாரங்கள் சலவைக்கற்களில் எழுதி, பதிக்கப்பட்டுள்ளன.

குழல்வாய்மொழி அம்மன் கோயில் தெற்கு வாசல் வழியாகச் சங்க வீதிக்குத் தெற்கிலுள்ள படிக்கட்டு வழியாக இறங்கவேண்டும். முதலில் காட்சி தருவது தலவிருட்சமாகிய குறும்பலா இன்று நாம் காண்கின்ற மரம் சிறியதாகவே காணப்படுகிறது. அம்மரத்தின் அடி யில் குறும்பலா நாதர் சன்னதி அமைந்துள்ளது. எதிரில் ஆதிக் குறும் பலா மரத்தின் பாகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இதனை ஆய்வு செய்து, அம்மரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்ற முடிவினை தாவரவியல் வல்லுநர்கள் வழங்கியுள்ளனர் என்ற அறிவிப் புப் பலகை காணப்படுகிறது. கிழக்கு நோக்கி பத்துக்கரங்களுடன் கூடிய வல்லப கணபதி சன்னதி காணப்படுகிறது. தெற்கு வாயிலின் பக்கத்தில் நன்னகரப்பெருமாள் என்ற பெயரில் திருமால் சன்னதி காணப்படுகிறது.

தெற்குப் பிரகாரத்தில் அறுபத்துமூவர் சன்னதி அமைந்துள் ளது. திருத்தொண்டர்கள் அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பது, மாணிக்கவாசகர் ஆகியோருடைய சிலைகள் காணப்படுகின்றன. இவற்றிற்குப் பின்புறம் மேற்கு நோக்கி சிவசைலநாதர் என்னும் சைலப்பருடைய சன்னதி காணப்படுகிறது.

கிழக்கு நோக்கி பத்துக்கரங்களுடன் கூடிய வல்லப கணபதி சன்னதி காணப்படுகிறது. தெற்கு வாயிலின் பக்கத்தில் நன்னகரப் பெருமாள் என்ற பெயரில் திருமால் சன்னதி காணப்படுகிறது.

சங்கவீதி மேற்குப் பிரகாரத்தில் உலகம்மன்-பாவநாசர், நாகேஸ் வரி-சுவாமிநாதர், காந்திமதி அம்மன் -நெல்லையப்பர் சன்னதிகள் வரிசையாக அமைந்துள்ளன. மணக்கோலநாதர் சன்னதி அடுத்துக் காணப்படுகிறது. இச்சன்னதியில் இறைவன், இறைவியின் கைப் பிடித்து நிற்க, நான்முகன் சடங்குகள் செய், திருமால் நீர்வார்க்க, இலக்குமி வரிசைகள் செய்ய இறைவனின் திருமணக்காட்சி மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அக்காட்சி, இறைவனின் திரு மணத்தில் உலகைச் சமநிலைப்படுத்திய அகத்தியருக்காக இறை வன் காட்டியது. மணக்காட்சி என்ற பெயருக்கேற்ப அனைத்துச் சிற்பங் களும் சந்தனம் பூசப்பட்டுக் காட்சியளிக்கிறது. அடுத்து, தைலப் பிறை என்ற பெயரில் காலி மண்டபம் காணப்படுகிறது. இங்குதான் இறைவனுக்கு அன்றாடம் தேவைப்படும் அபிஷேகத் தைலம் செய் திருக்க வேண்டும். இன்று அத்தைலம் திரிகூடமண்டபத்திலுள்ள அறையில் தயாரிக்கப்படுகிறது. தொடர்ந்து நாறும்பூநாதர், சங்கர லிங்கம் - கோமதியம்மன், பால்வண்ணநாதர் - ஒப்பனையம்மை, சொக்க லிங்கம்-மீனாட்சி அம்மன் ஆகிய சன்னதிகள் காணப்படுகின்றன. அடுத்து, மேற்குத் திசைக் காவல் கடவுளாகிய கணநாதர் என்ற அய்யனார் சன்னதி கொஞ்சம் பெரியதாக அமைந்துள்ளது. அதற்கு முன்பக்கமான வடக்குப் பக்கத்தில் மதுநாகேஸ்வரர் அறம் வளர்த்த நாயகி சன்னதி காணப்படுகிறது.

அடுத்து, நின்ற வடிவில் அகத்தியர் சன்னதி காணப்படு கிறது. அகத்தியரின் வலக்கையில் கமண்டலமும், இடக்கையில் எழுத் தோலையும் உள்ளன. பக்கத்திலேயே வாசுகி சன்னதியும் காணப்படு கிறது. வாசுகிக் கோயிலுக்குள்ளே அகத்தியரால் வழிபாடு செய்யப் பட்டதாகக் கூறப்படும் குலசேகரநாதரும் இருவாலுக ஈஸ்வரரும் தேவிகளுடன் காணப்படுகின்றனர். இவ்வாறு, உலகம்மன் - பாவ நாசர், நாகேஸ்வரி - சுவாமிநாதர், காந்திமதி - நெல்லையப்பர், நாறும்பூ நாதர், சங்கரலிங்கம் - கோமதியம்மன், பால்வண்ணநாதர் - ஒப்பனை யம்மை, மீனாட்சி - சொக்கலிங்கம் ஆகியோர் சன்னதி காணப்படுவதால் இக் கோயிலை வலம்வந்து வணங்கினால் அனைத்துக் கோயில்களுக்கும் சென்றுவந்த பலன் கிடைக்கிறது. அய்யனார் கோயிலுக்கு எதிரில் பஞ்ச தரிசனக் காட்சி என்ற பெயரில் திரிகூட மலை, வடவருவி, சிகரம், சிவலிங்கம், மேற்குமுக விநாயகர் ஆகிய ஐந்து காட்சிகளை யும் ஒரே இடத்தில் காணமுடிகிறது. இந்த சன்னதியில்தான் அர்ச் சுனன், தான் காணாமல் போக்கிய சம்புடத்தை மீண்டும் பெற்றதாகத் தகவல் பலகை காணப்படுகிறது.

அய்யனார் கோயிலுக்கு எதிரில், பஞ்ச தரிசனத்திற்கும் மூல வரின் கருவறைக்குமிடையில் செண்பகமரம் காணப்படுகிறது. தல விருட்சமாகிய குறும்பலா, குழல்வாய்மொழியம்மன் கோயிலை அடுத்துக் காணப்படுகிறது. ஆனால் செண்பக மரமோ மூலவருக்கு அருகில் காணப்படுகிறது. ஒரே கோயிலில் இரு மரங்கள். எனவே, குறும்பலாவைத் தல விருட்சமாகக் கொண்ட குறும்பலாநாதரும், செண்பக மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட கூத்தரும் ஒரே கோயிலில் வீற்றிருக்கின்றனர் எனலாம்.

சங்கவீதி வடக்குப்பிரகாரம் தென்பக்கத்தில் சோமலிங்கம், சகஸ்ஹரலிங்கம், மஹாலிங்கம் என்னும் மூன்று சன்னதிகள் காணப் படுகின்றன. அதனை அடுத்து, வடக்கு வாசல் பக்கம் காசி விஸ்வ நாதர் விசாலாட்சி உருவச்சிலைகள் காணப்படுகின்றன. அடுத்து வடக்கு வாசல் காவல் தெய்வமாகிய சாஸ்தா எனப்படும் அய்யனார் சன்னதியும் காணப்படுகிறது. வடக்குப் பிரகாரத்தில் மேற்குமுக மான அகத்திய முனிவருடைய சன்னதியை நோக்கி சிவாலய முனிவர் வீற்றிருக்கும் சன்னதி காணப்படுகிறது. இச் சிவாலய முனிவர் நாள் தோறும் தேவாரம் முழுமையும் முறைப்படி ஓத முயற்சித்து, முற்றுப் பெறாமையால், இறைவன் ஆணைப்படி அகத்தியரை வணங்கி, அவர் திரட்டிய அகத்தியர் தேவாரத்திரட்டை முழுமையாக ஓதி வீடெய்தினார். இந்த இடத்தில் சிவாலய முனிவரின் சமாதி காணப்படுகிறது. ஈசான மூலையில் வயிரவர் சன்னதியும், பக்கத்தில் யாகசாலையும் காணப் படுகிறது. அதனை அடுத்துக் காணப்படும் பெரிய அறைதான் இன்று பாதுகாப்பு அறையாக விளங்குகிறது. அங்குதான் மதிப்புமிக்க வாகனங்கள் முதலானவை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த அறை முன்பு நடராசர் சன்னதியாக இருந்திருக்க (சபாபதி மண்டபம்) வாய்ப்புண்டு. இவ்வறை, கோயிலின் வடக்கு மூலையில் தெற்குப் பார்த்த சன்னதியாக அமைந்திருப்பதால் நடராசர் சன்னதியாக இருந்திருக்க முடியும்; இங்கிருந்த நடராசர்தான், பின்னர் மகாமண் டபத்தில், குற்றால நாதருக்குப் பக்கத்தில், இடம் பெற்றிருக்க வேண்டும்.

சங்கவீதி கிழக்குப் பிரகாரத்தில் முதலில் இடம்பெறுவது பராசக்திக் கோயிலின் முன்பாக அமைந்துள்ள, மிக அழகிய நவீன முறையில் அமைக்கப் பட்ட, பளிங்குத் தளம் பாவிய மண்டபம் ஆகும். இம் மண்டபத்தின் வழியாகத்தான் வடக்குப்பிரகாரத்தில் அமைந் துள்ள பராசக்தி தரணிபீடம் சன்னதிக்குச் செல்ல வேண்டும். இங்கு சிவகோணம் நான்கு, சிற்சக்தி கோணம் ஐந்து ஆக ஒன்பது கோணத்

துள்ளும், நாற்பது முக்கோணச் சக்கரம் தோன்றும், அதன்மேல் பதினாறு இதழும் அதற்குமேல், அடுக்காக மூன்று பட்டங்களாகவும் அமைந்த ஓர் பீடம் உள்ளது. இந்த பீடத்தைச் சக்தி பீடம், யோக பீடம், தரணி பீடம் என்றெல்லாம் அழைக்கப்படுவதை அறியமுடிகிறது.[1] இச் சக்தி பீடம் அகத்தியரால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், நான்கு சக்தி பீடங்களில் ஒன்று என்றும் கருதப்படுகிறது.[2] இப்பராசக்தி, ஆதி சக்தியாய் தோன்றி அரிஅயன் அரன் ஆகிய மூவரையும் பயந்தாள் என்பது தலபுராணச் செய்தி.[3] அம்மூவரையும் வைத்து ஆட்டியதாகக் கூறப்படும் தாணுமாலயன் தொட்டில் இன்றும் இச் சன்னதியில் இருப்பதாக நம்புகிறார்கள்.[4]

அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இன்றும் குழந்தை வேண்டி, பெற்றவர்கள் காணிக்கையாகச் செலுத்திய தொட்டில்கள் காணப்படு கின்றன. நவராத்திரி விழா மிகச் சிறப்பாக இச்சன்னதியில் கொண் டாடுகிறார்கள். குங்குமாபிஷேகம், இலட்சார்ச்சனையுடன் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. மாதந்தோறும் இறுதியாக வரும் வெள்ளிக்கிழமை இச்சன்னதியில் விளக்குப்பூசை வழிபாடு நடை பெறுகிறது. இச்சன்னதியில் வழிபட்டவர்கள் பெற்ற பலன்கள், பரா சக்தியின் பெருமையை உலகுக்கு உணர்த்துகிறது. மூன்று வருடங் கள் ஊமையாக இருந்த மீனாட்சி என்ற பெண், பராசக்தி முன் தவங்கிடக்க, தேவி இவள்முன் சிறு குழந்தை வடிவில் தோன்றித் தன்னைப் பாடும்படிக் கேட்கவும், இச்சிறுமி பாட ஆரம்பித்தாள்[5] என்ற செய்தி திருக்குற்றாலத் தல வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி 1949 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடை பெற்றுள்ளது. இச்செய்தி அன்றைய ஆங்கில இதழ்களிலும் இடம் பெற்றுள்ளது.[6] அம்மீனாட்சி என்ற சிறுமி, இன்றும் மதுரையில் வாழ் கிறாள். சமீபத்தில் மதுரையைச் சேர்ந்த பார்வையற்ற பக்தர் ஒருவர் பார்வை பெற்றதாகவும், கைகால்கள் முடங்கிய ஒருவர் கைகால்கள் பெற்றதாகவும் செய்திகள் கூறுகின்றன.[7] இவ்வன்னையின் பெயரால், பராசக்தி மகளிர் கல்லூரி என்ற பெண்கள் கல்லூரி 1964-65இல் தொடங்கப்பட்டது. இன்று அக் கல்லூரி, முதுநிலைப் பட்டப் படிப் புடன் ஆய்வு மையம் என்ற அளவிற்கு வளர்ச்சியடைந்து, தன்னாட்சி பெற்ற கல்லூரியாக விளக்குகிறது.

அன்னையின் கருவறை முன்வாசலில் சரசுவதி, இலக்குமி படங்கள் காணப்படுகின்றன. கருவறைக்கு முன்( மேல்) முகப்புச் சுவரில் கல்லில் பராசக்தி பீடம் ஓவியமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதை உற்றுநோக்கினால் பாண்டியர்களின் இலச்சினையாகிய இரு மீன்களும் செண்டும் போன்ற உருவம் தெரிகிறது. எதிரில், காமக்

கோட்டீஸ்வரர் திருவுருவம் காணப்படுகிறது. பீடத்தைச் சுற்றி சப்தமாதர்களாகிய பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, மாகேந்தரி, சண்டி, மஹாலட்சுமி, இரண்டு கணபதி, இரண்டு சுப்பிரமணியர், இரண்டு வைரவர் ஆகியனவும காணப் படுகின்றன. கருவறையின் பின்பக்கம் சப்தமாதர்கள், கணபதி, வீர பத்திரர் காணப் படுகின்றனர். துவாரபாலிகைகளாகக் கோயில் வாயி லின் வடப்பக்கம் மகாமதுகரீயும் தென்பக்கம் மகாமோகினியும் காணப் படுகின்றனர். முகப்பில் 'ஓம் சக்தி' என மின்விளக்கு அமைக்கப் பட்டுள்ளது.

சங்கவீதி, கிழக்குப் பிரகாரத்தில் பராசக்தி பீடத்தை அடுத்து நவக்கிரகங்கள் தனி மேடையில், சுற்றிலும் கம்பி வேலி பாதுகாப் புடன் அமைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து சிறிய கம்பித் தடுப்புக் களால் உருவாக்கப்பட்ட கோயில் அலுவலகத்தின் அர்ச்சனைச் சீட்டு, பன்னீர் முதலியன விற்குமிடம் காணப்படுகின்றது. இதனை யடுத்து மூலவர் சன்னதிக்கு எதிராக நமஸ்கார மண்டபம், பலிபீடம், கொடிமரம் ஆகியவை அமைந்துள்ளன. கொடி மரத்தையடுத்து வடக் குப் பக்கத்தில் அபிசேக மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத் திற்குப்பின், பராசக்தி கோயிலுக்கும், திருக்குற்றாலநாதர் சன்னதிக்கு மிடையே, ஒரு அகலமான, பெரிய மண்டபம் காணப்படுகிறது. இம் மண்டபம் தனி சன்னதி போன்ற அமைப்பில் காணப்படுகிறது. இம் மண்டபத்தின் வாயில், குற்றாலநாதரின் சன்னதி யின் நுழைவாயிலைப் போன்று அழகிய தோரண வாயிலாக அமைந்துள்ளது. அத்தோரண அமைப்பை மறைக்கின்ற மாதிரி தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவாயிலில் அமைந்துள்ள இரு தூண்களிலும் அழகிய யானை அமைப்புள்ள சிலைகள் காணப்படுகின்றன. இச்சன்னதி முன்பு நட ராசர் சன்னதியாக இருந்திருக்கலாம் என்று கருத வாய்ப்பில்லை. ஏனெனில், இச்சன்னதி கிழக்குப் பார்த்து இருக்கிறது. அகத்தியர் காலத்திற்கு முன் "திருக்குற்றாலமுடைய பெருமாள்" சன்னதியாக இருந்திருக்கலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படுகின்ற பழைய கோயில் களில் இறைவனின் சன்னதிக்கு இணையாக இடப்பக்கத்தில் பெரு மாளுக்கும் தனி சன்னதி காணப்படுகிறது. இன்று அவ்வறையின் உள்ளே எந்தவிதமான விக்கிரகங்களும் இல்லை. அறையின் உட் பகுதி முழுமையும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கிழக்குச் சுவர் பகுதியைத் தவிர, எஞ்சிய மூன்று சுவர்களையொட்டியும் 1½ அடி அகலத்தில், ½ அடி உயரத்தில் மேடை காணப்படுகிறது. இந்த அறையில் முன்பு

சீதாராமன் கல்யாண கோலச்சிலை, ஆஞ்சநேயர் சிலை ஆகியவை இருந்தாகச் சொல்லப்படுகிறது.[8] ஆனால், அவ்வாறு விக்கிரகங்கள் இன்று இல்லை, விக்கிரகங்கள் இருந்ததற்கான ஆதாரமும் அம் மண்டபத்தில் இல்லை. இம்மண்டபம் தற்பொழுது வெஞ்சன அறை யாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. திருக்குற்றாலநாதர் சன்னதி வாயிலில் நின்ற கோலத்தில் ஒரு விநாயகரும், முருகனும் காணப்படு கின்றனர். தண்டி (உய்யக்கொண்டான்) முண்டி (ஆட்கொண்டான்) என்ற இரு துவாரபாலகர்கள் சிலைகள் காணப்படுகின்றன. மேற்கு துவாரபாலகரின் வலது கரம் எச்சரிக்கும் பாவனையில் சுசிஹஸ்தத் திலும் இடது கை கதையிலும் உள்ளது. வாயில் சூரப்பற்கள் உள்ளன. கிழக்குத் துவாரபாலகர் வலதுகை கதையில் படிந்து ஆகாய வரதஹஸ் தத்தில் உள்ளது. இடதுகை விஸ்மயஹஸ்தத்தில் உள்ளது.

வலது கால் கதையில் உள்ள நாகத்தின் தலையில் உள்ளது. இத்துவாரபாலகர்களிருவரும் ஒருவருடன் ஒருவர் பேசுவது போன்ற பாவனையில் காணப்படுகின்றன. ஒருவர் வினா தொடுப்பவர் போன் றும், மற்றவர் பதில் சொல்வது போன்றும் பாவனையில் உள்ளன. அகத்தியர் வைணவர் வேடமிட்டுக் கோயிலினுள் புகுந்தபொழுது, 'இவர் நேற்று வந்தவரோ?' என்று ஒருவர் வினவ, மற்றவர் 'அறிய வில்லை' என்று பதிலுரைப்பதாக, தலபுராணம் பகர்கிறது.[9] இந்த துவார பாலகர்களைத் தாண்டி கோயிலினுள் சென்றதும் உட்பிரகாரம் கீழ்ப்பக்கத்தில் அதிகார நந்தி வடக்குமுகமாகக் காணப்படுகிறது. இந்தப் பகுதியில்தான் 8-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட் டுக்கள் காணப்படுகின்றன. ராஜராஜன் கோயில் திருப்பணி செய்த காலத்து, கோயிலின் பழமையான தூண்களை இந்த இடத்தில் பயன் படுத்தி உள்ளான். அடுத்து, சூரியன் கோயில் உள்ளது. தெற்குப் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி உருவம் காணப்படுகிறது. எதிரில் அபிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, காளி என்னும் சப்த கன்னியரும், சுரதேவரும் காட்சி தருகின்றனர். இச்சுர தேவர் சன்னதியில், கடுமையான காய்ச்சலில் அவதிப்படுவோர், அக் காய்ச்சலின் கடுமை குறைய சிறப்பு வழிபாடு செய்கின்றனர். கும்ப முனி, பிரம்மா, மகாலட்சுமி, அய்யனார், ப்ரகாமி ஆகிய சன்னதிகள் காணப்படுகின்றன. நாராயணர், மஹாவிஷ்ணு, நரசிம்மமூர்த்தி என்னும் பெருமாள் வடிவங்கள் அடுத்துக் காணப்படுகின்றன. பஞ்சலிங்கமும் மனோன்மணியும் காணப்படுகிறது.

மேற்கு உட்பிரகாரத்தின் கன்னி மூலையில் கன்னி விநாயகரும், அடுத்து பஞ்சமூர்த்திகளும் காணப்படுகின்றன. இச்சன்னதியில்

சோமாஸ்கந்தர், குழல்வாய்மொழி அம்மன், விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகன், சண்டேசுவரர் ஆகிய ஐந்து செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. அடுத்து, சந்திரனுடைய சன்னதி காணப்படுகிறது. அச்சிற்பம் பாண்டிய அரசன் மாறன் சடையன் என்னும் இரண்டாம் வரகுணபாண்டியன் காலத்தது. இதுதான் இக்கோயில் காணப்படும் மிகப் பழைய சிற்பமாகும். சிற்பத்தின் அமைப்பைப் பார்க்கும்பொழுது இச்சிற்பம் முருகனுடையதாக இருந்திருத்தல் வேண்டும் எனக் கருத வாய்ப்புண்டு. கோயிலார் சந்திரன் என்று பெயர் சூட்டியிருக்கின்றனர். இதே வரிசையில் வடக்கு மூலையில் முருகனுக்குத் தனி சன்னதி உள்ளது. தொடர்ந்து பஞ்சபூதக்கடவுளாகிய வன்மீகநாதர் (மண்-காஞ்சி), ஜம்புகேஸ்வரர் (நீர் - திரு வாணைக்கா), அண்ணாமலை நாதர் (நெருப்பு-திருவண்ணாமலை), காளத்தியப்பர் (காற்று - திருக்காளத்தி), திருமூல நாதர் (ஆகாயம் - தில்லை) ஆகியோர் சன்னதிகள் காணப்படுகின்றன.

இவற்றையடுத்து சேது திருமலையப்பர் சன்னதி காணப்படுகிறது. மேற்குப் பிரகாரம், குற்றாலநாதர் கருவறையின் மேலச்சுவர் நடுவில் மேற்கு முகமாக திருமால் வீற்றிருப்பதாகக் கருதப்படுகிறது, உருவமில்லை. வடக்கு மூலையில் வள்ளி தெய்வானையுடன் முருகன் காட்சி தருகிறார். எதிரில் காசிலிங்கம், விசாலாட்சி உருவம் காணப்படுகிறது. இவ்விரு உருவங்களும், அருவிக்கரையில் வெள்ளத்தால் சேதமுற்றக் காசிலிங்க சுவாமி கோயிலில இருந்தவையாகும். வடக்குப் பிரகாரத்தில் அடுத்து சனீஸ்வரர்க்கு மட்டும் தனியாக ஒரு சன்னதி காணப்படுகிறது. நவக்கிரகங்களுக்கான சன்னதி சங்க வீதியில் அமைந்திருக்க, சனீஸ்வரருக்கு மட்டும உட்பிரகாரத்தில் தனியாக ஒரு சன்னதி அமைந்துள்ளது இக்கோயிலின் சிறப்பாகும். எதிரே உள்ள கருவறையின் கோமுக வாயிலில் பிரமன் திருவுருவச் சிலை காணப்படுகின்றது. சண்டேசுவரருக்குத் தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பிரகாரம் வந்து, ஆட்கொண்டான் குறட்டினைக் கடந்து திருக்குற்றாலநாதர் கோயிலினுள் செல்லவேண்டும்.

கருவறையின் முன் உள்ள மண்டபம் மகாமண்டபம் என அழைக்கப்படுகிறது. பக்தர்கள் இந்த மண்டபம் வரைதான் அனுமதிக்கப்படுகின்றனர். இம்மண்டபத்தில் எட்டு தூண்கள் உள்ளன. ஒரு பெரிய தூணும் ஒரு சிறிய தூணும் அமைந்த நிலையில் ஒரே கல்லில் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது இடப்புறத்தூணில் முருகனின் சிற்பம் உள்ளது. இத்தூண்களைத் தாங்கும பலகைக் கற்களில் சிறிய அளவில் சிற்பங்கள் காணப்படுகின்றன. தென்பகுதியில்

குதிரையின் மீது மனிதர்கள் பயணம் செய்யும் காட்சியும் மான்களின் சிற்பங்களும் காணப்படுகின்றன. வடக்குப் பகுதியில் திருமால் பள்ளி கொண்ட காட்சியும் பக்கத்தில் அடியார் கோலூன்றிக் காவல் காக்கும் காட்சியும் நடனச் சிற்பங்களும் காணப்படுகின்றன. வடக்குப் பகுதி யில் அரைத்தூண்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

சிறிய அரைத்தூண்கள் உருளை அமைப்பில் (சிலிண்டர்) செதுக்கப்பட்டுப் பூவேலைகள் செய்யப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் கிழக்கு நோக்கி சந்திரசேகரர், அகத்தியர், விநாயகர் உருவச் சிலை களும், உற்சவமூர்த்திச் சிலையும் கிழக்கு நோக்கி, இதன் மேற்குப் பகுதியில் காணப்படுகின்றன. வடக்குப் பகுதி மத்தியில் நடராசர் தெற்கு நோக்கிக் காணப்படுகிறார். மாணிக்கவாசகர், காரைக்காலம் மையார் சிற்பங்கள் நடராசரை வணங்குவதுபோல் காணப்படுகின்றன. நடராசருக்கு வலப்பக்கம் அன்னபூரணி, அதிகாரநந்தி, அகத்தியர், தில்லைவாழ் அந்தணர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேரமான், பெரு மாள், நித்திய உத்ஸவர் எனப்படும் சீவிலிநாயகர் ஆகியோருடைய செப்புத் திருமேனிகளும், திருமுறைகளடங்கிய பேழையும் காணப்படு கின்றன. நடராசருக்கு இடப்பக்கம் மற்றொரு நடராசர் உருவம் காணப் படுகிறது. இந்த உருவம் சித்திர சபையைச் சார்ந்தது. பாதுகாப்புக் கருதி இங்கு வைக்கப்பட்டுள்ளது. நடராசருடன் சிவகாமி அம்மை யின் உருவமும், பிட்சாடனர் உருவமும் காட்சி அளிக்கிறது. இரு நடராசர் விக்கிரகங்களும் சிற்பக்கலையின் சிறப்பினை எடுத்து உணர்த்துவதுபோல் மிக அழகாக அமைந்துள்ளன. அவற்றின் முன் னது ஓவல் வடிவத்திலும், பின்னது (சித்திர சபையிலிருந்து கொண்டு வந்தது) வட்ட வடிவத்திலும் அமைந்துள்ளது. கருவறையின் வாசலை நோக்கிப் பக்தர்களின் வசதிக்காக இம்மகா மண்டபத்தின் நடுவில் இருபுறமும் கம்பித் தடுப்புகளும், நடுவே-ஒரு உண்டியலும் அமைக் கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தைத் தாண்டி அர்த்தமண்டபம் உள்ளது. கருவறைவாயிலின் வலப்பக்கத்தில் அனுக்கை விநாயகர். கருவறை யில் திருக்குற்றாலநாதர் சிறிய லிங்க வடிவத்தில் காட்சியளிக்கிறார். ஒரு யுகத்தில் அயனாகவும், ஒரு யுகத்தில் அரியாகவும் பேருகத்தில் (இன்று) அரனாகவும் வீற்றிருக்கிறார். திரிகூடநாதர் ஈசானம் (அருளல்), தத்புரூடம் (மறைத்தல்), அகோரம் (அழித்தல்), வாம தேவம் (காத்தல்), சத்யோஜாதம் (படைத்தல்) என்னும் ஐந்து முகங்களுடன் சிவலிங்க உருவத்தில் காணப்படுகிறார். கருவறையின் வெளியே இருந்து பார்ப்பதற்கு அம்முகங்களைக் குறிப்பதற்கான குறியீடுகள் எதுவும் தெரியவில்லை. லிங்கத்தின் மேல்பாகத்தில்

ஐந்து விரல்கள் பதிந்திருப்பதைப் போன்ற அமைப்புக் காணப் படுவதாக ஆலயப்பட்டர் கூறினார்.[10] நம்முடைய பார்வைக்கும் லிங்கத்தின் உச்சி, சற்று ஏற்றம் இறக்கம் உடையது போலவே காட்சியளிக்கிறது.

## 2. வழிபாடு

திருக்குற்றாலநாதர் கோமிலில் மகுடாகம முறையில்தான் வழி பாடு நடைபெறுகிறது. இறைவனுக்கு உகந்த வழிபாட்டு முறைகள் இருபத்தெட்டு. அவையனைத்தும் இறைவனின் அங்கங்களாகச் சொல்லப்படுகின்றன. அவற்றில் தலையாக (முடி) விளங்குவது மகுடம். எனவே, மகுடாகமம் சிறந்த வழிபாட்டு முறை என்பர்.

| **ஆகமம்** | - | **இறைவனின் பாகம்** |
|---|---|---|
| காமிகம் | - | பாதம் |
| யோகசம் | - | கணைக்கால் |
| அசிதம் | - | முழந்தாள் |
| காரணம் | - | இடப்பக்கத் தொடை |
| தீப்தம் | - | வலப்பக்கத் தொடை |
| சூக்குமம் | - | குய்யம் |
| சித்தியம் | - | கைவிரல் |
| விமலம் | - | கை |
| அஞ்சுமான் | - | முதுகு |
| சுப்பிரபேதம் | - | கொப்பூழ் |
| விசயம் | - | வயிறு |
| சுவாயம்புவம் | - | முலை |
| வீரம் | - | கழுத்து |
| நிசுவாசம் | - | மூக்கு |
| சந்திரஞானம் | - | மார்பு |
| சித்தம் | - | நெற்றி |
| முகலிம்பம் | - | முகம் |
| ஆக்கினேயம் | - | கண் |
| புரோற்கீதம் | - | நாக்கு |
| இரௌரவம் | - | காது |
| இலனிதம் | - | கன்னம் |

| | | |
|---|---|---|
| மகுடம் | - | தலை |
| பரமேசம் | - | முத்துமாலை |
| வாதுனம் | - | ஆடை |
| கிரணம் | - | ஆபரணம் |
| காலோத்தரம் | - | சந்தணம் |
| சருவோக்தம் | - | பூணூல் |
| சந்தானம் | - | காதில் அணிகுண்டலம் |

இவ்வாறு இறைவனை வழிபடுவதற்குரிய ஆகமங்கள் இருபத்தெட்டும் இறைவனின் அங்கங்கள் என்று போற்றப்படுகின்றன. திருக்குற்றாலநாதர் கோயிலில் பின்பற்றப்படும் மகுடாகம முறையில் முதலில் விநாயகர், அடுத்து நடராசர், மூன்றாவதாக மூலவராகிய திருக்குற்றாலநாதர், குழல்வாய்மொழியம்மன் ஆகியோருக்கு ஆராதனை நடைபெறுகிறது. மூலவர் தீப ஆராதனை வழிபாட்டிற்குப் பின் சுற்றுத் தெய்வங்களுக்கான வழிபாடும், பராசக்திக்கான வழிபாடும் நடைபெறுகிறது. வழிபாடுகள் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்று வகைப்படும். அவற்றில் நித்தியம் ஒன்பது வகைப்படும். நைமித்தியம் நான்கு வகைப்படும், காமியம் ஐந்து வகைப்படும். அவையாவன:

நித்தியம் : அத்திதி, நாள், வாரம், பிரதோடம், அயனம் (உத்திராயணம், தட்சினாயனம்), விசு, சங்கிராந்தி, அமாவாசை, பௌர்ணமி.

நைமித்திகம் : சாந்நித்தய பூசை, வருடாபிடேகம், மாதவிழா, மாத பூசை.

காமியம் : தவண பூசை (காலம்), கார்த்திகை தீபம், தீபாவளி, சங்க பூசை, புதுநெல் வரும்போது செய்யும் நிவேதன பூசை.

பூசை நடத்துவதற்கான காலங்கள்:

முதன்மை : காலை, உச்சி, மாலை, யாமம்.

உபகாலங்கள் : அருணசந்தி, உஷத் காலம், சிறுகாலை, இரவு.

திருக்குற்றால நாதர் கோயிலில் தினமும் ஒன்பது கால பூசை நடைபெறுகிறது.

| பூசை விபரம் | | நடைபெறும் நேரம் |
|---|---|---|
| திருவனந்தல் | - | காலை 5.00 மணி |
| உதயமார்த்தாண்டம் | - | காலை 6.00 மணி |
| விழா பூசை | - | காலை 7.00 மணி |
| சிறுகால சந்தி | - | காலை 9.00 மணி |
| கால சந்தி | - | காலை 10.00 மணி |
| உச்சிக்காலம் | - | நண்பகல் 12.00 மணி |
| சாயரட்சை | - | மாலை 6.00 மணி |
| அர்த்தசாமம் | - | இரவு 9.00 மணி |
| ஏகாந்தம் | - | இரவு 9.15 மணி |

இக்கோயிலில் அன்றாடம் நடைபெறும் வழிபாடு, இக்கோயிலின் சார்புக் கோயிலான கூத்தர் கோயிலிலிருந்துதான் தொடங்குகிறது. கூத்தர் கோயிலில் பூசைகள் முடிந்த பின்னர், சித்திரசபை என்னும் மற்றொரு சார்புக் கோயிலில் வழிபாடு நடக்கிறது. பின்னர் தான் குற்றாலநாதர் கோயிலில் வழிபாடு தொடங்குகிறது. மகுடாகமம் முறைப்படி வழிபாடு நடப்பதால், மூலவருக்கு வழிபாடு நடந்த பின்னரே, பிற தெய்வங்களுக்கு வழிபாடு செய்யவேண்டும். திருக் குற்றாலநாதர் கோயிலில் முதலில் விநாயகர் வழிபாடு முடிந்தவுடன், நடராசப் பெருமானுக்கு ஆராதனை வழிபாடும், அடுத்துத் திருக்குற் றாலநாதருக்கு வழிபாடும் நடைபெறுகிறது. சுவாமி கோயில் உட் சுற்று வீதியில் அமைந்துள்ள தெய்வங்களுக்கு வழிபாடு முடிந்த பின்னரே குழல்வாய்மொழி அம்மன் வழிபாடு நடைபெறுகிறது. அவ் உள்சுற்று வீதியில் உள்ள தெய்வங்களுக்கு வழிபாடு முடிந்த பின்னர், அன்னை பராசக்திக்கு வழிபாடு நடைபெறுகிறது. சங்கவீதி வழிபாடு முடிந்த பின்னர் திரிகூட மண்டபம், வசந்த வீதியில் உள்ள தெய்வங்களுக்கு வழிபாடு நடை பெறுகிறது. மூலவர் வழிபாடு என்று தொடங்கும் பொழுது, நடராசர், திருக்குற்றாலநாதர் ஆகிய இருவருக்குமே வழிபாடு செய்த பின்னரே, பிற இடங்களில் வழிபாடு நடப்பதால், கூத்தர் கோயில் மூலவராக நடராசரும், குறும்பலா ஈசர் கோயில் மூலவராக குற்றாலநாதரும் விளங்க, இரு தனிக்கோயில் கள் இருந்தன என்ற கருத்து மேலும் வலுப்படுகிறது. விழாக்காலங் களில் இறைவன், இறைவி இருவரும் சித்திரசபையைத்தான் வலம் வருகிறார்கள் என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய ஒரு செய்தியாகும்.

## நாள் வழிபாடு

திருக்குற்றாலநாதர் கோயிலில் திருவனந்தல் முதல் ஏகாந்தம் முடிய ஒன்பது கால பூசை தினமும் நடைபெறுகிறது. அவற்றில் திருவனந்தல், ஏகாந்தம் நீங்கிய ஏழு காலங்களில் அபிஷேகம் நடைபெறுகிறது.[11] அவை வருமாறு:

### அ. திருவனந்தல்

1. காலை 5.30 மணியளவில் பள்ளியறை திறத்தல்.
2. நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டுதல்.
3. இரவில் சாத்திய மலரில் சிறிது எடுத்து அம்மையின் சிரசில் வைத்துக் கற்பூர தீபாராதனை காட்டுதல்.
4. சிவனைக் கோயிலுக்கு எழுந்தருளச் செய்தல்.
5. இறைவனுக்குக் கற்பூர ஆராதனை காட்டுதல்.

### ஆ. உதயமார்த்தாண்டம்

| | | |
|---|---|---|
| 1. கதிரவன் | - | நைவேத்தியம், கற்பூர தீபம் காட்டுதல் |
| 2. துவாரபாலகர், நந்தி | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |
| 3. அனுக்கை விநாயகர் | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |
| 4. நடராசர் | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |
| 5. கருவறை-சிவன் | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |
| 6. உற்சவர் | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |
| 7. அம்மன் | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |
| 8. பராசக்தி | - | நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல் |

### இ. விழா பூசை

1. அனுக்கை விநாயகர் - நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல்

2. நடராசர் - நைவேத்தியம், பஞ்ச உபசாரனை காட்டுதல்

3. குற்றாலநாதர் - நைவேத்தியம் பஞ்ச உபசாரனை காட்டுதல்

4. தட்சிணாமூர்த்தி,
சப்தமாதர்,
கன்னி விநாயகர்,
உற்சவர்,
பஞ்சலிங்கம்,
முருகன்,
சனீஸ்வரர்,
அதிகார நந்தி - நைவேத்தியம், கற்பூரதீபம் காட்டுதல்

5. குழல்வாய்மொழியம்மன் - நைவேத்தியம், பஞ்ச உபசார தீபாராதனை காட்டுதல்.

6. துர்க்கை, குறும்பலா,
அறுபத்துமூவர், வல்ல
கணபதி, சைலப்பர்,
நன்னகரப்பெருமாள்,
கைலாசநாதர், பாவநாசர்,
நெல்லையப்பர், மணக்
கோலநாதர், மயூரநாதர்,
சங்கரலிங்கம், சொக்கர்,
சாஸ்தா, மகாலிங்கம்,
அகத்தியர், வாசுகி,
சகஸ்ரலிங்கம், மகாலிங்கம்,
காசிவிஸ்வநாதர், சிவமுனி - நைவேத்தியம், கற்பூர தீபம் காட்டுதல்

7. பராசக்தி - நைவேத்தியம், பஞ்சஉபசார தீபாராதனை காட்டுதல்.

### ஈ. சிறுகாலைச்சந்தி

1. குற்றாலநாதர் - நைவேத்தியம், பஞ்ச உபசாரம்

2. குழல்வாய்மொழி - நைவேத்தியம், பஞ்சஉபசாரம்

**உ. காலைச்சந்தி**

1. மூன்று கும்பங்கள், நவகலசங்கள் வைத்துப் பூசை செய்து ஹோமம் முதலியன நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 2. குற்றாலநாதருக்கு | - | தைல அபிஷேகம், மாப்பொடி, மஞ்சள்பொடி, திரவியம், பால், தயிர், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், விபூதி, சந்தனம், கும்பம் ஆகிய அபிஷேகங்கள். |
| 3. குழல்வாய்மொழி | - | தைலத்திற்குப் பதில் நல்லெண்ணை - பிற அபிஷேகங் கள். |
| 4. பராசக்தி | - | மேற்படி |

5. ஸ்ரீபலிபல்லக்கு மூன்று முறை பிரகாரத்தைச் சுற்றுதல்.

| | | |
|---|---|---|
| 6. அனுக்கை விநாயகர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 7. குற்றாலநாதர் | - | நைவேத்தியம், சோடச உப சாரம், மந்திரம் - தேவாரம். |
| 8. தட்சிணாமூர்த்தி | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம் தேவாரம் |
| 9. உற்சவர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம் தேவாரம் |
| 10. முருகன் | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம், மந்திரம் தேவாரம் |
| 11. சனீஸ்வரன் | - | நைவேத்தியம், கற்பூரம் |
| 12. குழல்வாய்மொழி | - | நைவேத்தியம்,சோடச உபசாரம் மந்திரம்தேவாரம் |
| 13. குறும்பலாநாதர் | - | நைவேத்தியம், கற்பூரம் |
| 14. சோமலிங்கம் | - | நைவேத்தியம் கற்பூரம் |
| 15. பராசக்தி | - | நைவேத்தியம், பஞ்சஉபசாரம் மந்திரம் தேவாரம் |

16. காமகோடீஸ்வரர் - நைவேத்தியம், கற்பூரம்

17. நவக்கிரகங்கள் - நைவேத்தியம், கற்பூரம்

18. சுவாமி சிவமதுகங்கை பூசைக்கு - வாத்தியங்களுடன், வெள்ளிக் குடைப்பிடித்து, வெள்ளிக்குடத்துடன், அபிஷேகச் சாமான்களுடன் குற்றால அருவிக்கு எழுந்தருளல் - வழியில் செண்பக விநாயகர், அரசமரத்தடி விநாயகர், உச்சிப் பிள்ளையார் வழிபாடு, அருவியில் (பெண்கள் குளிக்கும் இடம்) ஆராதனை முடிந்து வெள்ளிக் குடத்தில் அருவி நீர் எடுத்து வரல் - இந்நீர் உச்சிகால அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**உச்சிக்காலப் பூசை**

| | | |
|---|---|---|
| 1. அனுக்கை விநாயகர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 2. நடராசர் | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம், மந்திரம், தேவாரம் |
| 3. சுவாமி | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம், மந்திரம், தேவாரம் |
| 4. உற்சவர் | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம், மந்திரம், தேவாரம் |
| 5. அம்மன் | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம், மந்திரம், தேவாரம் |
| 6. சாஸ்தா | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம், மந்திரம், தேவாரம் |

**எ. சாயரட்சை**

| | | |
|---|---|---|
| 1. அனுக்கை விநாயகர் | - | கற்பூரம் |
| 2. இறைவன் | - | அபிஷேகம் |
| 3. அம்மன் | - | அபிஷேகம் |
| 4. பராசக்தி | - | அபிஷேகம் |
| 5. அனுக்கை விநாயகர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |

| | | |
|---|---|---|
| 6. நடராசர் | - | நைவேத்தியம்,சோட சோபசாரம், மந்திரம், தேவாரம் |
| 7. இறைவன் | - | நைவேத்தியம், சோட சோபசாரம், மந்திரம், தேவாரம் |
| 8. தட்சிணாமூர்த்தி | - | நைவேத்தியம், பஞ்சோபசாரம், மந்திரம், தேவாரம் |
| 9. சோமாஸ்கந்தர் | - | நைவேத்தியம், பஞ்சோபசாரம், மந்திரம், தேவாரம் |
| 10. முருகன் | - | நைவேத்தியம், பஞ்சோபசாரம், மந்திரம், தேவாரம் |
| 11. சனீஸ்வரன் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 12. குழல்வாய்மொழி | - | நைவேத்தியம், சோட சோபசாரம், மந்திரம், தேவாரம் |
| 13. குறும்பலாநாதர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 14. அறுபத்துமூவர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 15. சிவசைலநாதர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 16. வல்லப கணபதி | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 17. நன்னகரப்பெருமாள் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 18. உலகம்மன்-பாவநாசர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 19. நாகேஸ்வரி-சுவாமிநாதர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 20. காந்திமதி நெல்லையப்பர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |

| | | |
|---|---|---|
| 21. மணக்கோலநாதர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 22. நாறும்பூநாதர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 23. சங்கரலிங்கம் கோமதி அம்மன் | - | நைவேத்தியம்,கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 24. பால்வண்ணநாதர் ஒப்பனையம்மை | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 25. மீனாட்சி-சொக்கலிங்கம் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 26. அய்யனார் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 27. அகத்தியர் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 28. வாசுகி | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 29. சோமலிங்கம் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 30. சகஸ்ஹரலிங்கம் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 31. மகாலிங்கம் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 32. காசிவிஸ்வநாதர் விசாலாட்சி | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 33. பராசக்தி | - | நைவேத்தியம், பஞ்சஉபசாரம், மந்திரம், தேவாரம் |
| 34. நவக்கிரகம் | - | நைவேத்தியம், கற்பூரம், மந்திரம், தேவாரம் |
| 35. ஸ்ரீபலி நாயகர் | - | பிரகாரம் சுற்றிவந்து, பலி கொடுத்தல் |

| | | |
|---|---|---|
| 36. இறைவன் | - | நைவேத்தியம், பஞ்சஉபசாரம், மந்திரம், தேவாரம் |

**ஏ. அர்த்தசாமம்**

| | | |
|---|---|---|
| 1. நடராசர் | - | நைவேத்தியம், கற்பூரம் |
| 2. சுவாமி | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம் |
| 3. உற்சவர் | - | நைவேத்தியம், கற்பூரம் |
| 4. அம்பாள் | - | நைவேத்தியம், பஞ்ச உபசாரம் |

**ஐ. ஏகாந்தம்**

1. சுவாமி பள்ளியறைக்கு எழுந்தருளல்

| | | |
|---|---|---|
| 2. அம்பாள் | - | நைவேத்தியம், கற்பூரம் |
| 3. பள்ளியறை - சுவாமி, அம்பாள் | - | தாம்பூலம், பால், பழம், நைவேத்தியம், பஞ்சஉபசாரம் |
| 4. சண்டீஸ்வரர் | - | நைவேத்தியம், கற்பூரம் |
| 5. பைரவர் | - | நைவேத்தியம், கற்பூரம் |

**பூசைக்காலங்களில்**
**இறைவனுக்குப் படைக்கப்படும் நைவேத்தியம்**

| | | |
|---|---|---|
| உதயமார்த்தாண்டம் | - | பச்சரிசிச் சோறு |
| விழா பூசை | - | தோசை |
| சிறுகாலச்சந்தி | - | புளியோதரை |
| காலைச்சந்தி | - | அன்னம், வடை |
| உச்சிக்காலம் | - | அன்னம், பாயசம் |
| சாயரக்ஷை | - | அன்னம், சர்க்கரைப் பொங்கல் |
| அர்த்தசாமம் | - | அன்னம், தேன்குழல், அப்பம், கஷாயம் |
| பள்ளியறை | - | பால், பழம் |

## சிறப்பு வழிபாடுகள்

சிறப்பு வழிபாடு என்பது சிறு விழாவாகும். அவ்வாறு ஒவ்வொரு மாதமும் நடைபெறக்கூடிய விழாக்கள் வருமாறு:

## சித்திரை மாதம்

1. திருநாவுக்கரசு நாயனாரின் பிறந்த நாளாகிய சதய நட்சத்திரத் தன்று, இறைவன் ரிஷப வாகனத்தில் அவருக்குக் காட்சி யளித்தல்.

2. திருவோணம் நட்சத்திரத்தன்று நடராசர் வழிபாடு நடை பெறுகிறது.

3. வசந்த உற்சவம் - பௌர்ணமிக்கு முந்தைய பிரதோஷத் தன்று வசந்த உற்சவம் தொடங்கி, பௌர்ணமிக்கு மறுநாள் முடிகிறது. மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், இறைவன் திரிகூட மண்டபத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடை யில் இருந்து பக்தர்களுக்கு அருள் வழங்குகிறார். இப் பூரண நிலவில்தான் கங்காதேவி சிவபெருமானை மதுவினால் பூசிக் கிறாள். அதன் காரணமாக சிவமது கங்கை என்னும் பெயரை யும் பெற்றாள். இறைவனை கங்காதேவி பூசித்ததின் அடை யாளமாக அன்று இரவு மஞ்சள் மழை பெய்வதாக மக்கள் நம்புகிறார்கள். அன்று இரவு தேனருவி அருகிலுள்ள பாறை யின்மேல் தூய வெள்ளைத் துணியை விரித்து வைத்து விட்டு, மறுநாள் காலையில் பார்த்தால், அத்துணி முழுமையும் மஞ்சள் நிறமாகக் காணப்படுகிறது என்ற செய்தி முன்னரே கூறப்பட்டுள்ளது.

## வைகாசி மாதம்

1. திருஞானசம்பந்தரின் பிறந்த நாளாகிய மூல நட்சத்திரத் தன்று, அவருக்கு இறைவன் ரிஷப வாகனத்தில் காட்சி யளித்தல்.

## ஆனி மாதம்

1. மாணிக்கவாசகரின் பிறந்த நாளாகிய மக நட்சத்திரத்தன்று இறைவன் ரிஷப வாகனத்தில் அவருக்குக் காட்சியளித்தல்.

2. உத்திர நட்சத்திரத்தன்று நடராசர் அபிஷேகம் நடை பெறுகிறது.

3. சித்திரை நட்சத்திரத்தன்று சங்காபிஷேகம் நடைபெறுகிறது. 1008 சங்குகளால் அபிஷேகம் நடைபெறுகிறது. இதுதான் குற்றால நாதருக்கு நடைபெறும் வருஷாபிஷேகமாகும். இறைவன் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுக்கிறார்.

**ஆடி மாதம்**

1. ஆடி அமாவாசைக்கு முதல் நாள் திருக்குற்றாலநாதருக்கு பத்ரதீப அனுக்ஞாபிஷேகம் நடைபெறுகிறது. அமாவாசை அன்று பத்ரதீபம் வழிபாடு நடைபெறுகிறது. அன்று இறைவன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளுகிறார்.

2. சுந்தரமூர்த்தி நாயனாரின் பிறந்த நாளாகிய ஸ்வாதி நட்சத் திரத்தன்று, இறைவன் ரிஷப வாகனத்தில் காட்சியளித்தல்.

**ஆவணி மாதம்**

1. சதுர்த்தசியன்று நடராசர் அபிஷேகம்.

2. விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வசந்த வீதியில் அமைந்துள்ள செண்பகவிநாயகருக்குச் சிறப்பு வழிபாடு, சந்தனக்காப்பு அலங்காரம், ஆராதனை நடத்தப் படுகிறது.

3. மூல நட்சத்திரத்தன்று இறைவன் வெள்ளிச் சப்பரத்தில் வீதி உலா வருகிறார்.

**புரட்டாசி மாதம்**

1. நவராத்திரி விழா பராசக்தி சன்னதியில் 9 நாளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பராசக்தியாகிய அன்னை முதல் மூன்று நாட்கள் துர்க்கையாகவும், அடுத்து மூன்று நாட்கள் இலக்குமி யாகவும், பின் மூன்று நாட்கள் சரஸ்வதியாகவும் கோலந்தாங் கியதையும், மஹிஷாசுரனை சம்ஹாரம் செய்ததையும் குறிக் கும் விழா நவராத்திரி விழாவாகும். நவராத்திரியின்பொழுது, வெள்ளிக்கிழமை அன்று குங்கும அபிஷேகம் அன்னை பராசக்திக்கு செய்யப்படுகிறது. இலட்சார்ச்சனையும் நடை பெறுகிறது. கலைமகள் வழிபாடு சிறப்பாக நடைபெறு கிறது. பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், வழக்காடு மன்றம் என்று இலக்கிய விழாவாகவும், இசைக் கச்சேரிகள் வழியாக இசை விழாவும், நடன, நாடகங்கள் வழி நாடக விழா வாகவும் நடத்தப்படுகிறது. நவராத்திரி விழா முத்தமிழைப் போற்றும் கலை விழாவாகவே நடைபெறுகிறது.

2. விஜயதசமி அன்று இறைவன் குதிரை வாகனத்தில் எழுந் தருளி, பரிவேட்டை செல்கிறார்.

3. ஐப்பசி விஷுத் திருவிழா இம்மாதம் தொடங்குகிறது.

**ஐப்பசி**

1. கந்தசஷ்டித் திருவிழா சூரசம்ஹாரம் சிறப்பாக நடைபெறு கிறது. முருகன் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருள்கிறார்.

2. முருகன்-தெய்வானை திருக்கல்யாணம், சஷ்டிக்கு மறுநாள் நடைபெறுகிறது.

3. பூர நட்சத்திரத்தன்று காலை குழல்வாய்மொழியம்மன் தவக் கோலம் பூண்டு தவமிருக்கிறாள்.

4. தவத்தின் முடிவில் திருக்குற்றாலநாதர்-குழல்வாய் மொழி யம்மன் திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

5. திருக்கல்யாணத்தை அடுத்த நாளில் இறைவனும் இறை வியும் ஊஞ்சலில் காட்சி அருளல்.

6. அசுவதி நாளன்று அண்ணாவி பிள்ளையாருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது.

7. தீபாவளியன்று, திருக்கோயில் அமைந்துள்ள அனைத்துச் சன்னதிகளிலும் புத்தாடை அணிவித்து வழிபாடு நடை பெறு கிறது.

**கார்த்திகை**

1. பிரதோஷத்தன்று இறைவன் தீர்த்தவாரிக்காகக் குற்றால அருவி சென்று வருகிறார்.

2. சஷ்டியன்று பவித்திர உற்சவம் தொடங்குகிறது. இறைவன் யாகசாலைக்கு எழுந்தருளுகிறார். அஷ்டமியன்று இறை வனுக்குப் புதிய பூணூல் அணிவித்துப் பவித்ர உற்சவம் நடைபெறுகிறது. அன்று இரவு இறைவன் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுக்கிறார்.

3. கார்த்திகையன்று இரவு கோயில் முழுமையும் தீபம் ஏற்றப் பட்டுக் கார்த்திகைத் தீபத் திருவிழா நடைபெறுகிறது.

**மார்கழி**

1. மார்கழி மாதம் முழுமையும் காலையில் திருவெம்பாவை படிக்கப்பட்டு, சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

2. ஆதிரைத் திருநாள் மிகச் சிறப்பாக, 10 நாட்கள் திருவிழா வாக நடைபெறுகிறது.

**தை மாதம்**

1. தைத்திருநாளன்று அய்யனாருக்குச் சிறப்பு வழிபாடு நடை பெறுகிறது.

2. அமாவாசைக்கு முதல்நாள் இறைவன் குதிரை வாகனத்தில் பரிவேட்டைக்குச் செல்லுதல்.

3. அமாவாசையன்று குற்றால அருவிக்கு தீர்த்தவாரிக்குச் செல்கிறார். இரவில் ரிஷப வாகனத்தில் காட்சி தருகிறார்.

4. பௌர்ணமி நாளன்று மீண்டும் குற்றால அருவிக்கு தீர்த்த வாரி செல்கிறார். இரவில் ரிஷப வாகனக் காட்சி.

5. மக நட்சத்திரத்தன்று சித்ரசபைக்கு எதிரில் உள்ள தெப்பக் குளத்தில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது. இறைவனும், இறைவியும் வெள்ளி ரிஷப வாகனத்தில் எழுந்து அருள்கின் றனர். இறைவனின் திருக்குமரனாகிய திருவிலஞ்சிக் குமரனும் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருள்கிறார். அன்று மாலை முழுவதும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பிரளய காலத்தில் உலகம் அழிந்தபோது பிரணவம் தோணி யாக மிதந்தது. அதில் இறைவன் அம்மை யோடு வீற்றிருந்து உலகிற்கு அருள்புரிந்ததைக் குறிப்பதே தெப்பத் திருவிழா வாகும்.

**மாசி மாதம்**

1. மகாசிவராத்திரி சிறப்பாக நடைபெறுகிறது. இரவு முழுவதும் அபிஷேக, ஆராதனைகள் நடைபெறுகின்றன.

2. சதுர்த்தசியன்று நடராசர் அபிஷேகம் நடைபெறுகிறது.

**பங்குனி மாதம்**

1. உத்திர நாளன்று சோமலிங்க பூசையும், மேலவாயில் அய்யனார் பூசையும் சிறப்பாக நடைபெறுகிறது.

2. சித்திரை விசுத் திருவிழா தொடங்குகிறது.

இவ்விழாக்கள் தவிர, முருகன் சன்னதியில் ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தன்ற அபிஷேகம், சிறப்பு வழிபாடு நடைபெறு கிறது. ஒவ்வொரு பௌர்ணமியன்றும் பராசக்தி சன்னதியில் விளக் குப் பூசை நடைபெறுகிறது. 108 விளக்குகள் ஏற்றப்பட்டு சுமங்கலிப் பெண்களால் இப்பூசை செய்யப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் பெருமாளுக்கான சிறப்பு அபிஷேகம் நன்னரப் பெருமாள் சன்னதியில் நடைபெறுகிறது.

## 3. முப்பெரும் விழாக்கள்

திருக்குற்றாலநாதர் கோயிலில் நாள்தோறும் நடைபெறும் வழிபாடுகள், மாதந்தோறும் நடைபெறும் வழிபாடுகள், சிறப்பு வழி பாடுகள் ஆகியவை கூறப்பட்டன. இனி, இக்கோயிலில் நடைபெறும் மூன்று பெரும் விழாக்களைக் காணலாம். இக்கோயிலில் நடைபெறும் விழாக்களில் முதன்மையானது, ஆடல்வல்லானாகிய கூத்தபிரானுக்கு நடைபெறுகின்ற ஆருத்ரா தரிசனம் என்னும் ஆதிரைத் திருநாள் விழா வாகும். மற்ற இருவிழாக்களும் குறும்பலா ஈசனாகிய குற்றாநாதருக் கான விழாவாகும். சித்திரை விசு, ஐப்பசி விசு ஆகிய இரண்டும் அவ்விழாக்களாகும். அம்மூன்று விழாக்களை மூன்று திருநாள் என்று குறவஞ்சி போற்றுகிறது.[12] இம்மூன்று விழாக்களும் தொடங்கு வதற்கு முந்தைய செவ்வாய்க்கிழமையன்று செண்பகாதேவி அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. 10 நாட்கள்களும் திரு விழா இனிது நிறைவேற அம்பாளின் அனுக்கிரகம் முதலில் பெறப் படுகிறது.

### அ. விசுத் திருவிழாக்கள்

குற்றாலநாதருக்கான சித்திரை விசுத்திருவிழா சித்திரை மாதப் பிறப்பன்று முடிவடைகிறது. பங்குனி மாதத்தின் இறுதி ஒன்பது நாட்களும் விழா நடைபெறுகிறது. 10-வது நாளாக சித்திரை மாதப் பிறப்பன்று சித்திரை விசுத் திருவிழா நடைபெறுகிறது. அதேபோல் புரட்டாசி மாதம் இறுதி ஒன்பது நாட்களில் நடக்கும் ஐப்பசி விசுத்திருவிழா, ஐப்பசி மாதம் முதல் நாளன்று 10-ஆம் திருநாளாக விழா. இனிது நிறைவேறுகிறது. இவ்விரு திருவிழாக்களிலும் திருவிலஞ்சிக்குமரர் தன்னுடைய இருதேவியருடன் கலந்து கொள் கிறார். பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாக்களின் கலந்துகொண்டு, 10-ஆம் நாள் திருவிலஞ்சிக்குமரர் பிரியா விடை பெற்றுச் செல்கிறார், குற்றாலநாதருக்கான இவ்விரு விழாக்களும் ஒரே மாதிரிதான் கொண்டாடப்படுகின்றன. ஒரே மாதிரியான வாகனங்களில்தான் இறை வனும், இறைவியும், பஞ்சமூர்த்திகளும் எழுந்தருள்கின்றனர்.

விழா தொடங்குவதற்கு முந்தினம், விழா தொடங்குவதற்கான காப்புக் கட்டுகின்ற சடங்கு நடைபெறுகிறது. இறைவனுக்கு அனுக் கையும்,அம்பாளுக்கு ரக்ஷாபந்தனமும் செய்யப்படுகிறது.

முதலாம் திருநாளன்று காலையில், விழாவிற்கான கொடி யேற்றம் செய்யப்படுகிறது. விழாக் காண,திருவிலஞ்சிக்குமரர் தன் இருதேவியருடன் எழுந்தருள்கிறார். மாலையில் ஸ்ரீபலிவிநாயகர் அஸ்திதேவர் வீதிவலம் வருகின்றனர். இறைவனும் அம்பாளும் ஏகசி ம்மாசனம் என்னும் வெள்ளிச் சப்பரத்தில் காட்சி கொடுக்கின்றனர். இறைவன் வலம் வரும் வீதிகளில் உழவாரப் பணிவிடை செய்வதற் காக அப்பரடிகள் வீதியுலா வருகிறார். தொடர்ந்து இறைவனும் தேவியும் வெள்ளி ஏகசிம்மாசனத்திலும், முருகன் வெள்ளிச் சப்பரத் திலும் வீதியுலா வருகின்றனர். இதே முறையில் ஏகசிம்மாசனத்திலும் வெள்ளிச் சப்பரத்திலும், இறைவன், அம்பாள், முருகன் ஆகிய தெய் வங்கள் இரண்டாம் திருநாள்- காலை, மாலை, மூன்றாம் திருநாள் காலை ஆகிய மூன்று பொழுதும் எழுந்தருள்கின்றனர். மூன்றாம் திருநாள் மாலையில் முருகன் வெள்ளிச் சப்பரத்திலும், குற்றாலநாதர் பூத வாகனத்திலும், குழல்வாய்மொழியம்மன் சிம்ம வாகனத்திலும் எழுந்தருள்கின்றனர். மீண்டும் நான்காம் திருநாள் காலையில் வெள்ளிச் சப்பரங்களில் மூவரும் வீதியுலா வருகின்றனர்.

நான்காம் திருநாள் மாலையில் குற்றாலநாதர், குழல்வாய்மொழி யம்மன் ஆகிய இருவரும் தனித்தனியே வெள்ளி ரிஷப வாகனத்திலும், திருவிலஞ்சிக்குமரர் வெள்ளி மயில் வாகனத்திலும், விநாயகர் வெள்ளி மூஷிக வாகனத்திலும் வீதி உலா வருகின்றனர்.

ஐந்தாம் திருநாள் மிகச் சிறப்பான ஒன்றாகும். அன்றுதான் தேர்த்திருவிழா. பொதுவாக எல்லாக் கோயில்களிலும் விழா இறுதி நாட்களில்தான் தேரோட்டம் அமைந்திருக்கும். ஆனால், இங்கு ஐந்தாம் திருநாளில் அமைந்துள்ளது. விநாயகர், முருகன், குழல்வாய் மொழி, குற்றாலநாதர் ஆகியோர் தனித்தனித் தேரில் உலா வருகின் றனர். தேர்த்திருவிழா காலையில் நடைபெறுகிறது. ஒரே நேரத்தில் அழகிய நான்கு தேர்கள் தேரோடும் வீதிகளில் உருண்டோடுகின்றன. ஐந்தாவது தேராகிய ஆடல்வல்லானின் தேர் இவ்விருவிழக்களின் பொழுதும் வீதியுலா வருவதில்லை. அன்று மாலையில் முருகன் வெள்ளி சப்பரத்திலும், இறைவன் பூத வாகனத்திலும், அம்பாள் கிளி வாகனத்திலும் வீதியுலா வருகின்றனர்.

6,7,8,9 ஆகிய நான்கு திருநாட்களிலும் காலையிலும் மாலை யிலும் திருவிலஞ்சிக்குமரமர் வெள்ளிச் சப்பரத்தில் எழுந்தருள்கிறார். 6-ஆம் திருநாள் மாலையில் இறைவன் யானை வாகனத்திலும், அம்பாள் அன்னாவாகனத்திலும் பவனி வருகின்றனர். 7-வது திருநாள்

காலையில் இறைவனும் அம்மனும் வெள்ளிச் சப்பரத்தில் எழுந்தருள் கின்றனர். அன்று காலையும், மாலையும் நடராசருக்கு தாண்டவ தீப ஆராதனை நடைபெறுகிறது. அன்று மாலை தனக்கே உரிய வெள்ளி ஏகசிம்மானத்தில், வெள்ளை மலர்களால், வெள்ளை சாத்தி என்று, அலங்கரிக்கப்பட்டு வடக்கு வாயில் வழியாக நடராசர் வீதியுலா செல்கிறார். இரவு சித்ரசபையில் எழுந்தருள்கிறார்.மறுநாள் காலை (8-ஆம் திருநாள்) சித்ரசபையில் தாண்டவ தீபாராதனை நடை பெறு கிறது. பச்சை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, பச்சை சாத்தி என்ற பெயருடன் மீண்டும் வடக்கு வாயில் வழியாக நடராசர் திருக் கோயி லினுள் எழுந்தருள்கிறார். அவ்விரு பொழுதும் குற்றாலநாதர் குழல் வாய்மொழி அம்மையுடன் பூம்பல்லக்கில் எழுந்தருள்கிறார்.

8-ஆம் திருநாள் மாலையில் கங்காளநாதர் என்னும் பிட்சாடண மூர்த்தி பூங்கோயில் வாகனத்தில் எழுந்தருள்கிறார்.

9-ஆம் திருநாள் காலையில் சுவாமியும் அம்பாளும் வெள்ளிச் சப்பரத்தில் எழுந்தருள்கின்றனர். பாலுக்கு ஏங்கிப் பசித்தழுத ஞான சம்பந்தப் பிள்ளைக்கு, அன்னை ஞானப்பாலூட்டுகிறார். அன்று இரவு சுவாமி பூத வாகனத்திலும் அம்பாள் காமதேனு வாகனத்திலும் வீதி யுலா வருகின்றனர்.

10-ஆம் திருநாள் விசுத்திருவிழா. திருவிலஞ்சிக்குமரர் இறை வனிடம் பிரியா விடைபெறுகிறார். இறைவனிடமும், இறைவியிட மும் குமரர் பிரியா விடைபெறுவது மிக அற்புதமான காட்சியாகும். பிரிந்து செல்லும் மைந்தனுக்கு அன்புப் பரிசுக் கொடுத்து இறைவன் அனுப்பி வைக்கிறார். பட்டாடைகள் அணிந்து மயில் வாகனத்தில் இருதேவியருடன், முருகன் பிரியா விடைபெற்றுச் செல்கிறார். பின்னர் குற்றாலநாதரும் குழல்வாய்மொழி அம்மையும் தீர்த்தவாரிக்குச் செல்கின்றனர். அன்று மாலையில் இறைவனும் இறைவியும் தனித் தனியாக வெள்ளி ரிஷப வாகனத்திலும், முருகன் வெள்ளி மயில் வாகனத்திலும், விநாயகர் வெள்ளி மூஷிக வாகனத்திலும் காட்சி தருகின்றனர். அன்று இரவு பஞ்சமூர்த்திகள் எழுந்தருள, இறைவன் அம்பாள் மூலஸ்தானம் சென்றடைகின்றனர்.

தீர்த்தவாரி முடிந்தவுடன் இறைவன் அம்பாளுக்கான விழாக் காப்பு நீக்கப்படுகிறது. விழாக்காப்பு நீக்கப்பட்டவுடன், தீர்த்தவாரி முடிந்து, இறைவனும் இறைவியும் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுக்கின்றனர்.

## ஆ. ஆதிரைத் திருவிழா

தென்தில்லை எனப் போற்றப்படும் திருக்குற்றாலத்தில் கூத்தாடும் பெருமானுக்கு மார்கழி மாதம் திருவாதிரைத் திருநாளையொட்டி நடைபெறும் பத்து நாட்கள் திருவிழாவே ஆருத்ரா தரிசனம் என்னும் ஆதிரைத் திருநாளாகும். "தில்லையில் அபிஷேகம் காண வேண்டும், திருக்குற்றாலத்தில் ஆராதனை காண வேண்டும்" என்பதற்கேற்பத் திருக்குற்றாலத்தில் இவ்வாதிரைத் திருநாள் 10 நாட்களும் காலையிலும் மாலையிலும் நடராசருக்குத் தாண்டவ தீபாராதனையுடன் நடைபெறுகிறது.

தாண்டவ தீபாராதனை என்பது இத்தலத்தில் நடராசருக்கு மட்டும் மகுடாகமப்படி நடத்தும் சிறப்பு ஆராதனையாகும். இம்மாதிரியான ஆராதனை தமிழகத்தில் வேறு எந்த ஆலயத்திலும் கிடையாது. இறைவனின் நடனக்காட்சி ஒளிவடிவில் வெளிப்படுகிறது. இறைவனுடைய தாண்டவத்தை, திரிபுர தாண்டவத்தை, தேவர்கள் காண விரும்பி இறைவனை வேண்ட, அவர்களுக்கு இறைவன் காட்டிய நடனக் காட்சியே தாண்டவ தீபாராதனையாகும். தேவர்கள் இறைவனைப் பூசை செய்கிறார்கள். தேவர்கள் வழிபட்டவுடன், இறைவன் காட்சி கொடுக்கிறான். தேவர்கள் தாண்டவம் தரிசிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர். சிறு கிண்ணங்களில் அபிஷேகத் திரவியங்கள் வைத்துப் பாவனாபிஷேகம் செய்கின்றனர். பின்னர், தாம்பூலம் முதலியவற்றைப் பாவனா நைவேத்தியம் செய்கின்றனர். பின்னர், ஆனந்த நர்த்தனக்காட்சி, 7 அடுக்கு புஷ்ப தீபமாக, நர்த்தன தீபம் நடைபெறுகிறது. இது அனவரத தாண்டவம் என்று அழைக்கப்படும். ஆனந்த பைரவி ராகம் சாப்பு தாளத்தில் இந்த நர்த்தன தீப ஆராதனை நடைபெறுகிறது.

இந்நடனம் கண்டு மகிழ்ந்த தேவர்கள், இறைவனிடம் மீண்டும் இயற்கையாயுள்ள தனிநிலை காட்ட வேண்டுமென வேண்டுகின்றனர். அதற்காக 5 தட்டு புஷ்ப தீபம் முதல் பிற தீப ஆராதனைகளைச் செய்கின்றனர்.

இறைவனுக்குச் செய்யப்படும் ஆராதனைகளும் அவற்றின் பொருளும் வருமாறு:

| ஆராதனை | | பொருள் |
|---|---|---|
| 11 | தட்டு புஷ்ப தீபம் | அஷ்டாசதருத்ரர் (108) |
| 9 | தட்டு புஷ்ப தீபம் | 96 தத்துவங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 7 | தட்டு புஷ்ப தீபம் | 81 மந்திரங்கள் | பூமி |
| 5 | தட்டு புஷ்ப தீபம் | 51 அட்சரம் | |
| 3 | தட்டு புஷ்ப தீபம் | 27 நட்சத்திரங்கள் | |

| | |
|---|---|
| சாம்பிராணி தூபம் | ஆணவமாகிய அறியாமையைக் கிரியா சக்தியால் நீக்குதல் |
| தீபக்கால் தீபம் | ஞானத்தை விளக்குதல் |
| வேதிகை | பீடப்பலகை |
| நாகதீபம் | ஆதிசேடன் |
| நந்நி தீபம் | நந்தி |
| யானை தீபம் | இந்திரன் |
| புலி தீபம் | வியாக்ரபாதர் |
| அன்ன தீபம் | பிரம்மா |
| குதிரை தீபம் | குபேரன் |
| புருஷா மிருக தீபம் | முக்திபெற்ற ஆன்மா |
| பத்ர தீபம் | மேருமலை |
| சூலதீபம் | சக்தி (அஸ்திர தேவர்) |
| கும்ப தீபம் | கங்கை |
| கர்ப்பூர தீபம் | ஆன்மா சத்வகுணமடைந்து ஞானமாகிய அக்னியும் கலந்து எல்லாப் பற்றுகளையும் நீங்கப் பெற்று பரம முக்தியடைதல் |
| 7 கவர்தட்டு கற்பூரதீபம் | இறைவன் ஆறு அத்துவாக் களுக்கும் அப்பாற்பட்டவன் |
| குடை | சிவவியாபகத்தில் ஆன்மா வியாப்பியமாதல் |
| கண்ணாடி | பிரபஞ்ச சிருஷ்டி- இச்சா சக்தி வியாபாரம் |
| சாமரம் | ஆன்மா சாயுஜ்ய அனுபவசித்தி |
| விசிறி | ஆன்ம விருத்தியைச் சிவனிடம் சேர்த்தல் |
| தோத்திரம் | சிவத்தில் லயமாதல் |

இவ்வாதிரைத் திருநாளில் ஆடல்வல்லானுக்குச் செய்யப்படும் சோடசோபசாரம் (16 வகை) வருமாறு:

1. தாம்பூலம்
2. பாத்தியம்
3. ஆசமனம்
4. அர்க்கியம்
5. கந்தம்
6. புஷ்பம்
7. தூபம்
8. தீபம்
9. ஆராத்ரிகம் (புஷ்ப தீபம்)
10. தர்ப்பணம் (கண்ணாடி)
11. சத்திரம் (குடை)
12. சாமரம்
13. நிருத்தம்
14. கீதம்
15. வாத்யம்
16. தோத்திரம்

இவ்வாறு சிறப்பான ஆராதனை வழிபாடுகளுடன் நடக்கும் ஆருத்ரா தரிசனத் திருவிழா 10 நாட்கள் எவ்வாறு நடக்கிறது என்பது பற்றிய செய்திகள் இங்குக் கூறப்படுகின்றன.

ஆதிரைத் திருநாள் விழா எந்தவிதமான குறைவுமின்றி நடை பெற செண்பகாதேவியம்மன் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்து விழா வைத் தொடங்குகின்றனர். விழா தொடங்குவதற்கு முதல்நாள் அனுக்கை விநாயகர் வழிபாடு நடக்கிறது. நடராசப் பெருமானுக்கு ஆதிரைத் திருநாள் காப்புக் கட்டுகிறார்கள். முதலாம் திருநாளன்று காலையில் கொடியேற்றம், நடராசர் தன்னுடைய நிலையத்திலிருந்து மண்டபம் வருகிறார். இங்குதான் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் தாண்டவ தீபாராதனை நடைபெறுகிறது. அன்று மாலை அப்பர் வீதி உலா வந்து உழவாரப் பணிசெய்கிறார். அன்று இரவு இரண்டாம் திருநாள் காலை, இரவு, மூன்றாம் திருநாள் காலை ஆகிய நேரங்களில் குற்றாலநாதரும், குழல்வாய்மொழியம்மனும் வெள்ளிச் சப்பரத்தில் வீதியுலா வருகின்றனர். மூன்றாம் திருநாள் இரவு சுவாமி பூத வாகனத்திலும், அம்பாள் சிம்மவாகனத்திலும் வீதியுலா வருகின் றனர். நான்காம் திருநாள் காலையில் தனித்தனி வெள்ளிச் சப்பரத்தில் வீதியுலா வரும் இறைவனும், இறைவியும் மாலையில் தனித்தனியாக வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதியுலா வருகின்றனர். பஞ்சமூர்த்தி களும் வீதியுலா புறப்படுகின்றனர். முருகன் வெள்ளி மயில் வாகனத் திலும், கணபதி வெள்ளி மூஷிக வாகனத்திலும் பவனி வருகின்றனர்.

ஐந்தாம் திருநாள், காலையில் திருத்தேர், நடராசரும், பஞ்ச மூர்த்திகளும், அம்பாளும் தனித்தனித் தேர்களில் வீதியுலா வருகின்

றனர். சோதிடநூல் வல்லுநர்கள் கணக்கிட்டு, குறிப்பிடும் நேரங்களில் நடராசப் பெருமாள் திருவாதிரை மண்டபத்திலிருந்து புறப்பட்டு, தனக்கே உரிய வடக்கு வாசல் வழியாகத் தேருக்கு வருகிறார். நடராச ருடைய தேர் மிகப் பெரியது. அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந் தது. சித்திரை, ஐப்பசி விசுத் திருவிழாக் காலங்களில் நான்கு தேர் மட்டுமே வீதியுலா வந்த வீதியில், ஐந்து தேர்கள் பவனி வருகின்றன. தேர்நிலைக்கு வந்ததும், செங்குந்தர் மண்டகப்படி மண்டபத்தில் இளைப்பாறிவிட்டு, நடராசர் வடக்கு வாயில் வழியாகக் கோயிலின் உள்ளே சென்று திருவாதிரை மண்டபத்தில் வீற்றிருக்கிறார். அன்று இரவு சுவாமி பூத வாகனத்திலும் அம்பாள் கிளி வாகனத்திலும் பவனி வருகின்றனர். ஆறு, ஏழாம் திருநாட்கள் காலையில் இறைவனும் இறைவியும் தனித்தனி வெள்ளிச் சப்பரத்தில் வீதியுலா வருகின்றனர். ஆறாம் திருநாள் இரவு சுவாமி யானை வாகனத்திலும், அம்மன் அன்ன வாகனத்திலும் பவனி வருகின்றனர். ஏழாம் திருநாள் இரவு சுவாமியும் அம்பாளும் தந்தப் பல்லக்கில் பவனி வருகின்றனர்.

ஏழாம் திருநாள் இரவு ஏகசிம்மாசனம் என்னும் வெள்ளிச் சப்பரத் தில் நடராசர் எழுந்தருளி, வடக்கு வாயில் வழியாக வெளியே வந்து, தந்தப் பல்லக்கில் பவனி வரும் குற்றாலநாதர், குழல்வாய் மொழியம் மையுடன் இணையாக, வீதியுலா வருகிறார். இரவு வடக்கு வாயில் வழியாக திரிகூட மண்டபம் அடைந்தவுடன் தாண்டவ தீபாராதனை நடைபெறுகிறது. மீண்டும் நள்ளிரவில் வெள்ளை மலர்களால் அலங் கரிக்கப்பட்டு, 'வெள்ளை சாத்தியாக' நடராசர் வீதிவலம் வந்து, சித்ரசபையை அடைகிறார்.

எட்டாம் திருநாள் காலையில் இறைவனுக்கு பச்சை வண்ண அலங்காரங்கள் செய்யப்பட்டு, 'பச்சை சாத்தியாகக்' காணப்படுகிறார். காலையில் சித்ரசபையில் தாண்டவ தீபாராதனை நடைபெறுகிறது. ஆராதனைக்குப் பின் இறைவன் வெள்ளி ஏகசிம்மாசனத்தில் பச்சை சாத்தியாக ரதவீதி வலம் வருகிறார். இறைவனும், இறைவியும் உடன் வெள்ளிச் சப்பரத்தில் வீதியுலா வருகின்றனர். ரத வீதியுலா முடிந்து, வடக்குச் சன்னதி வழியாக வந்து, வசந்த வீதியில் மேற்குச் சுற்று வீதியில் வரும்பொழுது இறைவனின் ஆனந்த நடனக் காட்சி நடை பெறுகிறது. அச்சுற்று வீதியில் வரும்பொழுது மட்டும், அவர்களை யறியாமல், ஏதோ ஒரு சக்தி அவர்களை ஆட்டிப்படைக்கிறது. வடக்கு வாயில் வழியாகக் கோயிலினுள் சென்ற ஆடல்வல்லான் திருவாதிரை மண்டபத்தை அடைகிறார்.

8-ஆம் திருநாள் இரவு பூங்கோயில் என்னும் பூம்பல்லக்குகளில் இறைவனும், இறைவியும் வீதியுலா வருகின்றனர். இறைவன் கங்காளநாதர் என்னும் பிட்சாடனர் வடிவில் எழுந்தருள்கிறார். 9-ஆம் திருநாள் காலையில் இறைவனும் அம்பாளும் தனித்தனியாக வெள்ளிச் சப்பரத்திலும், இரவில், பூத வாகனத்தில் இறைவனும், காம தேனு வாகனத்தில் இறைவியும் வீதியுலா வருகின்றனர்.

9-ஆம் திருநாள் இரவு தாண்டவ தீபாராதனை முடிந்தபின்னர், நடராசர் வெள்ளி ஏகசிம்மாசனத்தில் திருவாதிரை மண்டபத்திலிருந்து புறப்பட்டு, வடக்கு வாயில் வழியாக வெளியே வந்து, திரிகூட மண்டபத்தையடைகிறார். திரிகூட மண்டபத்தில் அன்று இரவு முழு மையும் காட்சி கொடுக்கும் இறைவனுக்கு நள்ளிரவில் அபிஷேகம் நடைபெறுகிறது. இந்த அபிஷேகம்தான் நடராசப் பெருமானுக்குரிய வருடாபிஷேகம் ஆகும். அன்று இறைவனுக்கு சிறப்பான அபி ஷேகங்கள் நடைபெறுகின்றன.

இறைவனுக்குரிய அபிஷேகங்கள் வருமாறு:

1. தைலம்
2. மாக்காப்பு
3. நெல்லிக்காப்பு
4. மஞ்சட்காப்பு
5. பஞ்சகவ்யம்
6. பஞ்சாமிர்தம்
7. பால்
8. தயிர்
9. நெய்
10. தேன்
11. சாறு வகைகள்
12. இளநீர்
13. அன்னம்
14. விபூதி
15. கோளிருங்கம்
16. சகஸ்ரதாரை
17. சங்கு
18. பஞ்சடேசாதகம்
19. சந்தனம்
20. கும்பம்
21. அர்க்கியம்

ஒவ்வொரு அபிஷேகத்திற்கு முன்னும் பின்னும் தூய நீர் அபி ஷேகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு அபிஷேக முடிவிலும் கர்ப்பூர ஆரத்தி காட்டப்படுகிறது.

பத்தாம் திருநாள், திருஆதிரைத் திருநாள் முதலில் சித்ரசபையில் ஓவிய வடிவிலிருக்கும் நடராசப் பெருமானுக்கு வழிபாடு, தாண்டவ தீபாராதனை நடைபெறுகிறது. பின்னர் திருக்கோயில் திரிகூட மண் டபத்தில் எழுந்தருளியிருக்கும் நடராச மூர்த்திக்கு வழிபாடு, தாண்டவ தீபாராதனை நடைபெறுகிறது. இறைவன் ஆருத்ரா தரிசனக் காட்சி யளிக்கிறார்.

ஆருத்ரா தரிசனம் முடிந்தபின்னர், நடராசப் பெருமான் ஏக சிம்மாசனம் என்னும் வெள்ளிச் சப்பரத்தில் புறப்பட்டு, தீர்த்தவாரி மண்டபம் அடைகிறார். அங்கு அலங்காரங்கள் கலைக்கப்பட்டு தீர்த்தவாரி அபிஷேகம் நடைபெறுகிறது. பால், பஞ்சாமிர்தம், தேன், எலுமிச்சைச் சாறு, விபூதி, சந்தனம், பன்னீர், ஆகிய அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு அபிஷேகத்திற்கிடையேயும் புனித நீராட்டும், கர்ப்பூர ஆராதனையும் உண்டு. பின்னர் திருவிழா காப்பருத்து முளைப்பாலியில் இடுகின்றனர். முடிவாக புனித கும்ப அபிஷேகம் நடைபெறுகிறது. ஆராதனை, வழிபாடு முடிந்தபின்னர், வெள்ளி ஏகசிம்மாசனத்திலிருந்து இறங்கிய இறைவன், வடக்கு வாயில் வழியாகத் தன்னுடைய இருக்கையை அடைகிறார். இருக்கையை அடைந்தவுடன் பன்னீர் அபிஷேகம், நைவேத்தியம், ஆராதனை எல்லாம் நடைபெறுகின்றன. திருவிழா நாட்களில் திரு வெம்பாவை மட்டுமே பாடியவர்கள், இறைவன் இருக்கையை அடைந் தவுடன், திருவெம்பாவை, தேவாரம், திருப் பல்லாண்டு பாடுகின் றனர். இறைவனே தேவாரம் பாடச் சொல்வது போல், திருவெம் பாவைப் பாடி முடிந்தவுடன், ஓதுவாருக்கு இறை வனுக்கு அணி வித்த மாலையை அணிவித்து தேவாரம் பாடுமாறு பணிக்கின்றனர். முடிவில், பட்டர் வடமொழியில் ஆசீர்வாதம் வழங்க விழா இனியே நிறைவுறுகிறது.

பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவின் பொழுது தினமும் காலையும், மாலையும் திருவெம்பாவை மட்டும் பாடுகிறார்கள். ஆராதனை முடிவில் தினமும் வடமொழியில் அனைவருக்கும் பொருந் துகின்ற முறையில், நாடு செழிக்க, மக்கள் வாழ்வு மலர வடமொழி யில் ஆசீர்வாதம் சொல்லப்படுகிறது. இன்று இக்கோயிலின் மூத்த குருக்களாகிய திரு. சுப்பிரமணி பட்டர் வழங்கும் ஆசீாவாதம் மிகச் சிறப்பாக உள்ளது. இவ்வாறு ஆசீர்வாதம் வழங்கும் முறை திருக் குற்றாலநாதர் கோயிலில்தான் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. விழாக் காலங்களில் தீபாராதனை முடிந்த பின்னர், தேவாரம் என்னும் தமிழ் மறை ஓதுமுன்னர், சுவஸ்தி வாசகம் என்னும் ஆசீர்வாதம் வடமொழியில் பெரும்பாலான கோயில்களில் சொல்லப்படுகின்றன. ஆனால், திருக்குற்றாலநாதர் கோயிலில் அம்முறைக்கு மாறுபட்டு, ஆகமமுறைப்படித் தமிழ் மறைகளாகிய தேவாரம், திருவாசகம் ஓதிய பின்னர்தான் ஆசீர்வாதம் சொல்லுகின்றனர்.

இந்தப் புதுமுறை இந்தக் கோயிலில்தான் முதன்முதலாக அறி முகப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுவதே பொருத்தமாகும்.

திருக்குற்றாலநாதர் கோயிலில் ஆடல்வல்லானுக்கு நடை பெறும் இவ்விழாவே முப்பெருந் திருநாட்களில் முதன்மையானது. இந்த விழாவிலும் மூலவர் திருக்குற்றாலநாதரைவிட கூத்தனே முத லிடம் பெற்றுள்ளார். சிறப்பு ஆராதனைகளும், வழிபாடும் கூத்த னுக்கே உரியதாகக் காணப்படுகிறது. நடராசப் பெருமாள் வீதியுலா வரும் நாட்களே திருவிழாவின் முக்கிய நாட்களாகக் காணப்படு கின்றன. திருத்தேரிலும் நடராசரே முதலிடம் பெற்றுள்ளார். வாகனத் திலும், ஏகசிம்மாசனம் என்ற பெயரில் தனித்தன்மை விளங்கக் காட்சி யளிக்கிறார். இத்திருவிழாவின் பொழுது காப்பு அணிந்து, தீர்த்தவாரி ஆடும் பெருமையும் நடராசருக்கே உரியது. எனவே, தொல் பழங் கோயிலாகிய கூத்தர் கோயிலில் குடியிருந்த கூத்தப் பெருமானுக்கு நடைபெறும் விழா இது என்றும், அதில் குறும்பலா ஈசனாகிய குற்றாலநாதரும் கலந்துகொண்டு அருள்புரிகிறார் என்றும் கருத வாய்ப்புண்டாகிறது. இப்பெரு விழாவினைச் சிறப்பாக நடத்துவதற் காக இரவு பகலாகப் பணியாற்றிய கோயில் பணியாளர்கள், அர்ச் சகர், முதலானோருக்கு, இவ்விழா முடிந்தபின், தங்களுடைய அன் றாடப் பணிகளில் பல சலுகைகள் வழங்கப்படுகின்றன. உழைக்கும் வர்க்கத்திற்கு உயர்வு செய்யும் இப்பழக்கம் பல தலைமுறைகளாகப் பின்பற்றப்படுகிறது. இது இக்கோயில் அலுவலர்களுக்கான தனிச் சலுகைகளில் ஒன்றாக விளங்குகிறது.

பத்து நாட்கள் திருவிழாவின் பொழுதும் திரிகூட மண்டபத்தில் சமயச் சொற்பொழிவுகள், இலக்கியச் சொற்பொழிவுகள், விவாத அரங்கங்கள், இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

## 4. வாகனங்கள்

திருக்குற்றாலநாதர் கோயிலில் தந்தம், வெள்ளி, மரத்தாலான பல அழகிய வாகனங்கள் காணப்படுகின்றன.

### அ. தந்தப் பல்லக்கு

தேக்கு மரத்தில் செய்யப்பட்டு, தந்தத் தகட்டினால் பொதியப் பட்டுள்ள பல்லக்கே தந்தப் பல்லக்காகும். இது கலைக் கருவூலம் எனலாம். கடவுளரின் உருவங்கள் தந்தத்தில் இழைக்கப்பட்டுள்ளன. இயற்கைக் காட்சிகள் பல வண்ணங்களில் ஓவியமாகத் தீட்டப் பெற் றுள்ளன. விநாயகர், முருகன், உருவங்கள் தந்தத்தில் உருவாக்கப் பட்டுள்ளன. இறைவன், அம்மன் இருவரும் தனித்தனியாக ரிஷப வாகனத்தில் செதுக்கப்பட்டுள்ளனர். நடராசர், காளி உருவங்களும் மிகுந்த வேலைப்பாட்டுடன் செதுக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளன.

பள்ளிகொண்ட பெருமாளாக, திருக்கரத்தில் சிவலிங்கமும் நாபியின் மேல் பிரம்மாவும் காட்சியளிக்க, வேணு கோபாலர் அனந்தசயன உருவில் படைக்கப்பட்டுள்ளார். மகா மூர்த்திகள் திருவுருவம் ஐந்து திருமுகங்களுடனும், பத்து திருக்கரங்களுடனும் உருவாக்கப்பட்டுள்ளது. துவாரபாலகர்களின் உருவங்களும் தந்தத்திலேயே உருவாக்கப் பட்டுப் பதிக்கப்பட்டுள்ளன. இத்திருவுருவங்கள் அனைத்தும் தந்தத் தகட்டில் கலை வேலைப்பாட்டுடன் இழைக்கப்பட்டுப் பல்லக்கில் பதிக்கப்பட்டுள்ளன.

தந்தத் தகட்டில் பல வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. குழல்வாய்மொழியம்மையுடன் குறும்பலாநாதர் ஓவியமாகக் காட்சியளிக்கிறார். வியாக்யான தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர், அர்த்த நாரீஸ்வரர் என்று இறைவனின் பல வடிவங்கள் ஓவியங்களாக வரையப் பட்டுள்ளன. வீரபத்திரரின் ஓவியமும் உள்ளது. ஒருபக்கம் ரிஷபத்தையும், மறுபக்கம் சிம்மத் தலையும் கொண்ட விசித்திரமான வாகனத்தில் தேவி அமர்ந்திருக்கிறார். சாஸ்தா, கண்ணப்பர், மார்க்கண்டேயர் உருவங்களும் வண்ணத்தில் உள்ளன. முதலை வாயில் அகப்பட்ட யானை, ஆதிமூலமே என்று அழைக்க, அவ்யானைக்கு இறைவன் அருள்புரிந்த காட்சி மிக அழகாய் வரையப்பட்டுள்ளது. அர்ச்சுனனின் வில்வித்தையை வெளிப்படுத்துகிறது ஒரு ஓவியம். அடுத்ததோ, சீதைக்காக இராமன் வில்லை முறித்த காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறது. முருகனின் சூரசம்ஹாரக் காட்சியும், இரணியனை அழிக்க வந்த நரசிம்ம அவதாரக் காட்சியும் அழகாக சித்தரிக்கப் பட்டுள்ளன. காளியின் நர்த்தனமும் காணப்படுகிறது. இவை போன்ற பல ஓவியங்கள் கண்ணைக் கவரும் வண்ணத்தில் காணப்படுகின்றன.

இயற்கை எழிலையும் அழகாக வண்ணத்தில் வரைந்துள்ளனர். செடி, கொடிகளும், வண்ணமலர் பூத்துக் குலுங்கும் மரங்களும் காணப்படுகின்றன. செடி, கொடிகளிடையே கிளி, அன்னம் போன்ற பறவைகள் நிறைந்து காணப்படுகின்றன. குயில்களும் மயில்களும் காணப்படுகின்றன. சோலைகளில் ஆனந்தமாகத் துள்ளி விளையாடும் குரங்குக் கூட்டங்கள், யானை, யாளி முதலிய விலங்குகள் நிறைந்து காணப்படுகின்றன.

பல்லக்கின் உட்பகுதியில் ஒருபக்கம் நடராசர், சிவகாமியம்மையுடன் காட்சி கொடுக்கிறார். பக்கத்தில் பிரம்மா, விஷ்ணு ஆகிய கடவுளர் உருவங்களும், பதஞ்சலி முனிவர், வியாக்ராபாதர் ஆகிய முனிவர் உருவங்களும் காட்சியளிக்கின்றன. எதிர்பக்கத்தில் காளி,

வீரபத்திரர், பைரவர் உருவங்கள் காணப்படுகின்றன. பல்லக்கின் உட்பகுதியில் பதிக்கப்பட்ட அனைத்து உருவங்களும் தந்தத்தால் ஆனவையே. இவ்வாறு கலைப் பெட்டகமாக விளங்கும் தந்தப் பல்லக்கில், குற்றாலநாதரும், குழல்வாய்மொழி அம்மனும் ஏழாம் திருநாள் இரவில் வீதி வலம் வருகின்றனர்.

## ஆ. வெள்ளி வாகனங்கள்

| | |
|---|---|
| நடராசருக்கான வெள்ளிச் சப்பரம் (ஏகசிம்மாசனம்) | - 1 |
| குற்றாலநாதர் - அம்பாள் வெள்ளிச்சப்பரம் " | - 1 |
| பிரதோஷ வாகனம் (சப்பரம்) | - 1 |
| ரிஷப வாகனம் | - 2 |
| முருகன் - மயில் வாகனம் | - 1 |
| விநாயகர் - மூஷிக வாகனம் | - 1 |

வெள்ளி வாகனங்களில் நடராசருக்கான ஏகசிம்மாசனம் அளவிலும், எடையிலும், கலைவண்ணத்திலும் சிறந்தது. ரிஷப வாகனங்களும் மயில் வாகனமும் கலை அழகுடன் செய்யப்பட்டுள்ளன.

## இ. தேர்

| | | |
|---|---|---|
| நடராசர் | - | 1 |
| இறைவன் | - | 1 |
| அம்பாள் | - | 1 |
| விநாயகர் | - | 1 |
| முருகன் | - | 1 |

நடராசர் தேர் ஏழு அடுக்குகளுடன் 30 அடி உயரத்தில் மிக அழகாகச் செய்யப்பட்டுள்ளது. இத்தேருக்கு 7 பலகைகள் இணைந்த 8 அடி விட்டமுள்ள 6 சக்கரங்கள் உள்ளன. சுவாமி, அம்மன் தேர்கள் ஐந்து அடுக்குகளுடன் காணப்படுகின்றன. முருகன், விநாயகருக்கான தேர்கள் சுவாமி-அம்பாள் தேர்களைவிடச் சற்று சிறியனவாகும். இத்தேர்களுக்கும் 7 பலகைகள் இணைந்த 8 அடி விட்டமுள்ள 6 சக்கரங்கள் உள்ளன. வடிவிலும், கனத்திலும் பெரிதான நடராசர் தேரில் மட்டும் சிற்ப வேலைகள் உள்ளன. குதிரைகளில் வீரர்கள் இருந்து தேரை இழுப்பது போல நான்கு மூலைகளிலும் செதுக்கப்பட்டுள்ளன. அம்மையப்பனின் ரிஷப வாகனக் காட்சி, திருமால், இராமன், இலக்குவன், விநாயகர், கண்ணன் ஆகிய இறைவனின் சிற்பங்களும்

குடைப்பிடித்துக் கமண்டலம் ஏந்திய முனிவர்கள், சிம்மத்தின் மேலிருந்து சங்கு ஊதுவோர். காமக்களியாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆகிய மக்களின் சிற்பங்களும் காணப்படுகின்றன. பிற தேர்களில் சிற்பங்கள் இல்லை. இத்தேர், ஆதிரைத் திருநாள் விழாவின் பொழுது மட்டும்தான் வீதியுலா வருகிறது. மற்ற நான்கு தேர்களும் மூன்று விழாக்களிலும் பவனி வருகின்றன.

### ஈ. மர வாகனங்கள்

| | | |
|---|---|---|
| பூதம் | - | 1 |
| யானை | - | 1 |
| காமதேனு | - | 1 |
| குதிரை | - | 1 |
| அன்னம் | - | 1 |
| சிம்மம் | - | 1 |
| கிளி | - | 1 |
| ரிஷபம் | - | 2 |
| சப்பரம் (பெரியது) | - | 2 |
| சப்பரம் (சிறியது) | - | 2 |

### உ. செப்புப் படிவங்கள்

கலை வேலைப்பாட்டுடன் கூடிய செப்புப் படிவங்கள் இக் கோயிலில் உள்ளன. 103 செ.மீ. உயரமும் 90 செ.மீ. அகலமும் உடைய நடராசனின் செப்புத் திருமேனி மிகுந்த கலை வேலைப் பாட்டுடன் காணப்படுகிறது. இக் கோயிலில் காணப்படும் செப்புப் படிவங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| சோமாஸ்கந்தர் | - | 2 |
| மனோன்மணியம்மன் | - | 1 |
| குழல்வாய் மொழியம்மன் | - | 2 |
| சத்ய பாமா | - | 1 |
| மாணிக்கவாசகர் | - | 1 |
| திருநாவுக்கரசர் | - | 1 |
| காரைக்காலம்மையார் | - | 1 |
| கங்காளேஸ்வரர் | - | 1 |
| முருகன் | - | 1 |
| வள்ளி | - | 1 |

| | | |
|---|---|---|
| தெய்வயானை | - | 2 |
| சண்டேஸ்வரர் | - | 1 |
| விநாயகர் | - | 2 |
| அகத்தியர் | - | 1 |
| ரிஷி பாந்திகர் | - | 1 |
| செண்பகவல்லி அம்மன் | - | 1 |
| சித்திரசபை நடராசர் | - | 1 |
| சித்திரசபை சிவகாமி | - | 1 |
| சந்திரசேகர் | - | 2 |
| உமாபதி | - | 1 |
| கோமளவல்லியம்மன் | - | 1 |
| பூதேவி | - | 1 |
| தனியம்மை | - | 1 |
| சிவகாமியம்மன் | - | 1 |

**5. வருமானம்**

திருக்குற்றாலநாதர் கோயிலுக்கு நிலத்திலிருந்தும் கட்டிடங்களிலிருந்தும் வருவாய் வருகிறது. 210 ஏக்கர் நஞ்சை நிலமும், 50 ஏக்கர் புஞ்சை நிலமும் (தோப்பு 1/3 பாகம் கூட்டுப்பட்டா) 3 ஏக்கர் நந்தவனமும் கோயிலுக்குச் சொந்தமாக உள்ளன. நஞ்சை நிலத்திலிருந்து ஆண்டுக்கு 840 கோட்டை (1,50,000 கிலோ) நெல்லும், 800 வைக்கோல் கட்டுக்களும், ரூ. 30,000/- ரொக்கமும் கிடைக்கிறது. புஞ்சை நிலத்திலிருந்து ஆண்டுக்கு ரூ.5,000/- வரை வருமானம் வருகிறது. தோப்புக்களிலிருந்து ஆண்டுக்குச் சுமார் ரூ.15000/-, 3000 தேங்காய், 100 பனைநார், 100 பனை ஓலை வருகிறது. நந்தவனத்தில் பயிர் செய்யப்படும் பூக்கள் கோயில் வழிபாட்டிற்கே பயன்படுகிறது. அங்குள்ள இளநீர் சுவாமி அபிசேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

சுமார் ரூ.25,00,000 /- மதிப்புள்ள 110 கட்டிடங்களிலிருந்து ஆண்டுக்கு ரூ. 2.5 இலட்சம் வருமானம் வருகிறது. கோயிலைச் சேர்ந்த காலி மனைகளும் உண்டு. அக் காலி மனைகளைத் தரை வாடகைக்கு விடுவதின் மூலம் ஆண்டு முழுமைக்குமாகச் சில இடங்களிலிருந்து ரூ. 78,000 /- வரை வருமானம் வருகிறது. (பருவ சாரல் காலத்தில் சில இடங்களுக்கு மட்டும் தரை வாடகையாக ரூ.3,00,000/- வரை வருமானம் கிடைக்கிறது.

கோயிலில் பல அற்புதமான நகைகள் உள்ளன. 1959-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி கோயில் நகைகளின் மதிப்பு ரூ. 2,00,000/- ஆகும். நகைப்பட்டியல் வருமாறு:

**நகைகள், உயர்வகைப் பொருட்கள்**

1. சுவாமி கிரீடம்
2. சிவகாமியம்மை மாம்பழக் கொண்டை
3. வாகனப் பதக்கம் (உருக்கப்பட்டுவிட்டது)
4. தும்பிப்பதக்கம்
5. உதரகுண்டலப் பதக்கம்
6. அரசிலைப் பதக்கம்
7. மகரிப் பதக்கம்
8. சீப்பப் பதக்கம்
9. வில்வச் சங்கிலி
10. காது தோடு
11. சுட்டி
12. வெள்ளிச்சங்கிலி பதக்கம்
13. நடராசர் வீரகண்டமணி
14. ஆழ்வார் பதக்கம்
15. சபாபதி குழைகாது
16. நீலகண்டம்
17. தலைச்சுட்டி (சூரியன், சந்திரன்)
18. மாங்காய்மாலை
19. மாங்காய்மாலை (38 மாங்காய்)
20. யக்ஞோப வீதம்
21. தங்க ஜெப மாலை
22. தங்கக்கிளி
23. தாழம்பூ
24. ஜடை நாகம்
25. சந்திரகாரம்
26. ஜெபமாலை
27. வங்கி
28. கைக்கட்டு
29. பாட்லா-2

30. ஜடா-2
31. குடா-2
32. யாழிமுக வளையல்
33. காற்சலங்கை
34. தண்டை
35. உருத்திராட்சமாலை
36. காசுமாலை (விக்டோரியா மகாராணி காசுகள்)
37. டாலர் மாலை (65 டாலர்)
38. ஏழுசர மாலை
39. சாமந்திப்பூ மாலை
40. ஐந்து சரமாலை
41. பிரியாவிடை கிரீடம்
42. ஒட்டியாணம்
43. அரைப்பட்டம்
44. சுவாமி அரைப்பட்டம்
45. சபாபதி அரைப்பட்டம்
46. சபாபதி அபயமுத்திரை
47. சபாபதி முத்திரை
48. சபாபதி கேடயம்
49. திருமாங்கல்யம்
50. வில்வ இலை மாலை
51. தங்க எலுமிச்சை
52. காரை (கழுத்தணி)
53. சோமாஸ்கந்தர்-நாகக்கிரீடம்
54. பாதம்
55. தங்க விபூதிப்பட்டை
56. சங்குமாலை (45 சங்கு)
57. உருத்திராட்ச மாலை
58. விபூதிப்பட்டை
59. கண்மலர்
60. பதக்கம்
61. பாடகம்
62. சங்கிலி (அண்டரங்கப்பறவை)
63. அட்டிகை

64. நெக்லஸ்
65. திருமாங்கல்யம்
66. தூத்தூரிப்பூமாலை
67. கல்வைத்த விபூதிப்பட்டம்
68. பொன்முலாம் பூசப்பட்ட கிரீடம் -3
69. திருமாங்கல்யம்
70. காசுமாலை
71. பொன் ஜெயலட்சுமி காசு
72. உருத்திராட்சமாலை
73. கல்வைத்த திருமண்காப்பு
74. பிச்சிப்பு மாலை
75. இரட்டைத்தலை பறவைப் பதக்கம்
76. அன்னப்பறவைப் பதக்கம்
77. பொன் -54 கிராம்
78. நடராசர் தங்க அங்கி.

## வெள்ளி

1. பிரதோஷ ரிஷப வாகனம்
2. ஏகசிம்மாசனம்
3. சபாபதி வெள்ளிச்சரபம்
4. இறைவன் ரிஷப வாகனம்
5. அம்மன் ரிஷப வாகனம்
6. மயில் ரிஷப வாகனம்
7. சித்திரசபை ஸ்தூபிகள்
8. தரணிபீடம் கிரீடம்
9. விநாயகர் கிரீடம்
10. நாக சுருட்டி
11. நாகாபரணம்
12. வேலாயுதம்
13. குழல்வாய்மொழியம்மன் விமான ஸ்தூபி
14. பள்ளியறைச் சப்பரம்
15. பள்ளியறைக் கதவு
16. குத்து விளக்கு - 19
17. குடம் -16

18. நவகலச செம்பு -16
19. கமண்டலம்
20. கெண்டி
21. பள்ளியறைப் பால் செம்பு
22. அபிஷேகக் கலசம்
23. கும்பம்
24. தாம்பாளம் -2
25. நைவேத்திய டப்பா
26. குவளைப் பாத்திரம்
27. சகஸ்தாம்பாளம்
28. அரிச்சியவட்டகை - 3
29. அபிஷேகக் கலசம்
30. கமலத் தாம்பாளம்
31. சங்குக்கால் தீபம்
32. ஏழு அடுக்குப் புஷ்ப தீபம்
33. ஏழுகிளைக் கற்பூரத்தட்டு
34. இரட்டைப் பால் கிண்ணம்
35. கற்பூரத் தட்டு -3
36. தூபக்கால்
37. தீபக்கால்
38. நீராஞ்சனக் கண்ணாடி
39. நீராஞ்சனக் கிண்ணம்
40. அரிவாள் -2

பாதுகாப்பான அறையில் நகைகள் வைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் காரணமாக நகைகளை அதிகமாக வெளியே எடுப்பது கிடையாது.

ஏராளமான பித்தளை, வெங்கல, செப்புப் பாத்திரங்கள், வழிபாட்டுக்குரிய பொருட்கள் கோயிலில் இருக்கின்றன. கதவு நிலைகள் செப்புத் தகடுகளால் பொதியப்பட்டுள்ளன. எல்லா சன்னதிகளிலும் வெங்கல சர விளக்குகள் காணப்படுகின்றன.

குற்றாலநாதர், குழல்வாய்மொழியம்மன், பரா சக்தி தரணிபீடம், விநாயகர் ஆகிய மூல விக்கிரகங்களுக்கு வெள்ளி அங்கி செய்திருக்கிறார்கள். முருகன், வள்ளி, தெய்வயானை விக்கிரகங்களுக்குத் தங்க மூலாம் பூசிய கிரீடங்கள் உள்ளன.

ரூ.20,000/-க்கு மேல் மதிப்புள்ள வெள்ளிச் சாமான்கள் பூசை காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வெள்ளி வாகனங்கள், தந்தப் பல்லக்கு மதிப்பு ரூ. 1,00,000/- வரை இருக்கும், ஆண்டுக்கு இருமுறை திறக்கப்படும் உண்டியல் மூலமும் கணிசமான தொகை வருமானமாக வருகிறது.

## 6. கட்டளைகள்

கோயிலில் நடைபெறும் ஒவ்வொரு கால பூசைக்கும் தனித்தனிக் கட்டளைகள் உள்ளன. விழாக்காலங்களில் ஒவ்வொரு நாள் விழா விற்கும் தனித்தனிக் கட்டளைகள் உள்ளன. கட்டளைதாரர்களில், திருவாங்கூர் மகாராஜா, பந்தளராஜா, திருவாவடுதுறை ஆதீனம், திருநெல்வேலி மேடைத்தளவாய் முதலியார். திருநெல்வேலி பிள்ளை யன், சொக்கன்பட்டியார் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கட்டளைதாரர்கள் பட்டியலையும், கட்டளை நிலங்களையும் திருக் குற்றாலக் குறவஞ்சி விரித்துரைத்துள்ளது.[13] அவை வருமாறு:

### கட்டளை நிலங்கள் :

1. திருத்துப்புறவு
2. கீழைப் புதுக்குளத்துக் கற்பூரக் கால்பற்று
3. தட்டாங்குளச்சுற்று
4. பிச்சைப்பிள்ளை வயல்கள்
5. அனந்த பத்மநாபன் வயல்கள்

### கட்டளைதார்ரர் பட்டியல்

1. சின்னணைஞ்சேந்திரன், சொக்கம்பட்டி
2. பிச்சைப்பிள்ளை, இலஞ்சி
3. அனந்த பத்மநாபன்
4. வைத்தியநாதன்
5. ஆற்றூர் அழகப்பிள்ளை
6. திருமலைக்கொழுந்து
7. குற்றால நம்பி
8. பால்வண்ண சங்கு
9. பைம்பொழில் பட்டினம் சங்குமுத்து
10. ஓமநல்லூர் கிருஷ்ணன்

11. நரபாலன்
12. சர்க்கரைப்பண்டாரம்
13. கரிவலம் வந்தநல்லூர், இராமநாயகன்
14. ஓமநல்லூர் சங்கரமூர்த்தி
15. சடைத்தம்பிரான்
16. மலைநாட்டார்
17. சிவராமன்
18. பல்லமணிப்பட்டன்
19. சங்குமுத்து
20. சீதரன்.

என்பவை குறவஞ்சியில் இடம்பெற்றுள்ள கட்டளைதாரர் பட்டியல் ஆகும். கட்டளைச் சொத்துக்கள் கோயில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இல்லை.

### 7. தர்ம காரியங்கள்

கோயிலின் சார்பாக இலவச மருத்துவ நிலையம், தேவாரப்பள்ளி முதலியன நடத்தப்படுகின்றன. கோயிலின் நிலத்திலிருந்து 25 ஏக்கர் நிலத்தினை பராசக்தி மகளிர் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கி யுள்ளனர். நலிந்த கோயில் பாதுகாப்புத் திட்டத்திற்காகக் கோயில் வருமானத்திலிருந் ரூ.1,00,000/- முதலீடு செய்துள்ளார்கள். பல சமூகநலத் திட்டங்கள், குழந்தைநலத் திட்டங்கள் போன்ற பல திட்டங் களுக்குக் கோயில் நிதியிலிருந்து நன்கொடைகள் வழங்கப்பட்டுள் ளன. ஆண்டுதோறும் சமபந்தி போஜனம் என்ற பெயரில் பல ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது.

### 8. நிர்வாகம்

1817-இல் தமிழ்நாட்டுக் கோயில்களனைத்தையும் அரசாங்கத் தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் அன்றைய ஆங்கில அரசு கொண்டு வந்துள்ளது. 1863-இல் தர்மகர்த்தாக்களை நியமித்து, அவர் களுடைய நிர்வாகத்தில் கோயிலைக் கொண்டுவந்தது. பின்னர் மாவட்டக் குழுக்களின் நிர்வாகத்தில் கோயில் இருந்தது. 1865-இல் திருநெல்வேலி மாவட்ட சிவன் கோயில் குழுவின் ஆட்சிக்குட்பட்டுத் திருக்குற்றாலநாதர் கோயில் செயல்பட்டது. 1927-இல் உருவாக்கப் பட்ட இந்து அற நிலையத்துறைச் சட்டத்தின்படி, 1944-இல் இருந்து மூன்று தர்மகர்த்தாக்களைக் கொண்ட குழுவின் நேரடி

ஆட்சியில் கோயில் விளங்கியது. இத்தர்மகர்த்தா குழுவானது, பிற்காலச் சோழர் காலத்தில் கோயில் நிர்வாகத்தினைக் கவனித்து வந்த, பாசுபத பெருமக்கள், போன்ற அமைப்பாகும். கோயில் நிர்வாகம் தர்மகர்த்தா குழுவினரால் செய்யப்பட்டாலும், மேலாண்மை ஆதிக்கம் இந்து அறநிலையத்துறை ஆணையரிடமே இருந்தது. இன்று தர்மகர்த்தா குழுக்களும் கலைக்கப்பட்டுத் தக்கார் நிர்வாகத்தில் கோயில் உள்ளது. கோயிலின் அலுவலகப் பணிகளைக் கவனிக்க ஆணையரின் பிரதிநிதியாகச் செயல் அலுவலர் இருக்கிறார்.

இன்று (1986-ல்) கோயிலின் தக்காராக திரு. எஸ். இராமையா கரையாளர் அவர்களும், செயல் அலுவலராக ( நிர்வாக அதிகாரி) திரு. டி. சிதம்பரம் அவர்களும் பொறுப்பேற்றுள்ளனர். கோயில் பணி களில் 45 ஊழியர்கள் உள்ளனர். அவர்களில் 12 பேர் அலுவலகக் காரியங்களிலும், எஞ்சியவர்கள் திருக்கோயில் காரியங்களிலும் ஈடுபட்டுள்ளனர். கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்ய நிர்வாகத்தினர் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றனர்.

### 9. வழிபடும் முறை

திருக்குற்றாலநாதர் கோயில் மகுடாகமப்படி அமைக்கப்பட்டிருப் பதால் விநாயகரை முதலில் வணங்க வேண்டும். பின், நடராசர் சன்னதியை வணங்கிவிட்டு, குற்றாலநாதர் சன்னதிக்குச் சென்று வழி பாடு செய்யவேண்டும். அதன்பின் இறைவன் சன்னதி உட்சுற்று வீதி யில் உள்ள தெய்வங்களை வணங்கிவிட்டு, சண்டேஸ்வரரை வணங் காமல், வெளியே வந்து குழல்வாய்மொழியம்மன் சன்னதிக்குச் செல்ல வேண்டும். அங்கு அம்பாளையும், உட்சுற்று வீதியையும் வலமாக வந்து, சங்க வீதி சுற்றி வந்து வழிபாடு செய்ய வேண்டும். அன்னை பராசக்தி சன்னதியில் வழிபாடு முடித்து, மீண்டும் இறைவன் கோயிலின் உள் சென்று வலம் வந்து சண்டேஸ்வரரை வணங்கிவிட்டு வெளியே வரவேண்டும். மகுடாகம நெறியைப்பற்றி அறியாத பக்தர்கள் இன்று இறைவனை வணங்கி, சண்டேஸ்வரர் சன்னதிக்குச் சென்றுவிட்டு, பின்னரே அம்மன் கோயில் முதலிய இடங்களுக்குச் செல்கின்றனர். ஆனால், கோயில் நிர்வாகத்தில் நாள்தோறும் செய்கின்ற வழிபாடுகள் மகுடாகம முறையைப் பின்பற்றியே அமைந்துள்ளன.

பிரதோஷ வழிபாடு மட்டும் தனியான ஒன்று. பிரதோஷம் என் றால், திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களும் அசுரர்களும் அமிர் தம் எடுக்கும் பொழுது ஆலகால விஷம் உருவாகி, பரவியிருந்த காலம், ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள், இறை வனிடம் வேண்ட, இறைவனும் இடப தேவரின் இரண்டு கொம்பு

களிடையே அமர்ந்து அவர்களுக்கு அபயம் அளித்தார். ஆலால சுந்தரர் மூலம் விஷத்தை முழுமையாக உருட்டி, உட்கொண்டு, கண்டத்திலே அடக்கி, திருநீலகண்டராக மாறிட, தேவர்களையும் உலகையும் காத்தருளினார். அவ்வாறு இடபதேவரின் கொம்புகள் நடுவே நின்று நடனமாடி உலகைக் காத்த நேரமே பிரதோஷம் ஆகும். அது, திர யோதசி திதியில் மாலை 4.30 மணி முதல் 7.30 மணிவரை உள்ள நேரமாகும். இறைவன் உலகைக் காத்தருளியது சனிக்கிழமை என்பதால், சனிக்கிழமை வரும் பிரதோஷம் சிறப்புடையதாகும்.

பிரதோஷ காலத்தில் இடபதேவரையும், சண்டேஸ்வரரையும் மட்டும் பலமுறை பிரார்த்தனை செய்யவேண்டும். முதலில் இடப தேவரை வணங்கி, அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்க வேண்டும். சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசிக்க வேண்டும். அங்கிருந்து வலமாகச் சென்று வடதிசையை அடைய வேண்டும். அங்கிருந்து கோமுகி வழியே செல்லாமல், சென்ற வழியே திரும்பிவந்து இடபதேவரை வணங்க வேண்டும். அங்கிருந்து புறப்பட்டு இடபதேவரைத் தரிசிக்காமல் வலமாகச் சென்று, வடதிசையைச் சென்றடைய வேண்டும். அங் கிருந்து திரும்பி கோமுகியைக் கடக்காமல், இடபதேவரைத் தரிசிக் காமல் இடமாக வந்து சண்டேஸ்வரரை மீண்டும் அடைந்து பிரார்த் திக்க வேண்டும். திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அவருடைய இரண்டு கொம்பின் நடுவே, ஆனந்த நடனமாடும் சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும். பிரதோஷ வழிபாடு இம் முறையில்தான் செய்ய வேண்டும். கோயிலில் இம்முறையில்தான் வழிபாடு செய்கின்றனர். பிரதோஷத்தன்று இறைவன் எழுந்தருள்வதற்கென்றே தனியாக ஒரு வெள்ளிச் சப்பரம் இத்திருக்கோயிலில் உள்ளது.

## 10. வெளியீடுகள்

கோயில் நிர்வாகத்தினர் இறைப் பணியோடு இலக்கியப் பணி யும் செய்து வருகின்றனர். இலக்கிய அன்பர்களின் தேவைக்காக ஒரு பெரிய நூலகம் இக்கோயில் நிர்வாகத்தினரால் நடத்தப்படுகிறது. திருக்குற்றாலம் பற்றி மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய திருக்குற்றாலத் தலபுராணம் தனியாகவும், திருக்குற்றாலக் குற வஞ்சி, மாலை, ஊடல் ஆகிய மூன்றையும் இணைத்து ஒரு புத்தக மாகவும், திருக்குற்றால யமக அந்தாதி, உலா, சிலேடை வெண்பா, பரம் பொருள் மாலை, கோவை ஆகியவற்றை இணைத்து ஒரு புத்தக மாகவும் வெளியீட்டுள்ளார்கள். திருக்குற்றாலத் தல வரலாறு என்ற நூலை வழிகாட்டி நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

ஞானசம்பந்தர் பாடிய குற்றாலப் பதிகங்களையும், திருவெம்பாவையையும் உரையுடன் இலவசமாக வெளியிட்டுள்ளார்கள். வார வழிபாட்டுப் பாராயணத்திரட்டு, நாட்குறிப்பு முதலிய இலவச வெளியீடுகளும் வெளியிட்டுள்ளனர்.

**முடிவுரை**

காலங்காலமாக உருமாற்றம் பெற்று வளர்ச்சியடைந்த இந்தத் திருக்கோயில் இன்றும் சங்கு வடிவத்தில் அமைந்துள்ளது. சிகரத்தில் சக்கரமும் இடம்பெற்றுள்ளது. பல நவீன வசதிகளுடன், பக்தர்களின் வசதிக்கேற்ப, கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள் வழிபாடு, மாத வழிபாடு, ஆண்டுத் திருநாள் முதலியவை முறைப்படியும், சிறப்பாகவும் செய்யப்படுகின்றன.

மகுடாகம முறைப்படி வழிபாடு நடந் தாலும், முதல் வழிபாடு கூத்தர் கோயிலிலேயே இன்றும் நடைபெறுவதால் அதுதான் தொல் பழங்கோயில் என்ற உண்மை வெளிப்படுகிறது.

திருவிழாக்களையும், வழிபாட்டு முறைகளையும் பார்க்கும் பொழுது கூத்தர் கோயில், குறும்பலா ஈசர் கோயில் என்ற இரண்டு கோயில்கள் இணைந்ததுதான் இன்றையக் குற்றாலநாதர் கோயில் என்ற உண்மை தெளிவாகிறது.

அகத்தியரால் இக்கோயிலிலிருந்து பெருமாள் மூர்த்தம் அகற்றப்பட்ட செய்தியை வலியுறுத்துவதற்கு இன்றையக் கோயிலில் பல சான்றுகள் கிடைத்தாலும், இங்கு சைவ, வைணவ வேறுபாடு இல்லை. நன்னகரப் பெருமாளுக்கும் முறையாக அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மூலவரின் தேவியாகிய குழல்வாய் மொழி அம்மனுக்குத் தனியாக சிறப்பு வழிபாடுகளோ, திருவிழாக் களோ இல்லை. ஆனால், அன்னை பராசக்திக்குப் பௌர்ணமி தோறும் விளக்குப் பூசை வழிபாடும், நவராத்திரத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

திருக்குற்றாலநாதர் கோயிலின் குமரக் கடவுள் இங்கு வருவது சிறப்பாகும். அகத்தியர் திருவிலஞ்சிக் குமரனின் அருள்பெற்று நாராயணனை, குற்றாலநாதராக உருமாற்றினார் என்று புராணச் செய்தி கூறுவதால் அக்குற்றாலநாதரின் பெருவிழாக்களில் எல்லாம் திருவிலஞ்சிக் குமரரும் கலந்துகொள்கிறார் என்று கருத வாய்ப்புண்டு. கோயிலின் வருமானமும், நிர்வாகமும் நன்றாக இருக்கிறது. பல அறப் பணிகளையும், இலக்கியப் பணி களையும் செய்து, சமுதாய மேம்பாட்டிற்காக இக்கோயில் நிர்வாகம் பாடுபட்டு வருகிறது.

குற்றாலத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அனைவரும் கோயிலுக்கும் வந்து வழிபடுமாறு, அவர்களிடையே கோயிலின் பெருமைகளையும், சிறப்புக்களையும் பிரச்சாரம் செய்யவேண்டும். பக்தர்கள் கூட்டம் பெருகினால் கோயிலின் வருமானம் பெருகும்.

கோயிலின் பெருமையை வெளியாருக்கு உணர்த்துகின்ற வகையில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள கிழக்கு வாசலில் ராஜ கோபுரம் அமைக்க வேண்டும்.

மேற்கு வசந்த வீதியில் மண்ணில் புதைந்துள்ள தூண்களைப் பயன்படுத்தி ஒரு பெரிய திருமணக்கூடம் போன்ற மண்டபம் அமைக்கலாம். நவீன வசதிகளுடன் திருமணக்கூடம் அமைத்தால் கோயிலின் பெயரும் பிரபலமடையும், வருமானமும் பெருகும்.

வசந்த வீதியின் மேற்கு, வடக்குப் பகுதிகளில் அதிக மக்கள் நடமாட்டமில்லாத காரணத்தினால் சில தவறான செயல்கள் நடைபெற வாய்ப்பு உண்டாகியுள்ளது. அதனைப் போக்க வசந்த வீதியின் மேற்குப் பகுதியில் மலையில் இயற்கையழகைக் கண்டு மகிழும் வண்ணம் காணுமிடம். (View Point) அமைத்து, அதற்கு சுற்றுலாப் பயணிகளிடம் வரவேற்பு கிடைக்கச் செய்யலாம்.

கோயிலின் பெருமைகளை விளக்குகின்ற செய்திகளை எல்லா அருவிப் படித்துறைகளிலும், சுற்றுலாப் பயணிகள் கண்ணிலும், மனத்திலும் இடம்பெறும் வகையில் அமைக்கலாம்.

இதன்மூலம் சுற்றுலாப் பயணிகள் கோயிலைத் தேடி வந்து வணங்கி, இறைவன் அருளைப் பெறமுடியும்.

## அடிக்குறிப்புகள்

1. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், பராசக்தி பீடச் சருக்கம், பா.4.
2. ஆலயப்பட்டர், நேர்காணல், நாள்: 16.12.1986.
3. திரிகூடராசப்பக் கவிரர்யர், திருக்குற்றாலத் தலபுராணம், பராசக்தி பீடச் சருக்கம், பா.8,9.
4. ஆலயப்பட்டர், நேர்காணல், நாள்: 16.12.1986.
5. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலத் தல வரலாறு, ப.52.
6. Prediction, March 1950, p.24.
7. ஆலயப்பட்டர், நேர்காணல், நாள்: 16.12.1986.

8. நாகராசன், உரிமையாளர், உடுப்பி உணவு விடுதி, குற்றாலம், நேர்காணல், நாள்:16.12.1986.

9. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.134.

10. ஆலயப்பட்டர், நேர்காணல், நாள்: 16.12.1986.

11. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பா.32, கண்ணி 1,2.

12. மேற்படி, பா.30, க.3.

13. மேற்படி, பா.80-83, 101.

# சார்புக் கோயில்கள்

திருக்குற்றாலநாத சுவாமி கோயிலைச் சார்ந்து பல கோயில்கள் உள்ளன. அவை அனைத்தும் திருக்குற்றாலநாதர் கோயில் நிர்வாகத்தின் கீழ்தாம் உள்ளன. அவை வருமாறு:

1. செண்பகா தேவி அம்மன் கோயில்
2. கூத்தர் கோயில்
3. சித்திர சபை
4. திருஞானசம்பந்தர் கோயில் (பிள்ளையார் கோயில்)
5. குற்றாலநங்கை கோயில்
6. அடியெட்டும் பாறைப்பன்றி மாடசாமி கோயில்
7. ஆவரணப் பிள்ளையார் கோயில்
8. நன்னகரம் பிள்ளையார் (பன்றிமடசாமி)
9. திட்டைப் பிள்ளையார் கோயில்
10. பாசுபத சாஸ்தா கோயில்
11. பாட்டப்பத்து சாஸ்தா கோயில்
12. சுந்தரமூர்த்தி கோயில்

இச்சார்புக் கோயில்களில் முதல் மூன்று மட்டும் இன்று அதிக அளவில் மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றன. இக்கோயில்கள் அனைத்தும், வழிபாடு மற்றுமுள்ள நிர்வாக நடைமுறைகள் அனைத்திற்கும் திருக்குற்றாலநாதர் கோயிலையே சார்ந்திருப்பதால் சார்புக் கோயில்கள் எனப்பட்டன. வரலாற்று அடிப்படையிலும், வழிபாட்டு முறைகளிலும், இக்கோயில்களுக்கும் திருக்குற்றாலநாதர் கோயிலுக்கும் மிகுந்த தொடர்பு காணப்படுகிறது.

## 1. செண்பகாதேவி அம்மன் கோயில்

செல்வமல்கு செண்பகம் நிறைந்த சோலைகளிடையே, செண்பகாதேவி அருவிக்கரையில் அமைந்த அழகிய, சிறிய கோயில் செண்பகாதேவியம்மன் கோயில், இக்கோயில் ஸ்தலவிருட்சம் செண்பகமரம். செண்பகவனத்தின் காவல் தேவதையாக இக்கோயிலின் தேவி கருதப்படுகிறது. செண்பகாதேவியின் பெருமை தலபுராணத்திலும் விரித்துரைக்கப்பட்டுள்ளது.[1]

மலைமேல் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ள இக்கோயிலில் மூலவிக்ரகம் அமர்ந்திருக்கும் கருவறையும், தொடர்ந்து ஒரு மண்டபமும் அமைந்துள்ளது. கருவறையில் வாலேஸ்வரி, புவனேஸ்வரி, திரிபுரசுந்தரி என்ற மூன்று தேவியர்கள் உருவங்கள் உள்ளன. வாசலின் வடபுறம் ஆஞ்சநேயர் கையில் கதையுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். தென்புறத்தில் அகத்தியர் சடை, மீசை, தாடியுடன் அமர்ந்திருக்கிறார். தெற்குப் பக்கத்தில் வடக்கு பார்த்த நிலையில் பேச்சியம்மை, நான்கு கரங்களுடன் சிற்பவடிவில் காணப்படுகிறார். வலக்கரங்களில் உடுக்கை, சூலம், இடக்கரங்களில் கிளி, தீ காணப்படுகிறது. கோயில் வாயிலின் தென்கிழக்கே சங்கிலி பூதத்தார் சிற்பம் கோயிலின் வடக்குப் பக்கம் பதினெட்டாம்படி கருப்ப சாமி சன்னதி பக்கத்தில் உலகம்மை (எக்காலேஸ்வரி) கிழக்குப் பார்த்து உள்ளது. இக்கோயிலுக்குச் சுற்றுச்சுவர், இரும்புக் கம்பியில் கதவு என்று பாதுகாப்புகள் இருந்தபோதிலும் இங்கிருந்த செப்பு விக்ரகம் திருடப்பட்டு, மீட்கப்பட்டுள்ளது. இன்று பாதுகாப்பு கருதி அவ்விக்ரகம் குற்றாலநாதர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. மூல விக்ரகமும் செப்புத் திருமேனியும் மிக அழகாக கலை நுணுக்கத்தோடு வடிக்கப்பட்டுள்ளன. செண்பகா அருவியில் நீராடிவிட்டு வரும் பக்தர்கள் அனைவரும் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

திருக்குற்றாலநாதர் கோயிலில் நடைபெறும் மூன்று பெரும் திருவிழாக்களுக்கு, முன்னும், அவ்விழாக்கள் குறைவின்றி, நடக்க இக்கோயிலில்தான் முதல் வழிபாடு நடத்துகிறார்கள். திருவிழா தொடங்குவதற்கு முந்திய செவ்வாய்க்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. சிறப்பு வழிபாடுகள் தவிர, நாள்வழிபாடு, மதியம் மட்டும் ஒரு காலப் பூசையாக நடைபெறுகிறது. செண்பகவனத்தில் கொடிய மிருகங்கள் நிறைந்து காணப்படுகிறது. அவை கோடைக் காலத்தில் (சித்திரை மாதம்) நீருக்காக, வனத்தின் மையப் பகுதியாக, என்றும் நீர்வளம் நிறைந்து காணப்படும் இடங்களாக, உள்ள பகுதிகளை நாடிச் செல்லும். எனவே, அக்காலத்தை இக்கோயில் திருவிழாவிற்கான காலமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

சித்திரா பவுர்ணமியன்று மஞ்சள் மழைபொழிவதாக இன்றும் மக்கள் நம்புகிறார்கள். தேனருவிக்குச் செல்லும் பாதையில் இரவில் வெள்ளைத் துணியை விரித்து வைத்துவிட்டு காலையில் சென்று பார்த்தால் அத்துணியில் மஞ்சள் மழை பொழிந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகிறது.[2] இக்கோயிலுக்கு மேலுள்ள சிவமது கங்கை என்னும் தேனருவியில், சித்ரா பவுர்ணமியன்று, கங்காதேவி சிவபிரானைத் தேனால் வழிபடுவதால், மஞ்சள் நிறமுள்ள தேனருவிகள் மஞ்சள் மழையாகப் பெய்கிறது என்று மஞ்சள் மழைக்கான காரணம் கூறப்படுகிறது.[3] சித்ரா பவுர்ணமி இரவு முழுவதும் இக்கோயிலில் ஆராதனை வழிபாடுகள் நடைபெறும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**செண்பகாதேவி அம்மன் கோவில்**
**பரதேசிப்புடை குகையில் காணப்படும்**
**மூன்று வரிக் கல்வெட்டு**



இந்த எழுத்துக்கள் இந்திய மொழிகளில் காணப்படவில்லை. இவை, இக்குகைகளில் வாழ்ந்த முனிவர்கள் மந்திரங்களுக்காக எழுதிய குறியீடுகளாக இருக்கலாம்.

(தொ.பொ.ஆ.)

இக்கோயிலின்மேல் பரதேசிப்புடை என்னும் ஒரு பெரிய குகை போன்ற அமைப்புக் காணப்படுகிறது. முப்பது அடி நீளமுள்ள பாறை, குடைபோலப் பரந்து, விரிந்து காணப்படுகிறது. இக்குகையில் சித்தர்களும், சமண முனிவர்களும் இருந்திருத்தல் வேண்டும். இக்குகையில் 3 வரிகளாக 15 எழுத்துக்களைக்கொண்ட கல்வெட்டொன்று காணப்படுகிறது. பக்கத்தில் உள்ள ஓடையில் கல் காணப்படுகிறது.

இல்கல்லை வேறொரு கல்லினால் தட்டினால் வெண்கல ஓசை வெளிப்படுகிறது. இக்கல்லிற்கு வெண்கலப்பாறை எனப் பெயர் வழங்குகிறது. இதுபோன்ற கற்கள் இசைத் தூண்கள் செய்யப் பயன்பட்டிருக்கலாம்.

செண்பக அருவிக்குப் பக்கத்தில் ஒரு குகையும், மண்டபமும் காணப்படுகின்றன. அவையிரண்டு இக்கோயிலோடு இணைந்தவை யாகும். இச்சிறு குகை, இங்கு வரும் பக்தர்களுக்கு உணவு தயாரிக்கும் அறையாகப் பயன்படுகிறது. இக்குகை ஔவையார் குகையென்றும், தட்சிணாமூர்த்திக் குகை என்றும் அழைக்கப் படுகிறது.

இக்கோயில் மலைமேல், செண்பக வனத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. குற்றாலநாதர் கோயிலின் காவல் தெய்வங்களில் ஒன்றா கவும், விழாக்காலங்களில் முதல் வழிபாடு பெறுகின்ற பெருமை யுடையதாகவும் காணப்படுவதால், இக்கோயில் பழமையான ஒன்றா கும். இக்கோயிலில் இறை வழிபாடு செய்வதற்காகத் தனியாக ஒருவர் பாண்டிய மன்னர்கள் காலத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.[4] அம்மன் வீற்றிருக்கும் கருவறையுடன் விளங்கிய இக்கோயிலில், பக்தர்கள் வசதிக்காக முன்மண்டபம், கோயிலில் பல அரிய திருப்பணி களைச் செய்த சொக்கம்பட்டி ஜமீன் காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. 1950-ஆம் ஆண்டின் திருப்பணியின்பொழுது இக்கோயிலும் புதுப் பிக்கப்பட்டது.

## 2. கூத்தர் கோயில்

உற்றாருளரோ – உயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல் லானமக்
குற்றா ராருளரோ[5]

என்று திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்று, கூத்தர் கோயில். மணிவாசகரும், "குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா" [6] என்று போற்றி யுள்ளமையால் இக்கோயிலின் பழமையை நாம் உணரமுடிகிறது.

சோழன் கோச்செங்கணான் காலத்தில் கட்டப்பட்ட செங்கற் கோயில்களில் ஒன்றாக, கூத்தர் கோயில் இருந்திருக்க வேண்டும். இக்கோயிலுக்கென்று தனியே தலவிருட்சமாக செண்பகமரம், இன்றும் கோயில் மூலவர், கூத்தர் சன்னதிக்குப்பின் காணப்படுகிறது. பிற்காலச் சோழர்களின் காலத்தில், கோயில் திருப்பணி மேற்கொண்ட

பொழுது, குறும்பலா ஈசர் கோயில், கூத்தர் கோயில் என்ற இரண்டு தனித்தனிக் கோயில்களையும் இணைத்துக் குற்றாலநாதர் கோயில் என்ற பெயரில் ஒரே கோயிலாக, பெரிய கோயிலாக அமைத்தனர். எனவேதான், இன்று குற்றாலநாதர் கோயிலில் குறும்பலாவும், செண்பக மரமும் காணப்படுகின்றன.

அகத்தியர், வைணவக் கோயிலைச் சிவன் கோயிலாக மாற்றிய பின்னர், அப்புதிய சிவன் கோயிலில் வழிபாடு செய்வதற்கு, இக் கோயிலில் வழிபாடு செய்துவந்த சிவ மறையவரையே அழைத்தார் என்று தலபுராணம் குறிப்பிடுகிறது. [7] இத்தகைய பழமையான கூத்தர் கோயில் ஐந்தருவிப் பாதையும், செங்கோட்டைப் பாதையும் சந்திக்கு மிடத்தில் அமைந்துள்ளது. சோழன் செங்கணான் காலத்தில் செங்கற் கோயிலாக இருந்த இக் கோயில், பிற்காலச் சோழர்கள் காலத்தில் கற்கோயிலாக, கருவறை மட்டுமுள்ள கோயிலாக மாறியிருக்கிறது. பின்னர், சொக்கன்பட்டியார், கோயில் திருப்பணி மேற்கொள்ளும் பொழுது, இக்கோயிலும் செப்பனிடப்பட்டுள்ளது. தனிச் சுற்றுச் சுவருடன் இக்கோயில் கட்டப்பட்டது.

1957-ஆம் ஆண்டு திருப்பணியின்பொழுது இக்கோயில் முழுமையும் புதுப்பிக்கப்பட்டது. மூலவராகிய கூத்தர் கிழக்குப் பார்த்தும் அம்மன் தெற்குப் பார்த்தும், சிறிய கோயில்களில் வீற்றிருக்கின்றனர். மூலவர் கோயிலின் மேல் சிறிய கோபுரமும் அமைத்துள்ளனர். கோயிலைச் சுற்றி, அழகிய மதில் அமைத்து, இரும்புக் கதவு அமைத்து பாதுகாப்புச் செய்துள்ளனர். மதில் சுவரின் மேல் நான்கு மூலைகளிலும் நந்தியை அமைத்துச் சிவன் கோயில் என்பதை உணர்த்தியுள்ளனர். முன் முகப்பில், சிகரம் அமைத்து நடுவில் பரமசிவன் பார்வதியும், வலதுபுறம் விநாயகர், மணிவாசகர், இடபுறம் நந்திகேஸ்வரர், முருகன் ஆகியோரின் திருவுருங்களை சுதையில் அமைத்து வண்ணம் தீட்டியுள்ளனர். கோயில் முழுமையும் வண்ணமடித்து அழகுற மிளிரச் செய்துள்ளனர்.

மூலவரான கூத்தரின் கழுத்தைச் சுற்றி உருத்திராட்ச மாலை அமைத்துள்ளனர். இந்த உருத்ராட்சமாலை இயல்பாக மூலவர் கழுத்தில் அமைந்துள்ளது ஒரு தனியான அழகாகும். இக்கோயிலுக்கு மின் விளக்கு அமைத்து, வி.எம். ஆவுடையம்மாள் என்பவர் திருப்பணி செய்துள்ளார்.

இக்கோயிலில் வழிபாடு செய்தபின்னர்தான், குற்றாலநாதர் கோயிலில் வழிபாடு தொடங்குகிறது.

திருக்குற்றாலநாதர் கோயில்



## திருக்குற்றாலநாதர் கோயில் படவிளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குற்றாலநாதர் | 29. | நமஸ்காரமண்டபம் |
| 2. | குழல்வாய்மொழி | 30. | கொடிமரம் |
| 3. | குறும்பலா | 31. | அம்பல விநாயகர் |
| 4. | அறுபத்து மூவர் | 32. | ஆறுமுக நயினார் |
| 5. | சிவசயிலர் | 33. | திரிகூட மண்டபம் |
| 6. | வல்லப கணபதி | 34. | தேவஸ்தான ஆபீஸ் |
| 7. | நன்னகரப் பெருமாள் | 35. | ஷெண்பகவிநயகர் |
| 8. | பாபவிநாசர் | 36. | வயித்தியப்ப விலாசம் |
| 9. | நெல்லையப்பர் | 37. | பூசை மண்டபங்கள் |
| 10. | மணக்கோலநாதர் | 38. | தீர்த்தவாரி மண்டபம் |
| 11. | நாறும்பூநாதர் | 39. | வல்லப கணபதி |
| 13. | சொக்கலிங்கம் | 40. | ஆதி கணபதி |
| 14. | அய்யனார் | 41. | குறிஞ்சி மண்டபங்கள் |
| 15. | மதுநாதர் | 42. | பதினெட்டாம்படி கறுப்பன் |
| 16. | அகத்தியர் | 43. | சின்னத்தம்பி |
| 17. | வாசுகி | 44. | புத்தக நிலையம் |
| 18. | சோமநாதர் | 45. | சித்திர சபை |
| 19. | சஹஸ்ரநாமலிங்கம் | 46. | தெப்பக் குளம் |
| 20. | மஹாலிங்கம் | 47. | கூத்தர் கோயில் |
| 21. | தரணிபீடம் | 48. | தேரோடும் வீதிகள் |
| 22. | காசிவிசுவநாதர் | 49 | செண்பகாதேவி ரோடு |
| 23. | நாரதர் | 50. | ஐந்தருவி ரோடு |
| 24. | வயிரவர் | 51. | மதுரை ரோடு |
| 25. | யாகசாலை | 52. | சிற்றாறு |
| 26. | சபாபதி மண்டபம் | 53. | அருவிக்குப்போகும் பாதை |
| 27. | நவக்கோள்கள் | 54. | அருவி |
| 28. | மணிமண்டபம் | * | சங்கவீதி |

### 3. சித்திர சபை

குற்றாலநாதர் கோயிலின் சார்புக் கோயில்களில் பெருமையுடைய, கலைச்சிறப்புடைய சார்புக் கோயில் சித்திர சபையாகும்.

அத்திரிகூட வெற்பென்றறை திருக்குற்றாலத்தில்
சித்திர சபையிற் செய்வோம் திரிபுர தாண்டவம் பூம
கத்திகைக் குழலி [8]

என்று ஆடலரசனே விரும்பி வந்து நடனமாடிய இடம் சித்திரசபை. நடராசப் பெருமான், பூவுலகில் முனிவர்கள் காண விரும்பி ஆடிய இடங்களை பஞ்சசபை என்று அழைக்கிறார்கள்.

குடதிசை யதனில் மருவு குற்றாலம் கோதறு
சித்திரசபையாம்
குற்றமில் குணக்கின் பழையனூர் மன்றக்
குலநவரத்ந மன்றென்பார்
அடல்விடைப் பாகன் நெல்லையம்பதியில்
அம்பலம் தாமிரசபையாம்
ஆலவாய் மதுரை வெள்ளியம்பலமாம் அணி
தில்லைச் செம் பொன்னம்பலமே [9]

என்று பஞ்சசபைகளை வரிசைப்படுத்துகிறது தில்லைக்கலம்பகம்.

பஞ்சசபை என்பதுகூட மனிதனின் வளர்ச்சியை, மனப் பக்குவத்தையே குறிக்கிறது எனலாம். முதலில் ஓவிய வடிவில் வழிபாடு செய்தவன், அடுத்து கல், தாமிரம் (செம்பு), வெள்ளி, பொன் என்ற ஒவ்வொரு உலோகத்தையும் வழிபாட்டிற்குரியதாக மாற்றியுள்ளான்.

| சபை | ஊர் | வடிவமானது |
|---|---|---|
| 1. சித்திரசபை | திருக்குற்றாலம் | ஓவியம் |
| 2. ரத்னசபை | திருவாலங்காடு | ரத்னக்கல் |
| 3. தாமிரசபை | திருநெல்வேலி | தாமிரம் |
| 4. வெள்ளியம்பலம் | மதுரை | வெள்ளி |
| 5. பொன்னம்பலம் | சிதம்பரம் | பொன் |

இவற்றில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ள தாமிரசபை குறித்து மட்டும் கருத்து மாறுபாடு உண்டு. திருநெல்வேலிக்குப் பக்கத்தில் ராஜவல்லபுரம் என்ற கிராமத்தில் செப்பறை என்று அழைக்கப்படும் தலமே மூன்றாவதாகும். இங்கு நடராசர் வடிவம் செப்புத் திருமேனி யாகக் காணப்படுகிறது. அதே முறையில் குற்றாலத்தில் அமைந்துள் ளதால் செம்பு சபை என்ற கருத்தும் காணப்படுகிறது. சித்திரசபையின் கூரை செப்போட்டினால் பொதியப்பட்டுள்ளதால் இதனைச் செப்பறை என்று கருதுவாரும் உண்டு. இக்கருத்து ஏற்புடைத்தன்று.

திருவாலங்காட்டில் ரத்தின சபையின் கூரை ரத்தினக் கற்களால் பொதியப்படவில்லை. மதுரையில் வெள்ளியால் பொதியப்படவில்லை. ஆனால் ஆங்காங்கு காணப்படும் நடராசர் உருவம் குறிப்பிட்ட கல் அல்லது உலோகங்களால் பொதியப் பட்டுள்ளது. பொன்னம்பலம் என்று அழைக்கப்படும் சிதம்பரத்தில் மட்டுமே பொற்கூரை அமைந் துள்ளது. அங்கு நடராசர் திருவுருவம் செம்பொன்னால் செய்யப் பட்டது. பொன், அங்கி அணிவித்துள்ளார்கள். சித்திரசபையின் கூரை யும் பொன்னால் பொதியப்பட்டது என்றும் மாலிக்காபூரின் படையெடுப் பிற்கு அஞ்சி இக்கூரை அகற்றப்பட்டுப் பாதாள அறைக்குள் மறைத்து வைக்கப்பட்டது என்றும், பொன்னைத் தேடிவந்த மாலிக்காபூர் ஏமாற்றமடைந்து, கோபத்தின் காரணமாக குழல்வாய்மொழி அம்மன் கோயிலைச் சிதைத்துவிட்டதாகவும், ஒளித்து வைத்திருந்த தங்கத்தைக் கொண்டு குழல்வாய்மொழியம்மன் கோயில் திருப்பணி நடைபெற்றது என்றும் ஆய்வு மாணவர் திரு. முத்துக்குமாரசுவாமி குறிப்பிடுகிறார்.[10]

இக்கருத்து பொருத்த முடையதன்று. ஏனெனில் குழல்வாய் மொழி அம்மன் கோயில் திருப்பணி முழுமையும் தேவக்கோட்டை வி.கரு.சித.சோமசுந்தரஞ் செட்டியார் குடும்பத்தினரால் செய்யப் பட்டுள்ளது. அதுபோல் மிகுந்த பொன் செலவால் சின்னணைஞ்சத் தேவரால் செய்யப்பட்ட திருப்பணி முழுமையும் அம்மன்னனின் கஜானா விலிருந்து பெறப்பட்டதேயன்றி, பொன்னோட்டிலிருந்து பெறப்பட் டிருக்க முடியாது. கோயில் ஆவணங்களில செப்போட்டுக் கூரையில் 125 கிராம் தங்கம் காணப்படுவதாகக் குறிப்பு உள்ளது. பொன்போன்று மின்னுவது கலசங்களே, செப்போடு வேய்ந்த சின்னணைஞ்சத்தேவர் செபோட்டிற்குமேல் தங்க முலாம் பூசப்பட்ட கலசங்களை அமைக்க முயற்சித்திருக்கலாம். அம்முயற்சி முற்றுப் பெறாதிருந்திருக்கலாம்.

### 3.1. காலமும், திருப்பணியும்

திருமணக்காட்சி கண்ட அகத்தியர் இறைவனின் ஆடல் காட்சி யைக் காண விரும்புகிறார். அக்காட்சிக்காகப் பதஞ்சலி தவமிருக்

கிறார். அவர்களுக்காக, "…. திருக்குற்றாலச் சித்திரப் பொதுவாந் தெய்வம் அரங்கினி லாடப் போந்தா னகிலமும் ஆடல் காண்பான்"[11] என்று ஆடலரசனே சித்ரசபைக்கு வந்து ஆடுகின்றான் எனப் புராணங் கள் கூறுகின்றன. இறைவன் திருநடனமாடிய இந்த இடத்தில் அகத்தியர் விருப்பப்படி, பதஞ்சலி முனிவர், தேவதச்சனைக் கொண்டு இச்சித்ரபூ மன்றத்தை அமைத்தார் என்பது புராணச் செய்தி. காசிகண்ட பராக்கிரம பாண்டியன் ஆதியில் இச்சபையை அமைத்தார் என்பது தலவரலாறு.[12]

இங்குக் குறிப்பிட்டுள்ள பாண்டிய மன்னன் யார் என்பது ஆய்வுக்குரியதாகும். இப்பாண்டியனையே, 'தமிழ்ப்பாண்டியனார்' என்று குறவஞ்சியும் போற்றியிருக்க வேண்டும். இப்பாண்டியன் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த காசி கண்ட பராக்கிரம பாண்டியன் என்று கருதமுடியும். எனவே, சித்ரசபை 16-ஆம் நூற்றாண்டில் உருவாகியிருக்கலாம். தென்காசியை ஆண்ட இப் பாண்டிய மன்னன் கலையார்வத்துடன் கூடிய கோயில் திருப்பணி களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். தென்காசியில் காணப்படும் கலைச் செறிவு மிக்க காசிவிஸ்வநாதர் ஆலயம் அவனுடைய கலை யார்வத் துடன் கூடிய கோயில் திருப்பணிக்குச் சான்றாகும்.

மூவர் தேவாரங்களிலும், திருவாசகத்திலும் பஞ்ச சபைகள் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. ஆனால் அவர்கள் அவ்விடங் களுக்குச் சென்று வழிபாடு செய்து, பதிகம் பாடியுள்ளனர். பெரிய புராணத்திலும் இத்தலங்கள் பற்றிய செய்திகள் காணப்பட்டாலும் பஞ்சசபை பற்றிய குறிப்புகள் இல்லை. குற்றாலத்திற்கு வந்து வழிபாடு செய்து பாடல்கள் பாடிய பட்டினத்து அடிகள், அருணகிரி நாதர் பாடல்களிலும், சபை பற்றிய செய்திகள் இல்லை. முதன் முதலாக இரட்டைப்புலவர் பாடலிலும், கந்தபுராண கடவுள் வாழ்த்தல், "ஐவகை மன்றுதோறாடிய வள்ளல்" என்று குறிக்கப்படுவதினாலும் பட்டினத்தடிகள் காலத்திற்குப்பின்னும், இரட்டைப்புலவர் காலத் திற்கு முன்னும் இச்சபை தோன்றியிருக்கலாம் என்று டாக்டர் ச.வே. சுப்பிரமணியம்[13] கருத்தே ஏற்புடைத்தாகக் காணப்படுகிறது. அக் கருத்திற்கு, காசிகண்ட பராக்கிரம பாண்டியனுடைய காலமும் ஒத்துப் போகிறது. எனவே, சித்ரசபை 16-ஆம் நூற்றாண்டில் காசிகண்ட பராக் கிரம பாண்டியன் காலத்தில் கட்டப்பட்டது எனக் கூறமுடியும்.

நன்னகர்க் குற்றாலந் தன்னில் எங்கும்
நாட்டுமெண் ணூற்றெண்பத் தேழாண்டு தன்னில்

பன்னக மாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டிய னார்முதற் சிற்றோடு மேய்ந்த
தென்னருஞ் சித்ர சபையை எங்கள்
சின்னணைஞ்சாத் தேவன் செபோடு மேய்ந்த[14]

என்னும் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்தான் சித்ரசபையின் வரலாற்றை அறியத் துணைசெய்கிறது. இப்பாடலின் மூலம் 17-ஆம் நூற்றாண்டில் (1660-1721) பெரிய பட்டம் பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவரும், சின்னப்பட்டம் இராசகோபாலத் தேவரும் சித்ரசபைக்கு செப்போடு வேய்ந்துள்ளார்கள். மேலச்சபை, கீழச்சபை என்னும் இரு சபைகளிலும கல்தள வரிசை அமைத்தனர். ஓவியங்களுக்கு மீண்டும் வர்ணம் பூசினர். சபையைச் சுற்றி மதில் (சுற்றுச்சுவர்) சுவர், சிகரம், முன் மண்டபம், தெப்பக்குளம், நடுமண்டபம், கோபுரம் ஆகிய திருப் பணிகளைச் செய்துள்ளனர். வழிபாட்டிற்காகப் படிக லிங்கமும் அமைத் துள்ளனர். படிகலிங்கம், பாதுகாப்புக் கருதி கோயில் பாதுகாப்புப் பெட்டகத்தில் இன்று வைக்கப்பட்டுள்ளது.

திருப்பனந்தாள் மடாதிபதி, படிகலிங்கமும் அதற்கு அபிசேக வெள்ளி வேதிகையும் அளித்துள்ளார். இந்த படிகலிங்கமும், வெள்ளி வேதிகையையும் பாதுகாப்புக் கருதி கோயில் பெட்டகத்தில் வைக்கப் பட்டுள்ளன.

1957-ஆம் ஆண்டில் சித்ரசபையின் கல்தள வரிசை புதுப்பிக்கப் பட்டு உள்ளது. செப்போடுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. செப்போடு களுக்கு, அவை மழை, வெய்யிலினால் பாதிக்கப்படாமல் இருக்க செம்புவர்ணம் பூசினர். சித்திரசபையில் காணப்படும் ஓவியங்களுக்குப் புதிய வர்ணம் தீட்டியுள்ளனர். மதில்சுவரின் மேல் முன்புறம் ஈசன், ஈசனின் வலப்பக்கம் பார்வதி, சக்தி, கணபதி, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் உருவங்களையும், இடப்பக்கம் முருகன், சுந்தரர், மாணிக்கவாசகர் உருவங்களையும் சுதையில் அமைத்துள்ளனர். மதில் சுவரின் மூலைகளில் பூதங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதிலின் தெற்குப்பக்கத்தில் நடராசர், சிவகாமி; காரைக்காலம்மை யார், மாணிக்கவாசகர் உருவங்களும் சுதையில் அமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளன.

தலபுராணம் முதலிய நூல்களில் இடம்பெற்றுள்ள சித்ரசபை தொடர்பான பாடல்கள் சலவைக்கல்லில் எழுதி, மண்டபச் சுவர்களில் பதிக்கப்பட்டுள்ளன. சித்ரசபைக்குச் செல்லும் பாதையும் சீர்படுத்தப் பட்டு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

முன்மண்டபம் முழுமையும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சித்ரசபை யின் முன்புள்ள தெப்பக்குளம், நடுமண்டபம், கோபுரம் ஆகியவை திருப்பணி செய்யப்பட்டுள்ளன. இத்தெப்பக்குளத்தில்தான் திருக் குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மன், திருவிலஞ்சிக் குமரனுடன் தை மாதம் மக நட்சத்திரத்தன்று தெப்பத்தில் வலம் வருகிறார்.

திருப்பணிகள் முடிந்தபின்னர், 1136-ஆம் ஆண்டு, தை மாதம் 9-ஆம் நாள், ஞாயிற்றுக் கிழமை (22.1.1961) கும்பலக்கனத்தில், உதயாதி நாழிகை 6¼ க்கு மேல் 8½ க்குள் சித்ரசபைக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1961-க்குப் பிறகு கழிந்த 25 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க திருப்பணிகள் நடைபெறவில்லை. சித்ரசபையின் உள்சுவற்றில் அமைந்துள்ள ஓவியங்கள், கூரையில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவு காரணமாக சிதைந்து காணப்படுகிறது. வெளிச்சுற்று வீதியில் காணப்படும் ஓவியங்களும் மழையாலும், வெயிலாலும் ஒளிமங்கிக் காணப்படுகின்றன. முன் மண்டபத்தில் காணப்படும் ரம்பையின் அழகிய கற்சிலையும் கையொடிந்த நிலை யில் காணப்படுகிறது.

### 3.2. பெயர்க்காரணம்

உமையம்மை தாளம் கொட்டிய வண்ணம் நின்று, இன்னிசை பாட,[15] இறைவன் திருநடனம் ஆடுகிறார். தேவர்களும், தேவ கனங் களும் கண்டு மகிழும் நடனத்தைத் தவத்தில் உயர்ந்த முனிவர்களாகிய பதஞ்சலி, வியாக்கிரபாதர்,[16] கண்டு மகிழ்ந்தனர். இந்நடனத்தைக் கண்டு மகிழ்ந்த பிரம்மதேவன், ஆதிசக்தி, சிவனுடைய வடிவங்களை ஓவியமாக வடித்தார். வியாசர் முதலானோர் இதனால், இச்சபையை சித்ரசபையென்று அழைத்தனர்.[17]

பொன்னால் பொதியப்பட்ட நடராசரின் திருவுருவத்தைத் தாங்கி யுள்ள சிற்றம்பலமாகிய சிதம்பரம் கனகசபை எனப் பெயர் பெற்றது. வெள்ளியாற் பொதியப்பட் திருவுருவம் இடம்பெற்ற மதுரை வெள்ளி யம்பலம் ஆயிற்று. செம்பொன் (தாமிரம்) மேனி இடம்பெற்ற திரு நெல்வேலி தாமிர சபையாயிற்று. இரத்தினக் கல்லால் ஆகிய மேனி இடம்பெற்றுள்ள திருஆலங்காடு இரத்தின சபையாயிற்று. இதே முறையில், சித்ர வடிவில் ஆடல்வல்லான் இடம்பெற்றுள்ள இச்சபை சித்ரசபை எனப் பெயர்பெற்றது. "சித்திரமான தியானத்தனவாய்"[18] என்று இங்கு இறைவன் சித்திர வடிவிலிருப்பதை இலக்கியங்களும் போற்றி, சித்திரசபை என்ற பெயரையே வலியுறுத்துகிறது.

## 3.3. அமைப்பு

ஐந்தருவிச் சாலையில் அமைந்த, சித்ரசபை தனிச் சுற்று மதிலுடனும், முகப்பு மண்டபத்துடனும் கூடிய தனிக்கோயிற் போல் அமைந்துள்ளது. சித்ரசபையின் முன் அழகிய தெப்பக்குளமும், நீராழி மண்டபமும், அதன்மேல் சுதை உருவங்களுடன் கூடிய சிறிய கோபுரமும் காணப்படுகின்றன. தெப்பக்குளத்தின் ஆழம் 20 அடி, நீராழி மண்டபத்தின் பெயர் மணிமண்டபம். அம்மண்டபத்தில் 24 தூண்கள் காணப்படுகின்றன. மேடையின் நடுவில் நந்தி உருவம் காணப்படுகிறது. சித்ரசபையின் நுழைவாயிலின் மேல் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிவகாமியம்மன், சிவபெருமான், முருகன், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் சுதை வடிவங்கள் அழகிய வண்ணத்தில் காணப்படுகின்றன. மதில் சுவரின் மூலையில் பூத உருவங்களும், தெற்குச் சுவரில் நடராசர், சிவகாமியம்மன், காரைக் காலம்மையார், மாணிக்கவாசகர் ஆகியோரின் திருவுருவங்களும் சுதை வடிவில் காணப்படுகின்றன.

சித்ரசபை என்ற பெயருக்கேற்ப அழகிய சிற்ப வேலைப்பாடு களுடன் கூடிய மரக்கதவு நுழைவு வாயிலில் காணப்படுகிறது. இரு கதவுகள் உள்ளன. ஒவ்வொரு கதவும் மேலிருந்து கீழாக மூன்று பெரிய சதுரங்களாக அமைப்பட்டுள்ளன. ஒவ்வொரு சதுரத்திலும் நான்கு சிற்பங்கள் வீதம் மொத்தம் இருபத்து நான்கு சிற்பங்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

### கட்டம் – 1

1. குறும்பலா ஈசர் - சிறிய மரத்தில் குரங்கு, கனிகள் காணப் படுகின்றன.
2. அம்பாளின் ரிஷப வாகனக் காட்சி.
3. அம்மையப்பனின் ரிஷப வாகனக் காட்சி.
4. குறும்பலா ஈசனைப் பாண்டிய மன்னர் வணங்குதல்.

### கட்டம் – 2

1. கண்ணன் - ருக்மணி, சத்யபாமா.
2. ஆலமர் செல்வனை அடியவர் வணங்குதல்.
3. லிங்க வடிவில் அமைந்த இறைவனை மக்கள் வணங்க, வாளேந்திய காவலன் அருகில் காணப்படுகின்றான்.
4. கங்காள மூர்த்தி, தட்டினைத் தலையில் ஏந்தியிருக்கும் பூதம், தளிருக்காகத் தாவும் மான், நின்ற வடிவில் ஒரு பெண்.

**கட்டம் – 3**

1. ஏகபாத மூர்த்தி
2. மிதியடி அணிந்த வீரபத்திரர் - சூலம் ஒடிந்துள்ளது.
3. அம்மையப்பன் பீடத்தை சங்கூதும் பூதங்கள் தாங்கி நிற்கின்றன. நடுவில் உற்சவர் - அம்பாள் பிரியா விடை பெறுதல்.
4. வில்லும் அம்பும் ஏந்தி நிற்கும் வேடனின் முன்னர் வாயைப் பிளந்து முன்காலைத் தூக்கி புலி நிற்கிறது.

**கட்டம் – 4**

1. மயிலின்மேல் முருகன், வள்ளி, தெய்வயானை.
2. மூஞ்சூறு வாகனத்தில் விநாயகர்.
3. ஒரு ரிஷி.
4. பூதநாதர்.

**கட்டம் – 5**

1. குறும்பலாவின்கீழ் அம்மையும் அப்பனும்.
2. இறைவனை மன்னன் வணங்குதல்.
3. லிங்கமாக மாறிய பெருமாளின் தலையில் அகத்தியரின் கை.
4. பூதம் சங்கூதல்.

**கட்டம் – 6**

1. மரத்தடியில் லிங்க வடிவில் அமைந்துள்ள இறைவனை வணங்குதல்.
2. அம்மையப்பன்.
3. மகாவிஷ்ணு தேவியருடன்.
4. கையிற் கோலேந்தி, காலை லிங்கத்தின் கண்மீது வைத்துள்ள கண்ணப்ப நாயனார்.

முகப்பு மண்டபம் பரந்து, விரிந்து அழகிய கல்தள வரிசையுடன் காணப்படுகிறது. மண்டபத்தில் 14 தூண்கள் உள்ளன. பொருட்களைப் போட்டு வைப்பதற்கென்றே ஒரு தனிப்பிரிவை மூங்கில் தட்டிகளால் பிரித்தமைத்துள்ளனர். முகப்பு மண்டபத்திலிருந்து சித்ரமண்டபங்களுக்குச் செல்லும் வழியின் இருபுறமும் பெரிய திண்ணைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு திண்ணையிலும் இரண்டு அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

இவை குழல்வாய்மொழி அம்மை கோயிலில் காணப்பட்டவை, திருப்பணியின்பொழுது இச்சிலைகள், அவற்றின் கலை வேலைப் பாடுகள் கருதி இங்கு வைக்கப்பட்டன. குறவன், குறத்தி, கொடி ரதி, நடன நங்கை என்ற அந்த நான்கு சிற்பங்களும் கலைச் சிறப்பு மிக்கவையாகும். சிற்பங்கள் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையே. அச் சிற்பங்களின் விபரம் வருமாறு.

### குறவன்

தலையில் தலைப்பாகை அணிந்து, காதில் கடுக்கன், மார்பில் மணிகள் அணிந்து, முருக்கிவிட்ட மீசையுடன் காணப்படுகிறான், ஒரு கையில் வேட்டையாடுவதற்குப் பயன்படும் கவனும், மறு கையில் ஆடுவதற்குப் பயன்படும் இசைக் கருவியும் காணப்படுகிறது.

### குறத்தி

நான்கு வரிசை தலை அலங்காரங்களுடன், சடை பின்னி, அப்பின்னலை இடது கையில் ஏந்தியுள்ளாள். காதுகளில் பத்ர குண்டலங்கள் அணிந்துள்ளாள். விம்மிய மார்புடன் ஒட்டிய முத்தாரம் அணிந்து, இடுப்பிலிருந்து கால்வரை எழில்மிகு ஆடையணிந்து உள்ளத்தைக் கவர்கின்ற முறையில் சிற்பம் அமைந்துள்ளது. இடது தோளில் குடுவை தாங்கியுள்ளாள்.

### கொடிரதி

கதக்களி நடனத்திற்கான முடியலங்காரம். தலையில் அழகிய தலையணிகளாக நெத்திச்சுட்டு, கொண்டைத்திருக்கு, பிறை, சூரியன், காதுகளில் பத்ர குண்டலங்கள், விம்மிய மார்பைத் தழுவிய ஆரங்கள், காலில் சிலம்பு ஆகியவை அணிந்துள்ளாள். மெல்லிய ஆடையை, மயிலின் விரித்துள்ள தோகையைப்போல இடையே சுருக்கி, கீழே விரித்து அணிந்துள்ளாள். தோளிலிருந்து தொடை வரை தொங்குகின்ற மாதிரி, நீளமான அழகிய ஆரம் காணப்படு கிறது. மெல்லிய இடை, இதழ்களில் புன்சிரிப்பு, இடது கையில் நீண்ட சடையைத் தாங்கி, இடது காலை ஊன்றி, வலது காலை மெல்லத் தூக்கி விரல்களால் ஊன்றிய நிலையில் சிற்பம் அமைந் துள்ளது. சிற்பத்தின் வலது கை சிதைந்து காணப்படுகிறது.

### நடன நங்கை

நான்கு வரிசைகளுடன் கூடிய மகுடம் தலையில் அணிந்துள் ளாள், காதில் பத்ரகுண்டலங்களும், இடதுபக்க மூக்கில் மூக்குத்தியும்,

கச்சையணிந்த விம்மிய மார்பில் முத்தாரமும், காலில் தண்டை, சிலம்பு ஆகிய அணிகளும் அணிந்துள்ளாள். மார்பில் கச்சையும், இடை யிலிருந்து கால்வரை அழகிய, மெல்லிய, நெளிமிகு ஆடையும் அணிந்துள்ளாள். நெற்றியில் பொட்டு காணப்படுகிறது. இரு பாதங் களையும் தரையில் நடன பாவத்தில் ஊன்றி இருக்க, இடது கையை இடுப்பில் வைத்திருக்க, வலது கை ஒன்று எனக் காட்டும் பாவனை யில் இருக்க இச்சிலை வடிக்கப்பட்டுள்ளது.

முன்மண்டபத்திலிருந்து சித்ரசபையின் வெளிச்சுற்று வீதியினுள் நுழைகிறோம். வெளிச்சுற்று வீதியின் கிழக்குப் பகுதி மூலையில் சித்ரசபைக்கான மடைப்பள்ளி காணப்படுகிறது. தெற்கு மதில்சுவரில் ஒரு சிறிய வாயில் காணப்படுகிறது. வெளிச்சுற்று வீதியின் கிழக்கு வீதியில் மேற்குப் பக்கத்தில் பன்றி மாடசாமியும்; பூதத்தாரும் காணப் படுகின்றன. இவை, இப்பகுதியில் வாழும் சலவைத் தொழிலாளி களுக்குக் குலதெய்வமாகும். ஆண்டுதோறும் பங்குனி உத்ர நாள் இரவு முழுமையும் இவ்விழா சலவைத் தொழிலாளிகளால் நடத்தப் படுகிறது.

வெளிக்சுற்று வீதியின் நடுவில் கல்மண்டபத்தில், கல்லால் ஆகிய சித்ரசபை[19] அமைந்துள்ளது. கீழ் மண்டபம், மேல் மண்டபம் என இரு மண்டபங்களாக அமைக்கப்பட்டுள்ளன. கீழ் மண்டபம், நீள் சதுரமாகவும், மேல் மண்டபம் சதுரமாகவும் அமைந்துள்ளன. இரு மண்டபங்களும் செப்போடு பொதிந்த கூரைகளால் பொதியப்பட் டுள்ளன. கீழ் மண்டபம் நான்கு பக்கங்களிலும் அழகிய வேலைப் பாடமைந்த மரச்சட்டங்களால் சுவர்போல மறைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கத்தில் மண்டபத்திற்குள் செல்வதற்கான பாதையும், மேற்குப் பக்கத்தில் மேல் மண்டபத்திற்குள் செல்வதற்கான பாதையும் காணப்படுகின்றன. இப்பாதையும், மேல் மண்டபத்திற்குள் செல்வதற் கான ஒரே பாதையும் கல்மேடையாற் இணைக்கப்பட்டுள்ளன.

கல்மேடையில் இருபக்கமும் வெளிச்சுற்று வீதிக்குள் செல்வதற் கான படிக்கட்டுக்கள் உள்ளன. கீழ் மண்டபத்தின் மேற்கு ஓரத்தில் ஒரு சிறிய மேடை காணப்படுகின்றது. அம்மேடையில்தான் நடராசர் அமர்ந்து காட்சியளிப்பார். செப்போட்டின்கீழ் காணப்படும் மரச் சட்டங்கள் அழகிய பூ வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் வண்ணம் தீட்டப்பட்டு அழகாகக் காணப்படு கின்றன. கீழ்சபையின் தென்கிழக்கு மூலையில் மரச்சட்டங்களுக்கு நடுவே ஒரு அளவுகோல் எடுக்கமுடியாதபடி சித்ரசபையின் மரச் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கீழ் மண்டபத்தின் மேற்கு வாயில் வழியாக முழுதும் கல்லால் ஆன சித்ரசபையினுள் செல்ல வேண்டும். சித்ரசபையினுள் நடுவே கருவறை என்று கூறத்தக்க மண்டபமும், அதனைச் சுற்றி ஒரு உள் சுற்று வீதியும் காணப்படுகிறது. கருவறையின் கிழக்குப் பகுதியில் மட்டும் சுவருக்குப் பதிலாக மரச்சட்டங்களால் ஆன தடுப்பும் காணப்படுகிறது. கருவறையின் உள்ளே செல்ல கிழக்குப் பக்கம் மட்டும் வாயில் உள்ளது. உள்சுற்று வீதியின் கிழக்கு வெளிச்சுவரில் சித்ரமன்றத்திற்குள் செல்வதற்கான வாயிலும், வாயிலில் இருபுறமும் சாளரங்களும் காணப்படுகின்றன. உள்சுற்று வீதியின் தெற்கு கிழக்கு வடக்கு வெளிச்சுவர்களிலும் சாளரங்கள் அமைந்துள்ளன.

கருவறை என்று போற்றப்படும் நடு மண்டபத்தில் மூலவராகிய நடராசர் ஓவியம் இடம்பெற்றுள்ள வடக்குச் சுவரையடுத்துச் சிறிய மரத்தடுப்பு வேலியொன்று காணப்படுகிறது. மரத்தடுப்புக்கும் நடராசர் ஓவியம் இடம்பெற்றுள்ள வடக்குச் சுவருக்கும் இடைப்பட்ட பகுதியே இறைவன் ஆடிய இடமென்று கூறுகிறார்கள். அங்கு திருமறைகள் கோயில் ஒன்றும் (பேழை) வைக்கப்பட்டுள்ளது. கீழ்ச்சபைகளின் மேல் பொதியப்பட்டுள்ள செப்போட்டின் மேல் ஐந்து கலசங்களும், மேல் சபையின் மேல் பொதியப்பட்டுள்ள செப்போட்டின் மேல் மூன்று கலசங்களும் காணப்படுகின்றன. செப்போடுகளைக் கூரையின் மேல் பொருத்த 1008 செப்பாணிகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. அவ்வாணிகளில் பிரணவ மந்திரம் எழுதப்பட்டுள்ளது.

### 3.4 ஓவியங்கள்

கருவறையின் வடக்குச் சுவர் கிழக்குப் பகுதியில் நடராசரின் திரிபுர தாண்டவக்காட்சி மைந்துள்ளது. நடராசர் ஓவியம் மிகத் துடிப் பாகவும், காண்பவர் மனத்தில் ஓர் இன்பக் கிளர்ச்சியை உண்டு பண்ணும் முறையிலும் அமைந்துள்ளது.

அக்காட்சியை,

மங்கை யாமளை யிருவிழி களிப்புற வொருபாத மலர்தூக்கி
கங்கை வாய்விட வொருபதங் குறன்மேற் கதிகொடு சுதிதாக்கிப்
பங்கை யாசனன் றுதிசெய நெடியமாற் கதிசயம் பரந்தேறச்
சங்கை யேந்திய குழைநிலாப் புயவரைத் தடந்தொறும் தவழ்ந்தேற[20]

இலக்கியமும் வியந்து, போற்றுகிறது. நீலப் பின்னணியில் பொன் ஆபரணங்களுடன், புலித்தோலுடனும், வண்ண ஓவியமாக்கியுள்ளனர். நடராசருக்கு இடப்பக்கம் சிவப்புப் பின்னணியில் பச்சை வண்ணத்தில்

பட்டு, பொன் ஆபரணங்களுடன் சிவகாமி அம்மை காட்சி கொடுக்கிறார். அம்மையின் விழிகள் இரண்டும் வலப் பக்கமாக, ஆனந்தப் புன்னகையுடன் நடனத்தைக் காண்பதுபோல் ஓவியம் அமைந்துள்ளது.

நடராசரின் திருவடிகளின் இருபக்கமும் முனிவர்கள் நின்று நடனத்தைக் கண்டு ஆனந்தப் பரவசத்தில் உள்ளார்கள். ஊன்றிய திருவடியின் இடப்பக்கம் பதஞ்சலியும், வலப்பக்கம் அகத்தியரும் வணங்கிய கோலத்திலுள்ளனர். வலப்பக்கம் பிரம்மன் தாளமேந்த, திருமால் முரசு முழங்க தேவகனங்களும் கணபதியும் நடனத்தைக் கண்டு, மகிழ்ந்து, போற்றி, வணங்குகின்றனர்.

ஆடும் திருவடிக்குக் கீழாக முனிவர்களும், பிறரும், இறைவனின் நடனம் காண்கின்றனர். திருமால், பிரம்மன் ஆகிய இருவரின் உருவமும் வலப்பக்கம் அமைந்திருப்பதால் அவர்களுடைய விழிகள் மட்டும் இடப்பக்கமாகத் திரும்பி நடனம் காண, இருவண்ண ஓவியங்களும் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

நடராசர் ஓவியத்திற்கு வலதுபக்கம் தேவகனங்களையடுத்து ஸ்ரீசக்கரம் காணப்படுகிறது. இளஞ்சிவப்பு, இளநீல வண்ணங்களில் பல முக்கோணங்களை உட்பக்கத்தில் கொண்டு வெண்தாமரை மலர் விரிந்தது போல் இச்சக்கரம் அமைந்துள்ளது. இச்சக்கரம் அகத்தியரால் அமைக்கப்பட்டது. இச்சக்கரத்தன்கீழ் நான்கு சக்தி வடிவங்கள் காணப்படுகின்றன. இதற்கு வலப்பக்கம் பக்தர்கள் வணங்க, ஆதி பராசக்தி பீட வடிவில் காணப்படுகிறார். அதனுடைய ஓவிய வடிவமே இங்குக் காணப்படுகிறது. இப்பீடத்திற்குக் கீழேதான் தாணுமாலயன் பூந்தொட்டில் காணப்படுகிறது. இத்தொட்டிலில்தான் உலகமகா சக்தியாகிய பராசக்தி, ஒரு யுகத்தில் அயனாகவும், மருயுகத்தில் அரியாகவும் இன்று அரனாகவும் வந்துதித்த பரமனைக் குழந்தையாக்கித் தாலாட்டினாள். இதனை "சகமெலாந் தொழநின்று ஆடும் தாணுமாலயப் பூந்தொட்டில்"[21] என்று தலபுராணமும் குறிப்பிடுகிறது.

கருவறையின் மேற்குச் சுவரில் இறைவனின் திருமணக்கோலம் காணப்படுகிறது. இறைவனின் ஆணைப்படி, கயிலையிலிருந்து தெற்கு நோக்கி வந்த அகத்திய முனிவருக்கு இறைவன் திருமணக் காட்சியைக் காட்டுகிறார்.[22] கருவறையையும் அர்த்த மண்டபத்தையும் பிரித்துக் காட்டுவதுபோல், இறைவனின் திருமணக் காட்சியையடுத்து வேலைப்பாடமைந்த, சன்னல் வடிவிலான, பல வண்ணங்களையுடைய மரத் தடுப்புக் காணப்படுகிறது. இதேபோன்ற பல

வண்ண மரத்தடுப்பு கருவறை, அர்த்த மண்டபம் ஆகிய இரண்டின் கிழக்குப் பக்கம் சுவருக்குப் பதிலாக அமைக்கப்பட்டுள்ளது. இத் தடுப்பின் நோக்கமாக கருவறையில் நடைபெறும் வழிபாட்டினை உட்சுற்று வீதியின் கிழக்குப் பக்கத்திலிருந்து காண வழிவகை செய்வதைக் குறிப்பிடலாம்.

அர்த்தமண்டபத்தில் கிழக்குச் சுவரின் தெற்கு மூலையில் மகா கணபதியின் ஓவியம் அமைந்துள்ளது. சித்ரசபை நடராசருக்கு வழி பாடு தொடங்குமுன், இம்மகா கணபதிக்கு வழிபாடு நடக்கிறது. இம்மகா கணபதியின் ஓவியத்திற்கு மேல், கணபதியின் 15 வடி வங்கள் இரு வரிசையாக ஓவியமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

**முதல் வரிசை**

1. தருண கணபதி
2. பக்தி கணபதி
3 வீர கணபதி
4. பிங்கல கணபதி
5. உச்சிட்ட கணபதி
6. சிப்பிர கணபதி
7. லட்சுமி கணபதி
8. விக்னேஸ்வர கணபதி

**இரண்டாம் வரிசை**

9. ஹேரம்ப கணபதி
10. நிருத்தன கணபதி
11. புவன கணபதி
12. ஹர்த்த கணபதி
13. சக்தி கணபதி
14. த்வஜ கணபதி
15. வல்லப கணபதி

இக்கணபதி உருவங்களையடுத்து, இருவரிசையாக முருகனின் 16 உருவங்கள் காணப்படுகின்றன.

**முதல் வரிசை**

1. சக்தி தரர்
2. தண்டாயுதபாணி
3. தேவசேனாபதி

4. சுப்ரமணியர்
5. யோக தண்டாயுதபாணி
6. கஜவாகனர்
7. சரவணபவர்
8. கார்த்திகேயர்

**இரண்டாவது வரிசை**

9. குமரர்
10. சண்முகர்
11. தாரகாரி
12. தேவசேனாபதி
13. பிரம்மசர்த்தர்
14. வள்ளி கல்யாணம்
15. பாவுண்ணதர்
16. பால்சாமி.

முருகனின் திருவடிகளுக்கு கீழே, இராமேஸ்வரம், திருநெல் வேலி ஆகிய இடங்களில் அருள் வழங்கும் இறையுருவங்கள் அம்மையுடன் காட்சியளிக்கிறது. முதலில் பருவதாபத்தினியம்மனும், இராமலிங்கமும் இராமேஸ்வரத்தில் காட்சி கொடுக்கின்ற காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.அந்த ஓவியத்தின் கீழே அக்கோயிலின் உற்சவ மூர்த்திகள் வண்ண வடிவில் காட்சி கொடுக்கின்றனர். சுவாமி, அம்மன் ஆகியவற்றைத் தனித்தனியாக அமைத்து, அவற்றை இணைத்து ஒரு சன்னதி போல அமைத்துள்ள அழகு போற்றுவதற்குரியது. இராமேஸ்வர சன்னதியை அடுத்து நெல்லையப்பர் சன்னதி வலப் பக்கத்தில் காந்திமதியம்மனும் இடப்பக்கத்தில் நெல்லையப்பரும் காட்சிதர, நடுவே ஸ்தலவிருட்சம் காணப்படுகிறது. அச் சன்னதிக்குக் கீழே, அக்கோயிலின் உற்சவர்கள் வண்ண ஓவியமாக்கப்பட்டுள்ளனர்.

கணபதி வடிவங்கள், முருகனின் வண்ணக்கோலங்கள், இரா மேஸ்வரம், நெல்லை ஆகிய இடங்களில் காட்சிதரும் இறைவனின் திருவடிவங்கள், இவற்றையடுத்து, கிழக்குச் சுவரில் குற்றால நன்னகர் மேவிய மாயவனாகிய சீனிவாசப்பெருமாள் காட்சியளிக்கிறார். ஒரு கரம் பணிலம் ஏந்தி ஒரு கரம் திகிரி தாங்கி இருசுடர் உதய நீலத்தடவரையென[23] பச்சைவண்ணத் திருமேனியுடன் பெருமாள் காட்சியளிக்கிறார். பெருமாளின் இருபுறமும் பூதேவியும், சீதேவியும் காணப்படுகின்றார். மூவரும் பட்டுப் பீதாம்பரங்களுடன் பல வண்ண ஓவியமாகக் காட்சி தருகின்றனர். பெருமாளின் முன்னர் விசுவ

ரூபத்துடன் அகத்தியர், வைணவக் கோலத்தில், மட்டவிழ் துளப மாலை பவித்திர மாலை பூண்டு பொட்டணி நுதல் மேல் ஊர்த்த புண்டரந் துலங்கச் சாத்தி[24] காணப்படுகிறார். அகத்தியர் வலக்கரத் தினைப் பெருமாளின் முடிமீது வைத்து,

முறுகுவலம் புரிக்கரத்து மாற்குறுகப் பெரியதுழாய் முடியின்மீது
சிறியமதிக் கலைகுறுகத் திலகநுதல் விழிகுறுகச் செழும்பூண் மார்பில்
இறையரவப் பணிகுறுக நிகிலவுல கழும்நிறைந்து நீண்டமேனி
குறுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ் குறுமுனிவர் [25]

என்னும் இலக்கியப்படி, அயனை அரியாக்கிய காட்சி அழகாக வடிக்கப்பட்டுள்ளது.

அந்த ஓவியத்தின்கீழ், அகத்தியரின் விருப்பப்படி, சிவம் பெருக குறுகியருள் பெருகிய குற்றாலத் தேவ தேவனாகிய குறும்பலா ஈசன், வலப்பக்கத்தில் குழற்வாய்மொழியம்மையுடன் குறும்பலா மரத்தடியில் வீற்றிருக்கும் வண்ண ஓவியம் காணப்படுகிறது. அச் சன்னதிக்குக் கீழாக திருக்குற்றாலநாதர் கோயிலின் உற்சவர்களாகிய சோமாஸ்கந்தர், குழல்வாய்மொழியம்மன் திருவுருவங்கள் காட்சி யளிக்கின்றன.

கிழக்குச் சுவரில் குறும்பலா ஈசரின் திருக்கல்யாணக் காட்சி முழு ஓவியமாகக் காணப்படுகிறது. பொன்னூஞ்சலில் ஈசனும் அன்னையும் அமர்ந்தாட, அருகே வலப்பக்கத்தில் குழல்வாய்மொழியம்மன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். ஊஞ்சலின் முன் இடப்பக்கம் நான்முகனும், உலகளந்த பெருமாளும், வலப்பக்கம் அகத்தியரும், அக்காட்சியைக் கண்டு, பெருமகிழ்ச்சியுடன் நிற்கின்றனர். ஊஞ்சலின் இடப்பக்கம் முழுமையும் தேவர்களும் வலப்பக்கம் முனிவர்களும் இறைவனின் திருமணக் காட்சியைக் கைகூப்பி வணங்கியவாறு காட்சி தருகின்றனர். ஓவியத்தின்கீழ், இடப்பக்கம் பூவுலக மகளிரும், வலப்பக்கம் மாந்தருமாகக் குழுமி நின்று திருமணக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து போற்றி வணங்கும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது.

தெற்குச் சுவர் முழுமையும் மீனாட்சியின் திருவிளையாடல் காட்சி களைக் காட்டும் ஓவியங்களே இடம்பெற்றுள்ளன. ஓவியங்கள் ஆறு வரிசைகளாக அமைந்துள்ளன. சுவரின் கிழக்கு ஓரத்தில், மேலிருந்து முதல் மூன்று வரிசைகளில் பெரும்பகுதியை மீனாட்சி யம்மை, சொக்கலிங்கம் ஆகிய திருவுருவங்கள் பிடித்துக்கொண்டன. மீனாட்சியம்மையும், சொக்கநாதரும் தனித்தனிக் கோயில்களில்

காட்சி கொடுக்க, மீனாட்சியம்மையை அச்சிவாலய முனிவர் வணங்குவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மீனாட்சியம்மையின் திருவிளையாடல் ஓவியங்களில், கீழ் வரிசைகளில் உள்ளவை சேதமடைந்துள்ளன. ஓவியமாக இடம் பெற்றுள்ள மீனாட்சியின் திருவிளையாடல்கள் வருமாறு:-

1. இந்திரன் பழி தீர்த்தது
2. வெள்ளை யானை சாபம் நீங்கியது
3. ஆலவாய்த் திருநகரம் கண்டது
4. தாடகை பிராட்டியார் அவதாரம்
5. மீனாட்சியம்மை பால் குடித்து, தந்தையுடன் பேசியது
6. அக்கினிக் கடவுளை மீனாட்சி வென்றது
7. இந்திரனை மீனாட்சி வென்றது
8. ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களை மீனாட்சி வென்றது
9. யமதர்மனை மீனாட்சி வென்றது
10. குபேரனை மீனாட்சி வென்றது
11. அரமானிய குரனை மீனாட்சி வென்றது
12. வாயுபகவானை மீனாட்சி வென்றது
13. நந்தி அனுப்பிய பூதங்களை வென்றது
14. ஐம்பத்து ஆறு தேசத்து அரசர்களை அழைத்துப் பேசியது
15. இறைவனை சந்தித்துப் பேசியது
16. மந்திரிகளோடு மீனாட்சி பேசியது
17. தோழியர் மீனாட்சியை அலங்கரித்தல்
18. நகைகள் அணிந்து பூரண அலங்காரத்துடன் மீனாட்சி

சித்ரசபையின் கருவறை, அர்த்தமண்டபம் ஆகிய இரண்டையும் இணைத்துகிழக்குப் பக்கம் சுவருக்குப் பதிலாக, அழகான மர அளி அமைக்கப்பட்டுள்ளது என முன்பே கூறப்பட்டது.

வண்ண ஓவியங்களால் அமைந்த சுவருக்குமேல், முதல்மாடம் என்று சொல்லும் நிலையில், சிற்பங்கள் காணப்படுகின்றன. சுவரின் மேல் மேற்கூரையைப் பொருத்துவதற்காக அமைந்த உத்திரப்பகுதி முழுவதையும் சிறுசிறு மாடங்களாகத் தடுத்து அவற்றில் பல வண்ணங்களில் சிற்பங்கள் அமை மத்துள்ளனர். மேற்குச் சுவரின்

மேல்மாடத்தில் 15 சிற்பங்களும், கிழக்குச் சுவரில் 12 சிற்பங்களும், வடக்கு, தெற்கு சுவர்களில் ஒவ்வொரு பக்கத்திலும் 7வீதம் 14 சிற்பங்களும் காணப்படுகின்றன. அவையனைத்தும் கல்லின்மேல் சுதை பூசப்பட்டு வண்ணந் தீட்டப்பட்டவையாகும். அர்த்தநாரீஸ்வரர், திருவண்ணாமலைத்தலம், சுப்பிரமணியர், மோகினி, சங்கரநாராயணன், ரிஷப வாகனர், அங்காள நாதர் ஆகியோரின் உருவங்கள் கிழக்குச் சுவர் மாடங்களில் காணப்படுகின்றன. வடக்குச் சுவரில் காளி நடனம், இறைவனின் ஊர்த்தவதாண்டவம், கால்மாறி ஆடிய நடனம், ஆனந்தத் தாண்டவம் என நடனக் காட்சிகள் காணப்படுகின்றன. கிழக்குச் சுவரில் காணப்படும் 12 மாடங்களிலும 12 வகையான சிங்க முகத்துடன் கூடிய சிற்பங்கள் காணப்படுகின்றன. தெற்குச் சுவரில் சமயக்குரவர் நால்வர் சிலைகளும், இறைவனின் நடனம் காணவந்த தேவர்களின் சிலைகளும் காணப்படுகின்றன.

சித்ரசபையின் உள்ளே, கிழக்கு மேற்குச் சுவரை இணைக்கும் பாலம் போல் மூன்று கல் உத்திரங்கள் காணப்படுகின்றன. உத்திரங் கள் பல வண்ணக் கோலங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மேற் கூரை, மரச்சட்டங்களால் உள்பகுதி மலர் விரிவதைப்போல அமைத்து, பல வண்ணங்கள் பூசப்பட்டுள்ளன.

அர்த்த மண்டபத்திலிருந்து கிழக்கு வாயில் வழியாக வெளியே வந்து உள்சுற்று வீதிக்குள் வரவேண்டும். வாயிலும் கதவுகளும் பல வண்ணப் பூச்சுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. உட்சுற்று கிழக்கு வீதியின் உட்சுவருக்குப் பதிலாகப் பலவண்ண மரச்சாளரம் அமைக் கப்பட்டுள்ளது. இம்மரச்சாளரமே (வேலி) கருவறை, அர்த்த மண்ட பத்திலிருந்து உட்சுற்று கிழக்கு வீதியைத் தனியே பிரித்துக் காட்டு கிறது. வெளிப்பக்கச் சுவரின் உள்பக்கத்தில் வடக்குப் பக்கம் திரு விலஞ்சிக்குமரர் முழுவடிவில் காட்சி தருகிறார். அடுத்து, வண்ணந் தீட்டப்பட்ட சாளரமும், சாளரத்திற்கு மேல் சிறிய ஓவியங்களாக சமயக் குரவர் நால்வரும் காட்சியளிக்கின்றனர். அடுத்து, வழக்கத்திற்கு மாறாக சனீஸ்வரர் பட்டாடைகளுடன் பல வண்ணத்தில் காணப்படு கிறார். சித்ரசபைக்கான வாயில் அடுத்து அமைந்துள்ளது. வாயிலை யடுத்து ஆறுமுகக்கடவுளும் அடுத்து தாடகை பிராட்டியும் முழு ஓவியுமாக அமைந்துள்ளனர். அதனையடுத்து சாளரமும் சாளரத் திற்கு மேல் சோமசுந்தரும் காட்சியளிக்கின்றனர். கிழக்குச் சுவரின் தெற்கு முடிவில் திருச்செந்தூர் முருகன் காட்சியளிக்கின்றார். கிழக்குச் சுவரின் இரு மூலைகளிலும் திரு விலஞ்சிக்குமரரும், திருச்செந்தூர் முருகனும், நடுவில் ஆறுமுகக் கடவுளும் அமைந்துள்ளனர்.

முருகனின் மூன்று தோற்றங்களும் ஓவியங்களில் மாறுபாட்டுடன், பல வண்ணங்களில், கண்டவர் உள்ளத்தில் பதியும் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

உற்சுற்று தெற்கு வீதியில் இருபக்கச் சுவர்களிலும் பல வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. தெற்கு வீதி வெளிச்சுவரின் கிழக்குப் பக்கத்தில் முதலில் காணப்படுவது துர்க்கையின் வண்ணக்காட்சிகள். வரிசைக்கு நான்கு வீதம் இரண்டு வரிசைகளில் எட்டு துர்க்கையின் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

**முதல் வரிசை**

1. மஹிஷாசுர சம்ஹாரம்
2. துர்க்கை
3. ஜல துர்க்கை
4. பிரமதுர்ககை

**இரண்டாம் வரிசை**

5. விஷ்ணு துர்க்கை
6. ருத்திர துர்க்கை
7. சம்ஹாரி துர்க்கை
8. சூலினி துர்க்கை

துர்க்கையை அடுத்து சாளரம் காணப்படுகிறது. சாளரத்திற்கும் மேல் வாலி சம்ஹார காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. அடுத்து அக்கினி வீரபத்திரரின் முழு உருவம் இடம்பெற்றுள்ளது. மீண்டும் சாளரம், சாளரத்திற்குமேல் திருபுடை மருதூர் காட்சி வரையப்பட்டுள்ளது. தெற்குச் சுவரின் மேற்கு மூலையில் கஜேந்திர மோட்சம் முழு ஓவியமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆதிமூலம் என்று அபயக்குரல் எழுப்பிய கஜேந்திரனுக்கு, அருள்புரிய கருடனின் மேல் விரைந்து வந்து, சக்ராயுதத்தினால் முதலையை அழித்த காட்சி மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. கருடனின் மேல் தன்னுடைய எட்டுக் கரங்களிலும் ஆயுதம் ஏந்தி இறைவன் போர்க்கோலத்துடன் காட்சி கொடுக்க, பக்கத்தில் பிரமன் வணங்கி நிற்க, தேவர்கள் மலர் மாரி பொழிந்து, வாழ்த்த கஜேந்திர மோட்சக் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

உள்சுற்று தெற்கு வீதியில் உள்பக்கச்சுவரில் இறைவனின் திருமணக்காட்சிகள் ஒருபுறமும், திருவிளையாடல் காட்சிகள் மறுபுறமும் வண்ணத்தில் காட்சியளிக்க நடுவே யோக தட்சிணாமூர்த்தி

ஓவியம் உள்பக்கச் சுவரில் காணப்படுகிறது. சுவரின் மேற்குப் பகுதி முழுமையும் திருவிளையாடற் சித்திரங்களும், கிழக்குப்பகுதி முழுமையும் திருமணச் சடங்குச் சித்திரங்களும் காணப்படுகின்றன. ஓவியங்களாக வடிக்கப்பட்டுள்ள திருவிளையாடல் காட்சிகள் வருமாறு:

1. ஏழுகடலை அழைத்தது
2. அன்னக் குழியையும் வைகையையும் அழைத்தது
3. குண்டோதரனுக்கு அன்னமிட்டது
4. தாண்டவமூர்த்தி
5. கடல் கவர வேல் விட்டது
6. உக்கிர பாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்தது
7. உக்கிர பாண்டியன் தாயாரிடத்தில் பால் குடித்தது
8. மலையத்துவசனையும் காஞ்சன மாலையையும் ஸ்நானம் செய்யச்சொல்லிக் கயிலாலயத்திற்கு அனுப்பியது
9. மலையத்துவசனை வரவழைத்தது
10. வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது
11. மாணிக்கம் விற்றது
12. வேதத்திற்குப் பொருள் அருளிச்செய்தது
13. மகா மேருவை உக்கிரபாண்டியன் செண்டாலடித்தது
14. இந்திரன் முடிமேல் உக்கிரபாண்டியன் வளையெறிந்தது
15. யானை எய்தது
16. கல்யானைக்குக் கரும்பளித்தது
17. இறைவன் எல்லாம்வல்ல சித்தனானது
18. நான்மாடக் கடலானது
19. அங்கம் வெட்டியது
20. மாபாதந் தீர்த்தது
21. பழியஞ்சியது
22. கால் மாறியாடியது
23. கௌரியம்மன் கைலாசப்பதிக்கு இடப்பாகமானது
24. நாகமெய்தது
25. மாயப்பசுவை வதைத்தது
26. மெய் காட்டியது
26. இறைவனின் அருள் காட்சி

ஓவியங்களாக வடிக்கப்பட்டுள்ள
திருமணச் சடங்கு காட்சிகள் வருமாறு;

1. குபேரன் கைலாசபதிக்கு ஆபரணம் அளித்து அலங்காரம் செய்தல்
2. மும்மூர்த்திகளும் அஷ்டதிக்குப் பாலகர்களும் கயிலாய பதியை திருமணத்திற்குஅழைத்து வருதல்
3. லெட்சுமியும் சரசுவதியும் தாடதகைக்கு நகை அணிவித்து அலங்காரம் செய்தல்
4. கயிலாயபதி ஊஞ்சலில் அமர்தல்
5. காஞ்சனமாலையும் கைலாயபதியும் பேசுதல்
6. கைலாயபதிக்குக் காஞ்சனமாலை பாதம் கழுவுதல்
7. திருமாலும் பிரம்மாவும் கைலாயபதியை அழைத்துவரல்
8. லெட்சுமியும் சரசுவதியும் தாடதகையை அழைத்துவரல்
9. திருமணக்கோலம்
10. ரத்ன பீடத்தில்மணமக்கள் அமர்தல்
11. பிரம்மதேவன் வேள்வி செய்தல்
12. மணவறையில் மணமக்கள் அமர்தல்
13. சடங்குகள் செய்தல்
14. மணமகளை மணமகன் கையைப்பற்றி அழைத்துவரல்
15. மணமகன் அக்கினியில் பொரி போடல்
16. தாடதகை பிராட்டியின் பாதத்தை பற்றியெடுத்து, இறைவன் அம்மிமேல் வைத்தல்
17. அருந்ததி பார்த்தல்
18. மணவறையில் மணமக்கள் வீற்றிருத்தல்
19. சுந்தரபாண்டியன் தேவர்களுக்கு ஆடை வழங்குதல்
20. சுந்தரபாண்டியன் ஆட்சி செய்தல்
21. கடம்பவனக் கடவுளை அர்ச்சனை செய்தல்
22. கடம்பவனக் கடவுளைத் தரிசித்தல்
23. மீனாட்சி.

உட்சுற்று மேற்குவீதி வெளிச் சுவரில் (தெற்கு மூலையில்) முதலில் அமைந்திருப்பது பொதிகைக் காட்சியே பொங்கருவி தூங்குமலை என்பது போல உச்சியில் தேனருவி, அடுத்து செண்பக வனக்காடுகளின் நடுவே செண்பக அருவி, இறுதியாக பொங்குமாங் கடலும் வற்றாத வடவருவியும் சித்தரிக்கப்பட்டுள்ளன. குற்றால மலை யின் பெருமையும் அழகும் வெளிப்படும் முறையில் முழு ஓவியமாக அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு வீதியில் அமைந்துள்ள திருச்செந்தூர் முருகன் சித்திரமும் இக்குற்றால மலையின் சித்திரமும் எதிர் எதிரே அமைந்துள்ளன. அருவிகள் நிறைந்த பொதியமலை ஓவியத்தை யடுத்து சாளரமும், சாளரத்தின் மேல் பாவவிநாசரின் ஓவியமும் காணப் படுகின்றன. அடுத்து, சிவபெருமானின் பலவகையான சித்திரங்கள் காணப்படுகின்றன. சிவனின் உருவங்களுக்கிடையே, இறைவன் ஊர்த்தவத்தாண்டவம் ஆடக் காரணமான பத்ரகாளியின் சித்திரமும் காணப்படுகிறது. சிவனின் சித்திரங்கள்மேல் மழைத் தண்ணீர் வடிந்து வண்ணங்கள் மறைந்து காணப்படுகின்றன. சிவனின் எட்டு உருவங்கள், அவற்றை அடையாளம் கண்டுகொள்ள முடியாத வகை யில் மழை நீரால் அழிக்கப்பட்டு நிலையில் சிதைக்கப்பட்டுள்ளன. இன்று காணக் கிடைக்கின்ற சித்திரங்கள் வருமாறு:

1. நெல்லையப்பர்
2. உமையொருபங்கர்
3. நடராசர்
4. மீனாட்சி கல்யாணம்
5. மன்மத தகனம்
6. காலசம்ஹாரம்
7. திரிபுர சம்ஹாரம்
8. நஞ்சுண்ட நாயகன்
9. அனுக்கிரஹமூர்த்தி
10. கங்காளநாதர்
11. கிராதக மூர்த்தி
12. அர்த்தநாரீஸ்வரர்
13. தட்சிணாமூர்த்தி
14. பத்ரகாளி நடனக் காட்சி
15. இறைவனின் ஊர்த்தவத் தாண்டவம்.

இறைவனின் திரு ஓவியங்களையடுத்து, ரிஷபவாகனத்தில் உலகமகா அன்னையாகிய பராசக்தி காட்சி தருகிறார். அம்மையும் அப்பனும் ரிஷப வாகனத்தில் அமர்ந்து அனைவருக்கும் அருள் வழங்கும் வண்ண ஓவியம் கிழக்குச் சுவரின் வடக்கு மூலையில் காணப் படுகிறது. அன்னையும் பிதாவும் ரிஷப வாகனத்தில் அமர்ந்து அருள் வழங்கும் ஓவியத்திற்கு எதிராக கிழக்குச் சுவரில் அவர்களின் செல்வப் புதல்வனும், தமிழ்க் கடவுளுமாகிய திருவிலஞ்சிக்குமரன் காட்சி தருகிறார். இவ்விரு ரிஷிப வாகனச் சித்திரங்களும் மழைநீரால் பாதிக்கப்பட்டுள்ளன.

உட்சுற்று மேற்கு வீதியின் உட்சுவர் முழுமையும் திருவிளை யாடல் காட்சிகளும், 64 நாயன்மார்களின் திருவுருவங்களும் சிறிய ஓவியங்களாகக் காணப்படுகின்றன. சுவரின் தெற்குப் பகுதி முழுமை யும் 64 திருவிளையாடற் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. வடக்குப் பகுதி முழுமையும் 64 நாயன்மார்களின் திருவுருவங்கள் ஓவியமாக அமைக்கப்பட்டுள்ளன. ஓவியங்கள் அனைத்தும் சிறிதாக இருந்தா லும், கலை நுட்பம் வெளிப்படும் வகையில் அமைந்துள்ளன.

உட்சுற்று வடக்கு வீதி வெளிச்சுவரில் முதலில் காணப்படுவது இராவணன் கயிலையைத் தூக்கும் சித்திரமே. பத்துத் தலைகளுடனும் இருபது கரங்களுடனும் இராவணன் காணப்படுகிறான். வலது காலை மடித்து அழுந்த ஊன்றி, இடது காலை மடித்து, முட்டை ஊன்றிய நிலையில் இராவணன் சித்திரம் காணப்படுகிறது. வலது கால் தொடையின் மீது வீணையை நிறுத்தி, இடக்கரத்தால் அதன் மேல் பாகத்தைப் பற்றி இருகரங்களால் வாசிப்பதாக ஓவியம் அமைந்துள் ளது, கயிலாய மலைமேல் சிவனும் பார்வதியும், திருமணக் கோலம் போல், பட்டுப் பீதாம்பரங்களுடன் காணப்படுகின்றனர். இறை வனின் வலப்பக்கம் முனிவர்களும், இறைவியின் இடப்பக்கம் நந்தி முதலா னோரும் வணங்கிய கோலத்தில் காணப்படுகின்றனர். இம்முழு ஓவியம் கஜேந்திர மோட்சச் சித்திரத்திற்கு (தெற்கு வீதி வெளிச்சுவர்) நேர் எதிரில் அமைந்துள்ளது.

திருக்காயிலாயக் காட்சியையடுத்து, கூடல் மாநகரில் கால் மாறி நடனமாடிய ஆடல்வல்லானின் ஓவியம் அமைந்துள்ளது. மூலவர் ஓவியம்போல் இதுவும் பேரழகுடன் காணப்படுகிறது. திருவடியின் வலது பக்கம் முனிவர்களும் பாண்டிய மன்னனும் ஆடலைக் கண்டு மகிழ்ந்து வணங்குகின்றனர்; இடதுபக்கம்ட நான்முகனும், திருமாலும் பிறரும் காணப்படுகின்றனர். அடுத்து இரு சாளரங்களும் அவற் றிற்கு நடுவே இரணிய சம்ஹாரக் காட்சியும் சித்திரமாக்கப்பட்டுள் ளது. முதல் சாளரத்தின்மேல் மேல்வாசல் சாஸ்தாவும் இரண்டாவது

சாளரத்தின்மேல் கருப்பண்ண சுவாமியும், 18-ஆம் படிக் கோபுரமும் சிறிய ஓவியமாகக் காணப்படுகின்றன.

வடக்கு உட்சுவற்று வீதியின் முடிவில் 8 பைரவரின் வடிவங்கள் இரு வரிசையாக அமைந்துள்ளன. இப்பைரவரின் வடிவங்கள் நேர் எதிர் சுவரில் (தெற்கு) காணப்படும், துர்க்கையின் வடிவங்களுக்கு இணையாக அமைந்துள்ளன. அவை வருமாறு:

1. அஜித் சுங்க பைரவர்
2. குரூர பைரவர்
3. சண்ட பைரவர்
4. குரோத பைரவர்
5. உன்மத்தபைரவர்
6. கால பைரவர்
7. பீஷ்ண பைரவர்
8. சம்ஹார பைரவர்

வீதியின் உட்சுவரில் பெருமாளின் இரண்டு பெரிய ஓவியங்களே காணப்படுகின்றன. முதலாவதாக, பள்ளிகொண்ட கோலத்தில் ஸ்ரீ பத்மநாபர் சித்தரிக்கப்பட்டுள்ளார். ஆதிசேடரின் ஐந்து தலைகளைக் குடையாகக் கொண்டு பாம்புப் படுக்கையில் பள்ளிகொள்ள, பெருமாளின் இரு தேவியரும் திருவடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளனர். இரண்டாவதாக, பள்ளிகொண்ட பெருமாளின் வலது பக்கம், ஸ்ரீராமரின் பட்டாபிஷேகக் காட்சி வரையப்பட்டுள்ளது அங்கதன் உடைவாள் ஏந்த, இருவரும கவரி வீச, இராமன் அரசுக்கட்டிலில் வீற்றிருக்கிறான். அருகில் சீதையின் ஓவியமும் உள்ளது. இராமனின் மடிமேல் வில்லும் வாளும் காணப்பட, ஒரு காலை மடித்து ஆசனத்தில் அமர்ந்துள்ளான் இராமபிரான். இராமபிரானின் பட்டாபிஷேகக் காட்சியும் மூலவராகிய நடராசனின் ஓவியமும் ஒரேசுவரின் இரு பக்கங்களில் அமைந்துள்ளன. திருச்செந்தூர் முருகன் கோயில் 8-ஆம் திருநாள் விழாவில் பச்சை சாத்தும் அலங்காரத்தின்பொழுது, முன்னால் பார்த்தால் நடராசர் போலவும், பின்னால் பார்த்தால் முருகன் போலவும் காணப்படுவது[25] போல், இங்கு சுவரின் முன் பக்கம் நடராசரின் ஓவியமும் பின்பக்கம் இராமனின் திருக்கோலமும் காணப்படுகின்றன.

சித்திரசபையின் உட்சுற்று வீதியைக் கடந்து வெளியே வந்தால், சித்திர சபையின் வெளிச்சுவர் முழுமையும் பெரிய பெரிய ஓவியங்கள்

காணப்படுகின்றன. வாயிலையடுத்து வலப்பக்கம் கங்காளநாதர் ஓவியம் காணப்படுகிறது. வாயிலை அடுத்து இடப்பக்கம் ஒரு சாளரமும், கங்களாநாதர் ஓவியத்தையடுத்து வலப்பக்கம் ஒரு சாளரமும் காணப்படுகிறது.

இடப்பக்கம் அமைந்துள்ள சாளரத்தின் மேல் சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்களின் சித்திரங்களும், வலப்பக்கம் அமைந்துள்ள சாளரத்தின்மேல் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய கிரகங்களின் சித்திரங்களும் வரிசையில் அமைந்துள்ளன. கங்காளநாதர் ஆடையின்றி, ஒரு தொடையால் மறு தொடையை மறைத்து ஒரு கரத்தில் முரசும் மறு கரத்தில் அதனை முழங்கச் சிறுகோலுடனும், ஏனைய திருக்கரங்களில் சிவனுக்குரிய சின்னங்களுடனும் காணப்படுகிறார். கழுத்தில் பாம்பு மாலையானதுபோல், இடையிலும் பாம்பு அரைநாணாயுள்ளது. தோலில் அரவ மாலையும், மண்டையோட்டு மாலையும் காணப்படுகின்றன. ஒரு காதில் குழையும் மறு காதில் குண்டலமும் விளங்க, காண்பவர் மனத்தைக் கவரும் வண்ணம் கங்காளநாதர் ஓவியம் வடிக்கப்பட்டுள்ளது. கிழக்குச் சுவரின் இரண்டு மூலைகளிலும் துவாரபாலகர் உருவங்கள் மிக அழகாக அமைந்துள்ளன. இடையில் வாளும், கவசமும் அணிந்து ஒரு கையில் தண்டம் ஏந்தி, மாலையுடன் காணப்படும் துவாரபாலகர்களுக்கு 14 கரங்கள் பல்வேறு வகையான ஆயுதங்களுடன் படைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய இருகரங்களைக் கொண்டே ஒருவர் வினாவுவது போலவும், மற்றவர் பதிலளிப்பது போலவும் வரையப்பட்டுள்ளது.

சித்ரசபையின் தெற்குச் சுவரில் காளியின் நடனமும், இறைவனின் ஊர்த்தவத் தாண்டவமும் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. இவ்விரு சித்திரங்களுக்கு நடுவே இரு சாளரங்கள் காணப்படுகின்றன. ஒன்றின்மேல் தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் கடைகின்ற காட்சியும், மற்றதின்மேல் அமிர்தம் பரிமாறும் காட்சியும் படமாக்கப்பட்டுள்ளன. பட்டாடை அணிந்து எட்டுத் திருக்கரங்களோடு காளி நடனமாடுகின்ற காட்சி மிக அழகாக வரையப்பட்டுள்ளது. காளியின் முகத்தில் கோப உணர்வு மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. வலக்காலைத் தோளுக்குமேல் தூக்கி இறைவன் ஆடும் ஊர்த்தவத் தாண்டவத்தின் பொழுது இறைவனின் முகத்தில் காணப்படும் பெருமிதம் மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. காலைத் தூக்கியபடி ஆடிய நிலையில் மாலைகளும் ஆபரணங்களும் ஆடிய நிலையில் வரையப்பட்டுள்ளமை போற்றத் தகுந்த ஒன்றாகும்.

மேற்குச் சுவரில் முருகன், சூரர்களை வென்ற ஓவியங்கள் காணப்படுகின்றன. தெற்கு மூலையில் முருகன் மயிலின்மீது அமர்ந்து சூரனை நோக்கி அம்பு செலுத்துவதுபோல சித்தரிக்கப்பட்டுள்ளது, முருகனின் கோபமும், அருளும் ஒருங்கே சித்தரிக்கப்பட்டுள்ளது. முருகனுக்கு எதிரில், முருகனின் சூலத்தை மார்பில் ஏற்றவாறு மரண பயத்துடன் சூரனின் உருவம் வரையப்பட்டுள்ளது. முருகனுக்கும், சூரனுக்கும் நடுவே ஒரு சாளரமும் சாளரத்தின்மேல் பஞ்சபாண்டவர் சதுரங்கம் ஆடும் காட்சியும் காணப்படுகிறது. சூரபத்மனுக்குப்பின், சிங்கமகா சூரன், முருகனைப் போருக்கு அழைக்கும் பானுகோபன், தாரகாசூரன் ஆகியோரின் முழு வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. சூரர்களின் ஓவியங்கள் அனைத்தின் முகங்களிலும் அகங்காரம் வெளிப்படுகின்ற முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

வடக்குச் சுவரின் நடுவே இரு சாளரங்களுடன் இருபுறமும் ரதி, மன்மதன் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. கிளியின்மேல் அமர்ந்து கரும்பு வில் வளைத்து மலர்க்கணை தொடுக்கும் மன்மதனும், வெள்ளையன்னத்தின்மீது அமர்ந்து மலர்க்கணை தொடுக்கும் ரதியும், மிக அழகாக ஓவியமாக்கப்பட்டுள்ளனர். ஒரு சாளரத்தின்மேல் பராசக்தி பூசை செய்யும் காட்சியும், மற்றொரு சாளரத்தின் மேல் இராமாயணப் போர்க்காட்சியும் சிறிய சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன.

வெளிச்சுவர்களில் அமைந்துள்ள அனைத்து ஓவியங்களும் சித்தன்னவாசல், தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணப்படுவது போல் காலத்தால் பழமையானது இல்லை என்றாலும், தரத்தல் அவற்றோடு ஒப்புநோக்கக் கூடியவையேயாகும். இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ள வர்ணக் கலவை, மூலிகைகளால் ஆனதெனக் கருதலாம். ஆனால், 1961-ஆம் ஆண்டில் ஓவியங்களின்மேல் மீண்டும் வர்ணம் பூசப்பட்டுள்ளது. எனவே, பழைய ஓவியங்களின் வர்ணக் கலவையை அறிய வாய்ப்பில்லை.

## 3.4. வழிபாடு

சித்ரபூ மன்றத்தில் நடனமாடும் கூத்தனுக்கு நாள் வழிபாடுகள் முறையாக நடைபெறுகின்றன. "தெய்வமுரசார்க்கும் சித்திரப் பூ மன்றத்துச் சைவ முரசார்க்கும் தாண்டவத்தான்"[27] என்ற முறையில் முரசு முழங்க வழிபாடு நடைபெறுகிறது. இப்பூமன்றத்தில் அமைந்துள்ள மகா கணபதியின் சித்திரத்திற்கும் வழிபாடு செய்கின்றனர். ஆண்டுதோறும் மார்கழி மாதம் ஆதிரைத் திருநாள் அன்று சூரிய உதயத்திற்கு முன், சித்ரசபை நாயகருக்கு தாண்டவ தீபாராதனை

நடைபெறுகிறது. இது ஒன்றுதான் சித்ரசபை நாயகருக்கான சிறப்பு வழிபாடாகும்.

சித்ரசபை நாயகர் விக்கிர வடிவிலின்றி, ஓவிய வடிவமாகக் காட்சியளிக்கிறார். மறைத்தல் (திரோபம்) தொழிலைச் செய்யும் சித்ர சபையில் நடனமாடும் இறைவனுக்கு முதலில் தாண்டவ தீபாராதனை நடந்த பின்னர்தான், திரிகூட மண்படத்தில் எழுந்தருளியிருக்கும் நட ராச மூர்த்தியின் விக்கிரகத்திற்குத் தாண்டவத் தீபாராதனை நடை பெறுகிறது. தத்துவம் காரணமாக மறைத்தல் தொழிலைச் செய்யும் சித்ரசபையானுக்கு முதலில் வழிபாடும், அனுக்ரஹத் தொழிலைச் செய்யும் குற்றாலத்துக் கூத்தனுக்கு அடுத்த வழிபாடும் நடக்கிறது.

சித்ரசபை என்னும் அறையில் சிலர் காண நடைபெற்ற வழிபாடு, திரிகூட மண்டபத்தில் மக்களனைவரும் காண நடக்கிறது என்ற உண்மை தெளிவாக விளங்குகிறது. இவ்வுண்மை, "சித்ரசபை அரச னும் அவனைச் சார்ந்தோறும் மட்டும் கூத்துக் காணும் வேற்றியல் நாடகமன்றம்"[28] என்ற கருத்துக்கு வலுச்சேர்க்கிறது. ஆனால் இச் சபையில் ஆண்டவனின் நர்த்தனத் தீபாராதனையைத் தவிர, வேறு எந்தவிதமான கலை நிகழ்ச்சிகளும் இன்று நடைபெறுவதில்லை.

இதுவரையில் அவ்வாறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் கோயில் ஆவ்ணங்களில் செய்தி இல்லை. சித்ரசபையின் கீழ் மண் டபத்தில் மக்கள் காணும் வகையில் சமயச் சொற்பொழிவுகள் திரிகூட மண்டபம் உருவாவதற்கு முன் நடந்திருக்க வாய்ப்புண்டு. திரிகூட மண்டபத்தில்தான் இன்று கோயிலில் நடைபெறும் அனைத்துக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. எனவே, ஆடல்வல்லானின் நர்த்தனத் தீபாராதனையை, அரசனும் அவனைச் சார்ந்தோறும் மட்டும் கண்டுகளித்த வேற்றியல் மன்றமாக சித்ரசபையைக் கருதலாம்.

"அறம் வளர்த்தாள் தாளம் ஏந்த"[29], "திறம்பெற திருக்குற்றாலச் சித்திரப் பொதுவாம் தெய்வ அரங்கினில்"[30]

ஆண்டகை யமரர் சயசயவெனக்
றார்த்திடச் சித்திர சபைக்கே
தாண்டவம் பணிவார் தமக்கெலாமுத்தி
தகுந் தகுந் தகுமென[31]

என்று ஆடலரசனின் நடனக் காட்சியை இலக்கியங்கள் சித்தரிக் கின்றன. இங்கு விக்கிரகமின்றி ஆனந்த நடனம் வெளிப்படுவதால் ஞானசபை எனவும் போற்றுகின்றன.[32]

## 3.5. இலக்கியங்கள்

சித்ரசபையின் பெருமை விளங்க, திருவாவடுதுறை ஆதினத்துத் தொட்டிக்கலை மதுரகவி சுப்பிரமணிய தேசிகர் சித்ரசபை திரு விருத்தம் என்ற நூலை இயற்றியுள்ளார். திரிகூடராசப்பக் கவிராயரின் அனைத்து நூல்களும் சித்ர சபையின் பெருமையைப் புலப்படுத்து கின்றன. இரட்டைப்புலவர்கள் பாடிய தில்லைக் கலம்பகம், திருப் பத்தூர் புராணம், கந்தபுராணம் ஆகிய இலக்கியங்களிலும் சித்ரசபை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. எல்லா இலக்கியங்களும் சித்ரசபையில் அருள் வழங்கும் ஆனந்த நடராசப் பெருமான் என்று கூறுகையில், தாதம்பட்டி அருணாசல சுவாமிகள் எழுதிய குற்றாலக் கோவை என்னும் இலக்கியம் மட்டும்,

> **நற்பூதலம் புகழ் சித்ர சபையில் நடம்புரிந்து**
> **காற்பூ மலர்த் திருக்குற்றாலநாதர்**[33]
>
> **சித்ரசபைக் குற்றாலநாதர்**[34]

சித்ரசபை நாயகராக ஆடல்புரியும் ஆண்டவனாகத் திருக்குற்றால நாதரைச் சித்தரிக்கிறது. ஆனால், இங்கு வழிபாட்டிற்குரிய முதல்வ ராக நடராசப் பெருமானே விளங்குகிறார். பிற இலக்கியங்களனைத் தும் நடராசரையே சித்ரசபையின் நாயகராகப் போற்றியுள்ளன. நடராசர் விரும்பி ஆடல்புரிந்த ஐந்து சபைகளுள் சித்ரசபையும் ஒன்று. சித்ர சபையின் கும்பாபிஷேகக் கல்வெட்டில் "ஸ்ரீசிவகாமியம்பிகை சமேத ஸ்ரீ நடராஜ மூர்த்தி திருநடனமாடும் சித்திரசபை" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் திருக்குற்றாலநாதரும், குழல்வாய்மொழியம் மனும் திருவிழாக்காலங்களில் சித்ரசபையை வலம் வருகின்றனர். எனவே, சித்ரசபையின் நாயகர் நடராசரே என முடிவு கூறலாம். "ஆடல் அமர்ந்தான்"[35] என்று ஞானசம்பந்தரால் போற்றப்பட்ட, குற்றாலத் துறைக் கூத்தனே இச்சித்திர சபையில் திருநடம் செய்கின்றான் என்றும் முடிவு செய்யலாம்.

## 3.6. நிர்வாகம்

சித்ரசபையின் பராமரிப்புச் செலவுகளுக்காக சித்ரசபையைக் காணவரும் பக்தர்களிடமும், மற்றவர்களிடமும் நுழைவுக் கட்டண மாக, நபர் ஒன்றுக்கு 0.25 காசுகள் வசூல் செய்யப்படுகிறது. சித்ர சபையில் வழிபாடு செய்ய தனிக் குருக்களும், சுத்தம் செய்ய தனி ஊழியரும், தனிக் காவலரும் கோயில் நிர்வாகத்தினரால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## 4. திருஞானசம்பந்த விநாயகர் கோயில்

திருக்குற்றாலத்துறைக் கூத்தனையும், குறும்பலா ஈசனையும் வழிபாடு செய்ய வந்த ஞானசம்பந்தர், குற்றாலத்தின் எல்லையை அடைந்ததும் வழியெல்லாம் சிவலிங்கமாக இருந்த காட்சியைக் கண்டார். சிவிகையை விட்டு இறங்கி, அந்த இடத்திலேயே தரையில் வீழ்ந்து வணங்கினார். அவர் தரையில் வீழ்ந்து வணங்கிய எல்லையில் தான் திருஞானசம்பந்த விநாயகர் கோயில் அமைந்துள்ளது.[36] அதற்கு அப்பால், வழியெல்லாம் சிவலிங்கம் காணப்படுவதால் சிவிகையில் செல்லவஞ்சி, நடந்துசென்று வழிபட்டுப் பதிகம் பாடியுள்ளார்.

குற்றாலத்திலிருந்து தென்காசிக்குச் செல்லும் வழியில், பழைய குற்றாலம், அம்பாசமுத்திரம் போன்ற இடங்களுக்குச் செல்வதற்காக ஒரு கிளைப்பாதை பிரிகிறது. அச்சந்திப்பில் இக்கோயில் உள்ளது. பழைய கோயிலாகிய இக்கோயிலில் 1957-ஆம் ஆண்டில் திருப்பணி நடைபெற்றுள்ளது.

தனிச்சுற்று மதிலும், சிறிய கோபுரமும் கொண்டது இக்கோயில். மதில் வாயிலில் முகப்புச் சிகரமாக அலங்கார வளைவு காணப்படு கின்றது. அதன்மேல் அழகிய வர்ணங்களில் சுதை ஓவியங்களும், சிற்பங்களும் காணப்படுகின்றன. வடவருவி வீழ்கின்ற காட்சி மிக அழகாகச் சித்திரமாக்கப்பட்டு, கரையில் கோபுரத்துடன் கூடிய கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோயிலின் வாயிலில் திருஞான சம்பந்தர், பாண்டிய மன்னர் நின்ற சீர்நெடுமாறன், அரசி மங்கையர்க் கரசி, அமைச்சர் குலச்சிறையார் ஆகியோர் கோயிலையும், அருவி யையும் வணங்குவதுபோல் சுதை வடிவங்கள் வண்ணத்தில் அமைக் கப்பட்டுள்ளன. சம்பந்தருடைய சிவிகையும் பக்கத்தில் இடம் பெற் றுள்ளது. மதில் முழுதும் சுண்ணாம்பு, காவி அடிக்கப்பட்டு, மிகச் சுத்தமாகக் காணப்படுகிறது. கோயிலின், நடுவே மிகப் பெரிய ஆலமரத்தின் அடியில் விநாயகர் இடம்பெற்றுள்ளார். விநாயகருக்குத் தனியாக ஒரு கருவறை மண்டபமும் அதன்மேல் சிறிய கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளன. கோபுரம் முழுமையும் சுதை உருவங்களால் அமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. விநாயகருக்கு முன் நின்று வழிபாடு செய்ய வசதியாக அர்த்த மண்டபம் போல், கருவறையின் முன்பகுதி முற்றம் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோயில் வளாகத்தினுள் ஒரு கிணறு, அதையொட்டி ஒரு சிறு அறை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. விநாயகர் சன்னதிக்குப் பின்னால், ஆலமரத் தடியில் நாகர் விக்கிரகங்கள், நாகப்புற்று காணப்படுகிறது. கோயிலுக்கு மின்விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. முறையான வழிபாடு நடக்கிறது.

### 5. குற்றால நங்கை கோயில்

திருக்குற்றாலநாதர் கோயிலின் வடக்கு எல்லைக் காவல் தெய்வம் குற்றால நங்கை. இக்கோயில் செங்கோட்டை சாலையில் உள்ள திவான் பங்களா என்று அழைக்கப்படும் தங்கும் விடுதியின் வளாகத்தினுள் அமைந்துள்ளது திருவிதாங்கூர் அரசரின் திவான் குற்றாலத்தில் தங்குவதற்காகக் கட்டப்பட்ட மாளிகை, இன்று விடுதியாகப் பயன்படுகிறது. மிகச் சிறிய கருவறை மட்டும் அமைந்த கோயில், கருவறைச் சுவர் முழுதும் சுண்ணாம்பு அடித்துச் சுத்தமாக அமைத்துள்ளார்கள். முறையான வழிபாடு செய்யப்படுகிறது.

### 6. அடியொட்டும் பாறைப் பன்றி மாடசாமி கோயில்

சித்திரா நதியின் கீழ்க்கரையில் திருவாவடுதுறை மடத்துக்கு முன்னால் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. கருவறை மட்டும் அமைந்த கோயில். சுத்தமாக வெள்ளையடிக்கப்பட்டுள்ளது. நவாப் ஆட்சிக்காலத்தில், இறைவனை மதிக்காமல், முகம்மதியர் ஒருவர் குற்றால எல்லைக்குள் குதிரையில் வந்ததாகவும், அங்குள்ளவர்கள் தடைசெய்தும் கேளாமல் குதிரையைச் செலுத்த, அக்குதிரை அடியெடுத்து வைக்க மாட்டாமல் தரையில் ஒட்டிக்கொண்டு நின்றமையால் அடியொட்டும்பாறை எனப் பெயர் வந்தது. சித்ரசபையில் பொன் கூரை வேயப்பட்டிருந்தது என்றும் அதனைக் கொள்ளைடியக்க நவாப் படையுடன் வர, தந்திரத்தால் அப்படைகளை இப்பாறைக்கு மேல் செல்ல முடியாமல் செய்துவிட்டார்கள். எனவே அடிவெட்டுப் பாறை என்று பெயர் வந்திருக்கலாம்.

### 7. ஆவரணப் பிள்ளையார் கோயில்

தென்காசி சாலையில் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. கருவறை மட்டும் உள்ளது. சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது. ஆன்மாக்கள் இன்புறும் புண்ணியும், துன்புறும் பாவம் போன்றவற்றில் மனத்தைச் செலவிடாது, சிவஞானத்தில் செலுத்த ஆவரணப் பிள்ளையார் அருள் செய்கிறார். ஆவரண சக்தி என்பது, உலகப் பற்றையும், நன்மை, தீமை என்ற கர்ம பேதத்தையும் மறைப்பதாகும். அத்தகையச் சக்தி பெற்ற மனம் கல் போன்றது என்பதைக் காட்டும் வகையில், இக்கோயில், முழுமையும் கல்லால் கட்டப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதினத்தாரால் இக்கோயில் முதலில் கட்டப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதற்கான சான்றுகள் கோயிலிலும் இல்லை, மடத்திலும் இல்லை. திருவாவடுதறை ஆதீன மடத்தின்

வாயிலில் இக்கோயில் அமைந்துள்ளதாலும், ஆவரண சக்தியை வழங்கும் விநாயகர் என்பதாலும் அக்கருத்துத் தோன்றியிருக்கலாம்.

## 8. நன்னகரம் பிள்ளையார் கோயில்

குற்றாலத்திலிருந்து தென்காசி செல்லும் வழியில் நன்னகரம் என்னும் சிறிய கிராமத்தில் அமைந்துள்ள மிகச் சிறிய விநாயகர் கோயில். பக்கத்தில், பன்றிமாடசாமி என்னும் கிராம தேவதைக் கோயிலும் உள்ளது. இருகோயில்களும் சுத்தமாகக் காணப்படுகின் றன. நாள் வழிபாடு முறையாக நடைபெறுகிறது. பன்றிமாடசாமிக் குக் கிராமத்து மக்கள் கொடை விழா சிறப்பாகச் செய்கிறார்கள்.

## 9. திட்டைப் பிள்ளையார் கோயில்

குற்றாலத்திலிருந்து தென்காசி செல்லும் வழியில், வாழவல் லான் குடிக்கால்வாயின் தென்கரையில் உள்ள திட்டில் (மேடு) இக் கோயில் அமைந்துள்ளது. ஆலமரத்தின் நிழலில், விநாயகர் மட்டும், தனிக் கருவறையில் காணப்படுகிறார். திட்டின்மேல் விநாயகர் கோயில் அமைந்திருப்பதால் திட்டைப்பிள்ளையார் எனப் பெயர் பெற்றார்.

## 10. பாசுபத சாஸ்தா கோயில்

குற்றாலத்தின் கீழ்த்திசைக் காவல் தெய்வத்தின் கோயில் இப் பாசுபத சாஸ்தா கோயில். புலி அருவிப் பக்கத்தில் (கரையில்) இக் கோயில் அமைந்துள்ளது. இச்சாஸ்தாவின் பெயரால், புலியருவிக்கும், சாஸ்தா கோயில் அருவி என்று பெயரும் வழங்குகிறது. முதலில் தரையில் வீழ்ந்த புலியருவி, இக்கோயிலின் இருபக்கங்களின் வழியாகப் பிரிந்து சென்று கீழே இரண்டு அருவிகளாக விழுமாறு அமைத்துள்ளனர். இந்த அருவி, கோயில் இரண்டையும் திருப்பணி செய்து புதுப்பித்துக் கட்டியவர் கருமுத்து தியாகராசச் செட்டியார் ஆவார். தொடர்ந்து, திரைப்படத் தயாரிப்பாளர் சாண்டோ எம்.எம். சின்னப்பத் தேவர் இக்கோயிலைத் திரைப்படப் பாணியில் சீரமைத் துள்ளார். அருவியிலிருந்து வழிந்து ஓடும் நீர் இருபக்கங்களிலும் ஓடையாகச் செல்ல நடுவே ஒரு செயற்கைக் குன்றின்மேல் சாஸ் தாவை அமைத்துள்ளார். குன்று முழுதும் கூழாங்கற்கள் பதிக்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. குன்றில் படிக்கட்டுகள் அமைத்து, கோயிலில் சென்று வழிபாடு செய்ய வசதி செய்துள்ளார். கோயிலைச் சுற்றிலும் சுற்றுப்பாதை தள வரிசையுடன் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுப் பாதைக்கு மேற்கூரையும் அமைத்துள்ளார். மின்விளக்கு

களாலும், வண்ணப் பூச்சுக்களாலும், இக்கோயில் இங்கு நீராட வரு பவர்களைக் கவர்ந்து இழுக்கிறது.

## 11. பாட்டப்பத்து சாஸ்தா கோயில்

குற்றாலநாதர் கோயிலின் நன்செய் நிலங்களுக்கான காவல் தெய்வம். பாட்டப்பத்து என்னும் புரவில் அமைந்திருப்பதால் பட்டப் பத்து சாஸ்தா என்று பெயர் பெற்றது. சிறிய கருவறை மட்டும் காணப் படுகிறது. இந்த நன்செய் நிலங்களில் வயல் வேலைகள் தொடங்கு முன் இங்கு வழிபாடு செய்கிறார்கள். அதுபோல், அறுவடை முடிந்த பின் பொங்கல் வைத்து வழிபடுகிறார்கள்.

## 12. சுந்தரமூர்த்தியின் திருக்கோயில்

குற்றாலநகரின் மேற்கு எல்லையில் உள்ளது. கருவறையில் சங்கரலிங்கம் - கோமதி அம்பாள் சிற்பங்கள் காணப்படுகின்றன. தெற்கில் அநுக்கை விநாயகர், மேற்கில் நாகப்புற்று, வடக்கில் சண் டேஸ்வரர் காணப்படுகிறது. சிறிய விமானமும் சுதை வேலைப் பாடு களுடன் உள்ளது. தினமும் சாயரக்ஷை பூசை நடைபெறுகிறது. கடைசி வெள்ளிக்கிழமை உச்சிக் காலத்தில் நாகருக்குச் சிறப்பு வழிபாடு உண்டு. மேற்குப் பக்கத்தில் வரசித்தி விநாயகர் என்ற பெயரில் தனியாக ஒரு விநாயகர் கோயில் காணப்படுகிறது.

திருக்குற்றாலநாதர் கோயில் நிர்வாகத்தின் கீழ்ச் செயல்பட்டு வரும் சார்புக் கோயில்களைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டன. இனி, திருக்குற்றால நாதர் கோயிலுடன் தொடர்புகொண்ட இரு கோயில் களைப் பற்றிய செய்திகள் விரித்துரைக்கப்படுகின்றன.

சிவாலயங்களில் சந்நதி வாயிலில் வலப்பக்கம் விநாயகரும் இடப்பக்கம் சுப்பிரமணியரும் வீற்றிருத்தல் முறையாகும். திருக்குற் றால சிவாலயத்திற்க வலப்பக்கம் விநாயகராக மேலகரத்து செண்பக விநாயகரும், இடப்பக்கம் முருகனாக தென்னிலஞ்சிக் குமரக் கடவு ளும் விளங்குவதால், "தென்னிலஞ்சிக் குமரேசன் முற்செல்லின்" என்று திருக்குற்றால யமகவந்தாதி கூறுவதாக, அதற்கு உரையெழுத வந்த பேராசிரியர் மே. சொ. சுப்பிரமணியக் கவிராயர் குறிப்பிட்டுள்ளார்.[37]

## மேலகரம் செண்பகவிநாயகர் கோயில்

குற்றாலத்திலிருந்து தென்காசி செல்லும் வழியில் மேலகரம் என்னும் கிராமத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தில் திரிகூடராசப்பக் கவிராயர் வாழ்ந்து வந்திருக்கிறார். தன்னுடைய அனைத்து இலக் கியங்களையும் இந்த விநாயகரை துதித்துப் பாடிய பின்னரே பாடி

யுள்ளார். "மழைமதச் செண்பகக் களிற்றை மனத்துள் வைப்பாம்"[38] என்று பாயிரமாக இச்செய்பக விநாயகரைத் துதித்துவிட்டே திருக் குற்றாலத் தலபுராணத்தைத் தொடங்கியுள்ளார்.

சுற்று மதில், தனிக் கருவறை, கருவறைமேல் கோபுரத்துடன் செண்பக விநாயகர் கோயில் காணப்படுகிறது. கருவறைக்குப் பின் ஆலமரம் உள்ளது. விநாயகர் சன்னதிக்கு முன் பெரிய அர்த்த மண்டபம் உள்ளது. கோயில் முழுமையும் அழகான கல் தள வரிசைகள் அமைக் கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகிறது. விநாயகரின் இடப்பக்கத்தில் முருகப்பெருமானின் செப்புத் திருமேனி, வழிபாட்டிற்குத் தனி சன்னதி யாக அமைக்கப்பட்டுள்ளது.

குற்றாலநாதர் ஆண்டுக்கு ஒருமறை இங்கு வருகை தருகிறார். இக்கோயிலில் பாடி வீடமைத்துத் தங்குகிறார். சுற்றுவட்டாரத்தில் உள்ள, தனக்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்களைப் பார்வை யிட்டு, அறுவடை மகசூலைப் பெற்றுத் திரும்புவதாக நம்பிக்கை. மேலகரம் விநாயகர் கோயிலில் குற்றாலநாதர் வந்து இறங்கு வதற்கும், வழிபாட்டிற்கும் ஆகும் செலவிற்காக நன்செய் நிலங்கள் கட்டளை தாரர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

## திருவிலஞ்சிக் குமரர் கோயில்

குற்றாலத்திலிருந்து செங்கோட்டை செல்லும் வழியில், ஐந் தருவிக் கால்வாய நீரும், சித்ரா நதியும் சந்திக்கும் கரையில் இயற் கைச் சூழலில் இக்கோயில் அமைந்துள்ளது. "தென்னிலஞ்சி பொன் னிலஞ்சி" என்று போற்றுமளவிற்கு வளமான இடம் இது. இயற்கை யெழிலும் வயலும் சூழ்ந்த பரப்பில் வற்றாத ஆற்றின் கரையில் அமைந் துள்ளது. சுற்று மதில், கோபுரம், கொடிமரம் எல்லாம் கொண்ட தனிக் கோயில் இது. தனி நிர்வாக அதிகாரி, தக்கார் ஆகியோரைக் கொண்டு தனியாக நிர்வாகம் செய்யப்படும் கோயில் இது. இக்கோயிலின் வரலாறு அமைப்பு ஆகியவை தனியாக ஆராயப்பட்டுள்ளன.[39]

இக்கோயிலின் முக்கிய கடவுளாகிய திருவிலஞ்சிக் குமரர் சித்திரை விசு, ஐப்பசி விசுத் திருவிழாக் காலங்களில் குற்றாலநாதர் கோயிலுக்கு வருகை தந்து, திருவிழா நடைபெறும் பத்து நாட்களும் முகாமிட்டுத் தங்குகிறார். திருவிழாக்கள் அனைத்திலும் பங்கேற்று முடிவில் பிரியாவிடை பெற்றுச் செல்லுகிறார். திருவிழாக் காலங் களில் திருக்குற்றால நாதரோடு வீதி உலா வருகிறார். தை மாதம் நடைபெறுகின்ற தெப்ப உற்சவத்தின் பொழுதும் திருக்குற்றாலம் வந்து, தெப்பத்தில் மிதந்து பவனி வருகிறார்.

வைணவர்களால் கோயிலுக்குள் செல்லமுடியாது தடுத்து நிறுத்தப்பட்ட அகத்தியர், தென்னிலஞ்சிப் பெருமானைக் கண்டு வணங்கினார். வஞ்சக மறையோரை வஞ்சனையால்தான் வெல்ல முடியும் என்ற உண்மையை அகத்தியருக்கு உணர்த்திய முருகன்,[40] இக்கோயிலில் காணப்படுகிறான்.

இம்முருகன் கோயிலில் இருவாலுகநாயகர் என்ற பெயரில் இறைவன் அருள்புரிகின்றான். மணலால் இருமுறை செய்யப்பட்டவர் என்ற பொருளைத் தருகின்ற இருவாலுகர் பெயரை இத்தலத்து இறைவன் பெற்றுள்ளான். கோயிலின் நடுவே இருவாலுக நாயகரின் சன்னதியும், வலப்பக்கம் முருகனின் சன்னதியும் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. சுவாமி சன்னதியில், நடனமாடும் நடராசர் சிற்பமும், அம்மையின் கோயிலும் தெற்கு முகமாகக் காணப்படு கிறது. மூலவர் சன்னதிக்குப் பின்னால் வலப்பக்கம் விநாயகர் சன்னதி யும் இடப்பக்கம் சுப்பிரமணியருக்கு ஒரு சன்னதியும் காணப்படுகிறது. வடக்கு வீதியில் ஆறுமகக் கடவுளுக்குத் தனி சன்னதி உள்ளது. திரைப்பட அதிபர் சாண்டோ சின்னப்பத் தேவர், ஆறுமுக நயினார் சன்னதி முழுமையும் பளிங்குக் கற்களைப் பாவியுள்ளார். அக் கோயி லுக்கு ஒரு தனிச் சுற்று வீதியும் கிழக்கு வீதியும் தெற்கு வீதியும் அமைத்துள்ளார். மரம், செடி, கொடிகளால் வளமாக விளங்கும், இடத் தில் வசந்த மண்டபம் உள்ளது. தெற்கு வீதியும் மேற்கு வீதியும் சந்திக்குமிடத்தில் விநாயகர் சன்னதி உள்ளது.

பழமையான இக்கோயில் ஜடாவர்மன் குலசேகரன் என்ற பாண் டிய மன்னனால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.[41]

இவ்வாறாகக் குற்றாலநாதர் கோயில் சார்புக் கோயில்கள் அனைத்தும் பெருமையுடையதாகவும், அழகுடையதாகவும், பக்தர் கள் விரும்பி வந்து வழிபடுவதாகவும் உள்ளன. சார்புக் கோயில்களால் மூலக்கோயிலின் பெருமையும் சிறப்பும் வெளிப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், கடவுள் வாழ்த்துப் பா.4.
2. சிதம்பரம், டி., நேர்காணல், நாள்: 16.5.1986.
3. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், நூற்பயனுரைத்த சருக்கம், பா.37.
4. A.R.E. No.460 of 1917.

5. திருநாவுக்கரசர், தேவாரம், திருவங்கமாலை, பா.10.

6. மாணிக்கவாசகர், திருவாசகம், திருப்புலம்பல், சிவானந்த முதிர்ச்சி.

7. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.170.

8. ........ திருப்பத்தூர் புராணம், கௌரிதாண்டவ சருக்கம், பா.13.

9. இரட்டைப்புலவர், தில்லைக் கலம்பகம், பா.36.

10. செண்பகக்குழல்வாய்மொழி, சித்ரசபை, ஆனந்தவிகடன், நாள்: 20.7.1986, ப.10.

11. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், திருநடனச் சருக்கம், பா.7.

12. சண்முக நயினார், ஏ.சி., திருக்குற்றாலத் தலவரலாறு, ப.35.

13. சுப்பிரமணியம், ச.வே., கோயில், சித்ரசபை, ப.388.

14. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பா. 52-2.

15. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், திருநடனச் சருக்கம், பா.12.

16. மேற்படி, பா.18.

17. சுப்பிரமணியம், ச.வே., கோயில், சித்ரசபை, ப.389.

18. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலநாதர் உலா, பா.106.

19. ....... அகில இந்திய யாத்திரை வழிகாட்டி, ப.110.

20. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், திருநடனச் சருக்கம், பா.10,12.

21. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், பராசக்தி பீடச் சருக்கம், பா.11.

22. மேற்படி, குறுமுனி வழிபாடு சருக்கம், பா.12.

23. மேற்படி, மாயோன் பரமனான சருக்கம், பா.135.

24. மேற்படி, பா.127.

25. மேற்படி, பா.142.

26. கல்யாணசுந்தரம், திருச்செந்தூர் கோயில் வரலாறு, ப.98.

27. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலநாதர் உலா, வ.33,34.

28. பெருமாள், ஏ.என்., தமிழ்நாடகம், ப.355.

29. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், கடவுள் வாழ்த்து-3.
30. மேற்படி, திருநடனச் சருக்கம், பா.7.
31. மேற்படி, பா.18.
32. மேற்படி, பா.38.
33. அருணாசல சுவாமிகள், குற்றாலக்கோவை, வ.59,60.
34. மேற்படி, வ.217.
35. திருஞானசம்பந்தர், தேவாரம், திருக்குற்றாலப்பதிகம், பா.1-வ.3.
36. சண்முக நயினார், ஏ.சி. திருக்குற்றாலத் தலவரலாறு, ப.38.
37. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றால யமகவந்தாதி, பா.1.
38. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், பாயிரம்.
39. முதுகலைப்பட்ட ஆய்வேடு, மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், 1981.
40. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், மாயோன் பரமனான சருக்கம், பா.115.
41. Nilamanta Sastri, K.A., Pandya Kingdom, p.216.

# திருக்குற்றாலநாதர் கோயில் பண்பாட்டுச் செய்திகள்

மனிதனின் உயர்ந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமையும் உள்ளத்துணர்வும், அதன் வெளிப்பாடும் பண்பாடகும். ஓர் இனத்தின் பண்பாடு, அதன் இலக்கணம், நடையுடை, மொழி, கலைகள், சமயக் கொள்கைகள், சமயப்பொறை, அரசியற் கொள்கை, அரசியல் வரலாறு, சமுதாய நிலை, பெண்களின் நிலை, அறிவியற் சிறப்பு, கல்வி நிலையங்கள் மூலம் விளக்கமுறுகிறது.[1]

தமிழர்கள், வழிபாட்டிற்காக மட்டும் கோயில்களை உருவாக்க வில்லை. அவர்களுடைய சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்கும், நிர்வாகத்திற்குத் துணை செய்வதற்கும் கோயில்களைக் கட்டினர். கோயில்களும், சிற்பங்களும் படிப்படியாக உயர்ந்து சென்று ஒன்று பட்டு முடிகின்ற அண்டத்தின் நுட்பத்தையே விளக்குகின்றன. "பண் புடையார் பட்டுண்டு உலகம்" என்று மக்களின் பண்பாட்டின் அடிப் படையில்தான் உலகமும் இருப்பதாகத் திருவள்ளுவர் குறிப்பிட் டுள்ளார்.[2] சமயப் பண்பாடு, திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறு, அமைப்பு, வழிபாடு, சிற்பங்கள், விழாக்கள், இலக்கியங்கள் ஆகியன மூலம் வெளிப்படுவதைக் காணலாம்.

## 1. வரலாற்றின் மூலம் வெளிப்படும் பண்பாட்டுச் செய்திகள்

பல்லவர்கள் காலத்தில் குறும்பலா மரத்தடியில் அமைந்துள்ள இறைவனை, "குறும்பலா ஈசனே" என்றும், செண்பக மரத்தின் கீழ் இருந்து அருள்புரிந்த இறைவனை, "குற்றாலத்துறை கூத்தனே" என்றும் தேவாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி முன்பே கூறப் பட்டது. இதிலிருந்து இறைவனை ஏதாவது ஒரு மரத்தின்கீழ் அமைத்து, இயற்கையோடு இணைத்து பல்லவர் காலத்தில் மக்கள் வழிபட்டுவந்தனர் என அறிய முடிகிறது.

பிற்காலச்சோழர், பாண்டியர் காலங்களில் இக்கோயிலில் விளக்கெரிப்பதற்காக, எருமை,[3] பசு[4] மாடுகளையும், ஆடுகளையும்[5] பலர் தானம் செய்துள்ளனர். இவற்றின் பாலிலிருந்து வெண்ணெய், நெய் எடுத்து அதன் மூலம் விளக்கெரித்திருத்தல் வேண்டும்.

கோயிலுக்கு நிலத்தைக் கொடையாகக் கொடுக்கும் மரபு மக்களிடையே நெடுங்காலமாய் இருந்துவருகிறது. அதுபோல, குற்றாலநாதர் கோயிலுக்கும் நிலக்கொடை,[6] பொன்கொடை,[7] பணக்கொடை[8] என்று பலர் வழங்கியுள்ள செய்திகள் கிடைக்கின்றன. சற்று மாறுபட்ட செய்தியாக, கோயிலுக்கு உரிமையாக்கப்பட்ட நிலத்தை விற்ற செய்தியும் காணப்படுகிறது.[9] இறைவன்பால் பக்தி கொண்டவர்கள் இறைவனுக்காகத் தங்களுடைய நிலம், பொன், பொருள் அனைத்தையும் தானமான வழங்கியுள்ளமையால் அவர்களுடைய பக்திப் பண்பும், கொடைப்பண்பும் வெளிப்படுகின்றன.

இறைவன் கோயில்களில் பூசைகள் நாள்தோறும் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்று அக்கால மக்கள் விழைந்தனர். பூசை நடத்துவதற்கென்று தனியாகச் சில மான்யங்கள் தந்து, ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளனர்.[10] அவ்வாறு வழங்கப்பட்ட நிலவருவாய் ஒழுங்காக வராதபொழுது, அந்த நிலங்களை அவர்களிடமிருந்து திரும்பப்பெற்று, மற்றொருவரிடம் கொடுத்துப் பயிரிட்டு, அந்த வருவாய் மூலம் கோயிலின் பூசைகள் நடத்தப்பெற்றன.[11] பூசைகள் நடத்துவதற்குத் தேவையான வெள்ளிப்பாத்திரங்கள் வழங்கியமையோடு அதனைப் பதிவும் செய்தனர் என்று அறியமுடிகிறது.[12] மன்னர்கள், அவர்களுடைய உறிவனர்களின் பிறந்த நாட்களில் சிறப்பான வழிபாடுகள் நடத்தப்பட்டன.[13] இவற்றிலிருந்து அக்கால மக்களின் இறை நம்பிக்கையும், வழிபாடு செய்யும் சமயப் பண்பாடும் அறியக் கிடைக்கின்றன.

மாதந்தோறும் முதல் பத்து நாட்களுக்கு இசை பாடுவதற்கு மான்யம்,[14] மாதம் ஒரு மான்யம்,[15] தேவாரம் பாட மான்யம்,[16] புராணம் வாசிக்க மான்யம்[17] என்று கோயிலில் வழிபாடு செய்யும்பொழுது மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளமையால், அவர்களுடைய சமயப் பண்பாட்டு உணர்வினை உணரமுடிகிறது.

சோழ மன்னன் இராசராசன், சேரமன்னனுடைய கடற்படையைக் காந்தளூர் என்னுமிடத்தில் வெற்றி கொண்டமையால்,[18] தமிழர்களின் வீரமும், அவர்களிடையே வலுவான கடற்படைகள் இருந்த செய்தியும் புலனாகிறது. ஜடாவர்மன் வீரபாண்டியன் ஈழம், கொங்கு, சோழ

மன்னர்களை வெற்றிகொண்டு பெரும்பற்றப் புலியூரில் வெற்றி விழாக் கொண்டாடியமையால்[19] மன்னர்கள் போரில் அடைந்த வெற்றிக்கு விழா அயரும் சடங்கு அல்லது மரபு நிலவிவந்தது எனலாம்.

பழைய கோயில்களைப் புதுப்பித்துக் கட்டியமையால்[20] அக்கால மக்களின் கட்டிடக்கலைப் பண்பு புலனாகிறது. இறைவனின் திருப் பணிகளில் மாந்தர் மட்டுமன்றி, மங்கையரும் மனமுவந்து பங்கு கொண்ட செய்தி[21] அக்காலச் சமுதாயத்தில் மங்கையர் பெற்றிருந்த மாண்பினை உணர்த்துகிறது.

பண்டைத் தமிழகத்தில் விளைநிலங்களுக்கு மட்டுமே நிலத் தீர்வை வசூலிக்கப்பட்டது.[22] தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.[23] கோயிலுக்கு நன் கொடையாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரி விதிக்கப்படவில்லை.[24] ஆனால் அந் நிலங்களைப் பயிரிட்டோர், அந்நில வருவாயில் ஒரு பகுதியைக் கோயிலுக்குக் கடமை (குத்தகை)யாகச் செலுத்தினர்.[25] கடமையை ஒழுங்காகச் செலுத்தாத, நிலம் பயிரிடுவோர்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு, பயிரிடுவதற்காக மற்றொருவருக்கு மாற்றி வழங்கப் பட்டது.[26] இதன் மூலமாக மக்களுக்குக் கோயில் வழிபாட்டுக் சடங்கு கள் முறையாக நடைபெற வேண்டுமென்ற எண்ணம் இருந்ததை அறியமுடிகிறது.

பயிர்த்தொழில் மட்டுமல்லாமல் கோயில் கணக்குகளைப் பரா மரித்தல் போன்ற பணிகளுக்கும் நிலமும், பணமும் வழங்கப்பட்டன.[27] உழவுக்கும் தொழிலுக்கும் மான்யம் வழங்கிப் போற்றிய பண்பினைக் காண முடிகிறது.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் கோயில் என்ற சார்புக் கோயில், குற்றாலம் வந்த ஞானசம்பந்தர், வழியெல்லாம் சிவலிங்கம் காணப் படுவதால், சிவிகையிலிருந்து இறங்கி வழிபட்ட இடத்தில் அமைக் கப்பட்டுள்ளதாக முன்னர் கூறப்பட்டது. இதிலிருந்து சிவன் உருவங் கள் இடம்பெற்றுள்ள வழிகளில் அடியவர்கள் சிவிகையில் செல்ல மாட்டார்கள் என்ற உன்னதப் பண்பினை உணர முடிகிறது. குற்றால நாதரை மதியாமல் குற்றால நகருக்குள் குதிரையில் வர முயன்ற இசுலாமியர் (பட்டாணியர்) ஒருவருடைய குதிரை, நகருக்குள் அடி யெடுத்து வைக்க முடியாமல் தரையோடு ஒட்டிக்கொண்ட இடத்தில் அடியொட்டும் பாறை பன்றிமாடசாமி என்னும் சார்புக் கோயில் அமைந் துள்ளதை முன்னர் கூறப்பட்டது. இறைவனிருக்கும் வீதிகளில் அடி யவர்களே கூட சிவிகைகளில் செல்ல முடியாது என்றும், அதை மீறிச் சென்றவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அறியமுடிகிறது.

இதனால், மக்கள் இறைவன்பால் கொண்ட மரியாதைப் பண்பை அறியமுடிகிறது.

## 2. கோயிலமைப்பு மூலமாக அறியக்கூடிய பண்பாட்டுச் செய்திகள்

திருக்குற்றாலநாதர் கோயிலில் சிவன் சன்னதியும், பெருமாள் சன்னதியும் அடுத்தடுத்து இருந்தது என முன்பு கூறப்பட்டிருக்கிறது. சங்கு வடிவத்திலான கோயிலின் சிகரத்தில் சக்கரம் காணப்படுகிறது. பெருமாளின் சின்னங்களாகிய சங்கும், சக்கரமும் இடம்பெற்றுள்ள இக்கோயிலின் மூலவர் சிவன். இதனால் இங்குள்ள மக்களின் சமயப் பண்பாடு, ஒற்றுமையுணர்வு வெளிப்படுகிறது.

பராசக்தி கோயில் என்ற பெயரில் தரணிபீடத்தையே மூலவராகக் கொண்டு தனிக்கோயில், குற்றாலநாதர் கோயிலிலுள் அமைந்துள்ளமையால் சக்தி வழிபாடு, அன்னையைப் போற்றிய பண்பு புலனாகிறது.

குறிஞ்சி மண்டபம், காசிலிங்க ஸ்வாமி கோயில் மண்டபம் போன்ற படித்துறை மண்டபங்கள் காணப்படுவதால் மக்களின் அருவி நீராடும் பழக்கத்தை அறிய முடிகிறது.

## 3. வழிபாடு மூலமாக அறியக்கூடிய பண்பாட்டுச் செய்திகள்

குற்றாலநாதருக்குத் தீராத தலைவலி என்று ஒரு கதை சொல்லப் பட்டு, தினமும் தைல அபிஷேகமும், கஷாயம் பிரசாதமும் இம் மக்களுடைய இயற்கை வைத்திய ஈடுபாட்டைக் காட்டுகிறது. கலைத் தெய்வமாகிய நடராசப் பெருமானுக்கு மட்டும் தாண்டவ தீபாராதனை என்னும் பெயரில் தனி வழிபாடு செய்கின்றனர். அதற்கென்று தனி யான இசைக்கருவிகள், ராகங்கள் அமைத்துள்ளமையால் அவர்களின் கலை ஈடுபாட்டை அறியமுடிகிறது.

குற்றாலநாதருக்கு ஆண்டுதோறும் சங்காபிஷேகம், அன்னை பராசக்திக்குப் பௌர்ணமிதோறும் விளக்குப் பூசை வழிபாடு, அழகன் முருகனுக்கு கார்த்திகைதோறும் சந்தன முழுக்காப்பு என்று பல வகை யான சிறப்பு வழிபாடுகளைச் செய்தமையால், அங்குள்ள மக்களின் வழிபாட்டு உணர்வினை, பக்திப் பண்பினை உணர முடிகிறது.

## 4. திருவிழாக்கள் மூலம் அறியக்கூடிய பண்பாட்டுச் செய்திகள்

குற்றாலநாதர் கோயிலில் முப்பெரும் விழாக்கள், தெப்ப உற்சவம், வசந்த உற்சவம் போன்ற விழாக்களின்பொழுது மக்கள் அனைவரும்

ஒன்றாகக் கூடுகின்றனர். இவ்வாறு கூடும்பொழுது அவர்களிடையே வேற்றுமையுணர்வு குறைந்து, அனைவரும் ஒன்று என்னும் ஒற்றுமை உணர்வு வெளிப்படுவதை உணர முடிகிறது.

சித்திரை விசு, ஐப்பசி விசு, தெப்ப உற்சவம் ஆகிய திரு விழாக்களில் இறைவனுடன், திருவிலஞ்சிக்குமரரும் கலந்து கொள் கிறார். விழா முடிவில், முருகன், அம்மையப்பனிடம் பிரியாவிடை பெற்றுச் செல்லுகிறார். இதன் மூலமக இறைவனாக இருந்தாலும், குடும்பப் பாசத்திற்கு உட்பட்டவரே என்ற உயரிய உணர்வு அக் கால மக்களிடையே இருந்தது எனலாம். இதனால் அவர்களுடைய சமுதாயப் பழக்க வழக்கங்களை அறிய முடிகிறது.

ஆடல்வல்லானுக்கென்று கலை வேலைப்பாட்டுடன் ஓவியங் களால் ஆன சித்ரசபை என்னும் மன்றத்தைத் தனியாக அமைத்துள் ளனர். அங்கு நடராசப் பெருமானை ஓவிய வடிவில் அமைத்து வணங் கியமையால் அவர்களுடைய கலைப் பண்பை உணரமுடிகிறது.

## 5. சிற்பங்கள், ஓவியங்களால் அறியக்கூடிய பண்பாட்டுச் செய்திகள்

கற்சிலைகள், மரச்சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், செப்புத் திருமேனிகள் இக்கோயிலில் நிறைந்து காணப்படுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் வடிக்கப்பட்ட கற்சிலை, கலையழகு நிறைந்த நடராசப் பெருமானின் செப்புத்திருமேனி, கண்ணைக் கவரும் வண்ண ஓவியங் கள் நிறைந்த சித்ரசபை, உள்ளத்தைக் கவரும் மரத் தோரணவாயில், சிற்பங்கள் செதுக்கப்பட்ட மரக்கதவுகள் ஆகியவை இங்கு வாழ்ந்த மக்களின் கலை ஈடுபாட்டையும் கலை உணர்வையும் உணர்த்து கின்றன. இக்கோயிலில் பல அரிய திருப்பணிகளைச் செய்த சொக்கம் பட்டி சின்னணைஞ்சாத்தேவர், அவருடைய இளவல் இராசகோபாலத் தேவர் ஆகியோருடைய சிலைகளை கொடிமடித்துக்குப் பக்கம் தூணில் அமைத்து வழிபாடு செய்வதினால், மக்களுடைய நன்றி உணர்வாகிய பண்பு வெளிப்படுகிறது.

திரிகூடமண்டபத்தின் கூரையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ராசி களின் வடிவங்கள் இப்பகுதி மக்களுக்கு ஜோசியத்தில் உள்ள ஆர்வத்தினை, ஈடுபாட்டினைப் புலப்படுத்துகிறது. சித்ரசபையில் காணப்படும் கொடி ரதி, நடன மங்கை போன்ற கவின்மிகு கல் லோவியங்கள், மக்களுடைய நாகரீகத்தை, பண்பாட்டை உணர்த்து வதாக உள்ளன. இச்சிலைகள் அணிந்துள்ள ஆபரணங்கள், ஆடைகள் ஏந்திய கருவிகள் அவர்களுடைய வளமான வாழ்க்கையைப் பறை சாற்றுவதுபோலக் காணப்படுகின்றன.

## 6. இலக்கியங்கள் மூலமாக அறியக்கூடிய பண்பாட்டுச் செய்திகள்

திருக்குற்றாலநாதர் கோயில், திருமுற்றம் என்ற பெயரில் வைணவக் கோயிலாக இருந்ததாகவும், அகத்தியர் அக்கோயிலை சிவன் கோயிலாக மாற்றினார் என்றும் திருக்குற்றாலத் தலபுராணம் கூறுகிறது.[28] இதனால், மக்களிடையே சமய வேறுபாடுகள் மிகுந்து காணப்பட்டன என்றும், ஒரு சமயத்தவரின் கோயிலினுள் பிறசமயத்தினர் புகுந்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டனர் என்றும் அறிய முடிகிறது. சமயப்பூசல்கள், வேறுபாடுகள் மக்களிடையே நிலவியதெனக் கருத வாய்ப்புண்டாகிறது.

குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர், தன்னை ஆதரித்த சின்னணைஞ்சாத் தேவனைப் போற்றியிருப்பதால்,[29] ஆசிரியரின் நன்றியுணர்வு வெளிப்படுகிறது. சின்னணைஞ்சாத்தேவன் செய்த திருப்பணிகளைச் சுட்டிக்காட்டி பெருமிதம அடைந்துள்ளார் கவிராயர்.[30] அம்மன்னனுடைய வழிவந்தவர்களும் திருக்கோயில் திருப்பணியை மனமுவந்து செய்துவந்தனர்[31] என்று இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து புலவரைப் போற்றும் பண்பும், திருக்கோயில் திருப்பணிகள் செய்யும் பண்பும் மக்களிடையே மிகுந்து காணப்பட்டதெனலாம்.

முற்றுமினிக் கொத்தடியேன்,[32] குற்றாலக் கொத்தடியேன்[33] போன்ற இலக்கிய வரிகளால், கோயிலில் வழிவழியாகத் தொண்டு செய்யப் பல அடிமைகள் இருந்தனர் என்ற செய்தி வெளியாகிறது. கவிராயரின் இலக்கியங்களில் புராணக்கதைகள், செய்திகள் அதிகமாகக் காணப்படுகிறது என்று முன்பே சொல்லப்பட்டது. எனவே, மக்களிடையே இறைவனைப் பற்றிய செய்திகளும், புராணக் கதைகளும் அதிக அளவில் பரவியிருந்ததெனக் கருதமுடியும். இது அக்கால மக்களின் இறை நம்பிக்கையை, பக்திப் பண்பை வெளிப்படுத்துகிறது.

விபூதியணிந்து, கைகளில் கொடியேந்தி தொண்டர்பின் செல்ல இறைவன் தனிக் கொடியோடு விழாக்காலங்களில் வீதியுலா சென்றான் என்ற செய்தி தேவாரப் பாடல்களில் காணப்படுகிறது.[34] இது, பல்லவர் காலத்தில் இறைவனின் திருவிழாக்கள் நடந்த பாங்கினைப் பகர்கிறது எனலாம். பல்லவர் காலத்தில் மக்களிடையே திருநீறு அணியும் பழக்கமும், விழாக்காலங்களில் கொடிகளேந்திச் செல்லும் வழக்கமும் இருந்தது என்பதை நமக்குக் காட்டுகிறது.

## நிறைவுரை

திருக்குற்றாலநாதர் கோயில் வரலாற்றினை ஆய்வு செய்யும் பொழுது அவ்வரலாற்றுக் காலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, கொடை நெஞ்சம், அறவழி வாழ்க்கையென்னும் மக்களின் பண்புகள் வெளிப்படுகின்றன. கோயிலமைப்பு, வழிபாட்டு முறைகள், இலக்கியங்கள் வழியாக மக்களுடைய வாழ்க்கை நெறிமுறைகள் வெளிப்படுவது விளக்கப்பட்டுள்ளது. முடிபாக, திருக்குற்றாலநாதர் கோயில் பகுதியில் வாழ்ந்த மக்களிடையே சிலநேரம் சமய வேற்றுமை உணர்வு காணப்பட்டாலும், பொதுவாக சமய ஒற்றுமையுணர்வுடனும், நாகரிகத்துடனும், பக்தி நெறியிலும் மக்கள் வாழ்ந்து வந்தனர் எனக் கருதலாம்.

### அடிக்குறிப்புகள்

1. தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.4.
2. திருக்குறள், பா.996.
3. A.R.E. No.418,417, of 1917.
4. A.R.E. No.444,442,439 of 1917.
5. A.R.E. No.444,438, of 1917.
6. A.R.E. No.441,428,424 of 1917.
7. A.R.E. No.446 of 1917.
8. A.R.E. No.443 of 1917.
9. A.R.E. No.427 of 1917.
10. A.R.E. No.414,413, 412,of 1917.
11. A.R.E. No.437 of 1917.
12. A.R.E. No.425 of 1917.
13. A.R.E. No.469 of 1917.
14. A.R.E. No.452 of 1917.
15. A.R.E. No.463 of 1917.
16. A.R.E. No.475 of 1917.
17. A.R.E. No.481 of 1917.
18. A.R.E. No.449 of 1917.
19. A.R.E. No.436 of 1917.
20. A.R.E. No.454 of 1917.
21. A.R.E. No.404 of 1917.

22. A.R.E. No.430 of 1917.
23. A.R.E. No.432 of 1917.
24. A.R.E. No.430 of 1917.
25. A.R.E. No.432,426 of 1917.
26. A.R.E. No.437 of 1917.
27. A.R.E. No.450,436 of 1917.
28. திரிகூடராசப்பக்கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், மாயோன் பரமனான சருக்ம், பா.143.
29. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, க.162.
30. மேற்படி, ப.162.
31. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலநாதர் உலா, வ.145-147.
32. மேற்படி, குற்றாலமாலை, வ.100-3.
33. மேற்படி, குற்றாலச் சிலேடைவெண்பா, வ.5-3.
34. திருஞானசம்பந்தர், தேவாரம், பதிகம்-99, பா.2.

# நிறைவுரை

திருக்குற்றாலநாதர் கோயில் வரலாறும் புண்பாடும் என்ற தலைப்பின்கீழ், வரலாற்றுச் செய்திகள், கல்வெட்டுச் செய்திகள், இலக்கியச் செய்திகள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாகக் கொண்டும், கள ஆய்வுமூலமும் நிகழ்த்தப்பட்ட இவ்வாய்வின் முடிபுகளாக, பல உண்மைகள், புதிய செய்திகள் அளிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வு முடிபுகள்

### அ) தொல்பழங்கோயில்

தற்போது சார்புக் கோயிலாக உள்ள, கூத்தர் கோயில், குற்றால நாதர் கோயலுக்கு முன்னமிருந்த மூலக் கோயிலாகவும், தொல்பழங் கோயிலாகவும் இருந்துவந்த மரபு கண்டறியப்பட்டது.

பல்லவர் ஆட்சிக்காலத்தில், திருஞான சம்பந்தர் வந்து பதிகம் பாடியபொழுது, திருக்குற்றாலத்தில் செண்பக வனத்தில் குற்றாலத் துறைக் கூத்தன் கோயில், குழல்வாய் மொழி அம்மை பங்கனாகிய குறும்பலா ஈசன் கோயில் என்று இரண்டு கோயில்கள் இருந்தன.

### ஆ) கோயில் வரலாறு

இன்றைய திருக்குற்றாலநாதர் கோயில் மாமன்னன் இராச ராசனால் வடிவமைக்கப்பட்டது. முதல் சுற்று வீதி சுவர் அம்மன்னரால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட இச்சுற்று வீதிக்குள் மூல வர் சன்னதிக்கு இடப்பக்கத்தில் பெருமாள் சன்னதி இருந்திருத்தல் வேண்டும்.

பாண்டிய மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், குழல்வாய்மொழி அம்மனுக்குத் தனிக் கோயில், பிள்ளையன் கட்டளை மண்டபம் ஆகியவை கட்டப்பட்டன.

நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் பராசக்தி கோயில் கட்டப் பட்டிருத்தல் வேண்டும். குற்றாலநாதர் கோயிலுக்கான சுற்றுச்சுவர், சங்கவீதி மற்றும் உள்சுற்று வீதிகளில் பல புதிய சன்னதிகள் கட்டப் பட்டுள்ளன.

நாயக்கர் காலத்தில் அகத்தியர் என்னும் சிவனடியார், குற்றால நாதர் சன்னதிக்கு இடப்பக்கமிருந்த பெருமாள் சன்னதியிலிருந்த பெருமாள் மூர்த்தத்தை அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். அப் பெருமாள் சன்னதி, இன்று வெஞ்சன அறையாகப் பயன்படுத்தப் படுகிறது.

வடகரை ஆதிக்கம் சொக்கம்பட்டி மன்னர்களால் திரிகூட மண்டபம், பசுப்பிறை, தட்டொடி, வைத்தியப்பவிலாசம, குழல்வாய் மொழி அம்மன் கோயில் முகப்பு மண்டபம், சங்கவீதி மற்றும் வசந்த வீதியில் கல்பாவுதல் ஆகிய திருப்பணிகள் நடத்தப்பட்டன.

1925-ஆம் ஆண்டில், நகரத்தாரால் குழல்வாய்மொழியம்மன் கோயில் புதுப்பிக்கப்பட்டது.

### இ) இலக்கியங்கள்

சங்க இலக்கியம், சங்கமருவிய கால இலக்கியம் ஆகியவற்றில் குற்றாலநாதர் கோயில் பற்றிய செய்திகள் காணப்படவில்லை.

'குற்றாலம்' என்ற சொல்லாட்சி ஞானசம்பந்தருடைய தேவாரத் தில் தான் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### ஈ) சார்புக் கோயில்கள்

கூத்தர் கோயில், செண்பகாதேவி அம்மன் கோயில் ஆகிய சார்புக் கோயில்கள் குற்றாலநாதர் கோயிலுக்கு முன்பே இருந்தன.

சித்திரசபை, பட்டினத்தார் காலத்திற்குப்பின், கந்தபுராண காலத்திற்கு முன், தென்காசிப் பாண்டியர்களால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். சித்திரசபையின் சுற்றுச்சுவர், முன்னுள்ள தெப்பக்குளம், நீராழி மண்டபம், சிகரம் ஆகியன சொக்கம்பட்டி மன்னர்களால் கட்டப் பட்டது. சித்திரசபைக்கு அம்மன்னர்கள் செப்பேடு வேய்ந்து திருப்பணி செய்துள்ளனர்.

### உ) வழிபாடு

மகுடாகம முறையில் வழிபாடு நடைபெறுகிறது. நாள் வழிபாடு, மாத வழிபாடு, வருட வழிபாடு ஆகிய அனைத்து வழிபாடுகளிலும்

நடராசப் பெருமானுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மன்னர்களின் பிறந்த நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

வழிபாட்டின்போது வேதங்கள் ஓதப்பட்டன, தேவாரங்கள், திருவாசகம் இசைக்கப்பட்டன.

விழாக்காலங்களில் ஆசீர்வாதம் சொல்லும் மரபு காணப்படுகிறது.

## எ. நிர்வாகம்

திருக்கோயில் சமுதாயத்தினர், பாசுபத பெருமக்கள் ஆகியோரின் நிர்வாகத்தில்தான் கோயில் இருந்தது.

பூஜைகள், விழாக்கள் முறையாக நடைபெறுவதற்கு மன்னர்களும், மக்களும் மான்யம் வழங்கியுள்ளனர்.

மான்யமாக வழங்கப்பட்ட நிலங்களை, குத்தகைக்கு விடுவது, குத்தகைக்கான நிபந்தனைகளை விதிப்பது, குத்தகை நிபந்தனைகளைப் பின்பற்றாத குத்தகைதாரர்களிடமிருந்த நிலத்தைப் பறித்து புதிய குத்தகைக்காரர்களிடம் வழங்குவது ஆகிய முறைகளில் பராமரித்து வந்தனர்.

நிலங்களை அளந்து, தரத்திற்கேற்ப தீர்வை வசூலிக்கப்பட்டது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கும், கோயில் நிர்வாகம் ஊக்கமளித்துள்ளது.

தவறு செய்த கோயில்பணியாளர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

திருக்குற்றாலநாதர் கோயில் வரலாற்றின் அடிப்படையில் வெளிப்பட்ட பண்பாட்டுச் செய்திகள் இவ்வாய்வேட்டில் இடம் பெற்றுள்ளன. அங்கு வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், சமுதாயத் தொடர்புகள் அடிப்படையில் எதிர்காலத்தில் பாண்பாட்டினை ஆய்வு செய்யவும் பெருவாய்ப்புள்ளது. திருக்குற்றால நாதர் கோயிலில் கலை நுணுக்கத்துடன் வடிக்கப்பட்ட சிலைகள், ஓவியங்கள் காணப்படுகின்றன. அவற்றை, சிற்பக்கலை, ஓவியக்கலை கூறுகளின் அடிப்படையில் ஆய்வுச்செய்தல் வேண்டும். சித்திரசபையின் ஓவியங்களும் தனி ஆய்வுக்குரியவையே.

இவ்வாய்வு, திருக்குற்றாலநாதர் கோயிலின் வரலாறும் பண்பாடும் என்ற தலைப்புத் தொடர்புடைய செய்திகளையே தலைமை நோக்காக ஆய்வு செய்து, முடிபுகளை வழங்கியதாகும்.

# துணைநூற்பட்டியல்


## மூல நூல்கள்

அருணாசலம் பிள்ளை - தாதம்பட்டி - குற்றாலக்கோவை, முதல் பதிப்பு, 1949 தென் இந்தியா அச்சகம், நாகர்கோயில்.

சண்முகநயினார், ஏ.சி., - சார்வரி வருட நாட்குறிப்பு, முதல்பதிப்பு, 1960, திருக்குற்றாலநாதர் கோயில், திருக்குற்றாலம்.

சண்முகநயினார், ஏ.சி., (உ.ஆ) - திருக்குற்றாலப் பதிகம், முதல்பதிப்பு, 1963, திருக்குற்றாலநாதர் கோயில், திருக்குற்றாலம்.

சண்முகநயினார், ஏ.சி., - திருக்குற்றாலம்-சிறு விளக்கம், முதல்பதிப்பு, 1964, திருக்குற்றாலநாதர் கோயில், திருக்குற்றாலம்.

சண்முகநயினார், ஏ.சி., - திருக்குற்றாலம்-தல வரலாறு, முதல்பதிப்பு, 1943, ஏழாம் பதிப்பு, 1967, எட்டாம் பதிப்பு, 1977, ஒன்பதாம் பதிப்பு, 1986, திருக்குற்றாலநாதர் கோயில், திருக்குற்றாலம்.

திரிகூடராசப்பக் கவிராயர் - திருக்குற்றாலத் தலபுராணம், முதல் பதிப்பு, 1869, மூன்றாம் பதிப்பு, 1938, நான்காம் பதிப்பு, 1951, திருக்குற்றாலநாதர் திருக்கோயில், திருக்குற்றாலம்.

| | |
|---|---|
| திரிகூடராசப்பக் கவிராயர் - | திருக்குற்றாலக் குறவஞ்சி,<br>ஏழாம் பதிப்பு, 1963,<br>திருக்குற்றாலநாதர் கோயில் வெளியீடு<br>திருக்குற்றாலம். |
| திரிகூடராசப்பக் கவிராயர் - | திருக்குற்றாலக் குறவஞ்சி,<br>ஆறாம் பதிப்பு, 1955,<br>ஏழாம் பதிப்பு, 1963,<br>சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,<br>சென்னை. |
| திரிகூடராசப்பக் கவிராயர் - | திருக்குற்றால யமகவந்தாதி,<br>முதல் பதிப்பு, 1939,<br>இரண்டாம் பதிப்பு, 1954,<br>திருக்குற்றாலநாதர் கோயில்,<br>திருக்குற்றாலம். |
| திரிகூடராசப்பக் கவிராயர் - | திருக்குற்றாலநாதர் உலா,<br>முதல் பதிப்பு, 1939,<br>இரண்டாம் பதிப்பு, 1954,<br>திருக்குற்றாலநாதர் கோயில்,<br>திருக்குற்றாலம். |
